இசைத்தமிழ் அறிஞர்கள்

தொகுதி-2



முனைவர் சண்முக. செல்வகணபதி

முனைவர் செ. கற்பகம்

அனன்யா

இசைத்தமிழ் அறிஞர்கள்

தொகுதி-2

முனைவர் சண்முக.செல்வகணபதி

முனைவர் செ.கற்பகம்

அனன்யா

8/37, பி.ஏ.ஒய். நகர்,

குழந்தை இயேசு கோவில் அருகில்,

புதுக்கோட்டை சாலை,

தஞ்சாவூர் - 613 005.

இசைத்தமிழ் அறிஞர்கள் தொகுதி–2

முதற்பதிப்பு	:	ஆகஸ்டு 2016
வெளியீடு	:	அனன்யா 8/37, பி.ஏ.ஒய். நகர், குழந்தை இயேசு கோவில் அருகில், புதுக்கோட்டை சாலை, தஞ்சாவூர் - 613 005.
ஒளி அச்சு & அச்சாக்கம்	:	அருள் ஆப்செட், தஞ்சாவூர் - 613 005.
நூல் அளவு	:	டெம்மி
தாள் வகை	:	NS Maplitho
பக்கங்கள்	:	x + 255
விலை	:	ரூ.200/-

BIBLIOGRAPHICAL DATA

Title of the Book	:	Isai Tamil Aringargal
Subject	:	Essays
Author	:	Shanmuga.Selvaganapathy S.Karpagam
Language	:	Tamil
Edition	:	1st Edition August 2016
Size of the Book	:	Demy
Paper	:	NS Maplitho
Number of Pages	:	x + 255
Number of Copies	:	1100
Laser Type setting & Printing	:	Arul Offset, Thanjavur.
Publishers	:	Ananya 8/37, P.A.Y. Nagar, Near Infant Jesus Church, Pudukkottai Road, Thanjavur - 613 005.
Cell	:	9442346504
Email	:	ananya.arul @ g.mail.com
Price	:	Rs.200/-

ISBN : 978-81-928616-7-8

2-6

ஆசிரியர்கள் உரை

பண் சுமந்த பாடற் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன்மண் டலத்தீசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலிகொண் டக்கோவான் மொத்துண்டு
புண் சுமந்து பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்

– திருவாசகம்:182

இசையோடு கூடிய பாடற்குரிய பரிசினை ஆக்கித் தருகின்ற உமாதேவியைச் சுமந்த ஒரு பாகத்தை உடையவன் திருப்பெருந்துறையில் எழுந்தருளி இருக்கும் இறைவன் என்று திருவாதவூரடிகள் குறிப்பிடுகின்றார். பருந்தும் நிழலும் போல் பாடலும் இசையும் ஒன்றைவிட்டு ஒன்று பிரியாதனவாதலின் பண்ணாகிய உயிரைத் தாங்கியிருக்கின்ற பாடலாகிய உடல் என்ற நயம் தோன்ற பண் சுமந்த பாடல் என்கிறார்.

நாளும் இன்னிசை கேட்கும் இச்சையால் நாவினுக் கரையனுக்கும் ஞானசம்பந்தருக்கும் திருவீழிமிழலையில் நித்தமும் எம்பெருமான் காசு நல்கினார். காழி முத்துத் தாண்டவருக்குத் தில்லை அம்பலவாணன் நித்தமும் காசு நல்கினார். அருணகிரி பெருமானுக்குத் திருச்செங்கோட்டில் படிக்காசு வழங்கினார். இந்நிலைகளையெல்லாம் எண்ணுகையில் மாணிக்கவாசகர் கூறிய பண் சுமந்த பாடற்குப் பரிசு படைத்தருளும் என்ற தொடரின் ஆழ் பொருளை உணர முடிகின்றது.

முத்தமிழில் ஒன்று இசைத்தமிழ். இசைத்தமிழ் இயலையும் நாடகத்தையும் இணைத்து நிற்கும் தமிழ். தொன்மையுடையது. நரம்பின் மறை என்று தொல்காப்பியம் சுட்டுகிறது. யாழும் பறையும் நிலத்துக்குரிய கருப்பொருளாக விளங்கின. சங்க காலப் பாணர், பாடினி, பொருநர், விறலி,

கூத்தரால் வளர்க்கப்பட்டது. புரவலர்களால் போற்றப்பட்டது. மக்கள் வாழ்வியலோடு மிக நெருங்கியத் தொடர்புடையது.

சிலப்பதிக்கார காலத்தில் இசைத்தமிழ் வளமுற செழித்திருந்தது. யாழும், குழலும், முழவும், வரிப் பாடல்களும் வளமார் இசைத்தமிழை உரைக்கின்றன. தெய்வத்தமிழ் காலத்தில் இறை உணர்வு வளர்க்கும் ஆற்றலாக இசைத்தமிழ் விளங்கியது. தலங்கள் தோறும் பயணித்தது. அடியார்களையும் ஒருங்கிணைத்தது. திருக்கோயில் மாநிலமாகத் தமிழகத்தை உலகரங்கில் அடையாளப்படுத்தியது. இன்றும் திருக் கோயில்களில் இறைவன் முன்பு பக்திப்பெருக்குடன் பாடப் பட்டு வருகிறது.

இத்தகு இசைத்தமிழ் இசைப் பாடல்கள், இசை இலக்கண நூற்கள், மிடற்றிசை மற்றும் கருவி இசை வாணர்கள், இசையைப் போற்றும் புரவலர்கள், இசையை மகிழ்ந்து போற்றும் சுவைஞர்கள் மூலம் இன்றும் வளர்க்கப் பட்டு வருகிறது. தொன்மையும் தொடர்ச்சியும் உடையது. தமிழைச் செம் மொழியாக்கிய பண்பு கொண்டது.

தஞ்சாவூர் உலகத் திருக்குறள் பேரவை, தஞ்சாவூர் பாரதி சங்கத்தில் இந்நூலாசிரியர்களாகிய நாங்கள் இசைத்தமிழ் அறிஞர்கள் பற்றித் தொடர்ந்து உரையாற்றி வருகிறோம். உலகத் திருக்குறள் பேரவையில் எண்பதிற்கும் மேற்பட்ட இசைத்தமிழ் அறிஞர்கள் பற்றியும் பாரதி சங்கத்தில் பதினைந்திற்கும் மேற்பட்ட இசைத்தமிழ் அறிஞர்கள் பற்றியும் உரையாற்றி உள்ளோம். பாரதி சங்கத்தில் உரையாற்றிய சீர்காழி அருணாசலக் கவிராயர் பற்றிய பொழிவு முதல் நூலாக வெளிவந்தது. உலகத் திருக்குறள் பேரவையில் உரையாற்றி 16 இசைத்தமிழ் அறிஞர்கள் பற்றிய பொழிவுகள் இசைத்தமிழ் அறிஞர்கள் தொகுதி-1 நூலில் வெளியிடப்பட்டன.

சீகாழி முத்துத்தாண்டவர், தில்லை விடங்கன் மாரிமுத்தாப்பிள்ளை, சீகாழி அருணாசலக் கவிராயர், கோபால கிருஷ்ண பாரதியார், குடந்தை ப.சுந்தரேசனார், இசையரசு எம்.எம்.தண்டபாணி தேசிகர், இராவ்பகதூர் மு.ஆபிரகாம் பண்டிதர், அருட்பிரகாச வள்ளலார், காவடிச்சிந்து அண்ணாமலை செட்டியார், தஞ்சை நால்வர், பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, யாழ் நூல் விபுலானந்த அடிகளார், எழிலிசை மன்னர்

எம்.கே.தியாகராஜ பாகவதர், பாரத் ரத்னா எம்.எஸ். சுப்புலட்சுமி, திருமுருக கிருபானந்த வாரியார், தவத்திரு சங்கரதாசு சுவாமிகள் ஆகியோர் வாழ்வும் இசைத்தமிழ்ப் பணிகளும் பற்றி இசைத்தமிழ் அறிஞர் தொகுதி-1இல் இடம் பெற்றுள்ளன.

இசைத்தமிழ் அறிஞர் தஞ்சை மு.ஆபிரகாம் பண்டிதர் பற்றியும், பண்ணாராய்ச்சி வித்தகர் குடந்தை ப.சுந்தரேசனார் பற்றியும், சிலப்பதிகார அரங்கேற்று காதை கலைச் சொற்கள் பற்றியும் தனித்தனி நூற்களாக வெளியிட்டுள்ளோம்.

இசைத்தமிழ் அறிஞர்கள் தொகுதி 2இல் 23 இசைத் தமிழுக்கு வளம் சேர்த்த பெருந்தகையாளர்கள் பற்றி உரைத்துள்ளோம். தமிழ்ப் பண்ணிசை மரபில் கம்பன் என்ற பெயரில் முதல் கட்டுரையைத் தந்துள்ளோம். காரைக்குடி கம்பன் கழகத்தில் ஆற்றிய உரை இது. இசைத்தமிழுக்கு வளம் சேர்த்த கம்பனைப் பற்றி விரிவாக எழுதத்தொடங்கி வாமனா அவதாரம் போல் இக்கட்டுரையைச் சுருக்கமாகத் தந்துள்ளோம்.

தமிழகத்தின் தனிப்பெரும் இசைக் கலையாகத் திகழும் நாகசுரக் கலைக்கு மிகப்பெரிய சிறப்பை நல்கிய நாகசுரச் சக்கரவர்த்தி திருவாவடுதுறை டி.என்.இராசரத்தினம் பிள்ளை பற்றியும், மதுரையார் என்று பெருமையோடு பேசப்படும் நாகசுரக் கலைஞர், இசைத்தமிழ் ஆய்வாளர், பூர்வீக சங்கீத உண்மை என்ற நூலின் ஆசிரியர் மதுரை பொன்னுசாமி பிள்ளை பற்றியும் எழுதியுள்ளோம். அடுத்து மங்கல இசைக்குழுவில் ஒன்றாகிய தவில் கருவியின் அமைப்பும், தவிலிசைக்குப் பெருமை சேர்த்த விற்பனர்கள் பற்றிய கட்டுரையைத் தந்துள்ளோம்.

இசை உலகில் இசைச் சித்திராக விளங்கிய சிதம்பரம் செயராமனின் இசைத்திறன் தனித்திறன் உடையது. இத்தகு பெரியவரின் வாழ்வும் இசைப் பணி குறித்துக் கூறியுள்ளோம். ஆணுக்கு நிகராகப் பெண்களும் இசைக் கலையில் சிறப்புற முடியுமென வாழ்ந்த வீணை தனம்மாள் பற்றி உரைத்துள்ளோம். யாரிடமும் குருகுல முறையில் கல்லாமல் தானே பல் துறைகளில் விற்பனராக விளங்கிய 'வீணைதான் பாலசந்தர் பாலசந்தர்தான் வீணை' என்ற வாழ்ந்த வீணை பாலசந்தர் பற்றி எழுதியுள்ளோம்.

திருவாரூர்த் தேரழகு. இத்திருத்தேரை வடம் பிடித்து இழுக்கும் உரிமை பெற்ற திருவாரூர்க் கொண்டி மகளிர் பரம்பரை பற்றியும் தியாகேசர் குறவஞ்சி, பல்லக்கி சேவா நாடகம் பற்றி இசை உலகிற்கு வெளிப்படுத்திய பத்மஸ்ரீ பி.ஆர்.திலகம் அம்மையார் பற்றியும் கூறியுள்ளோம்.

இசைக்கு நாதமும் இலயமும் இரு கண்களாகும். பண்டைய தண்ணுமை என்ற கருவி இசையில் புதுக்கோட்டை பாணியாளர்களாக விளங்கிய மறைந்த மான்பூண்டியா பிள்ளை, தட்சிணாமூர்த்தி பிள்ளை, தட்சிணாமூர்த்தி ஆசாரியார், சுவாமிநாத பிள்ளை, இன்று வாழ்ந்து வரும் திருச்சி தாயுமானவன் ஐயா ஆகியோரின் வாழ்வும் இசைப் பணிகளும் பற்றி கூறியுள்ளோம்.

தமிழகத்தின் தலைசிறந்த நடனமாக விளங்கும் பரத நாட்டியக் கலையில் தனக்கென தனி முத்திரையோடு வாழ்ந்த நாட்டியக் கலைக்கொண்டல் குத்தாலம் கணேசன் பிள்ளை, இசைப் பேரறிஞர், பத்மஸ்ரீ வழுவூர் இராமையா பிள்ளை இருவரின் நாட்டியப் பணிகள் குறித்து எழுதியுள்ளோம்.

இசைப் பாடல்கள் படைத்து இசைத்தமிழ் வளர்த்த இசைப் பேரறிஞர் பாபநாசம் சிவம், மகாத்மா நீலகண்ட சிவன், கவிஞர் கு.சா.கிருஷ்ணமூர்த்தி, தஞ்சைப் பாவலரேறு பாலசுந்தரம், வைத்தீசுவரன் கோயில் பதம் சுப்பராமய்யர் ஆகியோர் வாழ்வும் இசைத்தமிழ்ப் பணிகளும் பற்றி உரைத்துள்ளோம்.

இசைப் பாடல்களுக்கு இசையமைத்துத் தெய்வத் தமிழிசை உலகமெங்கம் பரப்பிய மிகப் பெரும் இசை அமைப்பாளர், இசைப் பேரறிஞர் டி.ஆர்.பாப்பா பற்றியும், இவரது இசையமைப்பால் உருவாகிய இசைப் பாடல்களைத் தமது வெண்கலக் குரலால் பாடி இன்றும் தமிழர் நெஞ்சங்களில் நீங்காது வாழ்ந்து வரும் இசைப் பேரறிஞர் சீர்காழி கோவிந்தராஜனின் வாழ்வு, இசைப் பணிகள் பற்றியும் உரைத்துள்ளோம்.

இசைப் பாடல்களின் இரும்புக் கோட்டையாகத் திகழும் திருப்புகழ்ப் பாடல்களைப் பண்டிதர்களும் பாமரர்களும் பாடி உணரும்படி திருப்புகழ்ப் பாராயணத்திரட்டு நல்கிய வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் பற்றியும்,

மற்றொரு அருணகிரிநாதராக வாழ்ந்து 6666 அரும்பாடல்களைத் தந்த பாம்பன் சுவாமிகள் பற்றியும் கூறியுள்ளோம்.

இசைத் துறையில் கண்ணன் புகழைப் போற்றும் ஏராளமான பாக்களைப் படைத்தும் துரோணராக விளங்கிய ஊத்துக்காடு வேங்கடசுப்பயைர் பற்றியும், ஏகலைவனாக இவரின் இசையைக் கற்ற நாகசுர விற்பன்னர் பற்றியும் கூறியுள்ளோம்.

இவ்வகையில் 23 இசைத்தமிழ் அறிஞர்கள் பற்றிய வாழ்வும் இசைப் பணிகளும் இந்நூலுள் இடம் பெற்றுள்ளன. இவர்களைப் பற்றி உரையாற்றிட வாய்ப்பளித்த தஞ்சை உலகத் திருக்குறள் பேரவையைச் சார்ந்த பொறுப்பாளர்கட்கும், தவறாது பொழிவுகளைக் கேட்டு எங்களை ஊக்கப்படுத்தி வரும் அன்பர்கட்கும், குறிப்பாகக் குறளடிகளார் புலவர் மொ.பழநி மாணிக்கனார் திருமகனார் குறள் அறச்சுடர் பழமாற வர்மன் அவர்கட்கும், திருக்குறள் ச.சோமசுந்தரம், குறள் நெறிச் செம்மல் புலவர் மா.கந்தசாமி, குறள் நெறிச் செம்மல் முனைவர் இரா.கலியபெருமாள், குறள் நெறிச் செல்வர் க.சண்முகசுந்தரம் மற்றுமுள்ள அன்பர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இவர்கள் அளித்து வரும் வாய்ப்பால் ஆங்கில மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமைகளில் இசைத்தமிழ் அறிஞர்கள் பற்றி ஏழு ஆண்டுகளாகத் தொடர்ந்து உரையாற்றி வருகிறோம்.

தமிழ் மூதறிஞர்கள் வாழ்வும் வாக்கும் பற்றி தொடர்ந்து பல வருடங்களாக உரை அரங்கை நடத்தி வந்த வழக்கறிஞர் தெய்வத்திரு வீ.சு.இராமலிங்கம், தற்பொழுது இப்பணியை மேற்கொண்டு வரும் அன்பு இளவல் இரா.செம்பியன் அவர்கள் செயல்படுத்தி வரும் பாரதி சங்கத்தில் பொழிவுகள் பல தந்துள்ளோம். அவற்றில் சில தற்பொழுது நூலாக்கம் பெற்றுள்ளன. இவர்கட்கும் எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலுள் இடம்பெறும் கட்டுரைகள் பல இதழ்களிலும் மலர்களிலும் இடம் பெற்றுள்ளன. இவ்விதழாளர் கட்கும், மலர்க்குழுவினருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலாக்கப் பணியின் பொழுது ஆர்வத்துடன் மனமுவந்து வந்து தன் பங்கிற்குப் பொருளுதவி செய்த இசைப்

பேரறிஞர் டி.ஆர்.பாப்பாவின் அண்ணன் மகளார் ஓய்வு பெற்ற தமிழாசிரியர் சோம.நவநீதம் அவர்கட்கும் எங்களின் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலாக்கப் பணிக்கு உதவி வரும் தஞ்சைப் பொறியாளர் சு.கோவிந்தராசனார் அவர்கட்கும், திருமதி மாரிக்கண்ணு செல்வகணபதி அவர்கட்கும் கிங்க்ஸ் பொறியியல் கல்லூரி பேராசிரியர் முனைவர் சுரேஷ்குமார் அவர்கட்கும், பெரம்பலூர் தனலட்சுமி சீனிவாசன் கல்லூரி தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் இரா.கார்த்திகேயன் அவர்கட்கும், மெய்ப்புத்திருத்தி உதவிய நண்பர் புலவர் மா.கந்தசாமி அவர்கட்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலைத் தஞ்சைப் பெரியகோயில் வார வழிபாட்டின் 59வது தொடக்கவிழாவில் வெளியிடத் துணை நிற்கும் சிவத்திரு சோம.ஆறுமுகம் அய்யா அவர்கட்கும், தஞ்சைப் பெரியகோயில் வார வழிபாட்டுக் குழுவினருக்கும் எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூலை வெளியிட மனமுவந்து இசைவளித்து சிறப்பு வழங்கியருளும் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக மாண்பமை துணைவேந்தர் முனைவர் க.பாஸ்கரன் அவர்கட்கும், நூலின் முதற்படியைப் பெற்று வாழ்த்துரை வழங்கியருளும் தஞ்சை அரண்மனை தேவஸ்தான பரம்பரை அறங்காவலர் மற்றும் மூத்த இளவரசர் சிவத்திரு பாபாஜி இராஜா போன்ஸ்லே அவர்கட்கும் எங்களின் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்நூல் நன்முறையில் அச்சிட்டு, எங்களை ஊக்கப் படுத்தி வரும் தஞ்சை அனன்யா பதிப்பகம் உரிமையாளர் திருமிகு அருள் மற்றும் பதிப்பகத்தார்க்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இது போன்ற பணியில் எங்களை ஊக்கப்படுத்தி வரும் அனைவர்க்கும் எங்களின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

2802, நாணயக்கார செட்டித்தெரு,
தஞ்சாவூர் – 613 001.
அலைபேசி : 9442768459

சண்முக.செல்வகணபதி

செ.கற்பகம்

உள்ளடக்கம்

தமிழ்ப் பண்ணிசை மரபில் கம்பன்



தமிழ்ப் பண்ணிசை தொன்மையானது. வளம் நிறைந்தது. நுட்பம் மிகுந்தது. பண்ணும் தாளமும் ஒருங்கிணைந்தது. மக்கள் வாழ்வோடு பிணைந்தது. பல்வகை இசைக் கருவிகளோடு மக்களை மகிழ்வித்தது. மன்னரையும் மக்களையும் மகிழ்வித்துப் பின் இறை நெறியோடு இணைந்தது. 103 பண்களையும் 11,991 ஆதி இசைகளையும் அன்றே கண்டது. பல்வேறு தாள நுட்பங்களையும் தன்னகத்தே கொண்டது. மக்களை விழிப்புற வைக்க நாயன்மார்களோடும், ஆழ்வார்களோடும் தலயாத்திரை மேற்கொண்டது. ஆலய வழிபாட்டின் அங்கமானது. ஆலயத்தால் வளர்க்கப்பட்டது. தொழில் முறைக் கலைஞர்களால் பயிலப்பட்டது. கலையை இறைவனுக்கு அர்ப்பணித்தது. இறைவனையும் இறைவியையும் கலைத் தெய்வங்களாகக் கண்டது.

சோழ நாட்டின் வளமான காலத்தில் வாழ்ந்தவர் கம்பன். சோழர்களால் போற்றப் பெற்ற பண்ணிசைகளால் ஈர்க்கப் பெற்றவர். நாயன்மார்களும், ஆழ்வார்களும் தந்த அமுத இசை வெள்ளத்தை அள்ளி அள்ளிப் பருகியவர். ஆலயந்தோறும் வழிபடும் கலையாக இருந்த பண்ணிசை வளங்களிலும், பண்ணிசையை வளப்படுத்தும் கருவி இசை முழக்கங்களிலும் ஈடுபாடு கொண்டவர். தான் படைத்த இராம காதையில் பளிச்சிடும் நிலையில் இவைகளைத் தந்துள்ளார். பண்டைய பண்ணிசை வளங்களைப் பாத்திரங்களின் வாயிலாகவும், இயற்கையின் இனிமையிலும் கண்டார். குழலோடும் யாழோடும் எழும்பிய பண்ணிசையும், முரசு, பறை, திமில்

முதலான தோற்கருவிகளின் முழக்கமும் இவரின் பாடல்களை அலங்கரித்தன. பாடல் நடையை, சந்தத்தை நெறிப்படுத்தின.

கம்பன் காட்டும் பண்கள்:

நிலத்தின் அடிப்படையில் அமையும் பண்கள் நான்காகும். முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என நில வகையால் அமையும் பண்கள் நான்காகும். கம்பன், சுந்தர காண்டம் ஊர்தேடு படலம் பா.எண்.179இல் இராவணன் சிவபெருமானின் புகழைத்தன் அங்கையின் நரம்புகளால் நான்கு பெரும் பண்களையும் நயப்புறப் பாடினான் என்கிறார்.

கூடி நான்குயர் வேலையுங் கோக்க நின்
றாடி னான்புக ழுங்கை நரம்பினால்
நாடி நாற்பெரும் பண்ணு நயப்புறப்
பாடி னான்புகழ் பாடுகின் றார்சிலர் (5012)

இத்தகைய பண்கள் பாடலோடு அமைந்து பண்சுமந்த பாடலாகி விடுகின்றன. தேவாரம், திவ்வியபிரபந்தப் பாடல்கள் இவ்வகையின. பாடல் பண்ணோடு அமையும் நிலையைக் கம்பர் குறிப்பிடுகின்றார். 'பண்ணிமையடைந்தன பலகட் பொருநர் பாடல் (சுந்தர.கா.257) குறிப்பிடுகிறார். இப்பாடல்கள் பண் சுமந்த பாடல்களாக அமைவதோடு தாளத்தோடு அமைந்த பாணியாக அமையும். இதனைக் கம்பன் "பாணி தள்ளாத பாடல முதுகப் பாடுவாரும்" (சுந்தர.282) என்று குறிப்பிட்டுள்ளார். இப்பாடல்கள் மிடற்று வழியாகவும், நரம்புக் கருவியான யாழ், வீணை வழியாகவும் காற்றுக் கருவியான குழல் வழியாகவும், இசை இனிமையோடும் வரும் என்பதனைக் கம்பன்,

வீணையும் குழலுந் தத்தம் மிடறும் வேற் றுமையின் தீர்ந்த
பாணிகள் அளந்த பாடலமிழ்ந்து கப்பாடு வாரும் – (சுந்தர.282)

என்கிறார்.

சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவை வாயிலாக இளங்கோ அடிகள் தொன்றுபடு இசை, ஆடல் முறைகளைக் காட்டியுள்ளார். இவற்றின் வாயிலாகப் பண்ணுப் பெயர்த்தல் என்கிற இசை மரபைத் தெளிவு படுத்தியுள்ளார். இதன் மூலம் குரல் குரலாக அமையும் செம்பாலை, துத்தம் குரலாக அமையும் படுமலைப் பாலை, கைக்கிளை குரலாக அமையும் செவ்வழிப்பாலை, உழை குரலாக அமையும் அரும்பாலை, இளி குரலாக அமையும்

கோடிப்பாலை, விளரி குரலாக அமையும் விளரிப்பாலை, தாரம் குரலாக அமையும் மேற்செம்பாலை முறைகள் கண்டுணரப் பட்டுள்ளன. இவை தற்காலத்தில் வழங்கப் பெறும் இராகங்களாக முறையே அரிகாம்போதி, நடபைரவி, மத்திமதோடி, சங்கராபரணம், கரகரப்பிரியா, தோடி, கல்யாணி இராகங்களாக அமைந்துள. கம்பர் தொன்றுபடு இவ்விசை மரபின்படி நாற்பெரும் பண்களையும் அவற்றது திறன்களையும் போற்றியுள்ளார்.

முல்லைப்பண்:

முல்லைப்பண் தொன்மையான பண். இது ஏழ்பெரும் பண்களுள் ஒன்றாகும். ஆயர்கள் குழல் மூலம் இசைத்த பண். இது திறப்பண்ணாக முல்லையந்தீம்பாணி உள்ளது. முல்லைப் பண் ஏழலகு கொண்ட பண்ணாகும். முல்லையந்தீம்பாணி ஐந்தலகு கொண்ட திறப்பண்ணாகும். முல்லைப் பண்ணைப் பாலையாழ் என்றும், செம்பாலை என்றும், அடிப்படைப் பாலை என்றும், குரல் பண் என்றும், தொல்லேழிசை என்றும், குழல் பண் என்றும் கூறுவர். இது குரல் குரலாக அமையும் பண்ணாகும். 'கூடுகொள் இன்னியம் குரல் குரலாக' *(சிறு.பாண்.229)*, குரல் குரலாயது செம்பாலை *(சிலம்பு.17:13 அடிகள்)*, குரல் வளர் முல்லை *(சிலம்பு.4:15 அரும்பத உரை)*, இப்பண் பற்றி சங்க இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. பாணர் முல்லைப் பாட *(ஐங்.408:9)*, முல்லை நல்யாழ்ப்பாண *(ஐங்.478:5)*. இதனைப் பாலைப்பாணி என்றும் கூறுவர். பாலைப்பண் பற்றி சிலம்பும் கம்பனின் இராமகாதையும் குறிப்பிடுகின்றன. 'பாற்பட நின்ற பாலைப் பண்மேல்' *(சிலம்பு.3:149)*. கம்பர் இப்பாலையாழ் குறித்து சூர்ப்பணகைச் சூழ்ச்சிப் படலத்தில் குறிப்பிட்டுள்ளார்.

சூர்ப்பணகையின் சூழ்ச்சியால் இராவணன் காமவெறியன் ஆனான். மயிலுடைச் சாயலாளை வஞ்சிய முன்னம் நீண்ட எயிலுடை இலங்கை நாதன் இதயமாம் சிறையில் வைத்தான். காமநோய் முதிர ஓர் குளிர்ச்சோலை புக்கான். அவன் சோலை யூடு செல்வதனைக் குறிப்பிடும் கம்பர்,

> பன்னு கோடி தீபமாலை, பாலையாழ் பழித்தசொல்
> பொன்னனார், எடுக்க அல்கு, ஓர் சோலைஊடு போயினான்
> (பா.எண்.3161)

இவ்விடத்தில் பாலை யாழைக் குறிப்பிடுகிறார். பாலையாழ் என்பது செம்பாலை, முல்லைப் பணி. இன்றைய அரிகாம்போதி இராகமாகும்.

பாலை:

பாலை நிலத்தின் பெரும்பண் அரும்பாலையாகும். இது பாலையாழ், மருவின் பாலை, பஞ்சுரம், பழம் பஞ்சுரம் என்று அழைக்கப்பெறும். உழை குரலாயது அரும்பாலையாகும். இது சங்கராபரண இராகமாகும்.

இதன் திறம் கொன்றையந்தீங்குழல் என்று கூறப்படும். முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை என்று பெயர் பெறும். அரும்பாலை என்பது குறிஞ்சியையும், கொன்றையந்தீங்குழல் என்ற தொடர் முல்லையையும் குறித்து, பின்பு பாலைக்குரியதாயிற்று. கொன்றையந் தீங்குழல் பாலை நிலத்துச் சிறுபண், பாலைப் பாணி இராகம் சுத்தசாவேரி, இதன் தேவாரப் பெயர் பழந்தக்க இராகமாகும்.

கொன்றையந் தீங்குழல் பற்றி சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவை குறிப்பிடுகின்றது.

கம்பர் பாலகாண்டத்தில் கோவலர்கள் வேய்ங்குழல் கொண்டு முன்றிலில் கொன்றைப் பண்ணை இசைக்க அதனைக் கேட்டுக் கன்றுகள் பண்ணிசை இனிமையில் உறங்கின என்கிறார்.

கொன்றை வேய்ங்குழல் கோவலர் முன்றிலில்
கன்று உறங்கும். (நாட்டு.34)

குறிஞ்சிப்பண்:

குறிஞ்சிப் பெரும்பண் படுமலைப் பாலையாகும். துத்தம் குரலாக வரும் பண். தற்கால நடபைரவியாகும். 'குறிஞ்சி பாடுமின் நறும்புகை எடுமின் *(சிலம்பு.24:18)* குறிப்பிடுகின்றது. நறுங்கார் அடுக்கத்துள் குறிஞ்சிப்பாடி *(மலைபடுகடம்.359)*. இக்குறிஞ்சிப் பண்ணை யாம நல்யாழ் என்பர். யாமம் என்றும் கூறுவர். இது குறிஞ்சி நிலத்திற்குரிய சிறுபொழுதால் பெற்ற பெயராகும். குறிஞ்சி கூதிர் யாமம். *(தொல்.பொ.6)* குறிஞ்சிப் பெரும்பண் படுமலைப் பாலையாகிய நடபைரவியாகும்.

குறிஞ்சிப்பாணி, செந்துருத்தியாகிய மத்திமாவதியாகும். இக்குறிஞ்சிப் பண் பற்றிக் கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

யாமயாழ் (பால.கா.372)

யாம யாழ், மழலை யாழ் (கிட்கிந்தா.77)

இக்குறிஞ்சிப் பண்ணைக் கொடிச்சியர் பாடினர். இதனைக் கம்பர் அயோத்தியா காண்டத்தில் குறிப்பிட்டுள்ளார். கொடிச்சியரின் குறிஞ்சிப் பண் கேட்டு அசுணமா பறவை வந்ததனைக் குறிப்பிடுகிறார்.

நினைந்த போதிலும் அமிழ்து ஒக்கும் நேரிழை! நிறைதேன்
வளைந்த வேங்கையில், கோங்கினில், வயின்தொறும் தொடுத்துக்
குனிந்த ஊசலில், கொடிச்சியர் எடுத்த இன்குறிஞ்சி
கனிந்த பாடல்கேட்டு, அசுணமா வருவன காணாய் (2069)

குறிஞ்சிப் பாணியைச் செந்நிறம், செந்துருத்தி என்றும் மத்தியமாவதி இராகம் என்றும் கூறுவர். இது குறிஞ்சி நிலத்துச் சிறுபண்ணாகும். இக்காலத்தில் உள்ள குறிஞ்சிப்பண் பதிகங்கள் அரிகாம்போதியில் பாடப்பெறுகின்றன.

மருதப்பண்:

வயலும் வயல் சூழ்ந்த நிலம் மருதம். இங்கு இசைக்கப் பெற்ற பண் மருதப்பண். ஏழ்பெரும் பாலைகளுள் இது கோடிப் பாலையாகும். இளி குரலாயது கோடிப் பாலையாகும். இன்றைய நிலையில் கரகரப்பிரியா இராகமாகும். பஞ்சம சுரப்பண் என்பர். காலைப் பொழுதிற்குரிய பண். இப்பண் குறித்துச் சங்க இலக்கியங்கள் குறிப்பிட்டுள்ளன.

மருதம் பண்ணிய கருங்கோட்டுச் சீறியாழ் (மலைபடு.534)

யாழோர் மருதம் பண்ண....
புலர்ந்தது விரி விடியல் எய்த (மதுரைக்காஞ்சி.658:664)

இது திணை மயக்கத்திலும் பாடப்பெறும். குறிஞ்சி நிலத்துக் கானவர் மருதம் பாடியதனைப் பொருநர் ஆற்றுப்படை குறிப்பிடுகின்றது. "கானவர் மருதம் பாட" (பொருநர்.220). இப்பஞ்சப் பண்ணாகிய மருதப் பண்ணைக் கம்பர் குறிப்பிட்டுள்ளார். கம்பர் யுத்த காண்டத்தில் "பஞ்சமம் சிவணும் இன்னிசை பாட" (யுத்.கா.817) என்று குறிப்பிட்டுள்ளார்.

மருதப்பண் கோடிப்பாலையாகிய கரகரப்பிரியா இராகமாகும். இதன் திறப்பண் மருத யாழ்த்திறம் காமரம். சிலர் சுத்ததன்யாசி என்கின்றனர். காமரம் என்பது சீகாமரம். இன்றைய நிலையில் சீகாமரப்பண் பதிகங்களை நாதநாமக்கிரியா இராகத்தில் பாடி வருகின்றனர்.

மருதப்பாணி – காமரம்:

காமரப் பண்ணை ஆம்பல் என்றும் ஆம்பலந் தீங்குழல் என்றும் கூறுவர். இதனை மருதப்பாணி என்பர். மருதப் பாணியைச் சுத்ததன்யாசி இராகம் என்பர். காமரப்பண் வண்டின் ரீங்காரம் போல் இருக்கும்.

காரைடைந்த சோலை சூழ:ந்த காமரம் வண்டிசைப்ப
(தேவா.47:3)

ஏம இன் துணை தழீஇ இறகு உளர்ந்து
காமரு தும்பி காமரம் செப்பும்
தண்பனை தழீஇய தளாஇருக்கை (சிறுபாண்.76–78)

கல்வெட்டுக்களில் காமரப்பண் பாடியவர்கள் பற்றிய குறிப்புகள் உள (தெ.இ.க.2:66).

திருமுறையில் சீகாமரப் பண்ணுக்குரியவனாக

2 ஆம் திருமுறை 40 - 53 பதிகங்கள்
4 ஆம் திருமுறை 19 - 20 பதிகங்கள்
7 ஆம் திருமுறை 86 - 89 பதிகங்கள்

கம்பர் காமரப் பண் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

காமரம் பருத்த பாடல்கள் எனக்கனிந்த செஞ்சொல்
(அயோ.49)

காமரம் முரலும் பாடல்கள் எனக் கனிந்த இன்சொல்
(ஆரண்ய.628)

அனுமன் சீதையைத் தேடச் சென்றவன் இலங்கையில் மண்டோதரியைக் கண்டான். மண்டோதரிக்கு அரம்பை, மேனகை, திலோத்தமை முதலான தேவ கன்னியர்கள் பணிவிடை செய்து கொண்டு இருந்தனர். கரும்பு இனிய சுவையைக் கற்றுக் கொடுத்த இனிய சொற்களையுடைய மாதர்கள் காமரம் என்னும் பண் கனிந்து பொழிகின்ற

நரம்புகளிலிருந்து இனிய கீதத்தின் இனிமையுடன் பாடினர் என்று கம்பர் காமரப் பண்ணின் இனிமையைப் பாடியுள்ளார்.

கரும்பை யின்சுவை கற்பித்த சொல்லியர் காமரங் கனிகின்ற
நரம்பி னின்னிசை செவிபுக நாசியிற் கற்பக விரை நாள
(சுந்.292)

நெய்தல் பண்:

நெய்தல் நிலத்திற்குரிய பண்ணை நெய்தல் பண் என்றும் விளரிப்பண் என்றும் கூறுவர். இது இரங்கல் சுவைப்பண். நெய்தல் நிலத்துப்பண் செவ்வழியாகும். சிறுமணி விளரி ஆர்ப்ப (குறுந்.336), நுழையர் விளரி நொடி தரும் தீம்பாலை (சிலம்பு.7:46), விளரிப் பண்ணுக்குரிய இராகம் தோடியாகும். செவ்வழிப்பாலை இருமத்திமம் பெற்ற தோடியாகும். ச ரி^{1}க^{1}ம^{1}ம^{2}த^{1}நி^{1} - செவ்வழி நெய்தலந் தீம்பாணியாக இந்தளம் அமைந்துள்ளது. குரல் முதல் கிளைமுறை தொடுக்க இப்பண் கிடைக்கும்.

0 1 2 3 4 5
ச ரி^{1} ரி^{2} க^1 க^2 ம^1

இன்று இந்தளப் பண்ணை மாயாமாளவ கௌளை இராகத்தில் பாடுகின்றனர்.

இவ்விளரிப் பண் இனிமையைக் கம்பர் பாடியுள்ளார். நெய்தலுக்குரிய விளரிப்பண் பற்றி கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

விளரி நிரம்பப் பாடலொடு ஆடினார் வீதிகள் நெருங்க
(யுத்த.காண்.487)

விளரிச் சொல்லிய கோதையால் (சுந்தர.128)

விளரி நல்யாழ் (கிட்கிந்தா.392)

தும்பி காலைச் செவ்வழி முரல்வ (பால.கா.45)

நெய்தல் நிலத்து நுளைச்சியர் செவ்வழி இசைப்பதனையும் குறிப்பிட்டுள்ளார்.

கருவி இசை:

கம்பர் நாற்பெரும் பண்களையும் அவற்றின் திறப் பண்களைப் பற்றிக் குறிப்பிட்டதோடு இசைக் கருவிகளின் இசை இன்பத்தையும் குறிப்பிட்டுள்ளார். கம்பர் மகர யாழ் பற்றிக் குறிப்பிடுகிறார். கம்பர் காலத்தில் இத்தகைய யாழ் பழக்கத்தில் இருந்துளது.

இறங்குவ மகரயாழ் எடுத்த இன்னிசை
நிறங்கிளர் பாடலான் நிமிர்வ (பால.140)

யாழிசையும் மிடற்றிசையும் இணைந்து எழுந்துள்ள திறனைக் குறிப்பிடுகிறார். யாழிசை எங்கும் ஒலித்த நிலையையும் குறிப்பிட்டுள்ளார்.

மழலை யாழிசை யோடு மலிந்ததுவே (பா.1115)

மழலை யாழ் இனிமை பற்றிக் குறிப்பிடுகிறார். குழலினிது யாழினிது என்ப, மழலைச்சொல் கேளாதவர் என்கிற குறளின் கருத்தை யொட்டியும் கம்பர் பாடியுள்ளார்.

யாழுக்கும் இன்குழற்கும் இன்பம்
அளித்தன இவையாம் என்ன
கேட்குமென் மழலைச் சொல் ஓர்
கிஞ்சுகம் இடந்த வாயாள் (பா.974)

என்கிறார்.

யாழின் வளர்ச்சி நிலையில் அமைந்த வீணை இனிமையான கருவி என்றும் அதிலும் மகர வீணையின் இசை தேன் போன்று இனியது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நல்லியல் மகரவீணைத் தேனுக (பா.703)

மகர வீணையின் மந்தர கீதத்து மறைந்த
சகர வேலையின் ஆர்கலி (பா.4863)

மங்கல கீதம் பாடுகையில் பல்வேறு இசைக் கருவிகள் இணைந்து முழங்கிய திறனையும் குறிப்பிட்டுள்ளார்.

மங்கல கீதம்பாட, மறையவர் ஆசிகூற
சங்கினம் குமுற பாண்டில் தண்ணுமை துவைப்பு (பா.10336)

பல்வேறு இசைக் கருவிகள் இணைந்து முழங்கிய திறனையும் கம்பர் குறிப்பிட்டுள்ளார். 23 தாள இசைக் கருவிகள் சேர்ந்து முழங்கிய நிலையைப் பின்வரும். பாடலால் அறிகிறோம்.

கும்பிகை திமிலை செண்டை
குறடுமாப் பேரி கொட்டிப்
பம்பை தார் முரசம் சங்கம்
பாண்டில் போர்ப் பணவம் தூரி
கம்பலி உறுமை தக்கை
கரடிகை துடிவேய் கண்டை
அம்பலி கணுவை ஊமை
சகடையோ டார்த்த வன்றே (பா.8445)

இவ்வாறு கம்பர் இராம காதையில் பண்டைய தமிழ்ப் பண்ணிசையையும், அவற்றது பாலை முறைகளையும், திறன்களையும், நானிலப் பண்களையும், இசைக் கருவிகள் இன்பத்தையும், தாளக் கருவிகளின் முழக்கங்களையும் தந்துள்ளார்.

கம்பர் இசைக் கருவிகள் பலவற்றைக் குறிப்பிட்டு உள்ளார். பறையைக் கொட்டிப் பிறருக்குச் செய்திகள் அறிவிக்கும் "அறை பறை" பற்றி தெரிவித்துள்ளார்.

அறை பறை யன்ன நீரார் – பால.கா.1102

கின்னரம் என்பது ஒரு இசைக் கருவி.

மழலை வண்டு கின்னரம் நிகழ்த்த
– கிட்கிந்தா.கா.475

கின்னரம் இசையறிவதோர் புள்ளினம்

கின்னரம் குரண்டங் கிலுங்கடம் சிரல்
– சுந்தர.கா.246

இவ்வாறு கின்னரம் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

சங்கு ஓர் இசைக்கருவி. போர்க்களத்திலும் பயன் படுத்தப்படும் ஒரு கருவி. இசைக்குழுவில் தாளக் கருவியாகப் பயன்படுத்தப் பெற்றுள்ளது. திருமணத்தில் மங்கலக் கருவியாகவும் பயன்படுத்தப் பெற்றுள்ளது. இக்கருவி பற்றி கம்பர் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்.

பாண்டிலும் சங்கமும் – பால.கா.489

சங்கொலி வயிரினோசை – யுத்த கா.2399

அண்டம் வெடிபட ஆர்த்தசங்கம் – யுத்த கா.1061

திருமால் பாஞ்ச சன்னியம் என்னும் சங்கினை வைத்திருந்தார் என்கிறார்.

சங்குறை கரத்தொரு தனிச்சிலை தரித்தான்
– பால.கா.367

தண்ணுமை, தக்கை, சில்லரி, திமிலை, துடி என்ற இசைக் கருவிகள் பற்றி கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

தழங்கிசை வழங்கும் வீணை தண்ணுமை அடைந்தன
– சுந்தர கா.257

சில்லரி சதங்கை – யுத்த கா.2775

கரடிகை துடிவேய் கண்டை – யுத்த கா.2397

சுருதி கூட்டப் பயன்படும் யாழைத் "தமிழ் யாழ்" என்று குறிப்பிடுகிறார். குரல் இளி நரம்பு (இணை நரம்பு) தொகுக்கப்பட்ட யாழாகும்.

குறி நரம்பு எறிவுற்று எழுவு தண்டமிழ்
யாழிலும் இனிய சொற்கிளியே – அயோத்தியா கா.764

இவ்வாறு மகர வீணை, நாரதர் வீணை, வங்கியம் பற்றிய செய்திகளையும் கம்பர் குறிப்பிட்டுள்ளார். இவை போன்ற இசைக் கருவிகள் பற்றிய குறிப்புகள் கம்பராமாயணத்தில் காணப்படுகின்றன.

தமிழ்ப் பண்ணிசையைக் கம்பர் ஏற்றிப் போற்றியுள்ளார். சீகாழி அருணாசலக் கவிராயர் கம்பனின் இராம காதையை இராம நாடகக் கீர்த்தனையாக்கித் தந்துள்ளார். முனைவர் இரா. திருமுருகன் கம்பன் பாடிய வண்ணங்களை ஆய்வு செய்துள்ளார். கம்பன் பாடிய வண்ண வகைகளைச் சான்றுகளுடன் தந்துள்ளார். சந்த வாய்பாடுகளுடன் விளக்கியுள்ளார். கம்பனின் இசைத்தமிழ் வளம் உரைக்கும் ஆய்வாக இவரின் ஆய்வு அமைந்துள்ளது.

"குரலிசை மடந்தையர் குதலைக் கோதையர்
மழலையங் குழலிசை மகர யாழிசை
எழிலிசை மடந்தையர் இன்சொல் இன்னிசை
பழையர்தம் சேரியில் பொருநர் பாட்டிசை" – கம்.பால.கா.135

நாகசுரச் சக்கரவர்த்தி
திருவாவடுதுறை
டி.என்.இராசரத்தினம்பிள்ளை
(1898 - 1956)



"முகவீணை நாகசுர மொழிபாம்பு நாதசுரக்
தருசீங் குழன்முதலாய்ச் சாற்றும் – சுகமிகவே
தங்குமிவ் வாத்தியத்தில் காய்ந்திட்டார் நூல்வல்லோர்
மங்கள வாத்தியமெனு நாமம்"

– மகாபரத சூடாமணி நூ.855

முகவீணை, நாகசுரம், மகுடி, குழல் இந்நான்கும் குழல் கருவிகள். இவற்றை மங்கள வாத்தியம் என்று பெயரிட்டனர் என்று மகாபரத சூடாமணி என்ற இசை நூல் குறிப்பிடுகின்றது.

ஆலய வழிபாட்டில் மங்கள வாத்தியம், சகல வாத்தியம் என்று நாகசுரக் குழுவினரையே அழைப்பர். பெரிய மேளம் என்றும் கூறுவர். மங்கள வாத்தியம் என்பதில் உள்ள மங்களம் என்ற சொல் "மங்கலம்" என்று சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படுகிறது. மங்கல வாழ்த்துப் பாடல் என்ற முதலாவது காதை அழைக்கப் படுகிறது. மங்கலம் என்ற வழக்காறே தொன்மையுடையது.

நாகசுரக் கருவியை நாயனம், நாகசின்னம், நாதஸ்வரம் என்று அழைக்கின்றனர். நாகசுரம் என்ற சொல்லே இவ்வகையில் திரிந்து வழங்கப்பட்டுள்ளது. நாகசுரம் என்ற

சொல் பழமையானது. நாகர்களோடு தொடர்புடைய கருவி. நாகத்தோடும் தொடர்புடைய கருவி. நாகசுரக் கருவி இசைப்பவர்களை நாயனக்காரர்கள், மேளக்காரர்கள், இசை வேளாளார்கள் என்று அழைப்பர். நாகசுரம், தவில், ஒத்து, தாளக்குழுவைப் பெரிய மேளம் என்பர். நாட்டியக் குழுவைச் சின்ன மேளம் என்பர். பரிபாடல் இசையமைப்பாளர்களை "நாகர்" என்று அழைக்கிறது.

ஆலய வழிபாடுகளிலும் சமுதாய நிகழ்வுகளிலும் மங்கல வாத்தியக் குழுவாக விளங்கும் பெரிய மேளத்திற்குப் பண்டு தொட்டுப் பெரும் பெருமையுளது. மங்கல இசை மன்னர்களாகப் பலர் வாழ்ந்துள்ளனர்; வாழ்ந்தும் வருகின்றனர். பந்தணைநல்லூர் வீருசாமி பிள்ளை (1815 - 1889), நாச்சியார்கோவில் அமிர்தம்பிள்ளை (1819 - 1904), கீவளூர் கந்தசாமி பிள்ளை (1826 - 1897), உறையூர் முத்துவீருசாமி பிள்ளை (1829 - 1892), கூறைநாடு நடேசபிள்ளை (1880 - 1925), திருவீழிமிழலை சுப்பிரமணிய பிள்ளை (1893 - 1984), திருவிடைமருதூர் வீருசாமி பிள்ளை (1901 - 1973) போன்ற கலைஞர்கள் பலர் நாகசுர மேதைகளாக வாழ்ந்துள்ளனர். இன்றும் பலர் வாழ்ந்து வருகின்றனர். நாகசுர உலகில் நாகசுரச் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்தவர் திருவாவடுதுறை இராசரத்தினம் பிள்ளையாவார். இவரைத் திருவாவடுதுறையார் என்றும், டி.என்.ஆர். என்றும், 'அகில உலக நாதஸ்வர ஏக சக்ராதிபதி' என்றும் அழைப்பர்.

டி.என்.ஆர். என்ற உடனே அவரின் பரந்த முகம், கம்பீரமான பார்வை, சிறப்பான சிகை அலங்காரம், ஷெர்வானி சூர்வால் உடை, கையில் நாகசுரம், சிறப்பான அலங்காரம், மணக்கும் வாசனை, புன்னகைத் தவழும் இதழ்கள், காதில் மின்னும் கடுக்கண், நெற்றிக்கு அழகூட்டும் திலகம் போன்றவைகள் நினைவிற்கு வரும்.

செவியினில் ஓடி எங்கள்
சிந்தையில் ஓடி இந்தப்
புவியெலாம் ஓடி நின்பால்
பொங்கிய தோடி வேறிங்கும்
எவரிடம் போவோம் ஐயா!
இனியதைக் காப்பார் யாவர்

என்று கவியரசு கண்ணதாசன் போற்றுவது போல் தோடி இராகம் நினைவிற்கு வரும். "நுழையர் விளரி நொடி தரும் தீம்பாலை" என்று சிலப்பதிகார கானல்வரி கூறும் விளரிப் பாலை இன்றைய தோடி இராகத்தைக் குறிப்பிடும். பண்டைய பெயர் விளரிப் பாலையாகும். இத்தோடி இராகத்தை எட்டு மணி நேரம் இடைவிடாமல் இசைத்தவராக இராசரத்தினம் பிள்ளையைக் கூறுவர்.

துரிதமான வக்கிரமான பிருக்காக்கள், ஆற்றல் நிறை பிரயோகங்கள், சுருதி சுத்தமான இசை, வன்மையும் மென்மையும் இழையோடும் நிலை, அருள் பலம், ஞான பலம், சாதக பலம் நிறைந்த இசை. எந்த இராகத்தை எடுத்துக் கொண்டாலும் அதன் தூய்மை குறையாமல் மணிக் கணக்கில் வந்தது வாராமல் இசைக்கும் பிரயோகங்கள், பண்ணின் நீர்மையைப் பாங்குறக் காட்டும் பாங்கு, கேட்பாரைப் பிணிக்கும் தகைய வளம் போன்றவற்றிற் கெல்லாம் உரிமையுடையவராக டி.என்.ஆர். என்று அழைக்கப் பெற்ற சரித்திர நாயகர் வாழ்ந்தார்.

பிறப்பும் வளர்ப்பும்:

இராசரத்தினம் பிள்ளையின் இயற்பெயர் பால சுப்பிரமணியம். இவரது தந்தையார் திருமருகல் குப்புசாமி பிள்ளை. தாயார் திருமருகல் சிவஞானம் பிள்ளை மகள் கோவிந்தம்மாள். தாய்மாமன் திருமருகல் நடேசன் ஆவார். ஒரு சகோதரியார் தீனதயாளு அம்மாள். திருவாவடுதுறை ஆதீனக் குரு முதல்வர் சீர்வளர் சீர் அம்பலவாண தேசிகர் திருமருகல் வந்தபொழுது இருபது வயதுள்ள நடேச நாகசுரக்காரர் இசையைக் கேட்டு மகிழ்ந்து திருவாவடுதுறைக்கு வரும்படி அழைத்தார். திருமருகலார் ஏற்றார். குடும்பம் திருவாவடுதுறைக்குக் குடிபெயர்ந்தது. 'திருவாவடுதுறையார் குடும்பம்' என்று அழைக்கப் பெற்றது.

திருமருகல் குப்புசாமி நாயனக்காரருக்கும் கோவிந்தம்மாளுக்கும் மகனாக 27.8.1898 (ஆவணி மாதம் 10 ஆம் நாள்) பாலசுப்பிரமணியம் பிறந்தார். குப்புசாமி நாயனக்காரர் மகன் பிறந்த சில மாதங்களில் இயற்கை எய்தினார். பாலசுப்பிரமணியனார் குடும்பம் தாய்மாமன் நடேச நாயனக்காரரின் பராமரிப்பில் இருந்தது. நடேசனுக்குக் குழந்தை பாக்கியம் இல்லை. ஒரு நாள் மன்னார்குடி பக்கிரியாப்பிள்ளை

நடசேன் இல்லத்திற்கு வந்தார். நடேசன் பாலசுப்பிரமணியனை அறிமுகம் செய்து வைத்தார். என் சொத்துக்கெல்லாம் இவன்தான் வாரிசு என்றார். பக்கிரியாப்பிள்ளை "உம் சொத்துக்கு மட்டுமல்ல உங்கள் சங்கீதத்திற்கும் இவன்தான் இனி வாரிசு" என்றார். 1902 ஆண்டில் நடேசன் பாலசுப்பிரமணியனைத் தன் மகனாகத் தத்தெடுத்தார். பாலசுப்பிரமணியன் என்ற பெயரை "ராஜரத்தினம்" என்று மாற்றினார். இராசரத்தினம் தனது சுவீகாரத் தந்தை "திருமருகல் நடேசன் இராசரத்தினம்" ஆனார். நடேசனார் 28 ஆம் வயதில் காலமானார்.

நடேசனார் இறந்ததும் திருவாவடுதுறை மடத்துப் பொறுப்பாளர் இராயசம் பொன்னுப்பிள்ளை இராசரத்தினம் குடும்பப் பொறுப்பையும் ஏற்றார். இவர் திருமருகல் நடேசபிள்ளையின் மற்றொரு தங்கை கமலாம்பாளின் கணவர். இராசரத்தினத்தின் சிற்றப்பா முறையினர்.

கதிரேசம் பிள்ளை என்ற நாயனக்காரரிடம் தயாளு வாய்ப்பாட்டுக் கற்று வந்தார். இராசரத்தினமும் உடன் செல்வார். தயாளுக்குச் சொல்லிக் கொடுத்த இசையை இராசரத்தினம் பாடிக் காட்டினார். மேற்கொண்டு இசை பயிற்சியைத் திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர் கற்பித்தார். இவர் சிறந்த வயலின் மேதை. டி.என்.ஆர் இரண்டு ஆண்டுகள் இவரிடம் இசை பயிற்சி பெற்றார். கோனேரி ராஜபுரம் வைத்தியநாதய்யர், வீணை தனம்மாள் ஆகியோரிடமும் இசை பயின்றார். நன்னிலம் என்ற ஊரில் பத்து வயதில் இவரின் அரங்கேற்றம் நடைபெற்றது. சகோதரியுடன் இணைந்து மயிலாடுதுறை, திருவழுந்தூர், காஞ்சிபுரம் முதலிய தலங்களில் கச்சேரி செய்தார்.

ஒரு நாள் திருவாவடுதுறை மடத்தில் பாடினார். மடாதிபதி இராசரத்தினத்தின் இசையைக் கேட்டுவிட்டு "நடேசபிள்ளை சுவீகாரப் புத்திரன் இன்னும் நாகசுர வித்துவானாக ஆகாமல் இருக்கலாமா?" என்றார். பொன்னுப்பிள்ளை இராசரத்தினத்தைத் திருமருகலாரின் தவில் வித்துவானும் எல்லா இசைக் கருவிகளையும் இசைக்க வல்லவரும் ஆன அம்மாச்சத்திரம் கண்ணுப் பிள்ளையிடம் நாகசுரம் பயில அனுப்பினார். இரண்டு ஆண்டுகள் பயிற்சிக்குப் பின்பு திருவாவடுதுறை வந்தார். 1913 ஆம் ஆண்டில் மடத்து நாகசுரக் கலைஞர் ஆனார். அப்பொழுது இராசரத்தினத்திற்கு

வயது பதினைந்து. மடத்திற்கு வரும் பெரும் வித்வான்களோடு மடத்திலும் வெளியூர்களிலும் நாகசுரம் வாசிக்கலானார்.

மன்னார்குடி சின்னபக்கிரியைப்போல்:

ஒரு சமயம் கொங்கவராயநல்லூர் பண்ணையார் வீட்டுத் திருமணத்தில் மன்னார்குடி சின்னப்பக்கிரி நாகசுரம் வாசித்தார். கார்வார் பொன்னுப்பிள்ளையோடு இராசரத்தினமும் சென்றிருந்தார். சின்னப்பக்கிரியின் நாகசுர இசையில் இராசரத்தினம் தன்னை மறந்தார். அவரைப் போல் வாசிக்க வேண்டும் என்று திட்டமிட்டு அசுர சாதகங்கள் செய்தார். திருக்கோவிலூர் தபோவனத்தில் இராசரத்தினத்தின் முதல் நாகசுரக் கச்சேரி நடைபெற்றது. கண்ணுசாமிபிள்ளை தவில் வாசித்தார். மடாதிபதி இருவருக்கும் மோதிரங்கள் வழங்கினார். திருவாவடுதுறை மடத்தின் ஆஸ்தானக் கலைஞரானார். 1914இல் ஆதீனக் கோயில்களில் வாசிக்கலானார். தனக்கென ஒரு பாணியை அமர்த்திக் கொள்ள விரும்பினார். வாய்ப்பாட்டுப் பாணியை நாகசுரத்தில் இசைத்தார். வாய்ப்பாட்டில் கொடுக்கக் கூடிய கமகங்களைத் தனது பிருக்காக்களில் இழைத்துப் புதிய மெருகூட்டினார். பிர்க்காக்களும் விரலடிகளும் சூர்வானம் போல் வெளிவந்தன.

பல்லவியில் அமையும் சித்து வேலைகளை மதுரை பொன்னுசாமி பிள்ளை, சிதம்பரம் வைத்தியநாதன் பிள்ளையிடமிருந்து அறிந்து கொண்டார். கீர்த்தனைகளைச் சுவரங்களாக இசைக்காமல் பாடகர் போல் இசைத்தார். பாடகராக இளமையில் விளங்கிய இவருக்கு மிகவும் எளிதில் இது வசப்பட்டது. ஒருமுறை தோடி இராகத்தை இரவு 11 மணிக்குத் தொடங்கி காலை 6 மணி வரை இசைத்தார்.

எதிலும் புதுமை:

தனது இசை வாழ்வில் புதுமைகள் பலவற்றைச் செய்து காட்டினார். தோடி இராகத்தைப் புதுமையான முறையில் இசைத்துத் தோடி இராசரத்தினம் ஆனார். ஒத்து என்ற சுருதி வாத்தியத்திற்குப் பதில் தம்புரா சுருதியில் வாசித்தார். கதர் வேட்டி, தலையில் குடுமியுடன் இருந்த நாகசுரக் கலைஞர்கள் போல் அல்லாமல் கிராப் வைத்துக் கொண்டார். கோட், செர்வாணி, சூர்வால் போன்ற இராஜ உடைகளை அணிந்து

கொண்டார். திருமண விழா ஊர்வலங்களில் மேடையில் அமர்ந்து வாசித்தார். திருவையாறு உற்சவத்தில் நாகசுர வித்வான்கள் நின்று கொண்டுதான் வாசிக்க வேண்டும் என்ற மரபை மாற்றி மேடையில் அமர்ந்து வாசித்தார் (ப.52). திருவாவடுதுறை மடம், மாயூரம் துலா மாத விழா, திருவிடைமருதூர் தைப்பூச விழாக்களில் மட்டும் நின்று கொண்டு வாசிப்பார். தன்மானத்தோடு வாழும் முன்னோடியாக விளங்கினார். நாகசுரக் கருவியில் புதுமைகள் செய்தார்.

திமிரி நாகசுரம் பேரொலி எழுப்பும். ஒலி பெருக்கி வந்துற்ற பொழுது ஒலி பெருக்கி மூலம் கேட்க முடியாத சூழல் ஏற்படும். திமிரி நாயனத்தைப் பாரி நாயனமாக்கினார். இதன் மூலம் 2 அல்லது 2½ கட்டை சுருதி நாயனமானது. மதுரை பொன்னுசாமி பிள்ளை இடை பாரி என்ற வகையில் நாயனக் கருவியை வடிவமைத்தார். இடைப்பாரி நாயனத்தில் மத்திம சுவரம் சரிவர ஒலிக்காத குறை இருந்தது. இதனைச் சீர் செய்யும் பொருட்டுத் துளைகளை மாற்றி மத்யம சுருதி நாயனத்தை வடிவமைத்தார்.

கவிகாள மேகம்:

திரை உலகிலும் கால் பதித்தார். மிஸ் கமலா படத்தில் இவரது இசை நிகழ்ச்சி வரும் காட்சி இடம் பெற்றுள்ளது. 1940 ஆம் ஆண்டில் வெளிவந்த "கவிகாள மேகம்" படத்தில் கதாநாயகனாக நடித்தார். இப்படத்திற்குப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கதை, வசனம், பாடல் எழுதியுள்ளார். இப்படத்தில் தன் சொந்தக் குரலில் பல பாடல்களைப் பாடியுள்ளார். தோடி இராகப் பாடல் ஒன்றைப் பாடியுள்ளார். நாகசுரத்தில் வரும் பிர்க்காக்களைப் பாடலில் பாடியுள்ளார்.

> நாணுகின்றேன் என்றுதன் முகம் காட்டிடும் நங்கையைப் போல்
> பேணுகின்றேன் தென்றலை மீதுதிக்கின்ற பேரொளியில்
> பூணுகின்றேன் பொன்னாடை பெற்றனல்
> காணுகின்றேன் அதில் என்னை முக்கனிற்கண் ஒன்றையே
>
> – கவிகாளமேகம் திரைபாடல் இராகம் : தோடி

'சீருள்ள வெண் குடை' என்ற தொடங்கும் பாடலை இராகமாலிகையில் பாடியுள்ளார். சங்கராபரணம், சிம்மேந்திர மத்திமம், கானடா, காம்போதி, புன்னாகவராளி, பிலகரி

இராகங்களில் பாடியுள்ளார். 'ராஜமுக்தி' திரைப்படம் தியாகராஜ பாகவதர் பானுமதி நடித்த திரைப்படம். இப்படத்தில் அரசவையில் நடக்கும் இசை நிகழ்வில் வாசித்துள்ளார்.

வாய்ப்பாட்டு நிகழ்ச்சிகள்:

நாகசுரம் கற்கும் முன்பு வாய்ப்பாட்டு நிகழ்ச்சிகளைத் தன் சகோதரியோடு டி.என்.ஆர். தந்துள்ளார். நன்னிலம் என்ற ஊரில் இசை அரங்கேற்றம் நடைபெற்றது. நாகசுரக் கலைஞரான பொழுது தான் பெற்ற வாய்ப்பாட்டுத் திறத்தால் நாகசுர இசையைக் காயகி முறையில் இசைத்தார். ஒருசில இடங்களில் வாய்ப்பாட்டுக் கச்சேரியும் செய்துள்ளார். திருச்சி வானொலி நிலையத்தில் டி.சங்கரன் இசை நிகழ்ச்சிகள் தயாரிப்பாளராக இருந்த பொழுது பலமுறை வாய்ப்பாட்டு நிகழ்ச்சிகளைத் தந்துள்ளார். திருவீழிமிழலை சுப்பிரமணிய பிள்ளை பிடில் இசைக்க, தஞ்சாவூர் டி.கே.மூர்த்தி மிருதங்கத்துடன் இசை நிகழ்ச்சிகளைத் தந்துள்ளார்.

தமிழிசை இயக்கத்தில் பங்களிப்பு:

தமிழிசை இயக்கம் தோன்றிய பொழுது டி.என்.ஆர். பெரும் ஆதரவளித்தார். 1943 ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற தமிழிசை முதல் மாநாட்டில் டி.என்.ஆர், பி.எஸ்.வீருசாமி பிள்ளை, நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை தேனென இனிக்கும் தமிழிசை நிகழ்ச்சிகளைத் தந்துள்ளனர். கும்பகோணத்தில் 1943இல் நடந்த தஞ்சை மாவட்ட முதல் இசை மாநாட்டில் வரவேற்புரை யாற்றினார். அதில் "தமிழிசை பாடாத கச்சேரிகளுக்குச் செல்லாதீர்கள், தமிழிசை பாடாதவர்களைக் கச்சேரிக்கு அழைக்காதீர்கள் என்று முழக்கமிட்டார்". தானே தமிழ்ப் பாடல்கள் சிலவற்றைப் படைத்து நாகசுரத்தில் வாசித்துள்ளார். 'கருணை செய்வாய் சிவகுரு (கல்யாணி) என்ற பாடலும் ஒலி நாடாவில் உள்ளது. 1945இல் திராவிடர் கழகம் நடத்திய திராவிடர் இசை விழாவில் இசை நிகழ்ச்சி தந்துள்ளார். (மேற்.ப.சோழநாடன் நாகசுர சக்கரவர்த்தி திருவாவடுதுறை டி.என்.இராசரத்தினம் பிள்ளை வரலாறு, பக்.65-66)

அகில உலக நாகசுர சக்கரவர்த்தி:

பல்லவிச் சுரங்கமென அழைக்கப் பெற்ற சிதம்பரம் வைத்தியநாத நாயனக்காரர் (1884 - 1937) கூறைநாடு நடேச நாயனக்காரர் வீட்டுத் திருமண விழாவில் பங்கு கொண்டார். டி.என்.ஆர். நாகசுரம் வாசித்தார். பியாகடை, சகானா, வராளி, கௌளை முதலிய இராகங்களில் கோர்வை வாசித்தார். இவற்றைக் கேட்ட வைத்தியநாத பிள்ளை "ராஜரத்தினம் உனக்குச் சக்கரவர்த்தி என்ற பட்டம் முழுக்க முழுக்கத்தகும்" என்றார்.

1943 ஆம் ஆண்டு நாகப்பட்டணம் சட்டையப்பர் கோயில் விழாவில் டி.என்.ஆர். மிக அற்புதமாக வாசித்தார். இந்நிகழ்வில் கலந்து கொண்ட நாகை செசன்ஸ் நீதிபதி பஞ்சாபகேச அய்யர் "இன்று நமது திருவாவடுதுறை இராஜரத்தினத்திற்கு "அகில உலக நாதசுர சக்கரவர்த்தி" என்ற பட்டத்தை வழங்க விரும்புகிறேன். உங்களின் கருத்தென்ன என்று மக்களைக் கேட்டார். மக்கள் அனைவரும் கையொலி செய்து ஆமோதித்தனர். பின்பு டி.என்.ஆர். இசை நிகழ்வு அழைப்பிதழ், சுவரொட்டிகளில் 'அகில உலக நாதஸ்வர ஏக சக்ராதிபதி' என்ற பட்டம் குறிப்பிடப்பட்டிருக்கும். 'தோடி இராஜரத்தினம்' என்று அழைக்கப் பெற்றார். 'அகில இந்திய வேணுகான சக்கரவர்த்தி' என்று அழைக்கப் பெற்றார். இசை மாமன்னர், இசைச் சிகரம், சங்கீத ரத்னாகரம், திருவாவடுதுறை ஆதீன சங்கீத மகாவித்துவான் போன்ற விருதுகளைப் பெற்றிருந்தார்.

இந்தியச் சுதந்திர நாள் விழாவில்:

1947 ஆகஸ்டு 15 ஆம் நாள் இந்திய நாட்டின் சுதந்திர நாள் புதுதில்லியில் மிகச் சிறப்புடன் கொண்டாடப் பெற்றது. திருவாவடுதுறை ஆதீனம் சுதந்திர நாள் பரிசாக நேருவிற்குத் தங்கச் சங்கிலியை டி.என்.ஆரிடம் கொடுத்து அனுப்பி வைத்திருந்தார். இராஜ உடையில் டி.என்.ஆர். நேருவைச் சந்தித்தார். சுதந்திரப் பிரகடனத்தின் பொழுது தனது நாகசுரம் இசைக்க வேண்டுமென டாக்டர் சுப்பராயன் மூலம் தெரிவித்தார். நிகழ்ச்சி நிரலில் நாகசுர இசை இல்லையெனினும் சுப்பராயன் செய்த பரிந்துரையால் டி.என்.ஆருக்காகப் பத்து நிமிடம் ஒதுக்கப்பட்டது. கொடுக்கப்பட்ட நேரத்திற்கு மேல்

வாசித்தார். இந்தியச் சுதந்திரப் பிரகடனம் டி.என்.ஆர். வாசித்த மங்கல இசையுடன் அமைந்திருந்தது. இராஜ உடையில் இருந்த இவரை நேரு "சங்கீத உலகின் சக்கரவர்த்தி" என்று பாராட்டி பரிசுகள் தந்தார்.

இல்லற வாழ்வு:

டி.என்.ஆருக்கு ஐந்து மனைவிகள் இருந்தனர். தஞ்சையில் வாழ்ந்த இலைக்கடை சுவாமிநாத பிள்ளையின் மகள் ஒன்பது வயது சாரதா முதல் மனைவியாவார். 16 வயது நிறைந்த டி.என்.ஆருக்கு ஆவணி மாதம் 12 ஆம் நாள் திருமணம் நடைபெற்றது. திருப்பரங்குன்றத்தில் வசித்து வந்த சிவகிரி செல்லையா நாயனக்காரரின் மகள் சுப்புத்தாயை இரண்டாவதாக மணந்தார். மூன்றாவது மனைவி செய்யூரைச் சார்ந்த சூர்யாபாய், நான்காவது மனைவி பெண்ணாகடத்தைச் சார்ந்த ஜனகத்தம்மாள். ஐந்தாவது மனைவி தூத்துக்குடியைச் சார்ந்த பாப்பம்மாள். முதல் மனைவிக்கு ஆண் குழந்தை பிறந்து மூன்று மாதத்தில் இறந்துவிட்டது. பிறகு சிவாஜி என்பவரைத் தத்தெடுத்தார். 1.12.1954 அன்று திருவாரூர் டி.வி.நமச்சிவாயம் பிள்ளை சகோதரி சக்குபாயை சிவாஜிக்குத் திருமணம் செய்து வைத்தார்.

இவருடைய மனைவி சூர்யாபாய் அம்மாளுக்கு வனஜா என்ற ஒரு பெண் வாரிசு பிறந்தது. இப்பெண்ணே திருவாவடுதுறை இராஜரத்தினம் பிள்ளை வாழ்ந்த வீட்டில் பிறகு வாழ்ந்தார்.

இசை வாரிசு:

இராஜரத்தினம் பிள்ளையின் தமக்கை தயாளு அம்மாளின் மூத்த குமாரன் கக்காயி நடராஜசுந்தரம் (1912 - 1956) இராசரத்தினம் பிள்ளை இசை உலக வாரிசாக விளங்கினார். காரைக்குறிச்சி அருணாசலம் (1907 - 1964), திருக்குவளை அருணாசலம் பிள்ளை உடன் வாசித்தவர்களாகவும், மாணவர்களாகவும் விளங்கினர். நடராஜ சுந்தரத்தை இராஜரத்தினம் 'கக்காயி' என்று செல்லமாக அழைப்பார். பிற்காலத்தில் இப்பெயர் நிலைத்து கக்காயி நடராஜ சுந்தரம் ஆனார். தன் தாயிடம் வாய்ப்பாட்டும், மாமன் இராஜரத்தினம் பிள்ளையிடம் நாகசுரமும் கற்றார். 1930 ஆம் ஆண்டு முதல்

பிள்ளையிடம் துணை நாகசுரக்காரராக விளங்கினார். திருவாவடுதுறையாருடன் இணைந்து "கச்சேரி செட்" என்ற தலைப்பில் இசைத் தட்டுகள் பல தந்துள்ளார்.

காரைக்குறிச்சி அருணாசலம் திருநெல்வேலி மாவட்டம் காரைக்குறிச்சியைச் சார்ந்தவர். 1935இல் இராஜரத்தினம் பிள்ளையின் சீடனாகி சேர்ந்து வாசித்தார். திருவாவடுதுறையார் வீட்டில் வாசிப்பதைக் கேட்டுக் கேட்டு அவருடன் கச்சேரியில் சேர்ந்து வாசித்து வரலானார். 'கொஞ்சும் சலங்கை' திரைப்படத்தில் 'சிங்கார வேலனே' என்ற பாடலை நாகசுரம் இசைத்தார். இராஜரத்தினம் பிள்ளையின் தொடர்பால் புகழ் ஏணியில் உச்சிக்குச் சென்றார். கோவில்பட்டியில் உள்ள தனது புதிய வீட்டுக்கு "இராஜரத்தின விலாசம்" என்று பெயரிட்டார்.

1954 ஆம் ஆண்டு டி.என்.ஆரின் இசை சேவையைப் பாராட்டி, குடியரசு தலைவரின் விருது வழங்கப்பட்டது. காருகுறிச்சியார் காருக்குறிச்சியில் குடியரசு தலைவர் விருது வழங்கிய விழாவைக் கொண்டாடினார். டி.என்.ஆரும் காருக்குறிச்சியாரும் இணைந்து மூன்று மணி நேரம் இசை முழங்கினர்.

கடைசி நிகழ்ச்சி:

1954 ஆம் ஆண்டு முதல் டி.என்.ஆர். சென்னையில் தங்கி இருந்தார். கலைவாணர், நடிகவேள், பாலசரஸ்வதி, டி.சங்கரன், தாஷ்பிரகாஷ், ஓட்டல் உரிமையாளர் சீதாராமன் போன்றோருடன் மிக நெருக்கமான நட்புடன் வாழ்ந்து வந்தார். கே.பி.சுந்தரம்பாள் அம்மையாருக்கு வழங்கப்பட்டது போல் எம்.எல்.சி. ஆகும் விருப்பமும் கொண்டிருந்தார். 1956 ஆண்டு அக்டோபர் 18 ஆம் நாள் சென்னை மயிலாப்பூரில் வேய்க்குழல் வித்தகர் டி.என்.சுவாமிநாதப் பிள்ளை கட்டிய புதுமனை புகுவிழாவில் வாசித்தார். இதுவே இவரின் கடைசி நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது. 1956இல் உடல்நலக் குறைவு ஏற்பட்டது. மருத்துவர்கள் ஓய்வெடுக்கக் கூறினர். ஆனால் சாதகம் செய்து கொண்டு இருப்பார். செம்மங்குடியார் இவர் தம் உடல்நிலையையும் சாதகம் செய்யும் முறையையும் பார்த்து இப்படிச் சாதகம் செய்தால் உடல்நிலை என்னவாகும் என்று கேட்ட பொழுது "ஐயர் வாள் நான் சாதகம் செய்து கொண்டிருக்கும் வரைதான் இராஜரத்தினம். நிறுத்திவிட்டால்

கழுதை ரத்தினம்" என்றார். 12.12.1956 அன்ற ஏற்பட்ட மாரடைப்பால் கலை உலக ஏக சக்கரவர்த்தியின் ஆவி பிரிந்தது. அடையாறு வீட்டிலிருந்து மயிலாப்பூர் சுடுகாடு வரை இவரது உடலைப் பின்பற்றி கலை உலகம் சென்றது. அவர் இசைத்த இசைத் தட்டுகள் ஒலி பரப்புச் செய்யப்பட்டன. அரசு மரியாதையுடன் எரியூட்டப் பெற்றது. மாபெரும் சரித்திர நாயகரை உலகமே வியந்து போற்றியது; போற்றி வருகிறது.

"நமது நண்பர் ராஜரத்தினம் அவர்கள் நாயனத்தைத் தொலைவில் இருந்து கேட்க நேரிட்டால், அங்கு ஏதோ வீணை வாசிக்கப்படுகிறது என்றும், சில வேளைகளில் குழல் ஒலி எழும்புவதாகவும், இன்றும் சில நேரங்களில் முழவொலி கிளம்புகிறதென்றும் சந்தேகப்படுவர்".

- பேரறிஞர் அண்ணா

"ஆஹா! ஸ்ரீராஜரத்தினம் பிள்ளையின் தோடி ஆலாபனையை முதலில் கேட்ட போது அவருடைய கற்பனையை விட்டுத் தள்ளுங்கள் நம்முடைய மனதில் என்னென்ன இன்பமயமான கற்பனைகள் எல்லாம் உதித்தன.

குழந்தை தாயிடம் கொஞ்சும் குரலைக் கேட்டோம். அன்னை குழந்தையிடம் கொஞ்சும் குரலைக் கேட்டோம். ரதியும் மன்மதனும் பேசிக் கொண்ட காதல் மொழிகளைக் கேட்டோம். முருகன் சிவபெருமான் செவி குளிர மொழிந்த உபதேசங்களைக் கேட்டோம். கலைமகள் கவிஞனுக்கு அருளிய ஆசி மொழிகளைக் கேட்டோம். நாரத முனிவருடைய தம்புரா சுருதியைக் கேட்டோம். இராவணன் தன் எலும்பை ஒடித்து வீணையாகச் செய்து வாசித்த கானத்தைக் கேட்டோம். கானப்பறவைகளின் கலகல த்வனியைக் கேட்டோம். கோலக் குயிலின் இனிமையைக் கேட்டோம்".

- கல்கி

மதுரை பொன்னுசாமி பிள்ளை
(1877 - 1929)



மங்கல இசை வளர்த்த மாமேதைகள் பலர். இவர்கள் ஆலயம் வளர்த்த அருங்கலை வாணர்களாக விளங்கினர். இவர்களுள் மதுரை பொன்னுசாமி பிள்ளையும் (1877 - 1929) ஒருவராவர். தமிழ்நாட்டின் மங்கல இசைக் கருவியாக நாகசுரம் விளங்குகிறது. இக்கருவி இசைப்பவர்களை நாயனக்காரர் என்று அழைப்பர். இவ்வகையில் இவரை மதுரையார் என்றும், பொன்னுசாமி நாயனக்காரர் என்றும் பொன்னுசாமி பிள்ளையை அழைப்பர்.

மதுரை பொன்னுசாமி பிள்ளையின் மூதாதையர் திருமங்கலத்தைச் சார்ந்தவர்கள். இவரது மூதாதையர்கள் நாயக்க மன்னர்களின் அவைக் கலைஞர்களாகத் திகழ்ந்தார்கள். அவர்களில் ஒருவரான திருவேங்கடம் பிள்ளையின் கொள்ளுப் பேரனான முத்துக்கருப்பப் பிள்ளையின் நாகசுர நிகழ்ச்சியைக் கேட்டு, எட்வர்டு மன்னர் அவருக்கு நூறு வெள்ளி நாணயங்களைப் பரிசாகத் தந்துள்ளார். இவ்வாறு பல பெருமைகள் அடங்கிய இசைப் பாரம்பரியத்தைச் சேர்ந்த குடும்பத்தில் பொன்னுசாமி பிறந்தார். இவர்கள் மதுரையில் குடியேறிய பின்பு மதுரையார் குடும்பம் என்று அழைக்கப்பட்டனர்.

பிறப்பும் இளமையும்:

பொன்னுசாமி பிள்ளை மதுரைக்கு அருகிலுள்ள திருமங்கலம் என்ற ஊரில் முத்துக்கருப்ப பிள்ளைக்கும்,

அலமேலு அம்மாளுக்கும் கி.பி.1877 ஆம் ஆண்டு நான்காவது குழந்தையாகப் பிறந்தார். இவருக்கு அய்யா சாமிபிள்ளை, சின்னசாமி பிள்ளை, செல்லையா பிள்ளை ஆகிய சகோதரர்கள் இருந்தனர்.

இசை பயிற்சி:

பாரம்பரியமான நாகசுரக் கலையைப் பொன்னுசாமி பிள்ளை தன் தந்தையிடமும் பின்னர் மதுரையில் மிகப் பெரிய புகழோடு விளங்கிய அவரது உறவினரான சௌந்தரபாண்டிய நாகசுரக்காரரிடமும் பயின்றார். மேற்பயிற்சியைக் கும்பகோணம் பெரியத்தெரு சுப்பிரமணிய பிள்ளையின் சித்தப்பாவான நாராயண நாகசுரக்காரரிடம் பெற்றார். மதுரையில் நாகசுரப் பயிற்சிப் பெற்ற காலத்திலேயே எட்டையபுரம் இராமசந்திர பாகவதரிடம் வாய்ப்பாட்டும், வீணையும் கற்றார்.

திருமண வாழ்க்கை:

பொன்னுசாமிப் பிள்ளை மாரியம்மாள் என்ற குணவதியை மனைவியாக அடைந்தார். இவர்களுக்கு நடேசபிள்ளை, சண்முகம் பிள்ளை என்ற இரு குமாரர்கள் பிறந்தனர்.

நாகசுரக் கச்சேரிகளும், பெற்ற பாராட்டுகளும்:

பொன்னுச்சாமிப் பிள்ளை 1895 ஆம் ஆண்டு முதல் கச்சேரிகள் செய்யத் தொடங்கினார். குறுகிய காலத்திலேயே திறமையான சிறந்த வித்வானாக அனைவராலும் பாராட்டப் பெற்றார். இதே ஆண்டில் இராமநாதபுரம் மன்னர் இவரைத் தன் சமஸ்தான வித்வானாக நியமித்துக் கொண்டார்.

1896 ஆம் ஆண்டு சேதுபதி மன்னரின் அவையில் வாசித்த போது இவரது வாசிப்பைக் கேட்ட அச்சமஸ்தான வித்வானான உறையூர் முத்துவீரு சுவாமி நாகசுரக்காரர் இவரை மிகவும் பாராட்டினார்.

இவர் ஒரு சமயம். வீணை தனம்மாள் முன் இராமநாதபுரத்தில் வீணைக் கச்சேரி செய்தார். அக்கச்சேரியினைக் கேட்ட வீணை தனம்மாள், "நாகசுரத்தில் சக்கைப் போடு போடுகிறீர்கள் என்றால் என்னுடைய வாத்தியத்திலும் இத்தனைத் தேர்ச்சியோடு வாசிக் கிறீர்களே... நீங்கள் நாகசுர வித்வானாக இருப்பதனால் சொல்லுங்கள்,

வீணை வாசிப்பதாக முடிவு செய்தீர்களே யானால் நாங்கள் வீணையை விட்டு விடுவதைத் தவிர வேறு வழி இருக்காது" என்றார்.

1916 ஆம் ஆண்டில் மைசூர் அரசர் சாமராஜ் உடையார் இராமேசுவரத்திற்கு வந்தார். அவரை வரவேற்கும் இசைக் குழுவில் இவரின் மங்கல இசை நிகழ்ச்சி இடம் பெற்றது. இவரின் இசையைக் கேட்ட மைசூர் அரசர் தனது ஆஸ்தான வித்வானாக்கிக் கௌரவித்தார்.

இவர் தனது நாகசுர இசைக் கச்சேரியை ஏராளமான இசைத் தட்டுகளில் பதிவு செய்துள்ளார்.

தனிச்சிறப்புகள்:

வெங்கடமகியவர்களால் தோற்றுவிக்கப்பட்ட 72 மேளகர்த்தா முறையை மறுத்து அதில் 32 மேளமே உண்மை எனக் கூறி அதற்குப் பல சான்றுகளைத் தொகுத்துப் "பூர்வீக சங்கீத உண்மை" என்ற நூலை இயற்றியுள்ளார்.

இராகங்களைப் பாடி ஆலாபனை செய்வோரும், இசைக் கருவி வல்லுநர்களும் சட்ஜ சுருதியில் இசைப்பது வழக்கம். ஒரு சிலர் மத்திமத்தைச் சட்ஜமாக வைத்துக் கொண்டு ஆலாபனைச் செய்வர். ஆனால் இதில் தனிச் சிறப்பாகப் பொன்னுசாமி பிள்ளை அவர்கள் ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் சுரங்களை வைத்து வாசிக்கும் திறமைப் பெற்றிருந்தார். இம்முறையில் வாசிப்பது பழங்காலத்திலிருந்து இன்று வரை இவ்வொருவர் மட்டுமே வாசித்து சாதனைப் படைத்துள்ளார் என்பது சிறப்பான தொன்றாகும். இவர் நாகசுரம் மட்டுமல்லாமல் வாய்ப்பாட்டு, வீணையிலும் சிறந்து விளங்கினார். இவரது வாழ்வின் சிறப்புப் பற்றி பி.எம்.சுந்தரம் அவர்கள் மங்கல இசை மன்னர்கள் என்ற நூலில் எடுத்துரைத்துள்ளார்.

இறுதி காலமும், சந்ததியினரும்:

நாகசுர இசை உலகில் முடிசூடா மன்னனாகவும், மைசூர் இராமநாதபுரம் சமஸ்தான ஆஸ்தான வித்வானாகவும் இருந்த மதுரை பொன்னுசாமி பிள்ளை 1904 ஆம் ஆண்டு தான் வசித்து வந்த தெருவில் "சங்கீத ரத்ன விநாயகர்" ஆலயம் கட்டினார். தலைசிறந்த நாகசுர மேதையான பொன்னுசாமி பிள்ளை

27.11.1919 அன்று காலமானார். இவரின் மகன் மதுரை நடேசபிள்ளையின் மகன்களான கலைமாணி எம்.கே.என். சேதுராமன், பொன்னுசாமி சகோதரர்கள் தற்காலத்தில் புகழ்மிக்க நாககரக் கலைஞர்களாகத் திகழ்ந்தனர். இவர்களில் மதுரை சேதுராமன் அவர்கள் காலமானார். இவர்கள் இந்திய அரசின் பத்மஸ்ரீ, கலைமாமணி போன்ற பல விருதுகளைப் பெற்றுள்ளனர்.

பொன்னுசாமி பிள்ளையின் நாகசுர இசை இசைத் தட்டுக்களில் பதிவாகியுள்ளன. திருமங்கலம் இரத்தினம் பிள்ளை தவில் வாசித்துள்ளார். சில இசைத் தட்டுக்களில் கரந்தை இரத்தினம் பிள்ளை தவில் வாசித்துள்ளார். பொன்னுசாமி பிள்ளை வாசித்துள்ள இந்தோள இராகம் மிக அற்புதமானது. இவருக்குக் கரந்தை இரத்தினம் பிள்ளை, மலைக்கோட்டை பஞ்சாபகேச பிள்ளை, நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, பாபநாசம் ஸ்ரீமான் பிள்ளை, இலால்குடி அங்கப்ப பிள்ளை, சுப்பையா பிள்ளை, திருமங்கலம் சுந்தரேச பிள்ளை போன்றோர் தவில் இசைத்துள்ளனர்.

பூர்வீக சங்கீத உண்மை:

நாகசுர வித்வான்களில் நூல் எழுதி, திறனாய்வு உலகில் ஒரு புதுப் பாதையை அறிமுகம் செய்தவராக மதுரை பொன்னுசாமி பிள்ளை விளங்குகிறார். இசை ஆய்வு உலகில் இவரின் பூர்வீக சங்கித உண்மை ஒரு புது அத்தியாயமாகும்.

1924 ஆம் ஆண்டு பொன்னுசாமி பிள்ளை இந்நூலினை வெளியிட்டார். இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1930 ஆம் ஆண்டு எம்.கே.எம்.பி. நடேச பிள்ளையால் பதிப்பிக்கப் பெற்றது. 1997 ஆம் ஆண்டு மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இந்நூலின் மூன்றாவது பதிப்பை வெளியிட்டுள்ளது.

நூல் அமைப்பு:

பூர்வீக சங்கீத உண்மை என்ற நூல் ஐந்து பாகங்களைக் கொண்டுள்ளது.

1. நூன் மரபு
2. கர்த்தா இராகத்தின் நிர்ணயம்
3. மூர்ச்சைப் பிரஸ்தாரம்

4. கர்த்தா இராகங்களும் அனுபவத்திலிருக்கின்ற ஜன்ய இராகங்களும்.
5. இசை நுணுக்கமெனும் சுதி பேத இராக சூட்சமம்.

நூலின் நோக்கம்:

பொன்னுசாமி பிள்ளை வெங்கடமகி கூறிய 72 மேளகர்த்தா இராகங்களில் விவாதி மேள இராகம் 40 நீங்கலாக மற்ற 32 இராகங்களே பூர்வீக சங்கீத இராங்களாகும் என்று இந்நூலில் விளக்கியுள்ளார்.

மேளகர்த்தா இராகம்:

மேளகர்த்தா என்பது தாய் இராகம் என்று பொருள்படும். இசையில் மேளகர்த்தா இராகம் 72 ஆகும். ஆனால் மேளகர்த்தா இராகம் 32 அல்லது 72 என்பது அறிஞர் பெருமக்களுக்கிடையே எழும் சர்ச்சையாகும். 72 என்பது வெங்கடமகி மற்றும் கோவிந்தாச்சாரியார் கோட்பாடு. 32 என்பது மதுரை பொன்னுசாமி பிள்ளை அவர்களின் கோட்பாடு. இது பற்றி இவர் குறிப்பிடும் பொழுது,

"இப்போது தென்னாட்டில் இருக்கிற சங்கீத நூல்களெல்லாம் வெங்கடமகி முறைப்படியே 72 மேளகர்த்தாவின் பெயருடனே எழுதப்பட்டு வருகின்றன. ஆனால் இவைகளில் இன்றைக்கும் என்றைக்கும் இயற்கையாயுள்ளதும், இவற்றில் சொல்லப்படுகின்ற இராக பிரஸ்தார கிரமப்படி ஏற்படுகிற 32 கர்த்தா இராகங்களைத் தவிர அவர் அதிகப்படுத்தியிருக்கும் 40 இராகங்களும் அனுபவத்திற்கும் இலட்சணத்திற்கும் இலட்சியத்திற்கும் பொருத்தமில்லாதிருக்கின்றன. இவ்வாறு அதிகப்படுத்தியுள்ள 40 மேளர்த்தா இராகங்களும் 12 ஸ்தானங்களில் 16 சுரங்களென்ற கற்பிதங்களாகின்றன. இவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள 72 மேளகர்த்தா சக்கரங்களிலும் வீணைச் சக்கரங்களிலும் பார்க்கப் புலனாகும் என்கிறார்.

நூலமைப்பு விளக்கம்:

நூன் மரபு முதல் பாகத்தில் பன்னிரு சுர நிலைகளையும், இரண்டாம் பாகத்தில் பன்னிரு சுரங்களாலும் மூர்ச்சனைக் கிரமமாய் அமையும் 32 கர்த்தா இராகங்கள் பற்றியும், மூன்றாம் பாகத்தில் சரிகமபதநிச் ச்நிதபமகரிச என்னும் சம்பூர்ண

மூர்ச்சைக்குப் பிரஸ்தார கிரமப்படி ஷாடவ, ஔடவ, சுராந்திரம் என்பனவாய் 1-2-3 சுரங்கள் வர்ஜமாய் உருவாகிய நிலையும், நான்காம் பாகத்தில் 32 கர்த்தாக்களையும், பிரஸ்தாரத்தில் பிறக்கும் ஜன்னியங்கள் தற்போது அனுபவத்திலிருக்கிற வைகளையும் கிரமப் பிரஸ்தாரமாகி 300 ஜன்னிய இராகங்களை மட்டும் திருத்தியமைத்து அவைகளின் ஆரோக அவரோகண முறைகளின் கீர்த்தனைகளின் தலைப்புப் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளார். ஐந்தாவது பாகத்தில் ஒரு கர்த்தா இராகத்தைத் தொழில் படுத்துமிடத்து ரிகமபதநி என்ற ஆறு சுரங்களில் ஏதாவது ஒன்றைச் சட்ஜமாகக் கொண்டு, ஆரம்பித்த இராகத்தைச் சஞ்சாரம் செய்யும் பொழுது 24 கர்த்தாக்கள் 86 பேதமாய் விளங்குவதனைச் சாதி பேத இராக சூட்சமம் என்று பெயரிட்டுள்ளார்.

நூற்பெயர்க்காரணம்:


பண்டைத் தமிழர்கள் குழலிலும், யாழிலும், குரல் முதல் ஏழும் வழுவின்றி இசைத்து வழித்திறங்காட்டிய முறைகள் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இவ்விதம் இயற்கையின் மூலமாய் உண்டாகும் இராக உற்பத்திகளைக் கூறியிருப்பதால் இந்நூலுக்குப் "பூர்வீக சங்கீத உண்மை" என்று பெயர் வைக்கப்பட்டிருக்கிறது.

மதிப்புரைகள்:

இந்நூலிற்கு 18 ஆசிரியர்கள் மதிப்புரைகள் தந்துள்ளனர். இவர்களில் மூவர் இயற்றமிழ்ப் புலவர்கள். எஞ்சியவர் இசை மாமேதைகளாவர். நாவலர் சோமசுந்தர பாரதியார், மதுரைத் தமிழ்ப் புலவர் நாராயண ஐயங்கார், திருஞானசம்பந்த ஆதீன கர்த்தா ஆகிய மூவர்களும் இயற்றமிழ்ப் புலவர்கள் ஆவர்.

இவ்வாறு இசை ஆராய்ச்சி உலகில் மாபெரும் பணியைச் செய்துள்ள பொன்னுசாமி பிள்ளையின் கருத்தைப் பலர் மறுத்துரைத்தாலும் அவரின் இசை ஆய்வுப் பணி உலகில் மறையாத ஒன்றாகும். மேலும் நாகசுர உலகில் தனக்கென ஒரு முத்திரையைப் பதித்த அன்னாரின் இசைத் தொண்டினை இசை ஆய்வுலகம் மறந்திட இயலாது.

தவில் கருவியும் தவிலிசை விற்பனர்களும்



இசையின் மேன்மையை உலகறியச் செய்ததில் இசைக் கருவிகளுக்கும் சிறப்பான பங்குண்டு. இந்திய நாட்டில் மட்டும் சுமார் 500க்கும் மேற்பட்ட இசைக் கருவிகள் உள. அவற்றில் தமிழ்நாட்டில் மட்டும் 300க்கும் மேற்பட்ட கருவிகள் உள. இசைக் கருவிகளைத் தோல் கருவி, நரம்புக் கருவி, கஞ்சக் கருவி, துளைக் கருவி என்று வகைப்படுத்துவர். இவற்றுடன் குரலையும் ஒரு கருவியாகக் கணக்கிடுவர். இக்கருவிகள் பற்றி தமிழ் இலக்கண இலக்கியங்களிலும், சிற்பங்களிலும், கல்வெட்டுக்களிலும் ஏராளமான செய்திகள் காணக் கிடக்கின்றன.

தோல் கருவி:

தமிழர்கள் தோற்கருவிகளை நன்கு பயன்படுத்தி உள்ளனர். தொல்காப்பியர் கருப்பொருள்களுள் ஒன்றான பறை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைகளிலும் இக்கருவிகள் பயன் படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு திணைக்கும் தனித்தனியே பறைகள் இருந்துள. இசைக்கு உயிராகத் தாளக் கருவிகள் அமைவதனைத் தண்ணுமைக் கருவி மூலம் கம்பர் கூறுகிறார்.

> ஊன ளைந்த உடற்கு உயிராமெனத்
> தான ளைந்து தழுவின தண்ணுமை

பஞ்ச மரபு என்ற இசை நூலில் 30 தோற்கருவிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

பேரிகை படகம் இடக்கை உடுக்கை
சீர்மிகு மத்தளம் சல்லிகை கரடிகை
திமிலை குடமுழத் தக்கை கணப்பறை
தமருகம் தண்ணுமை தாவில் தடாரி
யந்தரி முழவொடு சந்திர வளையம்
மொந்தை முரசே கண்விடு தூம்பு
நிசாளம் துடுமை சிறுபறை யடக்கம்
ஆசில் தருணிச்சம் விரலேறு பாகம்
தொக்க வுபாங்கி துடிபெரும் பறையென
மிக்க நூலார் விரித்துறைத்தனரே

தமிழரின் தோற்கருவிகள் பற்றி ஆராய்ந்த ஆர்.ஆளவந்தார் அடக்கம், அந்தரி, அமுதகுண்டலி, அரிப்பறை, ஆகுளி, ஆமந்திரிகை, ஆவஞ்சி, உடல், உடுக்கை, உறுமி, எல்லரி, ஏறங்கோள், ஒருவாய்க் கோதை, கஞ்சிரா, கண்விடுதூம்பு, கணப்பறை, கண்டிகை, கரடிகை, கல்லல், கல்லலகு, கல்லவடத்திரள், கிணை, கிரிக்கட்டி, குடமுழா, குண்டலம், கும்மடி, கைத்திரி, கொட்டு, கோட்பறை, சகடை, சந்திரபிறை, சந்திரவளையம், சல்லரி, சல்லகை, சிறுபறை, சுத்தமத்தளம், செண்டா, டமாரம், தக்கை, தகுணித்தம், தட்டை, தடாரி, தண்டோல், தண்ணுமை, தபலா, தமருகம், தமுக்கு, தவண்டை, தவில், தாசரிதப் பட்டை, திமிலா, துடி, துடுமை, துத்திரி, துந்துபி, தூரியம், தொண்டகச் சிறுபறை, தோலக், நகரி, நிசாளம், படவம், படலிகை, பம்பை, பதலை, பறை, பாகம், பூமாடு வாத்தியம், பெரும்பறை, பெல்ஜியக் கண்ணாடி மத்தளம், பேரி, மகுளி, மத்தளம், மிருதங்கம், முரசு, முகுடு, முழவு, மேளம், மொந்தை, விரலேறு, ஜமலிகா என்ற கருவிகள் பற்றிக் கூறியுள்ளார்.

தவில்:

தமிழகத்தின் தனிப் பெரும் இசைக் கருவியாகத் தவில் உள்ளது. மங்கல வாத்தியம் என்றும், மேளம் என்றும், பெரிய மேளம் என்றும், தவில் என்றும், இராஜ வாத்தியம் என்றும் இது அழைக்கப்படுகிறது. ஆலயம் தந்த தனிக் கருவியாகவும், ஆலய வழிபாட்டில் வாத்தியம் என்ற பெயரிலும் அழைக்கப்படும். நாகசுர வாத்தியத்திற்குரிய இலயக் கருவியாகவும், துணைக்கருவியாகவும் விளங்கும். மங்கல இசைக் குழுவிலும், நையாண்டி மேளக் குழுவிலும் இக்கருவி

சிறப்பான இடத்தைப் பெற்று வருகிறது. தற்போது கிளாரினெட், வயலின், மண்டலின் கருவிகளோடு இயைந்து இசைக்கப்படுகிறது. தற்காலத்தில் நாட்டியக் குழுவிலும் இடம் பெறுகின்றது.

தவில் அமைப்பு:

தவிலை 'அவநத்த' வாத்தியம் என்பர். அவநத்தம் என்றால் மூடப்படுவது என்பது பொருள். உருளை வடிவமான மரத்தில் குடையப்பட்ட பானையின் இருபுறங்களும் தோலால் மூடப்பட்ட கருவியாதலால் அவநத்த வாத்தியமாயிற்று.

தவில் கருவி பானை, வண்டோதரி, குண்டோதரி, கண்கள், தோல், வார், வளையம், நாடா, புள், தவில்கழி என்ற உறுப்புகளால் அமைக்கப்பட்டுள்ளது.

தவில் கருவி பானை, பலா, வேம்பு, பூவரசு, சரக்கொன்றை மரங்களால் பீப்பாய் வடிவில் குடையப்படும். உயரம் 24 அங்குலம், வாய் வட்ட அகலம் 13 அங்குலம், வாய்க்கனம் ½அங்குலம், மத்தியில் மரக்கனம் 1 அங்குலம், மையச் சுற்றளவு 48 அங்குலம் அளவில் உருவாக்கப்படும்.

தவிலில் மந்தார சுருதி தவில், திமிரி தவில் என இரு வகைக்ள் உள. மந்தார சுருதி தவில் திமிரி தவிலைவிட அளவில் சற்றுப் பெரியதாக இருக்கும். சிவாலயங்களில் தற்போதும் மந்தார சுருதி தவில்கள் இருப்பதனைக் காணலாம். இன்றைய நிலையில் திமிரி தவிலையே கலைஞர்கள் வாசிக்கின்றனர்.

தவில் பானையை அண்டமாகவும், வலந்தலை, தொப்பியை முறையே சூரிய சந்திரர்களாகவும், தொப்பியில் செருகப்படும் புற்களை இதர கோள்களாகவும் நடுவில் அமையும் வார்களைப் பூமியின் மத்தியில் ஓடும் ரேகைகளாகவும் கூறுவர்.

வலந்தலை, தொப்பி ஆகியவற்றை முறையே வண்டோதரி, குண்டோதரி என்று அழைப்பர். தவில் கழியைப் பிரமதண்டம் என்பர். பிரமதண்டம் திருவாட்சி மரத்தால் 12 அங்குல கழியால் அமைக்கப்படும். சந்தனம், கருங்காலி, ஆச்சா, பூவரசு மரங்களாலும் இக்கழி உருவாக்கப்படும்.

தொப்பிக்கு முதலில் ஆட்டுத்தோல் பயன்படுத்தப் பட்டது. தற்போது இளம் கன்றின் தோலைப் பயன் படுத்துகின்றனர். இத்தோலை முதலில் அறிமுகப் படுத்தியவராகக் கீழ்வேளூர் முத்துவீரப் பிள்ளையைக் குறிப்பிடுவர். ஆனால் இவருக்கு முன்னும் பலர் பயன் படுத்தியுள்ளனர். வலந்தலை என்ற வண்டோர்தரியிலும் தற்காலத்தில் மகிஷ கன்றுவின் தோலும் பயன்படுத்தப் படுகிறது.

வலந்தலை, தொப்பி வளையங்கள் மூங்கில், துணி, பசைகளால் வட்ட வடிவில் உருவாக்கப்படும். தொப்பியைவிட வலந்தலை அளவில் பெரியதாக அமையும். இதனைத் திருவையாற்றில் பரமன் என்பவர் இன்றும் செய்து வருகிறார்.

வலந்தலை தொப்பியை இணைக்க மாட்டுத் தோல் வார்கள் பயன்படுத்தப்பட்டன. இவ்வார்களை இழுத்துத் தவிலில் நாதத்தை மேம்படுத்துவர். இதனை வார் பிடித்தல் என்பர். இதற்கு இருவர் தேவை. ஒருவர் தவிலை அமுக்கிக் கொடுக்க மற்றவர் வாரை இழுத்து வாங்கி நடுவில் சுற்றப்பட்டிருக்கும் வாரில் இணைப்பர். தற்காலத்தில் வார் நீக்கப்பட்டு துவாரம் போட்ட இரும்புப் பட்டை அணிவித்து வலந்தலை, தொப்பி எவர்சில்வர் பட்டையால் இரும்புப் பட்டையில் போல்ட் ஆணி மூலம் பிணைத்து விடுகின்றனர். இதனால் வார் பிடித்தல் வேலை எளிதாயிற்று. ஸ்பேனர் மூலம் இழுத்து விசித்துத் தந்துவிடுகின்றனர். இதற்கு ஒருவர் மட்டும் இருந்தால் போதுமானது.

நின்று கொண்டு வாசிக்கும் பொழுது தோளில் தாங்கிக் கொள்ளவும், சுமை உறுத்தாத வகையிலும் தவில் கருவியில் துணி நாடாக்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்நாடாக்கள் காவி நிறத்தில் அமைந்திருக்கும்.

தவிலைப் பத்திரப்படுத்தும் வகையில் மேலே காவி உறை சுற்றப்பட்டிருக்கும். காவி உறை இதனைத் தெய்வத்திற்குரிய கருவி என்பதனை நினைவுபடுத்தும். தற்காலத்தில் இரும்புப் பட்டை வெல்வெட் துணியால் அமைந்த பல வண்ண உறைகளால் அமைக்கப்பட்டுள்ளது. தற்காலத்தில் இத்தவில் உறுப்புகளைத் தனித்தனியே எடுத்துச் செல்லும் அளவில் பைகள் உள்ளன. கச்சேரிக்கு ஒரு சில

நிமிடங்களுக்கு முன்பு தவில் கருவியைப் பொருத்தி விடுகின்றனர். இதனால் இக்கருவியை எடுத்துச் செல்லும் பொழுது பாதிப்படையாமல் எடுத்துச் செல்லவும், கச்சேரியின் பொழுது வேண்டுமளவு நாதத்தை ஏற்றிக் கொள்ளவும் தளர்த்திக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகின்றது.

தவில் சிவா அர்ப்பணமாகக் கருதப்படும் ஒரு கருவியாகும். இதனையே அண்டமாகவும், நாதமாகவும் ஓம் என்ற பிரணவ ஒலியாகவும் கருதுவர். இதனால் இக்கருவிக்குக் காவி உறை வழங்கப்பட்டது. தவில் கழியைப் பிரமதண்டம் என்று பெயரிட்டனர். கோயில் உற்சவ நேரங்களில் சிவாச்சாரியார் தவிலைப் பிரமதண்டத்தால் வாசித்து இறை வழிபாடு இயற்றுவர். சிவபெருமானுக்கு அணிவித்த பூமாலையைத் தவில்காரருக்கு அணிவித்து இவரையும் இறைவனாகக் கருதுவர். இக்கருவிக்குரிய ஆட்டுத்தோல் முதிர்ந்த ஆட்டின் தோல். சிவாலய தேங்காய் முடியின் கொட்டாங்குச்சி கொண்டு தோலில் உள்ள உரோமம் நீக்கி பூமியில் ஆணியால் அடித்து இழுத்து வெயிலில் காயவைப்பர்.

சிவாலயங்களிலும், வைணவ ஆலயங்களிலும் வாத்திய மண்டபம் என்ற ஒரு மண்டபம் உண்டு. இம்மண்டபத்தில் வாத்திய இசை எழுப்பப்படுவதோடு வாத்தியக் கருவிகளும் அங்கே பாதுகாப்பாக வைக்கப்படும். பழுதுபட்ட கருவிகளையும், கருவியின் உறுப்புகளையும் பாதுகாப்பாக வைப்பதற்கு என்று வாத்தியப் பெட்டி ஒன்று இருக்கும். இப்பெட்டியைச் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் வழிபாடு செய்வர். புரட்டாசி மாதம் சரஸ்வதி பூஜையன்று பெட்டியைத் திருக்குளத்திற்கு எடுத்துச் சென்று சுத்தம் செய்து, விபூதி பூசி வழிபாடு செய்வர். இப்பெட்டி மீது கால்படக் கூடாது என்று கருதும் மரபு இருந்தது.

ஆலய வழிபாட்டில் தவில்:

ஆலய வழிபாட்டிற்காக ஏற்படுத்தப்பட்ட கருவியாகத் தவில் உள்ளது. இசை நிகழ்ச்சி தொடங்கும் பொழுது ஒத்துக்கு அடுத்த நிலையில் தவில் இசையுடன் மங்கல இசை தொடங்கும். நிறைவுறும் பொழுது தவில் இசைதான் முதலில் முடியும். இம்மரபு இன்றும் உள்ளது. இக்குழுவில் இக்கருவியின் சிறப்பினை இது உணர்த்தும்.

மல்லாரி:

மங்கல இசைக்குழுவோடும், ஆலயத்தோடும் நெருங்கிய உறவுடைய ஓர் இசை உருப்படியாக மல்லாரி விளங்கும். இலயப் படிமானத்திற்கென்று உருவாக்கப்பட்ட உருப்படி போல் விளங்கும். இதில் தவில் கருவியின் செயற்பாடும் பங்கும் மிகவும் அதிகம். இறைவன் வீதி உலா எழுந்தருளும் பொழுது கம்பீர நாட்டை இராகத்தில் வீரச்சுவையுடைய தத்தக்காரத்தில் அமைந்திருக்கும். பெரிய மல்லாரி இசைப்பர் பிற நிகழ்வுகளின் பொழுது தீர்த்த மல்லாரி, தளிகை மல்லாரி, தேர் மல்லாரி, திரிபுடைதாள மல்லாரி போன்ற மல்லாரிகள் இசைக்கப் பெறும்.

இறை வழிபாட்டில் ஒவ்வொரு நிலையையும் இவை குறிக்கும். இடப வாகனத்தில் இறைவன் எழுந்தருளும்போது பெரிய மல்லாரியும், திருமஞ்சனம் ஆட்டும் செயலில் ஈடுபடும் பொழுது தீர்த்த மல்லாரியும், அமுது படையலில் ஈடுபடுகையில் தளிகை மல்லாரியும், இறைவன் தேரில் உலா வருவதனைத் தேர் மல்லாரியும் இசைப்பர். இதனால் மல்லாரியை அடையாள இசை என்பர். நாகசுரத்தில் மல்லாரி இசைப்பதற்கு முன்பு கண்டகதியில் தவிலில் நடை அமைக்கப்படும். மேளப் பிராப்தி இந்த கதியில் அமையும். தவில் சக்கரவர்த்தி கலைமாமணி அரித்துவாரமங்கலம் திரு.ஏ.கே. பழனிவேலு அவர்கள் குறிப்பிடும் ஒரு மரபை ஈண்டு நினைவு கூர்தல் நலம். "இவையெல்லாம் நீங்க, வேறொரு சந்தர்ப்பத்தில் மல்லாரிக்கு இடம் தரப்பட்டுள்ளது. மல்லாரி விரிவாக வாசிக்கப்படாமல் ஓரிரு வரிகளை மட்டும் வாசிப்பது மரபு. ஆலயங்களின் திருவிழாக் காலங்களில், கடைசித் திருநாள் மட்டும் இது (மல்லாரி) இருக்காது. மற்ற நாட்களில் சுவாமி வீதியுலா முடித்து ஆலயம் திரும்பியபின் அலங்காரத்தைக் கலைத்து, பள்ளியறைக்கு எடுத்துச் சென்றதும் லாலி, ஊஞ்சல் பாட்டெல்லாம் வாசித்தபின் கதவைத் தாளிட்டதும், மல்லாரியைக் கொஞ்சம் வாசித்து முடிக்க வேண்டும் என்பது மரபு. மறுநாளும் வீதி உலா உண்டென்பதை இது குறிக்கிறது" என்கிறார்.

நாதச்சிறப்பு:

தவிற் கருவியின் மூலம் வெளிப்படும் த தி தொம் நம் ஜெம் என்ற ஓசைகள் சிவபெருமான் தாண்டவமாடும் பொழுது

காற்சிலம்பின் ஓசையிலிருந்து த தி தொம் நம் என்ற சப்தங்கள் பிறந்தன என்று மகாபரத சூடாமணி (819) கூறுகிறது. இவைகளே தோற்கருவியின் அட்சரங்களாயின.

வலக்கை இடக்கை வாத்தியங்களுக்குச் சத்தியும் சிவனும் அதிதேவதைகளாகும். முதலில் வாசிக்கும் பொழுது தீந்தீந் தீத்திமி என்றும், தாம்தாம் என்றும் ஓசைகள் முழங்க வேண்டும். இதனை மகாபரத சூடாமணி (810) குறிப்பிடுகின்றது.

வலக்கை யிடக்கை வாத்தியங் களுக்கு
மகிழ்சத்தி சிவனதி தெய்வம்
வாசிக்கும் முதலிலி ரண்டுகைச் சமமாய்
வளர்ந்தீந் தீந்தித் திமியென்று
ஒலித்திட மற்றும் தாந்தாமதென்னும்
ஓசைகள் முழக்கவே வேண்டும் (820)

தவிலில் த தீ தொம் நம் ஜெம் என்ற ஐந்து ஒலிகள் சதாசிவனது ஈசானம், தத்புருடம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம் என்ற ஐந்து முகங்களிலிருந்து தோன்றின என்றும், எம்பெருமானுடைய மருக வாத்தியத்திலிருந்து கிணத்ருணு, கிடத்ருணு, ஜெணுரிம், டிண்டிம், கிர்ர, திரு, தங், ழும், உறம் என்ற 14 ஒலிகள் தோன்றின என்றும் கூறுவர். தவில் ஒலிகள் இவற்றுள் அடங்கிவிடுவதனை இன்றும் ஒலி நூல் வாயிலாக அறியலாம். சபாநாதனுடைய ஐந்து முகங்களிலிருந்து ஐந்து வகையான தாளங்கள் தோன்றின. பின்னர் அங்கதாளம், உபாங்கத்தாளம், பங்கதாளம், விவாங்கதாளம், சுத்ததாளம், அனுதாளம் என ஆறு வகையாயிற்று. இத்தாளக் கணக்கீட்டைத் தவிலிசையில் சிறப்பாகக் காணலாம்.

தவில் பெயர்க்காரணம்:

தவில், தவுல், மேளம், கொட்டு என்று பல பெயர்களால் இக்கருவி அழைக்கப்பட்டாலும் தவில் என்ற பெயரே இயற்பெயராகவும், ஏனையவைகளை அதன் திரிபாகவும் கருதலாம். சென்னைப் பல்கலைக்கழக அகராதி (தொகுதி 3) மேள வகை என்பதும் தவில் என்பதும், தவுல் என்பதும் ஒன்றே என்று கூறுகிறது. பஞ்ச மரபு மேற்கோள் நூற்பாவில் 'தவில் தடாரி' என்று சுட்டப்படுகிறது. கல்வெட்டில் 'தவில்' என்று

சுட்டப்பட்டுள்ளது. தொழில் முறைசார் வட்டார வழக்கில் மேளம் என்று அழைக்கப்படுகிறது. வாத்திய மரபு என்ற நூல் திருமால் அசுரனது உடலைத் தாவிப் பிடித்து அவனது தோலால் இக்கருவியை உருவாக்கினார். இதனால் தாவில் என்பது தவிலாயிற்று என்று உரைக்கின்றது. கெட்டி மேளம் கொட்டுவதால் இதனைக் கொட்டு என்றும் அழைப்பர். இவ்வாறு பல்வேறு காரணங்கள் உரைக்கப்படுகின்றன.

இவை அல்லாமல் பிறிதொரு காரணம் இதனுள் பொதிந்துள்ளது. இக்கருவி இசையின் பிள்ளையார் பாடம் 'த தீ தொம் நம்' என்பதாகும். இதில் தகரமே முக்கிய இடம் பெறும். தத்தகாரமே இக்கருவியின் அடி நாதமாக அமைகின்றது. எனவே த + இல் தத்தகாரம் தங்கியுள்ள இல்லம் என்ற பொருளில் அமைந்து வகர உடம்படுமெய் தோன்றி த + வ் + இல் = தவில் என்ற பெயர் பெற்றது. தவில் மாமேதை கலைமாணி வலங்கைமான் சண்முகசுந்தரம் அவர்கள் இது குறித்துக் குறிப்பிடும் கருத்து உரமூட்டும். "நாதஸ்வரத்திற்குத் தாயாக சுருதி முக்கியமானது. இதுபோல் தவிலுக்குத் தா என்ற சொல் முக்கியமானது. தா என்ற சொல் சரியான உருவத்துடன் ஒலிக்கவில்லையானால் தாய் இல்லாக் குழந்தைக்கு ஒப்பாகும்" என்கிறார்.

தவில்காரர் இலட்சணம் பற்றி மகாபரத சூடாமணி குறிப்பிடுகிறது. ஆசாரம், பொறுமை, வணக்கம், ஒழுக்கம், சதிசப்தம், ஆராய்ந்து காணல், சொற்கட்டறிதல், வாத்திய குணபேதம் ஓர்தல் ஆகியவை தவில்காரர் இலட்சணங்களாகும் என்கிறது. கருங்காலியால் பன்னிரண்டு அங்குலத்தில் செய்த கோல் வலக்கையில் கொண்டு இடக்கையில் சொற்கட்டுமுடையோரே சிறந்த தவில்காரர் என்று மகாபரத சூடாமணி உரைக்கின்றது.

ஆசாரம் பொறுமை வணக்கம் ஒழுக்கம்
சதிசப்தம் ஆய்ந்து காணல்
பேசிய சொற்கட்டறிதல் தோல் கருவி
வாச்யகுண பேதம் ஓர்தல்
மாசிலர்க் கருங்காலி பன்னிரண்டங்குலத்
தண்டில் வலக்கை கோலும்
நேசமாம் இடக்கையில் சொற்கட்டிசைப்போன்
தவில் கார னென்னு நூலே.

– மகாபரத சூடாமணி 891

இலக்கியங்களில் தவில்:

இலக்கியங்களில் மணமுழவு பற்றிய செய்தி குறிப்பிடப்பட்டுள்ளன.

"மணமுழ வந்து எடுப்புமே" (கலித்.70:10). இத்தொடர் தவிலைக் குறிப்பதாகக் கருதலாம். திருப்புகழில் பல இடங்களில் தவில் கருவி பற்றிய செய்திகள் காணப்படுகின்றன.

1. வீராணம் வெற்றிமுர சோடே தவிற்றி மிலை
வேதாதமத் தொலிகள் – 288

2. தவில் கணம் பறை காளமோடு – 241

3. தபலை குடமுழா திமிலை படகம
தபுத சலிகை தவில் முரசு கரடிகை
மத்தளி தவண்டை யறவைத் தகுணி
துந்துமிகள்
மொகு மொகு மொகுவென அலற – 354

4. தொகுதி வெகு மரசு கரடிகை டமரு
முழவு தவில்
தம்பட்ட மத்தள மினம்பட்டடக்கை
பறை
பதலை பலதிமிலை முதலத் ரவுதிர் – 406

5. தவில் முரசு பறைதிமிலை டிங்குடிங்
குந்தடர்ந் தண்டர்பேரி – 564

6. முரசு பேரித்திமிலை துடிகள் பூரித்
தவில்கள்
முருடு காளப்பறைகள் தாரை
கொம்பு வளை – 602

7. திக்குத்தி குத்தி குர்தி தக்குத்த
குத்த குர்தி என்று பேரி
திமிலை கரடிகை பதலை சலரி தவில்
தமரமுரசுகள் குடமுழவொடு துடி
சத்தக் கணப் பறைகள் மெத்தத்
தொனித்ததிர – 927

8. தகுத குந்ததி தாகுதோ வெனமுழவு
வளை பேரி
தவில் கணம் பறை காளமோ டிமிலை
தொனி
யின முழுங் கெழு வேலைபோல் அதிர – 240

9. தானத னந்தன னா வெனும் பறை
செந்தவில் சங்கு டனே முழங்க – 652

10. இடுகுபறை சிறுபறைகள் திமிலையொடு
தவிலறைய – 368

11. திகுத்த தீதிகு திகுர்த்த தாவென
உடுக்கை பேரிகை தவிற் கு ழாமுமி
ரங்கு போரில் – 412

12. தித்தி மித்தி மித்த னத்த முட்டு
சிற்றுடுக்கை சேட்டை தவில் பேரி – 498

13. திமிலை தவிற்றுந்துமிகள் முழுக்குஞ்
சிரகிரி யிற்றங்கும் பெருமாளே – 337

சீறாப்புராணத்தில் இக்கருவி பற்றிய குறிப்புக் காணப் படுகிறது.

திசை துன்னிய முரசந் தவில் திடிமன் பல்லோசை
மிசை துன்னிய தொரு வாருதி மேலெழுள கடலும்
– மகான் வதைப்படலம் 43

கல்வெட்டில் தவில்:

கல்வெட்டில் தவில் என்றும், டொல் என்றும் இக்கருவி குறிப்பிடப்பட்டுள்ளது.

பள்ளற்து தவிலும் முரசும் சேமக் கலமும் IPS 956

தவில் அடிப்பவர் பற்றி பின்வரும் கல்வெட்டுக் கூறுகிறது.

டொல நாகசரகாறர் தவில் அடிப்பவர்
எம்பெருமா நடியார்க்கு பணம் உ டொல நாகசரகாறற்கு
பணம் உ பாடுவாற்கு பணம் – TDI 11 No.135

செட்டுத்தவில்:

தவில் இசைக்குப் பெருமை சேர்த்த கலைஞர்கள் பலர் உளர். நாகசுரம், தவில், தாளம், ஒத்து என்ற நான்கும் சேர்ந்த குழுவை மேளம் என்று அழைப்பர். இக்குழுவில் பழங்காலத்தில் ஒரு நாகசுரம், ஒரு தவில், தாளக்காரர், ஒத்துக்காரர் இருப்பர். இவர்கள் மேற்கொள்ளும் இசை நிகழ்ச்சியைச் சேவகம் என்பர். சேவகத்தின் மூலம் பெறும் பணத்தை முறையாகப் பங்கிட்டுக் கொள்வர். ஒரு ரூபாயில் ஆறு அணா நாகசுரக்காரரும், நான்கு அணா தவில்காரரும், தாளம் ஒத்துக்காரருக்குத் தலா மூன்று அணா என்ற விகிதத்தில் பங்கிட்டுக் கொள்வர். நாகசுரத்தை ஒத்துக்காரரும், தவிலைத் தாளக்காரரும் சுமந்து செல்வர். பிற்காலத்தில் இரட்டை நாயன முறை தோன்றியது. இம்மரபை முதன் முதலில் திருப்பாம்புரம் சுவாமிநாதப் பிள்ளை குமாரர்கள் நடராாசசுந்தரம், சிவசுப்பிரமணியம் தொடங்கி வைத்தனர். இவர்களைத் தொடர்ந்து திருவீழிமிழலை பத்மஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளையும், நடராசசுந்தரம் பிள்ளையும் தொடர்ந்தனர். பெரும்பாலும் சகோதரர்களோ, மாணவர்களோ, பிறரோ இக்குழுவில் இணைந்து வாசிக்கலாயினர். அப்பொழுது மேளக் குழுவில் செட்டுத்தவில் என்ற குழுவினர் இடம் பெறுவர். இவர்கள் இந்தக் குழுவிற்கு மட்டும் வாசிப்பார். இதனால் அந்த மேளக்குழுவில் ஒரு ஒருங்கிணைப்பும் நெருக்கமும் இருக்கும். பத்மஸ்ரீ திருவீழிமிழலையார் குழுவில் நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இருந்ததனை இசை உலகம் நன்கறியும். இதுபோல் மதுரை பொன்னுச்சாமி பிள்ளைக் குழுவில் கரந்தை ரத்தினம் பிள்ளையும், திருக்கண்ணமங்கை நடேச நாகசுரக்காரர் குழுவில் சிக்கல் முத்துக்குமரப் பிள்ளையும் இருந்தனர்.

தனித்தவில்:

தனித்தவில் வாசிக்கும் முறையை நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் தொடங்கி வைத்தார். அவர் காலத்தில் ஒரு தவில் என்ற நிலைமாறி இரு தவில்கள் வாசிக்கும் முறை தோன்றியது. நாகசுரக் கச்சேரியில் தவில் வித்வான்கள் இணைந்து வாசிக்கும் முறை தோன்றியது. சிறப்புத் தவில் என்ற முறை இன்று உள்ளது.

முதன்மை நிலை:

நாகசுரக் குழுவின் துணைக் கருவியாகத் தவில் திகழ்ந்தது. இன்றைய நிலையில் தவிலிசை கேட்பதற் கென்று மேளக்குழுவை ஏற்பாடு செய்கின்றனர். நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம், மலைக்கோட்டை பஞ்சாமி, யாழ்ப்பாணம் தட்சிணாமூர்த்தி, நாச்சியார் கோவில் இராகவபிள்ளை, வலங்கைமான் சண்முகசுந்தரம் பிள்ளை இவர்கள் காலத்தில் இந்நிலை மெல்லத் தொடங்க ஆரம்பித்து, அரித்துவாரமங்கலம் திரு ஏ.கே.பழனிவேலு, திருவாளபுத்தூர் திரு அ.கலியமூர்த்தி, தஞ்சாவூர் திரு.ஆர்.கோவிந்தராஜன், வேதாரண்யம் திரு ஜி.பால சுப்பிரமணியன் போன்றோர்களாலும், வலையப்பட்டி ஏ.ஆர்.சுப்பிரமணியன் அவர்களின் சேவையாலும் இந்த உன்னத நிலையை அடைந்து வந்துள்ளது.

இன்று வயலின், மாண்டலின், சேக்ஸபோன், புல்லாங்குழல் போன்ற கருவி இசைக் குழுவிலும் தவில் கலைஞர்கள் பங்கேற்று இக்கருவி இசையின் பரிணாம வளர்ச்சிக்குத் துணைபுரிந்து வருகின்றனர். தபேலா இசையின் சக்கரவர்த்தியாக திகழும் ஜாகீர்உசேன் அவர்களுடனும் கடம் சக்கரவர்த்தி திரு விநாயகராம் அவர்களுடனும் சேர்ந்து தவில் சக்கரவர்த்தி திரு ஏ.கே.பழனிவேலு அவர்கள் திருவையாறு தியாகப்ரும மகோத்சவ 150வது ஆண்டு விழாவில் வாசித்தார். அது அகில உலக அளவில் இக்கருவி இசைக்குப் பெருமை சேர்த்தது.

தற்போது நாட்டியத்திற்கும் இக்கருவியால் பெரும் புகழ் சேர்த்து வருகிறார். தவில் இசையின் இலயச்சிம்மமாகவும், தாளக் கணக்கீட்டின் மேதையாகவும் திகழும் தஞ்சை திரு.டி.ஆர்.கோவிந்தராசன் 1998இல் அமெரிக்கப் பல்கலைக் கழகங்களுக்குச் சென்று த்பேலா சக்கரவர்த்தியுடன் சேர்ந்து வாசித்து உலகரங்கில் இதன் புகழை மேம்படுத்தி வந்துள்ளார். நாகசுர வாசிப்பிற்கேற்ப இன்னொரு நாகசுரம் போல உருப்படிகளுக்கு ஏற்ப வாசிக்கும் சிறப்பைப் பெற்ற நீடாமங்கலம் மீனாட்சி சுந்தரம் அவர்களை நினைவுபடுத்தும் வகையில் அவரின் மறுவடிவமாக திருவாளபுத்தூர் டி.ஏ.கலியமூர்த்தி திகழ்கிறார். இவருக்கு மைய அரசின் சார்பில் சங்கீத நாடக அகாதமி சிறப்பு விருது அளிக்கப் பெற்றுள்ளது. தனக்கென ஒரு தனிப்பாணியை அமைத்துக்

கொண்டு இக்கருவிக்குப் பெருமை சேர்ப்பவராக வளையப்பட்டியாரும் திகழ்கிறார்.

புகழ்சால் கலைஞர்கள்:

தவில் இசைக்குப் பெருமை கூட்டிய கலைஞர்கள் பலர் உள்ளனர். தவில் இசையால் அவர்களும், அவர்களால் தவில் இசையும் புகழ் பெற்றன. கீவளூர் சுப்பராயப்பிள்ளை 1787 - 1846, கும்பகோணம் சக்கரபாணிப் பிள்ளை 1849 - 1905, நாச்சியார்கோவில் சக்திவேல் பிள்ளை 1861 - 1937, ஸ்ரீவாஞ்சியம் கோவிந்தப்பிள்ளை 1863 - 1907, வழுவூர் பொன்னுச்சாமி பிள்ளை 1864 - 1924, மன்னார்குடி பக்கிரிப்பிள்ளை 1867 - 1937, பசுபதிகோவில் வீரபத்திரப்பிள்ளை 1867 - 1935, இலால்குடி அங்கப்ப பிள்ளை 1870 - 1931, அம்மாப்பேட்டை பக்கிரிப்பிள்ளை, அம்மாசத்திரம் கண்ணுச்சாமி பிள்ளை 1876 - 1927, சிக்கல் முத்துக்குமரப் பிள்ளை 1876 - 1933, பழனி முத்தையா பிள்ளை 1878 - 1945, கும்பகோணம் தாதக்கிருஷ்ணன் 1879 - 1935, தில்லையாடி சீனிவாசபிள்ளை 1876 - 1960, திருவாழப்புதூர் பசுபதிப்பிள்ளை 1879 - 1958, சிக்கல் நாராணயச்சாமி பிள்ளை 1880 - 1941, காவாலக்குடி சோம சுந்தரம் பிள்ளை 1882 - 1952, காரைக்கால் மலைப்பெருமாள் பிள்ளை 1884 - 1951, கரந்தை ரத்தினம் பிள்ளை 1884 - 1956, பந்தநல்லூர் மரகதம் பிள்ளை 1884 - 1962, இலுப்பூர் நல்லகுமார் பிள்ளை 1885 - 1930, பாபநாசம் சீமான் பிள்ளை 1885 - 1949, திருக்காரவாயில் கோபாலப்பிள்ளை 1886 - 1976, திருச்செங்காட்டங்குடி ருத்திராபதிப் பிள்ளை 1887 - 1963.

வழிவூர் முத்துவீர் பிள்ளை 1888 - 1922, காரைக்கால் சோனாசிப்பிள்ளை 1888 - 1967, வேதாரண்யம் பொதுச்சாமி பிள்ளை 1890 - 1931, நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை 1894 - 1949, மன்னார்குடி நடேசபிள்ளை 1897 - 1972, குண்டுபல்லி குரவய்யா 1897 - 1972, திருமுல்லைவாயில் முத்துவீர் பிள்ளை 1980 - 1973, திருக்கடையூர் சின்னையா பிள்ளை 1900 - 1976, விராலிமலை முத்தையாபிள்ளை 1900 - 1934, பாபநாசம் ராமசாமிப்பிள்ளை 1903 - 1964, பந்தநல்லூர் ரத்தினம் பிள்ளை 1903 - 1936, திருமங்கலம் சுந்தரேசபிள்ளை 1904 - 1954, யாழ்ப்பாணம் காமாட்சி சுந்தரம் பிள்ளை் 1904 - 1951, மலைக்கோட்டை பஞ்சாபகேச பிள்ளை 1905 - 1935, கும்பகோணம் தங்கவேல் பிள்ளை 1906 - 1981, நாச்சியார்

கோவில் ராகவப்பிள்ளை 1910 - 1964, திருநகரி நடேசபிள்ளை 1910 - 1980, திருவிழந்தூர் ராம்தாஸ் பிள்ளை 1915 - 1968, திருப்பதி முனிராமய்யா 1923 - 1984, நீடாமங்கலம் சண்முகவடிவேலு 1929 - 1963, யாழ்ப்பாணம் தட்சிணாமூர்த்தி 1933 - 1975, வலங்கைமான் சண்முகசுந்தரம் பிள்ளை, வடபாதிமங்கலம் தட்சிணாமூர்த்தி போன்ற கலைஞர்கள் இக்கலைக்கு மெருகேற்றி இருக்கிறார்கள்.

விஷ்ணுபுரத்தில் சரப சாஸ்திரிகளின் புல்லாங் குழலுக்கு மிருதங்கத்திற்குப் பதில் அம்மாச்சத்திரம் கண்ணுசாமிபிள்ளை தவில் வாசித்தார். நாகசுரத்திற்குரிய கருவியைப் புல்லாங்குழலுக்கும் வாசித்தார். இன்று இக்கருவி பல்வேறு இசைக் கருவிகளுடன் இயைந்து வாசிக்கப்படுகிறது. கண்ணுசாமிபிள்ளை இராசரத்தினம் பிள்ளைக்கு நாகசுரம் கற்பித்த ஆசான் ஆவார்.

தவிற்கலையைக் கற்பிப்பதில் வல்லவராகத் திருவாளபுத்தூர் பசுபதிபிள்ளை திகழ்ந்தார். தஞ்சை மாவட்டத்தில் உள்ள சிறந்த கலைஞர்கள் பலர் இவரால் உருவாக்கப்பட்டவர்கள் ஆவர். நாச்சியார்கோவில் இராகவப்பிள்ளை, யாழ்ப்பாணம் சின்னத்தம்பிப் பிள்ளை, பொறையார் வேணுகோபால் பிள்ளை, திருவிழந்தூர் இராமதாசு பிள்ளை, திருவிடைமருதூர் வெங்கடேச பிள்ளை, இலுப்பூர் நல்லகுமார், திருவாளபுத்தூர் கலியமூர்த்தி போன்றோர் இவரால் உருவாக்கப்பட்டவர்கள் ஆவர்.

இலயச்சிம்மம் என்று போற்றப்படும் சிதம்பரம் வைத்தியநாத நாகசுரக்காரருக்குப் பொருத்தமான தவில் காரராகத் திருக்கடையூர் சின்னையாபிள்ளை திகழ்ந்தார். 1963 ஆம் ஆண்டில் சென்னை சங்கீத நாடக சங்கத்தின் கலாசிகாமணி விருது பெற்றுள்ளார்.

தனித்தவில் மேதைகளாக மலைக்கோட்டை பஞ்சாமி பிள்ளையும், நீடாமங்கலம் மீனாட்சிசுந்தரமும் திகழ்ந்தனர். உருப்படிக்குத் தவில் வாசிப்பதில் சிறந்தவராகக் கும்பகோணம் தங்கவேல் பிள்ளை திகழ்ந்தார். வந்தது வாராமல் தொடர்ந்து வாசிப்பதில் வல்லவராகத் திருக்காரவாயில் கோபால் தவில்காரார் திகழ்ந்தார். இதனால் இவர் "தொடர்ச் சொல் சுடரொளி வேந்தன்" என்று பாராட்டப் பெற்றார். உருட்டுச் சொல் வாசிப்பதில் வல்லவராக மன்னார்குடி நடேசபிள்ளை திகழ்ந்தார்.

இவர்கள் போல் பல் நிலைகளில் புகழ்பெற்ற மேதைகள் பலர் விளங்கினார்.

தற்காலக் கலைஞர்கள்:

நாட்டியத்துறையில் தஞ்சை நால்வர் என்று போற்றப்படுவது போல் தஞ்சை மாவட்டம் ஈன்ற தவிலிசைக் கலைஞர்கள் நால்வராக அரித்துவாரமங்கலம் ஏ.கே. பழனிவேலு, திருவாளபுத்தூர் டி.ஏ.கலியமூர்த்தி, தஞ்சை டி.ஆர்.கோவிந்தராஜன், வேதாரண்யம் ஜி.பாலசுப்பிரமணியன் திகழ்கின்றனர். இவர்களை உருவாக்கியதில் இவர்களின் குருவோடு திருமெய்ஞானம் நாகசுரக் கலைஞர் நடராசசுந்தரம் அவர்கட்கும் பங்கு உண்டு.

திருச்சேறை டி.ஜி.முத்துக்குமாரசாமி, கரந்தை சண்முகம், திருக்கோகர்ணம் டி.செல்லையா, மன்னார்குடி வாசுதேவன், திருநாகேஸ்வரம் டி.ஆர்.சுப்பிரமணியன், உடுமலைப்பேட்டை ஏ.அங்குசாமி, இடும்பாவணம் கே.எஸ்.கண்ணன், நாங்கூர் கே.செல்வகணபதி, கோவிலூர் கே.ஜி.கல்யாணசுந்தரம், தலைச்செங்காடு டி.எம். இராமநாதன், மன்னார்குடி வாசு, இராமேஸ்வரம் டி.பி.இராதாகிருஷ்ணன், திருக்கடையூர் டி.ஜி.பாபு, சேகல் எஸ்.பி.வீராசாமி, திருகண்ணபுரம் டி.எஸ்.ஜெயச்சந்திரன், டி.எஸ்.கனகராஜ் போன்றோரும் சிறந்த தவில் கலைஞர்களாகத் திகழ்கின்றனர்.

தவிற்கலை தமிழர் கண்ட அருங்கலையாகும். இன்று நாட்டுப்புற இசையிலும் இடம் பெற்றுள்ளது. நாட்டுப்புறப் பாடலில் இவரே தலைமைச் சூத்திரக்காரராக விளங்குகிறார். அன்றிலிருந்து இன்று வரை தமிழக மக்களின் வாழ்வோடு பிறந்து வாழ்வோடு வளர்ந்து தமிழ்ப் பண்பாட்டின் சிறப்பை உலகிற்கு உணர்த்தி வரும் அரும் கலையாக விளங்குகிறது.

இசைச் சித்தர் சிதம்பரம் செயராமன்
(1919 - 1995)



சங்கீத சௌபாக்கியமே – என்றும்
குன்றாத பெரும் பாக்கியமே
மங்காத ஸ்வரஞானம் மாறாத லயஞானம்
மாசின்றி உறவாடும் ஆனந்த மயமான (சங்கீத)

இசையால் உலகத்தை இசைய வைத்த தமிழறிஞர்கள் ஏராளம். படைத்த பாடலுக்கு இசை என்னும் உயிரோட்டம் தந்து உலகினில் உலவவிட்ட இசைவாணர்கள் ஏராளம். படைத்தவர்களே பண்ணொடு பாடிய இப்பாடலைக் கேட்கும் பொழுது மெய் சிலித்தவர்கள் ஏராளம். ஆற்றுநீர் ஓசையிலும், அருவி ஒலியினிலும், தென்றல் தவழ்ந்து வரும் நிலையினிலும், மரங்களிடை காற்றுப் புகுந்து வரும் இனிய ஓசையிலும், குழந்தையை உறங்க வைக்கும் பாட்டினிலும், குழந்தைகளின் மழலை ஒலிகளிலும், கலைஞன் கையிலுள்ள யாழினிலும், குழலினிலும், நாகசுர ஓசையிலும், முரசிலும், தவிலிலும், பறையிலும் எழுந்திடும் பல்வகை ஓசைகளையும் ஏற்றமுற வாங்கி, ஏழிசையில் எழிலுறப் பயிற்சி பெற்று, கந்தர்வ கானத்தை உள்வாங்கி, அனுபவித்துக் கற்பனை கலவையோடு தம் குரல் வளத்தால், கல் மனத்தையும் கரைய வைத்த இசைத் தமிழ் அறிஞர்களுள் சிதம்பரம் பாடக சுந்தரம்பிள்ளையின் மகன் செயராமனும் ஒருவராவார்.

சி.எஸ்.செயராமன் என்ற பெயரைக் கேட்ட உடனே "விண்ணோடும் முகிலோடும் விளையாடும் வெண்ணிலவே",

"வண்ணத் தமிழ் பெண்ணொருத்தி என்னருகே வந்தாள்", "மங்கியதோர் நிலவினிலே கனவிலது கண்டேன்", "தன்னைத்தானே நம்பாதது சந்தேகம்", "சந்தனப் பொதிகையில் தென்றலெனும் பெண்ணாள்", "ஆயிரம் கண் போதாது வண்ணக்கிளியே", "அன்பாலே தேடிய என் அறிவுச் செல்வம் தங்கம்" என்று தொடங்கும் பாடல்கள் நம் செவி வழியாக உள்ளத்தில் புகுந்து மனதை மகிழவைத்து நம்மை பழைய காலத்துக்கே கொண்டு செல்லும்.

இராமாயணத்தில் இராமனுடன் நடந்த முதல் நாள் போரில் தோற்று வெறுங்கையோடு இலங்கை மீண்ட இராவணன்

வாரணம் பொருத மார்பும், வரையினை எடுத்த தோளும்
நாரத முனிவதற்கு ஏற்ப நயம்பட உரைத்த நாவும்,
தார் அணி மவுலி பத்தும், சங்கரன் கொடுத்த வாளும்,
வீரமும் களத்தே போட்டு, வெறுங்கையே மீண்டு போனான்.

இராவணன் இலங்கை மீளும் முன்பு "இன்று போய் போருக்கு நாளை வா" என்று கோசலை நாடுடைய வள்ளல் கூறியதனை நினைந்து நாணத்தால் சாம்பி நின்றான். இக்காட்சியைச் சிதம்பரம் ஜெயராமன் பாடிய சம்பூர்ண இராமாயணம் படத்தின் பாடல் நம் கண் முன்னே அக்காட்சியைக் கொண்டு வந்து நம்மை வியக்கவைக்கும்.

இன்று போய் நாளை வாராய் என எனையொரு
மனிதனும் புகலுவதோ?
மண் மகள் முகம் கண்டே – மனம்
கலங்கிடும் நிலையின்று ஏன் கொடுத்தாய்! ஈசா
எண்டிசை வென்றேனே! அன்று
இன்னிசை பொழிந்துனைக் கண்டேன்.

முத்தமிழ் இசைச் சித்தர்:

திரை இசை உலகில் தனக்கென ஒரு தனி முத்திரையைப் பெற்றவர் செயராமன். கரகரப்பான குரலும், கமகங்கள் நிறைந்த இசையும், பாட்டின் பொருட்சுவைக்கேற்பப் பாடும் பாங்கும், சொல்லின் சூட்சமம் அறிந்து உச்சரிக்கும் உச்சரிப்பும் ஏற்ற இடமும் இறக்கமும் நளினமும் மிடுக்கும் கொண்ட குரல்

வளமும் தனக்கென ஒரு இசைப் பாணியைக் கொண்ட சிதம்பரம் செயராமன் "முத்தமிழ் இசைச்சித்தர்" என்று அழைக்கப்பட்டார். பொருத்தமான பட்டத்திற்குரியவர். இசையிலே பல்வேறு சித்துகளைச் செய்யும் சித்தர், ஏழிசைச் சுரங்களை அதன் எழிலோடு உலவவிட்டவர்.

இவர் அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராப்தி, வசித்துவதம், பிரகாமியம் என்ற எண் வகை சித்திகளைப் பெற்றவர்களைச் சித்தர்கள் என்பர். இந்த எண் வகை சித்துக்களையும், தம் இசை நுட்பத்தால் இசை உலகிற்குத் தந்த முத்தமிழ் இசைச் சித்தர் இவர். இவரது இசையில் அணிமாவைப் போல நுண்மை இருக்கும். மகிமாவைப் போல இராகத்தின் கனம் இருக்கும். இலகிமாவைப் போல கடுமையான இராகமும் எளிமையாக விளங்கும். அதைப் போல அன்றாட வழக்கில் உள்ள நாட்டுப்புற இசை கூட இவரது குரல் வழி வரும் பொழுது கரிமாவைப் போல கனமாகத் தோன்றும். இசை என்ற இன்ப வெள்ளத்தை ஆண்ட நிலையால் பிராப்தி நிலையைக் கண்டார். பாடலால் எவரையும் கவரும் வசித்துவம் இவரது குரலில் நின்றது. தன்னை மறந்து அதனது நிலையில் பாடும் பிரகாமிய நிலை இவரது இசையில் என்றுமே நிலவிற்று. இவருக்கு "முத்தமிழ் இசைச் சித்தர்" என்ற விருதைத் தஞ்சை மண் பேரறிஞர் அண்ணா தலைமையில் மிகப் பொருத்தத்தோடு தந்ததை எண்ணி எண்ணி மகிழ்கிறோம். தந்தவர்களை மகிழ்ச்சியோடு பாராட்டுகிறோம்.

சித்தர் பாடல்களை இவர் பாடிய அழகே தனி அழகாகும். சித்தர்கள் பாடிய பாடல்களாயினும் இவர் பாடும் பாங்கே தனிச் சிறப்புடையது.

1. மாங்காய் பாலுண்டு மலைமேலிருப்போர்க்கு
   தேங்காய் பால் எதுக்கடி? – குதம்பாய்!
   தேங்காய் பால் எதுக்கடி.?

2. வெட்ட வெளிதன்னை மெய்யென்றிருப்போர்க்கு
   பட்டயம் எதுக்கடி? – குதம்பாய்!
   பட்டம் எதுக்கடி?

ஊத்தைக் குழியினிலே மண்ணெடுத்தே
ஊதிரப் புனலிலே யுண்டை சேர்த்தே
வாய்த்த குயவனார் பண்ணும் பாண்டம்
வர காட்டுக்குமாகது என்று ஆடு பாம்பே.

இச்சித்தர் பாடல் பராசக்தி என்ற படத்தில் நடைமுறை வாழ்வியலுக்கேற்ப மாற்றி படைக்கப்பட்டுப் பாடப்பட்டுள்ளது.

தேசம், ஞானம், கல்வி, ஈசன் பூசையெல்லாம்
காசுமுன் செல்லாதடி குதம்பாய்! காசுமுன் செல்லாதடி
ஈசனும் ஈசனார் பூசையும் தேசத்தில்
காசுக்குப் பின்னாலே – குதம்பாய்! காசுக்குப் பின்னாலே
காட்சியான பணம் கைவிட்டுப் போனபின்
சாட்சி கோர்ட்டு ஏறாதடி – குதம்பாய்!
சாட்சி கோர்ட்டு ஏறாதடி.
பை பையாய் பொன் கொண்டோர்
பொய் பொய்யாய் சொன்னாலும்
மெய் மெய்யாய் போகுமடி – குதம்பாய்!
மெய் மெய்யாய் போகுமடி.

பிறப்பு:

சிதம்பரம் சுந்தரம்பிள்ளை மகன் செயராமன் சிதம்பரத்தில் விளங்கியம்மன் கோயில் தெருவில் வாழ்ந்த மிகச் சிறந்த இசை வித்துவான் வழுவூர் பாடக சுந்தரம்பிள்ளைக்கும் விருதாம்பாளுக்கும் நான்காவது பிள்ளையாக 1919 ஆம் ஆண்டு பிறந்தார். கோபால கிருஷ்ணன், நெல்லியப்பன் என்ற தமையன்மார்களும் ஒரு மூத்த சகோதரியும் (சிவகாமசுந்தரி) இளைய சகோதரி பத்மா என்பவரும் உடன் பிறந்தவர்களாவர். கோபாலகிருஷ்ணன் மிகச் சிறந்த இசை மேதையாகத் திகழ்ந்தார். இளைய சகோதரி கலைஞர் மு.கருணாநிதியின் மூத்த மனைவியாக விளங்கினார்.

வழுவூர் பாடக சுந்தரம்பிள்ளை மிகச் சிறந்த இசை மேதையாவார். இவரைச் சாயவேட்டி பாடக சுந்தரம்பிள்ளை என்று அழைப்பர். ஆஜானுபாகுவாக நல்லத் தோற்றப் பொலிவுடன் இருப்பார். கணீர் என்ற குரல் வளம் உடையவராக விளங்கினார். மிகச் சிறந்த இசையாசிரியராக விளங்கினார். எந்தவித ஊழியமும் பெறாமல் சங்கீத அமிர்தத்தை மாணவர்களுக்கு வாரி வாரி வழங்கினார். இவருடைய மரபில் வந்தவராக நாட்டிய ஆசிரியர் வழுவூர் இராமையாபிள்ளை விளங்கினார்.

பாடக சுந்தரம்பிள்ளையிடம் செயராமன் இசைப் பயிற்சி பெற்றார். இவருடன் இசைப் பயிற்சி பெற்றவராக சிதம்பரம் சொர்ண வெங்கடேச தீட்சதர் இருந்தார். இருவருக்கும் சுந்தரம் பிள்ளை இசைப் பாடல்களையும், இசை இலக்கணங்களையும் கற்பித்தார். தீட்சதர் சிதம்பரம் செயராமனுடைய நெருங்கிய நண்பராகப் பிற்காலத்திலும் திகழ்ந்தார். தன்னுடைய சகோதரர் ஆர்மோனியம் கோபாலகிருஷ்ணனிடமும் கற்றார். ஒன்பதாவது வயதில் நாடகத் துறையில் நுழைந்தார். ஜெகந்நாத ஐயரின் பாலவினோத மீனரஞ்சனி சபாவில் நடிகரானார். பின்பு நவாப் இராஜமாணிக்கம் பிள்ளையின் மதுரை தேவிபால சங்கீத சபா நடத்தும் நாடகங்களில் நடித்தார். இக்குழுவில் முக்கிய வேடங்களை ஏற்றுத் தன் குரல் வளத்தால் நாடகத் துறையில் புகழ்மிக்க நடிகரானார். இராஜபார்ட், ஸ்ரீபார்ட் போன்ற வேடங்களை ஏற்று, தனது சிறப்புமிகு குரல் வளத்தால் நாடகத் துறைக்குப் பெருமையைச் சேர்த்தார். பல்வேறு ஊர்களில் இவரது நாடகங்கள் நடைபெற்றன.

நாடக உலகில் இவரைச் "சிங்கக்குட்டி செயராமன்" என்ற அழைக்கலாயினர். சிங்கக்குட்டி செயராமன் என்று இவருக்கு இச்சிறப்புப் பட்டத்தைச் சூட்டியவர் எஸ்.ஜி.கிட்டப்பா ஆவார். கிட்டப்பா நாடக உலகின் மிகச் சிறந்த நடிகராக விளங்கியவர். இவர் மிகச்சிறந்த நாடக விற்பன்னர் ஆவார். இவரும் கே.பி.சுந்தராம்பாள் அவர்களும் அக்காலத்தில் கொடி கட்டி பறந்த நாடகக் கலைஞர்களாவர். எஸ்.ஜி.கிட்டப்பா வேலனாகவும், கே.பி.சுந்தராம்பாள் வள்ளியாகவும் நடித்த வள்ளித் திருமணத்தைத் தமிழ் உலகம் மறந்திருக்காது. சில நேரங்களில் கே.பி.சுந்தராம்பாள் முருகனாகவும், எஸ்.ஜி. கிட்டப்பா வள்ளியாகவும் நடித்த நிகழ்வுகளும் தமிழகத்தில் நடந்தன.

எஸ்.ஜி.கிட்டப்பாவின் நாடகம் தஞ்சை நகரில் ஸ்ரீகிருஷ்ணா தியேட்டர் அரங்கில் நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது செயராமனும், கோவிந்தனும் நடித்துக் கொண்டிருந்த நாடகம் தஞ்சை இராமநாத செட்டியார் மகாலில் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எஸ்.ஜி.கிட்டப்பா வள்ளலாரின் 'கோடையிலே இளைப்பாரிக் கொள்ளும் குளிர் தருவே' என்ற பாடலால் இரசிகர்களை மிகவும் கவர்ந்திருந்தார். இதனை அறிந்த செயராமனும் அவருடைய நண்பர் கோவிந்தனும்

இப்பாடலைப் பாடிட வேண்டும் என்று திட்டமிட்டு இராமநாதன் செட்டியார் ஹாலில் பாடினர்.

இதனைக் கேள்விப்பட்ட கிட்டப்பா தானே நாடகத்தைப் பார்க்க இராமநாதன் செட்டியார் ஹாலுக்கு வந்து முதல் வரிசையில் அமர்ந்து நாடகத்தைப் பார்த்தார். செயராமனும் கோவிந்தனும் போட்டி போட்டுக் கொண்டு பாடல்களைப் பாடியதைக் கேட்டு இரசித்த எஸ்.ஜி.கிட்டப்பா தான் அணிந்திருந்த தங்க செயினைச் செயராமனுக்கு அணிவித்தார். இன்று முதல் 'சிங்கக்குட்டி செயராமன்' என்றும், கோவிந்தனைப் 'புலிக்குட்டி கோவிந்தன்' என்றும் பட்டம் சூட்டினார். நாடக மேடையின் முடிசூடா மன்னனான கிட்டப்பா 1933இல் காலமானார். செயராமன் பிறகு அவரது பாடல்களை மிகுதியாகப் பாடினார். நாடக உலகம் இவரைக் "கிட்டப்பாவின் எதிரொலி" என்று அழைத்தது.

திரைத்துறையில்:

சிதம்பரம் செயராமன் அவர்களின் பெரியப்பா மகன் செல்வரத்தினம் பிள்ளை ஆவார். இவர் தமிழ்ச் சினிமாக்களில் பாடி நடித்துக் கொண்டிருந்தார். செயராமனின் திரைப்படத்துறை நுழைவிற்கு இவரே காரணமாவார். திரைப்படத்துறையில் பாடி நடித்தார். இவரது திரைப்பட வாழ்க்கை 1934இல் தொடங்கியது. கிருஷ்ண லீலா (1934) என்ற படத்தில் பால கிருஷ்ணனாகப் பாடி நடித்தார். இப்படத்தில் 12 பாடல்களைப் பாடி நடித்தார். இப்படத்தில் காளிங்க நர்த்தனனாக ஐந்து தலை நாகத்தின் மீது புல்லாங்குழல் ஊதிக் கொண்டு பாடி நடித்தார்.

1935இல் வெளிவந்த துருவன் என்ற படத்தில் துருவனாக நடித்தார். இப்படத்தில் 16 பாடல்களைப் பாடி நடித்தார். இதே ஆண்டில் வெளிவந்த நல்லதங்காள் படத்தில் நல்லதங்காளின் முதல் மகனாக நடித்தார். இதில் தன் மாமனைப் பார்த்து 'மாமா மான்குட்டி ஒன்று கொண்டு வாரும்' என்ற பாடலைப் பாடி நடித்தார். நிறைய பிர்காக்கள் கொண்ட இப்பாடல்களைப் பாடிக் கொண்டு நடித்து வந்தார்.

1936இல் வெளிவந்த லீலாவதி சுலோச்சனா என்ற படத்தில் 15 பாடல்களைப் பாடி நடித்தார். பின்பு சேலம் மார்டன்

தியேட்டர் இசைக்குழுவில் சில காலம் பணியாற்றினார். 1941இல் கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணனின் 'இழந்த காதல்' என்ற படத்தில் 'பாராயோ மானிட வாழ்வை' என்ற பாடலைப் பாடி நடித்தார்.

இசையமைப்பாளர்:

பின்பு நாடக சபாவின் இசையமைப்பாளராகவும், பொறுப்பாளராகவும், பாடகராகவும் விளங்கினார். இவரது அருமை நண்பர் கே.ஆர்.இராமசாமியின் முக்கியப் பொறுப்பாளராகவும், இசையமைப்பாளராகவும், பாடகராகவும் விளங்கினார். அறிஞர் அண்ணாவின் 'வேலைக்காரி' நாடகத்திற்கு இசையமைத்துக் கொடுத்தார். கே.ஆர். இராமசாமியின் கிருஷ்ணகான சபா நடத்திய மற்றொரு நாடகம் 'என் காணிக்கை' என்ற நாடகமாகும். இந்நாடகக் கதையையும், பாடல்களையும் எழுதியவர் அமரர் கு.சா.கிருஷ்ணமூர்த்தி ஆவார். இந்நாடகப் பாடலில் ஒன்று

குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில்
நிம்மதி கொள்வதென்பதேது
அற்றது உலகில் அமைதியும் மகிழ்வும்
அரும்பிட முடியாது
அமைதி அழிந்தது புயலும் எழுந்தது
ஆணவம் இன்றோடொழிந்தது
குணத்தையிழப்பவன் இறுதியிலே
நல்ல சுகம் அடைவதேது (குற்றம்)

இப்பாடல் பின்பு இரத்தக் கண்ணீர் படத்தில் இடம் பெற்றது. 1948இல் வெளிவந்த கிருஷ்ண பக்தி என்ற பெயருடைய படத்தில் நாரதராக நடித்தார். இப்படத்தில் "ஆட்டமென்ன சொல்லுவேன்" மோகனமுராரி என்ற பாடலைப் பாடினார். சம்பூர்ண இராமாயணம் என்ற படத்தில் "சங்கீத சௌபாக்கியமே" என்று தொடங்கும் பாடலின் பொழுது காலையில் பாடும் இராகம் பூபாளம் என்றும், உச்சிப் பொழுதில் பாடும் இராகம் சாரங்கா என்றும், மாலையில் பாடும் இராகம் வசந்தா என்றும், இரக்கம் பற்றிய இராகம் நீலாம்பரி, மகிழ்ச்சிக்குக் கல்யாணி, யுத்தத்திற்குக் கம்பீரநாட்டை, வெண்பா பாடுவதற்கு உகந்த இராகம் சங்கராபரணம், அகவற்பாவிற்குத் தோடி, தாழிசைக்குக் கல்யாணி,

கயிலைநாதனைக் கானத்தால் கவர்ந்த இராகம் காம்போதி என்பனவற்றை அவற்றிற்குரிய சுரங்களால் பாடி பளிச்சென புரியவைத்தார். இது போன்ற அமைப்பு வேறு எந்த படங்களிலும் இடம்பெறவில்லை. சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் சுமார் 500க்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். பாடும்பொழுது மேல்ஸ்தாயிலிலும், சுருதி சுத்தமாகவும், தாளம் தப்பாமலும் பாடுவார்.

அரியக்குடி இராமானுஜ ஐயங்காரின் ஐயம்:

சம்பூர்ண இராமாயணத்தில் செயராமன் பாடிய கயிலை நாதனைக் கானத்தால் கவர்ந்த இராகம் காம்போதி என்ற இராகத்தைப் பாடும் பொழுது காந்தாரத்தை மிக அழகாக அமைத்துக் காம்போதியின் சாயலைக் காட்டிப் பாடியுள்ளார். அக்காலத்தில் மிகவும் போற்றப்பட்ட இசை மேதை அரியக்குடி இராமானுஜ ஐயங்கார் இப்பாடலைக் கேட்டு மகிழ்ந்து காந்தாரத்தின் மூலமாகக் காம்போதி இராகத்தில் ஜீவனைச் செயராமன் காட்டிய நிலை பற்றி நேரில் அறிந்திட விரும்பினார். ஒரு சமயம், கச்சேரி தொடர்பாகக் கும்பகோணம் பிடில் மேதை இராசமாணிக்கம் பிள்ளை வீட்டுக்கு வந்திருந்தார். அப்பொழுது செயராமன் அங்கு இருந்தார், செயராமனைப் பார்த்து இது பற்றி விசாரித்திட விரும்பினார். செயராமனிடம் காந்தாரத்தைப் பிடித்துக் காட்டும் பொழுதே காம்போதி இராகத்தின் சாயலை நீங்கள் காட்டியமை மிகவும் பாராட்டக் கூடிய ஒன்று. இவ்வாறு காட்டுவதற்கு ஏதேனும் நூல்கள் ஆதாரமுண்டா? என்ற கேட்டார். உடன் செயராமன் இப்பாடலுக்கான இசையை நான்தான் அமைத்தேன். காந்தாரத்தின் வாயிலாகக் காம்போதியைக் காட்டிட விரும்பினேன். கயிலை நாதனே காந்தாரமாக அவ்விடத்தில் அமைந்துவிட்டார். இதற்கு வேறு எந்த ஆதாரமும் இல்லை என்றார்.

இசையில் கடமை மறந்த நிலை:

சம்பூர்ண இராமாயணப் பாடல்களில் ஒன்றான "இன்று போய் நாளை வாராய்" என்ற பாடல் ஒலிப்பதிவு செய்யும் பொழுது நடந்த ஒரு சுவையான தகவலை இந்நூலாசிரியரிடம் சி.எஸ்.செயராமனுடைய அருமை நண்பர் தஞ்சை கிந்தனார் ஸ்டூடியோ உரிமையாளர் இராசரத்தினம் அவர்கள் கூறிய நிகழ்வு ஒன்று. தஞ்சைக்குச் சி.எஸ்.செயராமன் வரும் பொழுதெல்லாம்

கிந்தனார் ஸ்டுடியோவில் தங்குவார். இராசரத்தினமும் இவரும் பேசிக் கொண்டிருப்பர். தஞ்சைத் தெற்கு வீதியில் உள்ள முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் பூபதி என்பவர் இவர் பாடல் மீது அளவு கடந்த பற்றுடையவர். தஞ்சைத் தெற்கு இராச வீதியில் உள்ள அன்னபூரணி அம்மன் கோயிலில் செயராமனுடைய கச்சேரி ஆண்டுதோறும் தவறாமல் நடைபெறும். சி.எஸ்.செயராமனுடைய முதலாவது நினைவு நாள் விழா தஞ்சை இராமநாதன் செட்டியார் ஹாலில் நடைபெற்றது. அந்நிகழ்வில் இந் நூலாசிரியருள் ஒருவராகிய சண்முக.செல்வகணபதியும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினர். அவ்விழாவில் கிந்தனார் ஸ்டுடியோ உரிமையாளர் மறக்க இயலாத அற்புத நிகழ்ச்சி ஒன்றைக் கூறினார்.

'இன்று போய் நாளை வாராய்' என்ற பாடலின் ஒலிப்பதிவின் பொழுது மீட்டப்பட்ட 16 தம்புராக்களுக்கு இடையில் சி.எஸ்.செயராமன் அமர்ந்து கொண்டு தம்புரா சுருதியோடு தன்னை ஐக்கியப்படுத்திக் கொண்டு பாடுவதற்கு முனைந்தார். மிகச் சிறப்போடு இராவணனின் தன்மானத்திற்குச் சவாலாக அமைந்த இப்பாடலின் சுவையை அதன் உயிர்ப்பு நிலை குறையாமல் பாடினார். எல்லோரும் மெய்மறந்து கேட்டனர். சி.எஸ். பாடி முடித்தார். அனைவரும் உணர்வு பெற்றுத் திரும்பினர். பதிவு செய்யப்பட்ட பதிவைக் கேட்டிட விரும்பினர். பதிவு செய்யப்பட்ட ஒலித்தட்டை ஒலிக்கச் செய்தனர். ஒலித்தட்டு ஓடியது. ஆனால் பாடல் வெளிவர வில்லை. ஒலித்தட்டில் பதிவாகவில்லை. தம்புரா சுருதியோடு இவர் இசைக்கத் தொடங்கிய இசை இனிமையில் பதிவு செய்யும் பணியாளரும் தன்னை மறந்துவிட்டார். பதிவாக வில்லை. எல்லோரும் வருந்தினர். சி.எஸ்.உம் வருந்தினார். செயராமனை மீண்டும் ஒருமுறை பாடும்படி பலரும் வேண்டினர். என்னால் இதுபோல் மீண்டும் பாட இயலாது என்று மறுத்துவிட்டார். பலரின் வற்புறுத்தலுக்கேற்ப ஒரு வாரம் கழித்து மீண்டும் இப்பாடல் சி.எஸ். பாடிட ஒலிப்பதிவாகியது. ஒலிப்பதிவைப் போடச் சொல்லி எல்லோரும் கேட்டு மகிழ்ந்தனர். முன்பு பாடியமைக்கும், தற்போது பாடியமைக்கும் உள்ள வேறுபாடு என்ன? என்று கேட்டனர். முன்பு பாடியதில் 40 விழுக்காடே இது என்றார். இதுவே இராவணன் போர்க் களத்தில் இருந்து வெறுமனே மீண்டு வருவதனை நம் கண் முன்னே கொண்டு வந்து காட்டுமானால் அந்த முன்பதிவு எப்படி

இருந்திருக்கும்? இசை உலகம் செய்த தவக்குறைவால் அது நமக்கு இன்று கிடைக்கவில்லை.

கம்ப இராமாயணப் பாடலில் உள்ள ஒவ்வொரு சொல்லையும் உள் வாங்கி அவ்வப்போது அனுபவித்து அனுபவித்து மகிழ்வார். ஒரு பாடல் அது கவிஞர் கு.சா.கிருஷ்ணமூர்த்தி பாடியப் பாடலாகத்தான் இருக்குமென நினைக்கிறோம். ஒரு வேளையில் சி.எஸ். பாடலாகவும் இருக்க வாய்ப்புள்ளது. பாடலைப் புனைந்து ஆசு கவி போல பாடும் வழக்கமும் கொண்டிருந்தார். கோபிகா திலகம் இராகத்தில் இப்பாடல் அமைந்துள்ளது. இவருடன் சேர்ந்து மறைந்த திருவீழிமிழலை இசைவாணர் சோமு அவர்களும் மேடையில் பாடி வந்தார். சோமு தந்த இப்பாடல் இது.

பல்லவி

கதை யரசன் கம்பனின் காவியச் சோலையிலே
கலை இன்பம் காணக் காண கலைஞரே வாரீர்

அனுபல்லவி

புதுப்புது மலர்கள் பூத்து புன்னகை புரியும்
புலமை தவழும் அமுதசொற்கள் புகழ் மணம் விரியும்

சரணம்

வண்டினங்கள் மதுவுண்டு மதுர இசை பாடும்
வர்ணனைக் குகந்த மயில்கள் வண்ணமாய் ஆடும்
தண்டமிழ் நீரோடை தண்பொலிவுடனே ஓடும்
சந்தக்கவி புள்ளினங்கள் விந்தை பேசிக் கூடும்

இப்பாடலின் உயிரோட்டத்தை ஒவ்வொரு அசையிலும் பாடினார். தண்டமிழ் நீரோடையில் தண் பொலிவுடனே ஓடும் என்பதனைக் குளிர்ச்சியோடு ஓட விட்டார்.

தென்னாட்டு சைகள் (SAIGAL) சிதம்பரம் செயராமன்:

வடநாட்டில் இந்துஸ்தானி இசையில் வித்தகராக இசையை அணு அணுவாக மேடையில் தவழவிட்டுத் தம்புராவின் இனிமையான சுருதியோடு தபேலாவின் எடுப்பான

இலயத்தோடு இசைவானில் இசையைத் தவழவிட்ட இசை மேதை குந்தன்லால் "சைகள்" என்பவர் ஆவார். வடநாட்டிலே ஒரு சைகள் இருந்தவரைப் போல 'தென்னாட்டு சைகள்' என்று சி.எஸ்.செயராமன் போற்றப்பட்டார்.

நன்றி மறவாத நண்பர்:

சிதம்பரம் செயராமனின் மிக நெருங்கிய நண்பர் இசைப் பயிற்சி பெற்ற ஒரு சாலை மாணாக்கர் சிதம்பரம் சொர்ண தீட்சதர் ஆவார். இவர் செயராமனின் இளமைக் காலத்திய இசைத் திறமைக்குரிய முக்கியமான ஒரு நிகழ்வைக் குறிப்பிடுகிறார். ஒருமுறை செயராமனும் இவரும் வயலின் பரூர் சுந்தரம் ஐயர் வீட்டிற்குப் போயிருந்தனர். பரூர் சுந்தரம் ஐயர் மிகப் பெரிய இசை மேதை. தீட்சதர் செயராமனை இவரிடம் அறிமுகம் செய்து வைத்தார். சுந்தரம் ஐயர் செயராமனின் இசை ஞானத்தைச் சோதிக்க ஆசைப்பட்டார். ஒரு இராகத்தை வாசிக்கச் சொல்கிறேன். அந்த இராகம் எது என்று இவர் சொல்வாரா? கேட்டார். நீங்கள் என்ன வேண்டுமானாலும் கேளுங்கள் சொல்வார் என்றார். உடனே அருகில் இருந்த பிடில் கலைஞரிடம் இரகசியமாக ஒரு இராகத்தின் பெயரைச் சொல்லி வாசிக்கச் சொன்னார். கோபால கிருஷ்ணன் வயலினில் வில்லை வைத்து ஒரு இழுப்புத்தான் இழுத்திருப்பார். உடனே மின்னல் வேகத்தில் செயராமன் இது 'சந்திரகௌன்ஸ்' என்றார். எல்லோரும் அசந்து போய்விட்டனர். அப்படி ஒரு உயர்வான இசை ஞானம் செயராமனுக்கு இருந்தது என்று தீட்சதர் குறிப்பிடுகிறார். (இசை வேளாளர் முரசு, டிச.2010, பக்.8-9)

தன் நண்பனுக்குச் செயராமன் செய்த நன்றி உணர்வுக்கு ஓர் எடுத்துக்காட்டுக் காண்போம் என்று இதைச் சொர்ண தீட்சதரே குறிப்பிடுகிறார். சொர்ண தீட்சதர் 1938-39 வாக்கில் வசந்த பைரவி இராகத்தில் 'நீயே கதி தயாபரி' என்று தொடங்கும் ஒரு கீர்த்தனை செய்திருந்தார். அதைத் தன் குருநாதர் பாடக சுந்தரம் பிள்ளையிடம் பாடிக் காட்டினார். இதனைச் செயராமன் பாட வேண்டும் என்று ஆசைப்பட்டார். செயராமனை அழைத்துத் தந்தையாரும் பாடச் சொன்னார். செயராமன் பாடாமல் காலம் தாழ்த்தினார். ஒரு நாள் சிதம்பரம் கோயிலில் தன் நண்பரைச் சந்தித்த தீட்சதர் நீ பாடினால் பாடு பாடாவிட்டால் போ என்று கோபித்துக் கொண்டார். செயராமன் இப்பாடலை வானொலி

நிலையத்தில் பாடினார். கல்கி இப்பாடலைக் கேட்டு மிகவும் பாராட்டி எழுதியிருந்தார். இந்நிகழ்வைத் தீட்சதரின் மணி விழா மலரில் செயராமனே எழுதியிருந்தார். இது குறித்துத் தீட்சதர் கூறும் கூற்றைக் காண்போம். "அந்த ஒரு பாட்டில் ஒரே மெட்டில் செயராமன் என்னைச் சங்கீத உலகில் பிரபலமாக்கி விட்டார். அந்த நாளில் அந்தப் பாட்டை வாசிக்காத நாககசுவர வித்வான்கள் கிடையாது. அதோடு திருச்சி வானொலி நிலையத்தில் இதை சங்கீதப் பாடத்தில் சொல்லித் தந்தார்கள். 1944இல் இந்தப் பாட்டு கிராமபோன் பிளேட்டாகவே வந்து புகழ் பெற்று விளங்கியது" என்கிறார்.

இயலிசைக் கர்த்தா:

சிதம்பரம் செயராமன் மிகச் சிறந்த இயலிசைப் படைப்பாளராகவும் விளங்கியுள்ளார். அவர் அவ்வப் போது பாடிய பாடல்கள் பல பதிவு செய்யப் படாமலேயே போய்விட்டன. இதில் ஒரு பாடல் இவரின் நெருங்கிய உறவினர் தஞ்சையில் முத்துத் தாண்டவர் இசைப் பேரவை நடத்தி வந்த திருவீழிமிழலை சோமசுந்தரம் சேகரித்து வைத்திருந்தார்.

இராகம் : சிந்து பைரவி **தாளம் : ஆதி**

பல்லவி

வரவுக்கு மிஞ்சிய செலவு செய்யாதே
வறுமையை நீயாகத் தேடிக் கொள்ளாதே

அனுபல்லவி

பெருமைக்கு ஆசைப்பட்டுப் பித்தனாகாதே
நிலையில்லா வரும் இன்பம் தரும் துன்பம் மறவாதே (வரவு)

சரணம்

கண்ணாடி மாளிகையைக் கனவிலும் நினையாதே
கண்டவர் பேச்சை நம்பி நரகத்தில் வீழாதே
உன்னறிவு உன்னுழைப்பு என்றும் வீண் போகாதே
உளுத்தனாய் உலகினில் உளறிக் கொட்டாதே (வரவு)

இச்சோமசுந்தரம் செயராமனோடு பல மேடைகளில் இணைந்து பாடியவராவார்.

பின்னணிப் பாடகர்:

திரைத்துறையில் பலரின் பாடல்களை இவர் பாடியுள்ளார். இவரது குரலால் அவர்களின் பாடல்கள் உயிரோட்டம் பெற்று மக்களைக் கவர்ந்தன. மக்களிடம் வாழ்கின்றன. கு.சா.கிருஷ்ணமூர்த்தி, அ.மருதகாசி, எஸ்.டி.எஸ்.யோகியார், வில்லிபுத்தன், கவியரசு கண்ணதாசன், மகாகவி பாரதியார், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், உடுமலை நாராயணகவி, இரா.பழனிசாமி, தஞ்சை இராமையாதாஸ், கலைஞர் மு.கருணாநிதி, மாயவநாதன், சுந்தரவாத்தியார், கு.மா.பால சுப்பிரமணியம், கவிமணி தேசிய விநாயகம்பிள்ளை, தியாகராஜன், கே.பி.காமாட்சிசுந்தரம், கோபால கிருஷ்ணன் ஆகியோர் படைத்த பாடல்களைப் பாடியுள்ளார். இவற்றில் சில.

காணி நிலம் வேண்டும் – பராசக்தி (பாரதியார்)

தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜெகத்தினை அழித்திடுவோம் – மனிதனும் மிருகமும்

நெஞ்சு பொறுக்குதில்லையே – இந்த
நிலைக் கெட்ட மனிதரை நினைத்துவிட்டால்
– பராசக்தி

மங்கியதோர் நிலவினிலே கனவிலது கண்டேன்
– பாவை விளக்கு

கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே இங்கு
வேரில் பழுத்த பலா. – குலதெய்வம் (பாரதிதாசன்)

பாடுபாடுவர்க்கே – இந்தப்
பாரிடம் சொந்த மையா – வேலைக்காரன் (கவிமணி)

குட்டி ஆடு தப்பி வந்தால்
குள்ள நரிக்குச் சொந்தம் – பாசவலை (பட்டுக்கோட்டையார்)

சந்தனப் பொதிகையில்
தென்றலெனும் பெண்ணாள் – தங்கரத்தினம் (கு.சா.கி.)

நீ சொல்லாவிடில் யார் சொல்லுவார் நிலவே – குறவஞ்சி

சரச ராணி கல்யாணி – சுக
சங்கீத ஞானராணி மதிவதனி
– இராஜாதேசிங்கு (உடுமலையார்)

தன்னைத்தானே நம்பாதது சந்தேகம்
– தெய்வப்பிறவி(உடுமலையார்)

காவியமா நெஞ்சில் ஓவியமா
அதன் ஜீவியமா தெய்வீக காதல் சின்னமா
– பாவை விளக்கு (மருதகாசி)

பாவை விளக்கு திரைப்படத்தில் மருதகாசி பாடிய பாடல் மூலம் எழுந்த காதல் காவியம் இன்றும் செயராமன் இசை நம்மை நெகிழவைக்கிறது.

இவர்களின் அருமையான சந்திப்பு:

இந்த அருமையான சந்திப்பிற்குரியவர்கள் கவிஞர் வாலியும், சி.எஸ்.செயராமனும் ஆவார். திருவரங்கத்தில் வாலியின் குடும்ப நண்பர் ஒருவர் வீட்டுத் திருமணத்தில் சி.எஸ்.செயராமன் கச்சேரிக்கு ஏற்பாடாகி இருந்தது.

வாலி திரைப்படத் துறையின் புகழ்பெறத் தொடங்கிய நேரத்தில் சி.எஸ்.செயராமன் பின்னணி பாடவில்லை. எனவே இருவருக்கும் அறிமுகம் இல்லை.

இசையமைப்பாளர் இராமமூர்த்தி மூலமாக சி.எஸ். கச்சேரிக்கு வாலி ஏற்பாடு செய்தார். சிதம்பரம் செயராமனை அவரே நேரில் காரில் அழைத்து வந்தார். தன்னைப் பற்றி செயராமனிடம் இராமமூர்த்தி கூறியிருப்பார் என்று வாலி நினைத்தார். ஆனால் நம்ம திருச்சிக்காரர், கச்சேரி விஷயமாக உங்களைப் பார்ப்பார் என்று மட்டுமே இராமமூர்த்தி கூறியிருந்தார். எனவே தன்னைக் காரில் அழைத்துச் செல்கிறவர் வாலி என்பது செயராமனுக்குத் தெரியாது. காரின் முன்வரிசையில் சி.எஸ்.செயராமன் அமர்ந்திருந்தார். பின் வரிசையில் வாலி உட்கார்ந்திருந்தார்.

கார் செங்கல்பட்டைத் தாண்டியது. செயராமன் சில பாடல்களை ஆலாபணம் செய்தார். ஆனந்தமாய்ப் பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்த வாலி இடையில் "ஆகா அற்புதம்" என்றார். உடனே செயராமன் பாட்டை நிறுத்திவிட்டு 'தம்பி உங்களுக்குச் சங்கீதம் தெரியுமா?' என்று கேட்டார். ஓரளவு இரசிக்கத் தெரியும். சட்டதிட்டம் எல்லாம் அவ்வளவாகத் தெரியாது என்றார்.

நான் இப்போது பாடியது என்ன இராகம் என்ற கேட்க காமவர்த்தினி என்று பதில் சொன்னார் வாலி. பலே என்று மகிழ்ச்சியுடன் கூறினார் செயராமன். பிறகு அவர் ஒவ்வொரு பாட்டாகப் பாட இது அரிகாம்போதி, இது பைரவி, இது கல்யாணி என்றெல்லாம் இராகங்களின் பெயரைக் கூறிக் கொண்டே வந்தார். மனம் மகிழ்ந்து போன செயராமன் தம்பி! நீங்க காவேரி தண்ணியாச்சே! ஞானத்துக்குக் கேட்க வேணுமா! என்று வாலியைப் பாராட்டினார். பிறகு தம்பி! நீங்கள் என்ன தொழில் பண்றீங்க? என்று கேட்டார்.

பாட்டு எழுதிகிட்டு இருக்கிறேன் என்று வாலி சொன்னதும் அப்படியா என்று வியப்புடன் கூறினார். செயராமன் பிறகு கிராமபோன் ரிக்கார்டுலே யாராவது உங்கள் பாட்டைப் பாடியிருக்காங்களான்னு கேட்டார். டி.எம்.சௌந்திரராஜன், பி.சுசீலா ஆகியோர் பாடியிருப்பதாக வாலி சொன்னார். சபாஷ்! சபாஷ், டி.எம்.சௌந்திரராஜன் என்ன பாட்டுப் பாடியிருக்காரு கொஞ்சம் பாடிக் காட்டுங்க என்றார் செயராமன்.

டி.எம்.எஸ். பாடிய "கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும்", "ஓராறுமுகம்" ஆகிய பாடல்களையும், பி.வி.ஸ்ரீனிவாஸ் பாடிய இசையால் "எதுவும் வசியமாகும்" என்ற பாடலையும் வேறு சில பாடல்களையும் வாலி பாடிக் காண்பித்தார்.

பரவசப்பட்டுப் போன செயராமன் உங்கள் பாட்டுக்கள் எல்லாம் பிரமாதமாக இருக்கு. இந்த பாட்டுக்களை எல்லாம் நான் ஏற்கனவே கேட்டிருக்கிறேன். ஆனால் நீங்கள் எழுதியது என்று தெரியாது என்று கூறிவிட்டு அருமையான சொற்கள், கருத்துக்கள் பிரமாதமாக இருக்கு. நீங்க சினிமாவில் பாட்டு எழுத முயற்சி பண்ணினால் பிரமாதமா வருவீங்க என்றார்.

"அண்ணே" என்று குறுக்கிட்டார் வாலி. ஆனால் அவரை பேசவிடாமல் செயராமன் தொடர்ந்து பேசினார்.

தம்பி நீங்க என்ன சொல்ல வர்றீங்கன்னு எனக்குப் புரியுது. நம்ம பாட்டையெல்லாம் சினிமாவிலே யாரு எடுத்துப்பாங்கன்னு நீங்க சந்தேகப்படுறீங்க. இந்த சந்தேகம் எல்லாம் வேண்டாம். மகா மோசமா பாட்டு எழுதுகிறவன் எல்லாம் இப்ப சினிமாவுக்கு வந்து விட்டான் என்று சொன்ன சிதம்பரம் செயராமன் வெற்றிலையை மடித்து வாயில் திணித்தவாறே "அத்தையடி மெத்தையடி", "மூன்றெழுத்தில் என் மூச்சிருக்கும்", "புன்னகை என்ன விலை" இப்படி யெல்லாம் மட்டகரமான பாட்டுக்கள் வர ஆரம்பிச்சுடுச்சு. எவனோ ஒருத்தன் வாலின்னு இப்ப புதுசா வந்திருக்கான். விஸ்வநாதன் இராமமூர்த்தி கிட்ட அவன் தான் நிறைய எழுதறான். பாட்டெல்லாம் ஒரே கட்சிப்பட்டா இருக்கு. நீங்க எவ்வளவோ தேவலை. விவரமா எழுதுறீங்க என்று சொல்லி முடிப்பதற்கும் கார் திண்டிவனத்தின் ஒரு டீக்கடை எதிரே நிற்பதற்கும் சரியாக இருந்தது.

ஓட்டுநர் டீ குடிக்கப் போனார். வாலியும் செயராமனும் மாறுபட்ட மனநிலையில் நாலா புறத்தேயும் போக்கைப் பார்த்தபடி இருந்தனர். திடீரென பத்துப் பதினைந்து பள்ளி மாணவர்கள், டேய் கார்ல உட்கார்ந்து இருப்பது கவிஞர் வாலிடா... வாங்கடா ஆட்டோகிராப் வாங்கலாம் என்றபடி ஓடி வந்தனர்.

ஆட்டோகிராப் நோட்டை நீட்டிய மாணவர்களுக்கு நல்வாழ்த்துக்கள் என்று வாலி கையெழுத்துப் போட்டுக் கொடுத்தார். இதைப் பார்த்த செயராமன் ஷாக் அடித்தவர் போல் நிலையானார். மாணவர்கள் போனபின், வாலியின் இரு கைகளையும் பற்றிக் கொண்டு தம்பி நீங்கதான் வாலின்னு தெரியாம பேசிட்டேன். ஆமாம் நீங்களாவது உங்கள் பெயரைச் சொல்லியிருக்கக் கூடாதா என்று கேட்டார். என் பெயர் என்னன்னு நீங்க கேட்கவே இல்லையேண்ணே! ஆதனால தான் நானும் சொல்லவில்லை என்றார் வாலி. சிதம்பரம் செயராமன் சிரித்துக் கொண்டே காவிரித் தண்ணிக்கே கொஞ்சம் குசும்பு ஜாஸ்தி என்று வாலியின் கன்னத்தைச் செல்லமாகத் தட்டினார். (இசை வேளாளர் மாநாட்டு மலர் - 2008, ப.55-56)

இல்லற வாழ்வு:

இவரது திருமணம் திருவாரூரில் 13.09.1944 அன்று நடைபெற்றது. இவரது மனைவி பெயர் தங்கபாப்பா ஆவார். இவர் சீர்காழி சதாசிவப்பிள்ளையின் மகள் ஆவார். இவரது திருமணத்தின் பொழுதே இவரது சகோதரி பத்மாவின் திருமணமும் நடைபெற்றது. மணமகன் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி ஆவார். தனது திருமணத்தைப் பற்றி கலைஞர் வாழ்க்கை வரலாற்று நூலான நெஞ்சுக்கு நீதியில் குறிப்பிட்டுள்ளார். (பாகம் 1, பக்.78-79) சிதம்பரம் விளங்கியம்மன் கோயில் தெருவில் வீடு. 1944 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் பதிமூன்றாம் நாள் வாழ்க்கைப் பாதையில் புதிய திருப்பத்தைச் சந்திக்க வேண்டியவனானேன். திருவாரூரில் எனக்கும் என் உயிர் அணுக்களில் கொலு வீற்றிருக்கும் அன்புப் பத்மாவிற்கும் வாழ்க்கைத் துணை ஒப்பந்தம் நடைபெற்றது. அதே நாளில் எனது மைத்துனர் செயராமன் அவர்களுக்கும் அதே வீட்டில் திருமணம்.

அன்றிரவு கலைவாணர் என்.எஸ்.கே. அவர்களின் கிந்தனார் கதாகாலட்சேபம் நடைபெற்றது.

எனக்குச் சுயமரியாதை முறையில் மணவிழா நடைபெற்றது. அவருக்குப் புரோகித முறையில் விவாக சுபமுகூர்த்தம் நடைபெற்றது. எங்கள் திருமண நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே என் மைத்துனன் திருமணத்திற்குக் குறிப்பிட்ட லக்கினம் தவறிவிடுமோ என்ற கவலை பழமைவாதிகளுக்கு ஏற்பட்டுவிட்டது. அவர்கள் என் திருமணத்தில் நுழைந்து பரபரப்புக் காட்டினர், பதைத்தனர், சீறி விழுந்தனர். அவர்களின் இலக்கினம் தவறிவிடக் கூடாதே என்பதற்காக நாங்களும் திருமண நிகழ்ச்சியை யொட்டிய சொற்பொழிவுகளை மாலை நேரத்துக்கு மாற்றி வைத்துக் கொண்டு அவர்கள் விரும்பி வரவேற்ற இலக்கினத்துக்கு வழிவிட்டேன் என்று எழுதியுள்ளார்.

சி.எஸ்.செயராமன் தங்கபாப்பாவிற்கு மூன்று மகன்கள், இரண்டு பெண் பிள்ளைகள் பிறந்தனர். கார்த்திகேயன், மோகன், பெரிய மகள் சிவகாமசுந்தரி இன்னொரு பெண் கங்கா. சிவகாமசுந்தரியின் மகள் மு.க.முத்துவின் மனைவியாவார். தனது 76வது வயதில் 1995 ஆம் ஆண்டு ஜனவரி 28 ஆம் நாள்

இளைய மகள் கங்காவின் வளசரவாக்கம் வீட்டில் சி.எஸ். இறந்தார். 1988இல் மனைவி தங்கப்பாப்பாவும் இறந்தார்.

இவர் தமிழக முதல்வராகப் பேரறிஞர் அண்ணா அவர்கள் இருந்த பொழுது 1968-70 வரை இசைக் கல்லூரிகளின் இயக்குநராக சி.எஸ். பணியாற்றினார். மீண்டும் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் முதல்வராகப் பணியாற்றிய பொழுது இதே பதவியில் இருந்தார். இப்பதவியில் இருந்த பொழுது இசைக் கல்லூரிகளின் பாடத் திட்டத்தைத் தயாரித்து அளித்தார்.

1992இல் தமிழக அரசின் கலைமாமணி விருது பெற்றார். அகில இந்திய வானொலியின் மேல்நிலை இயக்குநராக டெல்லியில் பணியாற்றினார். இவரது அபூர்வமான குரல் வளத்தை Trimuld என்று குறிப்பிடுவர். உலகில் சிலருக்கே இத்தகைய குரல் வளம் கிடைத்தது. இத்தகைய இசைச் சித்தர் தமிழிசைக்கு ஏற்றம் கொடுத்தார். தமிழிசை பாடுவதனைக் கௌரவ குறைச்சலாகக் கருதிய காலத்தில் தமிழிசையைத் தழைக்கச் செய்த இசையோராக விளங்கினார். பாட்டின் சுவையறிந்து, சொல்லறிந்து, சொல்லில் உள்ள ஒலியறிந்து, பாடும் திறமறிந்து பாடினார்.

வீணை தனம்மாள்
(1869 - 1938)



உலகம் போற்றும் நுண்கலைகளுள் இசைக் கலைக்கு என்றும் ஒரு தனி இடம் உண்டு. கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன்தோன்றிய மூத்த குடிமக்களின் கலை ஆற்றல்களில் இசைக் கலையும் ஒன்றாகும். இசையில் குரலிசை, கருவியிசை என்ற இரு கூறுகள் உள. கருவி இசையில் நரம்புக் கருவியும் ஒன்றாகும். நரம்புக் கருவிகளில் யாழும் ஒன்றாகும். யாழின் வகைகளான சீறியாழ், செங்கோட்டு யாழாக மாறி கோட்டு வாத்தியமாகப் பரிணாம வளர்ச்சியடைந்து பிறகு வீணையாகத் தோற்றம் பெற்றது.

சங்க இலக்கியங்களில் வீணை என்ற கருவியின் பெயர் காண முடியவில்லை. இதே போல் கி.பி.6 ஆம் நூற்றாண்டு வரை கட்டப்பட்ட, குடையப்பட்ட கோயில்களில் கூட இன்றைய வீணை வடிவத்தைக் காண முடியவில்லை. தஞ்சை மாமன்னர் ரெகுநாத நாயக்கரின் காலத்தில் தான் தற்காலத்தில் உள்ள வீணையின் அமைப்பு வடிவமைக்கப் பட்டுப் பழக்கத்தில் வந்தது.

தற்காலத்தில் சிறந்த வீணை இசைக் கலைஞர்கள் பலர் இருந்தாலும், தன் பெயரிலே வீணை என்ற சொல்லை அடை மொழியாகக் கொண்ட தனம்மாளுக்கு இசை உலகில் நிலைத்த பேருண்டு.

தனம்மாள் பரம்பரை:

இயலிசை நாடகம் என்ற முத்தமிழும் கொலு வீற்றிருக்கும் தஞ்சையில் தனம்மாளின் பரம்பரையினர் வசித்து

வந்தனர். இவரின் பாட்டி பாப்பம்மாள் தஞ்சை நால்வரிடம் நாட்டியம் பயின்று, மராட்டிய அரசவையில் ஆடகியாகவும், பாடகியாகவும் இருந்து வந்தார். தஞ்சை அரசவை ஆங்கிலேயர் வசமடைந்தவுடன், தனம்மாளின் பாட்டி காமாட்சியம்மாள் இரங்கூன் கிருஷ்ணசாமி முதலியார் உதவியுடன் சென்னைக்குக் குடிபெயர்ந்தார். அவர், இசையைச் சியாமா சாஸ்திரிகளின் தந்தையான பாலுசாமி தீட்சிதரிடமும், நாட்டியத்தைப் பரதம் கணபதி சாஸ்திரியிடமும் கற்று இசை நடனத்தில் மிகுந்த தேர்ச்சியடைந்தார்.

தனம்மாள் தாயார் சுந்தரம்மா இசையில் புலமை மிக்கவர். இவர் சியாமா சாஸ்திரியின் மகனான சுப்புராம சாஸ்திரியிடம் இசை பயின்றார்.

பிறப்பு:

தனம்மாள் 1869 ஆம் ஆண்டு மே மாதம் இறுதியில் சென்னை ஜார்ஜ் டவுனில் சுந்தரம்மாவுக்கு மகளாகப் பிறந்தார். இவருடன் உடன் பிறந்தவர்கள் எண்மர் ஆவார். இவரது சகோதரர் நாராயணசாமி சிறந்த வயலின் வித்வானாகவும், மற்றொரு சகோதரர் மாணிக்கம் மிருதங்க வித்வானாகவும், சகோதரி ரூபாவதி பாட்டு, வீணை, நடனத்தில் வல்லவராகவும் திகழ்ந்தார். இத்தகைய இசைச் சூழலில் வளர்ந்த தனம்மாள் இளமையிலேயே இசை ஞானம் கைவரப் பெற்றார்.

இசைப் பயிற்சி:

தனம்மாள் முதன் முதலில் தன் பாட்டியிடமும், தாயிடமும் இசை கற்றார். இசையில் மேன்மைத்துவம் அடைய அழகசிங்கரையர் என்பவரை அணுகி, வீணை மற்றும் இசை இரண்டிலும் பாடங்களைக் கற்றார். தனது 12 வயதிலேயே இசையில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றார். இவரது பாட்டி, தனம்மாள் மயிலாப்பூர் வீணை கௌரியம்மாளைப் போல் இவர் புகழ் பெற வேண்டுமென்று ஆசைப்பட்டார். அதனால், கௌரியம்மாளின் சீடரான, பால்தாஸிடம் இசைக் கற்க ஏற்பாடு செய்தார். தனம்மாளும் பால்தாஸிடமிருந்து கௌரியம்மாளின் பதங்களையும், சேத்ரக்ஞரின் பதங்களையும் நன்கு கற்றுத் தேர்ந்தார்.

தனம்மாளும் இவரது சகோதரி ரூபாவதியும் இளம் வயதில் இணைந்து இசைக் கச்சேரிகள் செய்து வந்தனர். இவரும் இசையில் புலமை பெற வேண்டும் என்று எண்ணிய இவரின் தாயார் திருக்கோடிக்காவல் கிருஷ்ணய்யர், திருப்பாம்புரம் சுவாமிநாதபிள்ளை, சாத்தனூர் பஞ்சநாத அய்யரிடம் இசை கற்க அனுப்பினார். இவர்கள் பஞ்சநாத அய்யரிடம் தீட்சிதரின் விளம்ப கால மத்திம கால கீர்த்தனைகளையும், பல்லவி கோபால அய்யரிடம் மத்திம கால கீர்த்தனைகளையும் பயின்றார். தனம்மாளுக்கு அவரின் தாயாரைப் போல மெல்லிய குரல். இக்குரல் அமைப்பு வீணையோடு ஒத்திசைக்கும் போது மிகவும் இனிமையாக இருக்கும்.

தனம்மாளின் தோற்றமும், பழக்கவழக்கங்களும்:

தனம்மாள் கருத்த மேனி, பரந்த முகம், அகண்ட கண்கள், எந்நேரமும் புகையிலை பழக்கத்தால் காவி ஏறிய பற்களை உடையவர். இவர் இயற்கை அழகைத் தவிர செயற்கையாக எவ்வித நகைகளும் அணியமாட்டார். கை நிறைய கருவளையல்களும், கழுத்தில் கருமணிப் பொட்டும் இவருடைய அணிகளாக இருக்கும். எப்பொழுதும் நல்ல வண்ணங்களையுடைய புடவையை அணிவார். பாரதியார் கூறிய நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, நிமிர்ந்த ஞானச் செருக்கு இவருக்கு உரியதாகும். ஆடம்பரத்தைச் சிறிதும் விரும்பாதவர். உண்மையானவற்றைப் பாராட்டும் இயல்பும், போலிகளை எதிரிலே துச்சமாய்த் தூக்கி எறிந்துவிடும் குணங்களையும் உடையவர்.

உணவு முறையில் மிகவும் பிரியமுடையவர். நெய்யை உள்ளங்கையில் உற்றிக் குடிப்பார். இவரிடம் விருந்தோம்பும் பண்பு மிக்கிருந்தது.

தனம்மாள் வாசிக்கும் போது அழுத பிள்ளையும் கூட வாய்மூடும், பெர்சனாலிடி என்ற ஆங்கிலச் சொல்லுக்கு ஏற்ப அவரின் முகத்தில் கண்ணியமும், கம்பீரமும் ஒளிவிடும். பார்த்தவுடன் மரியாதை கொடுக்கும் தோற்றப் பொலிவு உடையவர்.

இசைப் பெட்டகம்:

தனம்மாள் தன் காலத்தில் வாழ்ந்த இசைக் கலைஞர்களில் இசை மேருவாகத் திகழ்ந்தார். கணக்கிலடங்காத பாடல்களில் பயிற்சி பெற்றிருந்தார். ஒவ்வொருவரின் பாடலையும், மரபு ரீதியான முறையிலேயே கற்க எண்ணி, இசை மேதைகளை நாடிச் சென்று நேரடியாகப் பயிற்சி பெற்றார்.

இவர் ஆனை அய்யாவின் பாடல்களில் அதிகத் தேர்ச்சி பெற்றிருந்தார். இப்பாடல்கள் தனம்மாவின் குடும்ப சொத்தாகவே நீண்ட காலம் இருந்து வந்தன. அவ்வாறே தீட்சிதரின் நவகிரக கீர்த்தனங்களையும் வாசித்துப் பிரபல படுத்தினார்.

முத்தையால்பேட்டை தியாகய்யர் என்ற இயற்பெயர் கொண்ட திருவொற்றியூர் தியாகைய்யர் தனம்மாளின் சிறந்த நண்பராகவும், இசை ஆசானாகவும் விளங்கினார். தனது 80வது வயதிலும், தன்னிடம் உள்ள இசையைத் தனம்மாளுக்குக் கொடுத்துவிட வேண்டும் என்று எண்ணி அவரின் வீட்டிற்கே சென்று பல பாடங்களைக் கற்பித்தார்.

மேலும் தர்மபுரி சுப்பராயரின் ஒவ்வொரு ஜாவளியும், தனம்மாள் வாசித்த பிறகே பிரபலமாகின. இவர் தனது பாட்டியிடமும், தாயாரிடமும் தேவாரம், திருவாசகம், திவ்வியபிரபந்தம், திருப்புகழ், தாயுமானவர் பாடல், அருட்பா முதலிய தெய்வத் தமிழிசைகளைக் கற்றார். இவர் இப்பாடல்களைப் பாடும் முறை ஓதுவார்கள் பாடும் முறையிலிருந்து சிறிது வேறுபட்ட நிலையில் அமைந்திருக்கும்.

தனம்மாள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது, இந்தி, மராட்டி போன்ற மொழிகளில் அமைந்த இசைப் பாடல்களில் தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் தனது காலத்தைப் பெரும் இசைப் பேரறிஞர்களுடன் கழித்து வந்தார்.

குடும்பம்:

தனம்மாளுக்கு இராஜலட்சுமி, இலட்சுமி ரத்தினம், ஜெயம்மாள், காமாட்சியம்மாள் என்ற நான்கு பெண்கள் இருந்தனர். இலட்சுமி ரத்தினமும், ஜெயம்மாளும் தனம்

பெண்கள் என்ற இசைத் தட்டை உருவாக்கி, அதில் தனம்மாள் வாசித்த "எத்தைக் கண்டு இச்சைக் கொண்டாய்" என்ற பதத்தையும், "ஏரா நாபை" என்ற கீர்த்தனத்தையும் பதிவு செய்தனர்.

இலட்சுமி ரத்தினம் தனம்மாளைப் போலவே இசையில் புலமைப் பெற்றுப் பல்வேறு அவைகளில் பாடிப் பாராட்டுக்களைப் பெற்றவர். காமாட்சியும், ஜெயம்மாவும் தனம்மா, அவரது சகோதரி ரூபாவதி போலவே ஒன்றாக இணைந்துஇசைக் கச்சேரிகள் செய்து வந்தனர்.

ஜெயம்மாள் முத்துத்தாண்டவரின் தெருவில் வாரானோ என்ற பதத்தையும், கனம் கிருஷ்ணைய்யரின் திருவொற்றியூர் தியாகராஜன் என்ற பதத்தினையும் இசைத் தட்டில் பதிவு செய்துள்ளார். இவர் உலகப்புகழ் பெற்ற நாட்டிய மேதை பாலசரஸ்வதியின் தாயார். இவரின் நான்காவது மகன் ரெங்கநாதன் மிருதங்கக் கலைஞராகவும், கடைசி மகன் விசுவநாதன் அகில உலகப்புகழ் பெற்ற குழல் கலைஞராகவும் விளங்கினார்.

காமாட்சியம்மாளின் மகள்கள் பிருந்தாவும், முக்தாவும் தனது பாட்டியைப் போலவே இசையுலகில் கொடி கட்டிப் பறந்தனர். இவ்வாறு இவரின் குடும்பமே இசை நாட்டியக் கலைக் குடும்பமாக விளங்கியது.

தனம்மாளின் பாணி:

தனம்மாள் வீணை வாசிக்கும் முறை தஞ்சாவூர் பாணி என்று அழைக்கப்படுகிறது. தஞ்சாவூர் பாணியில் உள்ள இராக ஆலாபனை முறை தனம்மாள் பாணியில் இருக்காது. இவரின் வீணை மீட்டு மிக மிக மென்மையானது. இவரது வாசிப்பில் மணியடித்தல் போன்ற ஒலி இருக்காது. அவர் விட்டிசைக்கும் ஒவ்வொரு நரம்பின் அதிர்வும் நம்மை அப்படியே வேறு உலகிற்குக் கொண்டு செல்லும் தன்மை வாய்ந்தது. பண்டைய காலத்தில் பாணர்கள் யாழ் வாசித்துப் பாடுவது போல இவரும் வீணை இசைத்துக் கொண்டே பாடுவார்.

கர்நாடக இசையில் உள்ள அத்தனை கமகங்களும் இவரது வாசிப்பில் காணப்படும். இவருடைய இசை ஒரே கமகமயமாக விளம்ப காலத்தில் இருக்கும்.

தனம்மாள் இராக ஆலாபனையை அதிக நேரம் வாசிக்க மாட்டார். எந்த ஓர் இராகத்தையும் மூன்று அல்லது ஐந்து நிமிடத்திற்குள் வாசித்து முடித்துவிடுவார். அதில், அந்த இராகத்தின் எல்லா ஜீவ சுவரங்களையும், இரக்தி சுவரங்களையும் இடம்பெறச் செய்வார். ஓர் இராகத்தை வாசிக்க ஆரம்பித்த போது, இந்த இராகம் என்று பார்வையாளர்கள் அடையாளம் கண்டுபிடிக்கும் அளவு அந்த இராகத்தின் சிறந்த அழகைக் காட்டி வாசிப்பார். அவர் வாசிப்பில் இந்துஸ்தானி இசையின் தாக்கம் இருக்காது.

பாடலுக்குச் சங்கதிகள் போடும் போது இரண்டு அல்லது மூன்று முறை மட்டும் சங்கதிகள் இடம்பெற வாசிப்பார். அதில் அந்த இராகத்தின் அழகு வெளிப்படும்.

வீணை தனம்மாள் என்ற பெயரைக் கேட்கும் போதே, அவர் வீணை வாசிப்பில் தான் கைத்தேர்ந்தவர் எனப் பொருள்படுகிறது. ஆனால், அவருடைய வாய்ப்பாட்டிற்கு முன் வீணை ஊமை தான். தனது கடைசிக் காலத்திலும் படாமல் வாசித்ததில்லை.

தனம்மாளின் பெண்ணியச் சிந்தனை:

தனம்மாள் இசையைப் பெண்ணிய நோக்குடனே அணுகினார். இலய விளையாட்டுக்களோடு தனம்மாள் ஈடுபட விரும்பவில்லை. அதில் பெண்மையின் மென்மைத் தன்மை போய்விடும் என்பது தனம்மாளின் கருத்தாகும். மேலும், ஜால வித்தைகளோடு பாடப்படும் கற்பனைச் சுவரப் பகுதியை வெறுத்தார்.

தனது இரு பேத்திகளான பிருந்தா, முக்தாவை அவரது தாயார் காமாட்சியம்மாள் காஞ்சிபுரம் நயினா பிள்ளையிடம் இசைக் கற்க அனுப்பிய போது, தனம்மாள் பெரிதும் வருந்தினார். தனது பாணியில் கலப்பு வந்து விடும் என்றும், ஆண்கள் கம்பீரமாகத் தொடையில் தட்டுதல், வேகமான இசை வேகம், கையசைவு போன்ற ஆணின் செயற்கை நடைகளைத் தன் பேத்திகளும் கற்று விடுவார்களோ என அஞ்சினார். மேலும் இவர் தனது பெண்களைச் சமூகத்தில் ஆணிற்கு நிகரான நிலையில் மேம்பட தன்னால் இயன்ற முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டார். இதன் விளைவாக இவரது

குடும்பத்தில் தலைசிறந்த இசையாளர்களாகப் பிருந்தா முக்தாவும், தலைசிறந்த நாட்டியப் பேரொளியாகப் பாலசரஸ்வதியும் புகழ் பெற்று விளங்கினர்.

இசைப் பயணம்:

தனம்மாள் சிறு வயது முதலே மைசூர், திருவாங்கூர், விஜயநகரம், தர்பங்கா, தேக்கிரி, கார்வால் மற்றும் பரோடா ஆகிய சமஸ்தான மன்னர்களின் முன் வாசித்துப் பாராட்டைப் பெற்றார். இவருடைய இசை நிகழ்ச்சிகளில் ரிப்பன் பிரபு, கார்மிகேயல் பிரபு மற்றும் பெரும் சமூக உயர்வு பெற்றவர்கள் பங்கு கொண்டதோடு மட்டுமல்லாமல் சமூக நிகழ்ச்சிகளுக்கு இவரை ஆங்கில அரசும், பெரிய மனிதர்களும் அழைத்தனர்.

மேலும், உலகப்புகழ் பெற்ற கலைஞர் தாகூர் தமிழ்நாட்டிற்கு வந்த பொழுது தனம்மாளின் வீணை இசை நிகழ்த்தப்பட்டது. இவரின் வீணை இசைக்கு ஆற்காடு நவாப் அலிகானின் குடும்பமே நண்பரானது. இதன் மூலம். அனைவரும் தனம்மாளின் வீணை இசைக்கு மயங்கியது புலப்படும்.

தனம்மாளின் வீணை வடிவமைப்பு:

தனம்மாளின் வீணையைக் குருவப்பச்சாரி என்பவர் தான் வடிவமைத்தார். தனம்மாளின் வீணை மற்ற வீணைகளை விட சிறியது. அவருக்கென செய்யப்பட்டது. தற்பொழுது பாலசரஸ்வதி மகள் இலட்சுமி வீட்டில் இவரது வீணை பாதுகாக்கப்பட்டு வருகிறது.

ஒலி இழந்த வீணை:

புகழின் உச்சியில் இருந்த தனம்மாள் 1918 ஆம் ஆண்டு கண்ணொளியை இழந்தார். மெல்ல மெல்ல வெளியூர் கச்சேரிகள் செய்வதைக் குறைத்துக் கொண்டார். ஆனாலும், பிரதி வெள்ளிக் கிழமைகளிலும், கிருஷ்ண ஜெயந்தி, வருடப் பிறப்புப் போன்ற விழா நாட்களிலும் மாலை இரண்டு மணி நேரம் தொடர்ந்து வாசிப்பார். அவர் வாசிக்கும் போது அனைவரும் அமைதியாக இருக்க வேண்டும் என்று விரும்புவார். பேஷ் மற்றும் பலே போன்ற சொற்களை மட்டும் பொறுத்துக் கொள்வார்.

தனம்மாள் பேத்தி பாலசரசுவதி அவர்கள் இவரைப் பற்றிக் கூறும் போது, "சிசீன் காலங்களில் எங்கள் வீட்டுச் சமயலறைக் கூட மூடப்படும். கடுகு தாளித்தால் பாட்டி வாசிப்பிற்கு இடைஞ்சலாக இருக்குமென்று அதனையும் நிறுத்தி விடுவோம்" என்று கூறினார்.

கண் பார்வை இழந்து இருபது வருட காலம் வாழ்ந்தார். அச்சமயங்களில் காலடி ஓசையைக் கொண்டு வருபவரை அடையாளம் கண்டுபிடித்து விடும் ஆற்றல் இவரிடம் இருந்தது.

பொருளாதார நலிவு:

தனம்மாள் 1920 ஆம் ஆண்டிற்கு பிறகு பொருளாதார நிலையில் பெரும் வறுமைக்கு ஆட்பட்டார். வறுமையிலும் செம்மையான வாழ்வு வாழ்ந்தார். கடைசி காலத்தில் அவர் இருந்த வீடும் ஏலம் போனது. தனம்மாளின் மக்கள்கள் பல்வேறு நண்பர்களின் வீடுகளில் அடைக்கலம் புகுந்தனர்.

தனம்மாள் போற்றிய இசைக் கலைஞர்:

தனம்மாள் தான் சிறந்த இசைக் கலைஞராகத் திகழ்ந்த போதும் வளரும் இசைக் கலைஞர்களை ஊக்குவித்து, அவர்களைச் சபையில் சிறந்த முறையில் பாராட்டிய ஒரு வழிகாட்டியாக இருந்தார். இதனைப் பலரும் தங்கள் நூற்களில் குறிப்பிட்டுள்ளனர். அவர் மிகவும் மெச்சிய இசைக் கலைஞராக இசைக்குயில் எம்.எஸ்.சுப்புலட்சுமி அவர்கள் விளங்கினார்.

நகைச்சுவை உணர்வு:

தனம்மாள் பல சமயங்களில் நகைச்சுவையாகப் பேசும் இயல்புடையவர். சில நகைச்சுவைகள் கேலி கிண்டலுமாகவும், குத்தலாகவும், படிப்பினை ஊட்டுவதாகவும் இருக்கும். உதாரணமாக, நம்முடைய பையன் சிநேகத்துக்குக் கிட்டப்பா சங்கீதத்துக்கு எட்டப்பா என்று சிரித்துக் கொள்வார்.

சீடர்கள்:

தனம்மாளிடம் முக்தியாலுப்பேட்டை சரவணம், திருவாரூர் ராஜாயி, சாவித்திரி ராஜன், கனகம்மாள், சென்னை மந்திரி ருக்மணி லட்சுபதி, திருவாங்கூர் மகராணியின் மகள்

சேது பார்வதி பாய், சென்னை பல்கலைக்கழகத் துணைவேந்தர் ராவுண்ணி, அரியக்குடி இராமானுஜ அய்யங்கார் போன்ற பலர் தனம்மாளிடம் இசை மற்றும் வீணைக் கற்றனர்.

இறப்பு:


1938 ஆம் ஆண்டு தனம்மாள் உடல் நலம் சரியில்லாமல் இருந்தார். அச்சமயத்தில் அவரின் பாலசரசுவதி வீட்டில் வசித்து வந்தார். இச்சூழலிலும் நவராத்திரி பூஜையில் கலந்து கொண்டு தினமும் வீணை வாசித்து வந்தார். கடைசி நாளன்று காய்ச்சலும், வயிற்றில் வேதனையும் அதிகரித்த போதும் "பிறவி வேண்டேன்" என்று பாடிக் கொண்டிருந்தார். நினைவு தவறிய போதும் கை மட்டும் வெற்றிலை பாக்கைத் தேடிக் கொண்டிருந்தது.

எனக்குப் பூமியில் ஒரு பற்றுதலும் கிடையாது. குறைவும் இல்லை. ஆனால் வீணையை விட்டுப் பிரிய மனம் வரவில்லை என்று வீணையைக் கையில் எந்திய படியே சங்கீதத்தின் உயிர் நாடி 1938 அக்டோபர் 15 ஆம் தேதி ஒரு மணிக்கு நின்றுவிட்டது.

வீணை இருக்கிறது. அதன் மேல் நடனம் புரிந்த விரல்களைக் காணோம். வீணையின் நாதம் இருக்கிறது. ஞானம் எங்கே சகலகலா வல்லியான வாணியிடம் அடைக்கலமாகி விட்டது என்று தனம்மாளைச் சரஸ்வதியின் அவதாரமாகக் கண்டனர். தனம்மாள் மறைந்த அடுத்த மாதமே 3.11.1938 ஆம் நாளில் சென்னை சங்கீத வித்வத் சபை நினைவுக் கூட்டம் நடத்தி அவரின் இசைப் பணியைப் பாராட்டியது.

தனம்மாள் சீன மொழியில் பாடலைப் பாடினாலும் கேட்பவரின் மனதிற்குள் ஊடுருவிச் செல்லும் ஆற்றல் அவரின் இசைக்கு உண்டு என்று இரசிகமணி டி.கே.சி. அவர்கள் தனம்மாளின் இசைச் சிறப்பை வியந்து பாராட்டினார். இசை ஒரு பெரும் புதையலைப் போன்றது. அள்ள அள்ளக் குறையாதது. இவர் இசைக் கலைஞர்களின் இசைக் கலைஞர் என்றும், பொருளாதாரத்தில் நலிவுற்றிருந்தாலும் அவரின் இசை நலிவுறவில்லை. இசை இராஜாங்கத்தின் அரசியாகவே கோலோச்சினார். வீண்ணயரசி தனம்மாளின் உடல் இவ்வுலகை விட்டு மறைந்தாலும் அன்னாரின் இசை நம் காதுகளில் ரீங்காரமிட்டுக் கொண்டே என்றும் நம் மனதில் நீங்கா இடம் பெற்று வாழ்ந்து வருகிறது.

வீணை வித்தகர் எஸ்.பாலசந்தர் (1927 - 1990)



வாழ்க்கை வரலாறு எழுதுதல் மிகச் சிறந்த வரலாற்று ஆவணமாகும். சிலருடைய வாழ்க்கை வரலாற்று நூற்கள் வரலாற்று ஆவணங்களாக விளங்கு கின்றமையைப் பலரும் அறிவர். காந்தியடிகளின் சத்திய சோதனை, ஆனந்தரங்கம் பிள்ளையின் டைரி, கலைஞர் மு.கருணாநிதியின் நெஞ்சக்கு நீதி போன்ற வாழ்க்கை வரலாற்று நூற்கள் சிறந்த ஆவணங்களாகவும் வரலாற்றுக் களஞ்சியங்களாகவும் திகழ்கின்றன.

இசைக் கலைஞர்களின் வாழ்க்கை வரலாற்று நூற்கள் இசைக் கலையின் வரலாற்று ஆவணங்களாகத் திகழ்கின்றமையைக் காண்கிறோம். தஞ்சை பி.எம்.சுந்தரம் எழுதிய மங்கல இசை மன்னர்கள், மரபு வழிப்பரதப் பேராசான்கள், மரபு தந்த மாணிக்கங்கள், முனைவர் சண்முக செல்வகணபதி மற்றும் முனைவர் கற்பகம் அவர்களின் இசைத் தமிழ் அறிஞர் மு.ஆபிரகாம் பண்டிதர், பண்ணாராய்ச்சி வித்தகர், குடந்தை ப.சுந்தரேசனார், இசைத் தமிழ் அறிஞர்கள் தொகுதி-1 போன்ற நூற்கள் இசைக் கலை வளர்ச்சியை உரைக்கும் ஆவணங்களாகவும் திகழ்கின்றன.

"வீணையின் குரல்" என்ற பெயரில் "விக்ரம் சம்பத்" எழுதிய எஸ்.பாலசந்தரின் வாழ்க்கை வரலாற்று நூல் தமிழில் வீ.எய்.வி. தந்துள்ளார். காலச்சுவடு பதிப்பகம் 2012இல் வெளியிட்டுள்ளது. 431 பக்கங்களைக் கொண்ட இந்நூல் வீணை எஸ்.பாலசந்தர் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவதோடு

இருபதாம் நூற்றாண்டின் இசைக்கலை வளர்ச்சியையும், இசையின் நுட்பமிகு கருத்துக்களையும், வீணை தான் பாலசந்தர், பாலசந்தர் தான் வீணை என்கிற நிலையில் பல்வேறு நுட்பமான வரலாற்று ஆவணங் களையும் தந்துள்ளது.

பாலசந்தர் மனைவி திருமதி சாந்தா பாலசந்தர், இசை மேதைகள் டி.வி.கோபால கிருஷ்ணன், வேலூர் இராமபத்ரன், விதூஷி பத்மாவதி, அனந்த கோபாலன், பேராசிரியர் டி.ஆர்.சுப்பிரமணியம், சரோஜா ராமாமிர்தம், திருமதி காயத்ரி நாராயணன் போன்றோர் தந்த ஆவணங்கள் அடிப்படையிலும் பாலசந்தர் வைத்திருந்த ஆல்பம் அடிப்படையிலும் எழுதப்பட்டுள்ளது.

பாலசந்தர் வீணை வித்துவானாக மட்டும் வாழாமல், தபேலா இசைத்த இசைக் கலைஞராகவும், திரைப்படத் துறையில் கதை ஆசிரியர், நடிகர், இசை அமைப்பாளர், இயக்குநர் போன்ற பல்திறம் மிக்கவராகவும், வீணை இசைப்பதில் தனக்கென் ஒரு தனி பாணி கொண்டவராகவும் வாழ்ந்தார். தனது சொந்த வாழ்க்கையிலும், இசை வாழ்க்கையிலும் நடந்த சம்பவங்களைத் தகவல் தொகுப்பாக்கி (ஆல்பம்) வைத்திருந்தார். சுமார் ஆயிரம் பக்கங்களுக்குத் தனது வாழ்க்கைச் சம்பவங்களை ஆவணப்படுத்தி வைத்திருந்தார். நாளேடுகளில் வந்துள்ள செய்திகள், நிகழ்ச்சி அறிவிப்புகள், துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள், சுற்றுலாக் கையேடுகள், விருதுகள் பட்டியல், கௌரவங்கள் போன்றவற்றைத் தொகுத்து வைத்திருந்தார். இவை இவரின் இசை வாழ்க்கைப் பற்றிய தகவல் களஞ்சியமாக அமைந்துள்ளன. இவரைப் போல் தகவல் களஞ்சியத்தைப் பலர் தொகுத்து வைத்திருப்பது மிகவும் அரிதான செயலாகும்.

இந்நூலாசிரியர் விக்ரம் சம்பத் வாழ்க்கை வரலாற்று நூல் எழுதும் பொழுது ஏற்படும் பொதுவாக சிக்கல்களில் மாட்டிக் கொள்ளாமல் பாலசந்தர் வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளார். வாழ்க்கைக் கதையும் புகழ் புராணத்தையும் பிரித்து எடுத்துள்ளார். இசைத் துறையில் இவ்வகைச் சிக்கல் மிகவும் அதிகம். இவற்றில் சிக்காமல் உண்மைன்ய மட்டும் வெளிப்படுத்தியுள்ளார். பாலசந்தரின் இசைப் பயணத்தைத் தெளிவாக எடுத்துரைக்கும் நூலாக அமைந்துள்ளது.

பாலசந்தர் பிறப்பு:

சென்னை மாநகரின் மையப் பகுதியாக விளங்கும் மயிலாப்பூரில் கபாலீசுவரர் கோயிலுக்கு அருகில் நடுத்தெருவில் 10 ஆம் எண் வீட்டில் வீ.சுந்தரம் ஐயர் பி.ஏ.,பி.எல்., அவர்களின் மகனாக 1927 ஆம் வருடம். ஜனவரி மாதம் 18 ஆம் நாள் பாலசந்தர் பிறந்தார். தாயார் பெயர் பார்வதி என்கிற செல்லம்மாள். இவர்களின் நான்காவது குழந்தை பாலசந்தர். மூத்தவர் இராஜம். இரண்டு சகோதரிகள். ஜெயலட்சுமி (1920 ஜூலை 25), சரஸ்வதி (1922 ஆகஸ்டு 25). பாலசந்தர்க்குப் பிறகு இரட்டைக் குழந்தைகள் பிறந்தனர். கற்பகம், கோபாலசுவாமி.

தந்தையார் சுந்தரம் அவர்களின் மூதாதையர்கள் திருவாரூர் மாவட்டம் திருவாஞ்சியம் என்ற பெயருடைய திருமுறைத் தலத்தைச் சார்ந்தவர்கள். சுந்தரம் அவர்களின் தந்தை இராவ்சாகிப் வைத்தியநாத ஐயர். புகழ் பெற்ற கல்வியாளர். சென்னைக்குப் புலம் பெயர்ந்தனர். சுந்தரம் ஐயர் மிகச் சிறந்த இசைவாணர். பார்வதி அம்மாள் வயலின் இசைக்கும் கலையைக் கற்றவர். சுந்தரம் ஐயர் வீணை இசைப்பதிலும் தபேலா வாசிப்பதிலும் ஆர்வலர். 1924 ஆம் ஆண்டில் மயிலாப்பூர் நடுத்தெரு வீட்டைச் சுந்தரம் வாங்கிக் குடியேறினார். இவ்வீடு இவர்கள் காலத்தில் இசைக் கலைஞர்களைப் போற்றிய கலாச்சார மையமாகத் திகழ்ந்தது. இவ்வில்லத்தில் தானே பல கலைகளையும் பயின்ற மேதையாகப் பாலசந்தர் வளர்ந்தார்.

கஞ்சிராக் கலைஞர்:

தன் மகன் இராஜத்தை அரியக்குடி, மகாராஜபுரம் விசுவநாதய்யர், பாபநாசம் சிவன் போன்றோரிடம் இசை பயில சுந்தரம் ஏற்பாடு செய்திருந்தார். 11 வயது இராஜம் சென்னை மியூசிக் அகாடமி பாட்டுப் போட்டியில் தங்கப் பதக்கம் பெற்றார். சகோதரர் பாட்டுக் கற்றுக் கொள்ளும் பொழுது பாலசந்தர் கூர்ந்து கவனிப்பார். நான்கு வயது பாலசந்தரருக்கு ஒருவர் கஞ்சிராக் கருவி அளித்தார். கஞ்சிரா வாசிக்க ஆரம்பித்தார். இராஜம் பாட்டுக் கற்றுக் கொள்ளும் பொழுது சம்பந்தப்பட்ட கஞ்சிராக் கலைஞர்கள் இசைப்பதைக் கேட்டுப் பாலசந்தர் இசைக்கலாயினார்.

திரைப்பட இயக்குநர் வி.சாந்தாராம் கோலாலம்பூரில் சீதா கல்யாணம் திரைப்படம் எடுத்து வந்தார். இப்படத்தில் இராஜம் இராமராகவும், ஜெயலட்சுமிக்குச் சீதை வேடமும், ஜனகனாக சுந்தரம் ஐயரும். நடித்தனர். இப்படத்தில் சிறுவன் பாலசந்தர் கஞ்சிரா இசைத்தார். இச்சிறுவன் கஞ்சிரா வாசிப்பதைப் பலரும் இரசித்தனர். 1934 ஆம் ஆண்டில் Sound and Shadow இதழ் பாலசந்தரைப் பாராட்டி எழுதி இருந்தது. யாரிடமும் கஞ்சிராக் கலையைக் கல்லாமல் கற்ற பாலசந்தர் கலைஞர் ஆனார். இராஜமும் பாலசந்தரும் இணைந்து இசை நிகழ்ச்சிகள் நடத்தினர். 1937 ஜுன், ஜுலை இலங்கை சென்று நிகழ்ச்சிகள் நடத்தினர்.

செஸ் வீரன்:

பத்து வயதான பாலசந்தர் தன் வீட்டுத் திண்ணையில் செயல்பட்டு வந்த செஸ் விளையாட்டுக் குழுவில் விளையாடுவார். 1937 ஏப்ரல் 18 ஆம் நாள் இந்து நாளேட்டின் செஸ் புதிரை முதல் தடவையாக விடுவித்தார். இலங்கையில் இசை நிகழ்ச்சியிலும் செஸ் விளையாட்டிலும் பங்கு பெற்றார்.

சிதார் கலைஞர்:

வட இந்தியாவில் சகோதரர்கள் கச்சேரிகள் பல நடந்தன. 1938 ஜனவரி 16 ஆம் நாள் கராச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியின் பொழுது கிருஷ்ணனைப் பற்றிப் பாலசந்தர் பாடினார். இரசிகர்கள் கேட்டு மகிழ்ந்தனர். கராச்சி கட்டடக் கலை நிபுணரின் மனைவி கிருஷ்ணாபாய் பாலசந்தர் பாட்டில் மனம் உருகி ஒரு சிதார் கருவியைப் பாலசந்தர்க்குப் பரிசாக அளித்தார். சிதார் கருவி முகமதுஷா ரங்கிலா (1719 -1748) என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. இக்கருவியை 12 வயது சிறுவன் பாலசந்தர் சென்னையில் இசைத்தார். 1938 ஆகஸ்டு மாதம் 28 ஆம் நாள் மயிலாப்பூர் சபாவில் இசைத்தார். சிதார் கருவியில் கர்நாடக இசைப் பாடல்களை இசைத்தார். சிதாரையும் தானே கற்று இசைவாணர் ஆனார்.

திரைப்படத்துறை:

1940இல் கே.விசுவநாதன் தயாரித்த காமதேனு படத்தில் பாலசந்தரும் பேபி சரோஜாவும் நடித்தனர். 1941இல்

சௌந்தரராஜன் தயாரித்த 'ரிஷ்ய' சிங்க முனிவர் திரைப்படத்தில் 'என்னருமை மானே உன்னுட்ன் நானே விளையாடுவேன்' என்ற பாடலைப் பாடினார். 1942இல் வெளிவந்த "ஆராய்ச்சி மணி அல்லது மனுநீதி சோழன்" படத்தில் நடித்தார். பிறகு இசைத்துறையில் முழுக் கவனம் செலுத்த ஆரம்பித்தார். நடிகராகவும், இசை அமைப்பாளராகவும், திரைக்கதை வசனகர்த்தாவாகவும் இயக்குநராகவும் விளங்கினார். சுமார் 20 படங்களில் பங்கு பெற்றுள்ளார்.

வீணை பாலசந்தர்:

அகில இந்திய வானொலி நிலையத்தில் நிலைய வித்வானாகப் பணியாற்றினார். இந்தக் காலக்கட்டத்தில் வீணையில் இவருடைய கவனம் சென்றது. வீணையின் நாதத்தால் வசீகரிக்கப்பட்டார். இனி வீணை மட்டுமே தனது வாழ்வு என்ற முடிவிற்கு வந்தார். 15 வயது பாலசந்தர்க்கு இப்படி ஒரு கொள்கை ஆழமாகப் பதிந்தது. யாரிடமும் பயிற்சி பெறாமல் தானே கற்கத் தொடங்கினார். "வீணையின் என் தலையெழுத்தை நானே தீர்மானிக்கிறேன்" என்ற முடிவிற்கு வந்தார். அசுர சாதகம் செய்தார். தந்தை சுந்தரம் ஐயரோ காரைக்குடி சாம்பசிவ ஐயர், வீணை தனம்மாள் வாசிப்பது போல் தன் மகன் கற்க வேண்டும் என்று விரும்பினார். இவ்விருவர் வாசிக்கும் இராகங்களை உன்னிப்பாகக் கவனித்துப் பயிற்சி செய்தார். ஆனால் தனக்கென ஒரு பாணி அமைய வேண்டுமென்று விரும்பினார். டைகர் வரதாச்சாரியார் (1876-1951) மகாராஜபுரம் விஸ்வநாதய்யர் (1896-1970), திருவாவடுதுறை டி.என்.இராஜரத்தினம் பிள்ளை (1898-1956) ஆகியோரின் இசை நுட்பங்களையும் அறிந்தார். இம்மூவர் பாலசந்தரின் இசையிலும் வாழ்க்கை முறையிலும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தினார்கள். அரியக்குடி இராமானுஜ ஐயங்கார் (1890-1967) கர்நாடக இசையை மேடையில் பாடும் அரிய வடிவமைப்பைத் தந்தவராவார். முசிறி சுப்பிரமணிய ஐயர் (1899-1975) நிரவல் பாடுவதில் வல்லவர். செம்பை வைத்தியநாத பாகவதர் (1896-1974) பாடும் பொழுது சிம்மம் கர்ஜிப்பது போல இருக்கும். இவர்கள் எல்லாம் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் காலத்தில் 17 வயது பாலசந்தர் (1944) இசை உலகில் வலம் வந்தார்.

சங்கீத மெட்ராஜ்:

1961இல் பாலசந்தர் "சங்கீத மெட்ராஜ்" என்ற பெயரில் தென்னிந்திய கிளாசிகல் இசைக் குழுவைத் தொடங்கினார். கர்நாடக இசையின் அழகையும் சிறப்பையும் உலகறியச் செய்திட இக்குழுவை ஆரம்பித்தார். உமையாள்புரம் சிவராமன், புல்லாங்குழல் இரமணியுடன் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டார். Asia Society of Newyork நகரில் நிகழ்ச்சி நடந்தது. தென்னிந்தியாவிலும் இதனைப் பலரும் வரவேற்றனர். நூலாசிரியர் கூறுவது போல் 'இந்தியனுக்கு இந்தியாவில் பாராட்டுக் கிடைக்க வேண்டும் என்றால் முதலில் ஏற்றுமதி செய்யப்பட்டு மறுபடியும் இறக்குமதி செய்ய வேண்டும்' (ப.116). இவ்வகையில் வெளிநாட்டுப் பயணத்திற்குப் பின் இந்தியா எங்கும் இவ்விசைக் குழு பயணித்தது.

கச்சேரிகளில் விளக்கமுறை நிகழ்வையும் அமைத்துத் தந்தார். இது பலரைக் கவர்ந்தது. சங்கீத மெட்ராஸின் நிகழ்ச்சிகள் இரமணியின் புல்லாங்குழலுடன் தொடங்கும். பாலசந்தர் வீணை தொடரும். மிகச் சிறப்பான இவ்விசைக் குழு அமெரிக்காவைக் கலக்கியது. நாளேடுகள், இதழ்கள் சிறப்பான விமர்சனங்களைத் தந்தன. Syracnse, University Regent Theatreஇல் 1962 அக்டோபர் 15 ஆம் நாள் நடந்த நிகழ்ச்சி பற்றி ஹெரால்ட் ஜர்னல் "வயலினுக்கு Heibetz எப்படியோ அப்படி வீணைக்குப் பாலசந்தர்... இப்படியொரு அருமையான நிகழ்ச்சியைப் பார்த்தும் கேட்டும் நீண்ட நாட்களாகிவிட்டன. மெருகூட்டப்பட்ட இசை அது. கற்றுக் கொள்ள முடிந்ததா? கண்டிப்பாக! இந்தியர்கள், தங்கள் கர்மத்துடன் தர்மத்தைக் கலக்கும் வழி தெரிந்தவர்கள். அதாவது சந்தோஷம் முக்கியம். நேற்று இரவு நிச்சயம் அது கிடைத்தது" (பக்.127-28) என்று எழுதி பாராட்டி இருந்தது.

அமெரிக்கப் பயணத்தை அடுத்து 1965இல் சோவியத் யூனியன், ஹங்கேரி, போலந்து போன்ற நாடுகளுக்கு இசைத் தூதராகச் சென்றார். கச்சேரிக் கூடங்கள் மட்டுமின்றி அங்கு கூடியிருந்தவர்களின் இதயங்களை வீணையின் நாதம் நிரம்பியது. கேட்பவர்களில் பலர் வீணையின் நாதத்தை முதன் முதலில் கேட்டவர்கள் ஆவர். இந்திய அரசின் பிரதிநிதியாக இவ்வாத்தியக் கலைஞர் சென்றனர். இவரே இந்திய அரசின் பிரதிநிதியாகச் சென்ற முதல் வாத்தியக் கலைஞர் ஆவார் (ப.128)

அமெரிக்காவைப் போல கிழக்கு ஐரோப்பிய ஊடகங்களிலும் வீணையின் இசையால் வசீகரிக்கப்பட்டன. News from Hungar என்ற நாளேடு 'இந்தியாவிலிருந்து மூன்று மந்திரவாதிகள்' என்ற தலைப்பிட்டு எழுதியது (1965 ஜூன் 22).

இசைக் கச்சேரியில் புதுமை:

பல அரங்குகள் வாயப்பாட்டிற்கே முக்கியத்துவம் அளித்து வந்தன. கருவி இசைவாணர்களுக்கு முக்கியத்துவம் தருவதில்லை. இதனால் மனிதக் குரலுக்கு இணையாகக் கருவி இசையைக் கையாளும் காயகி முறையைக் கையாள முனைந்தார்கள். இந்நெருக்கடியைத் தகர்க்க புரட்சிகரமான முறை ஒன்றைப் பாலசந்தர் கையாள முனைந்தார். தன்னுடைய கச்சேரிகளில் கலப்படமற்ற இராகத்தை மட்டும் வாசிக்க முடிவெடுத்தார். கீர்த்தனைகளையும் பாடல்களையும் தவிர்த்தார். பக்கவாத்தியங்களின் குழப்பத்தால் வீணையின் முதன்மை இடத்தை நிலை நிறுத்த இம்முடிவை மேற்கொண்டார். தம்புரா தவிர வேறு வாத்தியங்கள் இடம்பெறாத சூழலை உருவாக்கினார். அமளி துமளி இல்லை. பரபரப்பு கிடையாது. இடைவேளை இல்லை. பாலசந்தர் மட்டும் முழுக்கச்சேரி செய்தார். இந்நிலையில் 45 இராகத் தொடர் கச்சேரி தோன்றியது. இதில் இராகமாலிகைகளையும், தாளங்களையும் அழகுடன் தொடுத்தார். 45 இராகங்கள் இடம் பெற்றன. இராகப் பட்டியல்கள் தரப்பட்டன.

இதன் முதல் கச்சேரி சென்னை தி.நகர் கிருஷ்ண கான சபாவில் 1967 ஜூலை 9 ஆம் நாள் நடந்தது. பேராசிரியர் சாம்பமூர்த்தி இந்நிகழ்வு குறித்துத் தனது கருத்தை வெளிப்படுத்தினார்.

"இராகங்களை மட்டும் விடாமல் சுமார் 4 மணி நேரத்திற்கு வாசிப்பது சாத்தியமில்லாத ஒன்று. வேறு எந்த இசைக் கலைஞரும் இதை சாதிக்கவில்லை. என் வாழ்நாள் முழுவதிலும் இதுபோல் இதற்கு முன் கேட்டதில்லை... இந்தக் கச்சேரி சரித்திரம் படைத்துவிட்டது. ஒரு இராகத்திலிருந்து இன்னொரு இராகத்திற்கு மாறுவது புத்திசாலித் தனத்துடன் கையாளப்பட்டது. இராகத்தின் இதயத்திற்குள் புகுந்து அதன் தனித்துவத்தை வெளிப்படுத்தினார் பாலசந்தர்" (ப.152) என்று கூறினார். பாடல் இல்லாமல், சொற்றொடர்கள் இல்லாமல்

தாளம் இல்லாமல் தன்னுடைய முழுப் பங்களிப்பையும் தந்துள்ளார். இராகமாலிகையாக இசைப்பதற்கு இராகங்களைக் கவனமுடன் கையாண்டார். "தன்னுடைய 24 வருட வாசிப்பில் இப்படி ஒரு பரிபூரண திருப்தியைத் தான் அடைந்ததில்லை" என்ற பாலசந்தரே குறிப்பிடுகிறார் (ப.153).

1958இல் 45 இராகங்கள் தொடரின் 25வது கச்சேரியையும் தனது இசை வாழ்க்கையில் 25 வருட நிறைவையும் நண்பர்கள் கொண்டாடினர். இவ்விழாவில் 703 இசைக் கலைஞர்கள் பங்கு கொண்டனர். இவர்களில் வாய்ப்பாட்டுக் கலைஞர்கள் 243 பேர். ஹரிகதைக் கலைஞர்கள் 15, வீணை வித்தகர்கள் 94, சித்திர வீணைக் கலைஞர்கள் 5, வயலின் கலைஞர்கள் 102, குழல் கலைஞர்கள் 24. நாகசுர மேதைகள் 34 பேர், மிருதங்க வித்வான்கள் 100, தவில் மேதைகள் 19 பேர் போன்றோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர் (ப.156).

1968 டிசம்பர் 29 அன்று நடந்த விழாவில் தமிழ்நாடு முதலமைச்சர் சி.என்.அண்ணாதுரை கலந்து கொண்டார். நீதியரசர் பி.வி.ராஜமன்னர் விழாத் தலைமை ஏற்றார். பாலசந்தருக்கு "வீணா வரப்பிரசாதி" என்ற விருது வழங்கப் பெற்றது. இதனைத் தொடர்ந்து பலர் விருது அளித்தனர். பாரிசில் Franco Indian நிறுவனம் "நாதஸ்வானுபவ யோகி" என்ற விருதை அளித்தது. இதுபோல் ஐம்பதிற்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றார். சுயமாகக் கற்ற இந்த மேதை தனக்கும் தன்னுடைய வீணைக்கும் பெரிய மரியாதையைத் தேடிக் கொடுத்துள்ளார்.

தனி பாணி:

வீணை பாணிகளுள் பாலசந்தர் பாணி என்பதும் ஒன்றே. இது தனிப்பாணியாக அமைந்துள்ளது. 1982 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் மெட்ராஜ் இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொசைட்டியின் 50வது இசை விழாவில் தலைமை உரை நிகழ்த்தினார். தன்னுடைய உழைப்பையும் உயர்வையும் உரையில் வெளியிட்டார். இவ்வுரையில்

> "வீணையில் எனக்கென்று ஒரு தனி பாணி உருவாக்க விதிக்கப்பட்டிருக்கிறேன் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். அது மற்றவர்களுடையது போல இருக்காது என்பதும் எனக்கும் தெரியும்.

> இது நிறைவேற நாளாகும் என்பதையும் நான் அறிவேன். அவனையோ அவளையோ பின் தொடர்ந்து செல்ல நான் விரும்பவில்லை. அந்த பாணிகளில் ஏதோ ஒரு குறை இருப்பது மாதிரி எனக்குத் தோன்றியது"

என்று கூறி தனது அசுர சாதகப் பயிற்சி மூலம் வெற்றி பெற்றார். வீணையின் வலிமைமிக்க ஆண்மையும் நளினமிக்க பெண்மையும் பொதிந்துள்ளதனை உணர்ந்தார். வெளிப் படுத்தினார். நாகசுரத்தில் அமையும் தடங்கலற்ற நீண்ட ஆலாபனை முறைகள் உள்ளன. இதனைத் தனது கடின உழைப்பின் மூலம் வீணையில் அமைத்துக் காட்டினார். இராகங்கள் சுரங்கள் அல்லது கமகங்கள் மூலம் அழகுபடுத்தி இசைத்தார். காலப் பிரமாணத்தை வெகு அழகாக அமைப்பார். தாளத்தந்தியை அறிதாகவே பயன்படுத்தினார். 1950களில் முதன்முதலில் வீணையில் கான்டாக்ட்மைக்கு பொருத்திக் கொண்டு இசைத்தார். வீணையில் பயன்படுத்தப் பெறும் மெட்டுக்களிலும் மாற்றம் செய்தார். ரெக்கு, பக்காரெக்கு, மேரு, மெட்டு ஆகியவை பித்தளையில் அமைந்திருக்கும். இவற்றிற்கு எவர்சில்வரைப் பயன்படுத்தினார். வழக்கமான மரப்பாலங்களுக்குப் பதிலாக acrylic மானோ பிளாக் பாலங்களைப் பயன்படுத்தினார். இவை இது பாலசந்தர் வீணை என்று அடையாளப்படுத்தின.

வீணையில் சொரக்காய் பகுதி உள்ளது. வீணையைத் தொடையில் அமர்த்திக் கொண்டு இசைக்க இது பயன்படும். இதனை அதே வடிவில் மரத்தில் மாற்றிக் கொண்டார். 1970இல் அலுமினியத்தில் மாற்றி அமைத்தார். இவ்வாறு வீணைக் கருவியைப் புதுமைப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் இசைக்கும் பொழுது இரண்டு புதுமைகளையும் மேற் கொண்டார். ஒன்று ஒரு சுரஸ்தானத்தில் சுருதியில் ஒரு ஸ்தாயில் அதிகமான சுர அலகுகளை வாசிப்பது. வெவ்வேறு சுருதியில் அநாயாசமாக சுர அலகுகளை வாசிப்பது. இவ்வரிய சாதனைகளை மேற்கொண்டார். புல்லாங்குழல், நாகசுரம், வயலின், கோட்டுவாத்தியம் கருவிகள் வாய்ப்பாட்டுப் பாணியை வெளிப்படுத்துகின்றன. இவை போல் வீணையில் வாய்ப்பாட்டு பாணியைப் பாட வைக்கவும், நாதமும் கம்பீரமும் விரிவுபடுத்தவும் உழைத்தார். பாலசந்தரின் இப்புதிய முறை

வாசிப்புப் பலரையும் கவர்ந்தது. வீணையில் பாலசந்தர் பாணி உருவானது.

பாலசந்தரின் மாணவர்கள்:

பாலசந்தர் இசை நிகழ்வுகள், திரைப்பட பணிகளில் வெகுவாக ஈடுபட்டு வந்தார். மாணவர்கள் பலருக்குக் கற்பிக்கும் வாய்ப்புக் குறைவு. இருப்பினும் ஒருசில மாணவர்களை மிக நேர்த்தியுடன் உருவாக்கியுள்ளார். இம்மாணவர் குழுவில் முதலில் நுழைந்தவர் காயத்ரி நாராயணன் ஆவார். இவரிடம் தனது 9வது வயதில் 8.10.1969 அன்று மாணவியாகச் சேர்ந்தார். இந்நாள் குறித்துக் காயத்ரி குறிப்பிடுகையில் "ஒரு மனுஷியாகவும் கலைஞராகவும் நான் மறுபிறவி எடுத்த நாள் இது" (ப.199) என்கிறார். செம்பை வைத்தியநாத பாகவதர் வழியாகப் பாலசந்தரிடம் மாணவியானார். சரளி வரிசைகளை வழக்கமாகக் கற்பிக்கும் மாயாமாளவ கௌளையுடன் சங்கராபரணம், கீரவாணி, கல்யாணி, கரகரப்பிரியா, பந்துவராளி, சண்முகப்பிரியா, அரிகாம்போதி, சுபபந்துவராளி என்கிற ஒன்பது இராகங்களில் கற்பித்தார். ஏழு வருடத் தீவிரப் பயிற்சிக்குப் பின் 16வது வயதில் (1976) குருவாயூரில் தஞ்சாவூர் உபேந்திரன் குருவாயூர் துரை மிருதங்கத்துடன் அரங்கேற்றம் பெற்றார். பல இடங்களில் குருவுடன் வாசித்துள்ளார்.

எஸ்.வேணிமாதவன் மற்றொரு மாணவர் ஆவார். எழிலரசி (கலைஞர் மு.கருணாநிதியின் பேத்தி) சந்திரிகா, ஜெயந்தி மகேஷ் மற்றும் சிவசக்தி ஆகியோர் பலசந்தரிடம் பயின்றவர்கள் ஆவர். காரைக்குடி சகோதரர்களில் மூத்தவரின் பேரன் சந்தானம் இரண்டு வருட காலம் (1975 வரை) மாணவராகப் பயிற்சி பெற்றார். சந்தானம் அமெரிக்கா வெஸ்லீயன் பல்கலைக் கழகத்தில் 1985இல் முனைவர் பட்டம் பெற்றவர். இலால்குடி குடும்பத்தைச் சார்ந்த முன்னணி வீணை விற்பன்னர் பத்மாவதி அனந்தகோபால் பாலசந்தரைத் தன் மானசீகக் குருவாக ஏற்றவர்கள். சில சந்தர்ப்பங்களில் பாலசந்தருடன் சேர்ந்து வாசித்துள்ளார். பாலசந்தரிடம் நேரடியாக வீணை கற்றுக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றவர் ஜெயந்தி ஆவார். இவர்கள் போல் பாலசந்தர் ஒலிப்பதிவுகள், கச்சேரிகள் மூலம் கற்ற மாணவர்கள் பலராவர்.

இசை நெறிக்காவலர்:

கர்நாடக இசையில் இசைப் பாடல்கள் பெரிதும் முக்கியத்துவம் பெறும். பாடல்களைப் பிழையில்லாமல் பொருள் உணர்வோடு சுவை ததும்ப இராகதாள அமைதியுடன் பாடப்பெறும். ஆன்மீகப் பயணத்தில் இசையின் மூலம் இறை நெறிக்கு ஆற்றுப்படுத்தும் பாடல்களை இசைவாணர்கள் படைத்தனர். வழிபடு தளத்திலிருந்து கச்சேரி மேடைக்கு இசை சென்றது. ஆதரவாளர்களின் பாராட்டுதல் அடிப்படையில் இசை பயணித்தது. இசைக் கலைஞர்கள் அரண்மனையிலிருந்து வெளியேறி ஜனரஞ்சன கச்சேரி செய்ய ஆரம்பித்தனர். 1930 வாக்கில் சங்கீத மும்மூர்திகளின் பாடல்கள் மேடையை அலங்கரித்தன. இந்நிலையில் இசை நெறியின் காவலராகப் பாலசந்தர் விளங்கினார்.

சாஸ்திரிய சங்கீதம் என்பது இறைவன் வழங்கிய கலையாகும். இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் தனது வாழ்வை நடத்தினார். கலையை மலிவு விலையில் விற்று விடாமல் பாதுகாக்க வேண்டும் என்றார். நாம் இசைப்பதைக் கடவுள் எப்பொழுதும் கேட்டுக் கொண்டிருக்கிறார் என்று உணர வேண்டும் என்றார். தன்னுடைய ஆன்மாவையும் உணர்வுகளையும் இசைக் கலைஞன் உயர்த்திக் கொள்வது போல் சுவைஞர்களின் ஆன்மாவையும் உணர்வுகளையும் உயர்த்தக் கடமைப் பட்டுள்ளான் என்றார். இசையின் உயிர்ப்பு, நெளிவு சுளிவுகள், நுட்பங்கள், சுவைகள் போன்றவற்றை ஒருவன் உணர்ந்து கொண்டால் தன்னை உணர்ந்து கொள்வான். தன்னை உணர்ந்து கொண்டால் ஆன்மீகப் பயணத்தில் பயணிக்கத் தொடங்கிவிடுவான். அந்தக் கலையில் ஒருவன் வெற்றி பெற்றால் ஆன்மாவைக் கண்டறியும் பயணத்தை நிறைவு செய்துள்ளான் என்பது அர்த்தமாகும் என்று இசைக்கும் இறைக்கும் ஆன்மாவிற்கும் உள்ள உறவைப் பாலசந்தர் உணர்ந்தார். பலரையும் உணர வைத்தார்.

இராகத்தின் புனிதத்தில் பாலசந்தருக்கு இருந்த உறுதி, வெறும் தொழிலாக மட்டுமல்லாமல் ஆன்ம விடுதலைக்குரிய வழியாகவும் விளங்கியது. மியூசிக் அகாடமியின் 45வது இசை விழாவில் விவாதி மேளகர்த்தா இராகங்கள் அபஸ்வரங்களால் தொடுக்கப்பட்ட மாலை என்றனர். அவற்றைப் பாடுவது சங்கீதத்திற்கு எதிரானது என்று செம்மங்குடியார் கூறினார். 72 மேளகர்த்தா இராகங்களில் 32 மட்டுமே பழக்கத்தில் உள்ளவை.

மற்றவை பெயரளவில் மட்டுமே. இக்கருத்தை மதுரை பொன்னுசாமி பிள்ளை தனது பூர்வீக சங்கீத உண்மை என்ற நூலில் குறிப்பிட்டிருந்தார். 72 மேளகர்த்தா இராகங்களை அமைத்தவர் வேங்கடமகியாவார். விவாதி இராகம் பற்றிய கருத்துக்களைப் எம்.பாலமுரளி கிருஷ்ணா மறுத்தார். தன் பங்கிற்குப் பாலசந்தர் 1971-76க்கும் இடைப்பட்டக் காலத்தில் 'மார்வலெஸ் மேளகர்த்தா மெலடிஸ்' என்ற தலைப்பில் 12 ரெக்கார்டுகளை வெளியிட்டார். 72 இராகங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள நுட்பங்களை வெளியிட்டார்.

பாலசந்தர் தன் வீட்டில் வெள்ளிக்கிழமை நேரங்களில் பலருக்கு மேளகர்த்தா இராகம் பற்றிய பயிற்சி அளித்தார். குடவோலை முறை மூலம் துண்டுச் சீட்டில் இராகங்களை எழுதி எடுக்க வைத்து அதனைக் கற்பிப்பார். 72 மேளகர்த்தா இராகங்கள் அடங்கிய 12 பதிவுகளை வெளியிட்டார். உலகம் முழுவதும் கேட்டுணரும் நிலையில் வெளியிடப்பட்டன.

இசை உலகிற்குப் பெருமை சேர்க்கும் பல நிகழ்ச்சிகள் பாலசந்தர் வாழ்வில் நடைபெற்றன. சாஸ்திரிய இசைபால் பாலசந்தருக்கு உள்ள பேரார்வம் அதில் பின்பற்றிய அதிகபட்ச நேர்மை மிகவும் சிறப்பானவை. 1978 ஆம் வருடம் திருவையாறு தியாகராஜர் ஆராதனையில் வாத்திய விருந்தில் ஈ.மணிசங்கர சாஸ்திரி இசை நிகழ்வைப் பாலசந்தர் ஏற்கவில்லை. மகானின் இறந்த நாளில் அஞ்சலி செலுத்தும் ஆராதனை விழாவில் இது மாதிரி வாத்தியக் கருவிகளுடன் இசை நிகழ்ச்சி நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துத் தனது அறங்காவலர் பதவியை இராஜினாமா செய்தார்.

1978 ஆண் ஆண்டு மத்திய அரசு திரைப்படத் தணிக்கைக் குழு உறுப்பினராக இவரை அமர்த்தியது. தமிழ் சினிமாவிற்காக அமைக்கப் பெற்ற தணிக்கைக்குழு உறுப்பினர்கள் பன்னிருவருள் இவரும் ஒருவர். 1980 ஆம் ஆண்டில் சிறந்த ஆண் பாடகர் விருது சங்கராபரணம் தெலுங்கு படத்தில் பாடிய எஸ்.பி.பாலசுப்பிரமணியத்திற்கு வழங்க இருந்த பொழுது தனது எதிர்ப்பைத் தெரிவித்தார். அவருடைய பாடல்கள் சாஸ்திரிய இசைக்கு ஏற்புடையதல்ல என்றார்.

1970க்கும் 1980க்கும் இடையில் இசை மேதைகள் பலர் காலமாகிவிட்டனர். அப்பொழுது சாஸ்திரிய சங்கீதம் மறைந்துவிடும் என்று பலர் எழுதினர். பாலசந்தர்

கலைஞர்களைவிட கலை பெரியது. அதனால் அப்படி எதுவும் நடந்துவிடாது என்றார் (ப.254). இந்தியாவில் சாஸ்திரிய இசைக் கலைஞர்கள் தங்களுக்கு உரியதைப் பெறுவதில்லை என்பதை வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் கூறிவந்தார். மரபு வழிப்பட்ட இசைக் கலையையும் கலைஞர்களையும் வாழ்நாள் முழுதும் போற்றி வந்தார்.

விருதுகள்:

விருதுகளும் கௌரவங்களும் அவருக்கு வந்து கொண்டிருந்தன. 1978 மார்ச்சு 26 அன்று மத்திய அரசின் சங்கீத நாடக அகாடமி விருது அளிக்கப்பட்டது. 1960இல் மே மாதம் அமெரிக்கா சென்றிருந்த பொழுது அமெரிக்கப் பிரஜையாகக் கௌரவிக்கப் பெற்றார். 1980 ஜுன் 28 நியூயார்க்கில் "சங்கீத சக்கரவர்த்தி" என்ற விருது அளிக்கப் பெற்றது. இங்கிலாண்டில் 1980 வீணா வித்யா சாகரம் என்ற விருது அளிக்கப் பெற்றது. இந்தியாவில் பத்ம விருதுகளுக்குப் பரிந்துரைக்கப்பட்ட பொழுது பத்மபூஷண் விருது தவிர எதுவும் பெறுவதில்லை என்றிருந்தார். 1982 குடியரசு தினத்தன்று பத்மபூஷண் விருது அளிக்கப் பெற்றது. மேற்குவங்காள உன்னாயன் சம்சத் நிறுவனம் "வீணை இசையின் தந்தை" என்ற விருது அளித்தது. இவை போல் ஏராளமான விருதுகள் இவருக்கு அளிக்கப் பெற்றன.

தஞ்சை சிவானந்தம், கே.பி.கிருஷ்ணமூர்த்தி இருவரும் 1982 செப்டம்பர் 23 ஆம் நாள் குமுதம் இதழுக்கு அளித்த பேட்டியில் 'சுவாதித்திருநாள் இயற்றியதாகக் கூறப்படும் பாடல்கள் எல்லாம் மகாராஜா இயற்றியது அல்ல. அவை எல்லாம் என்னுடைய மூதாதையர் வடிவேலு இயற்றியவை' (ப.296) என்ற செய்தியை வெளியிட்டனர். சிவானந்தம் விரிவான பேட்டியும் அளித்திருந்தார். இக்கருத்தை அவிநயப் பேரரசி பாலசரஸ்வதியும் ஏற்றுக்கொண்டார் (ப.297). வடிவேலுவின் பாடல்கள் எப்படியெல்லாம் மாற்றம் அடைந்தன என்பதனையும் சிவானந்தம் குறிப்பிட்டிருந்தர். பாலசந்தர் சிவானந்தம் கூறுவது போல் எல்லாப் பாடல்களும் வடிவேலு எழுதியவை என்பதனை ஒப்புக் கொள்ளாமல் அதிகபட்சம் மகாராஜா மினி பாடலாசிரியராக இருந்திருக்கலாம் என்றார் (ப.301). இதனால் இப்பிரச்சனையில் முழுமையாகப் பாலசந்தர் ஈடுபட்டார் (ப.310, 311).

சென்னை வழக்குரைஞர் விஜயராகவன் மூலம் நீதிமன்றம் சென்றார். சுவாதித்திருநாள் விஷயம் காரணமாகத் தமது நெருங்கிய நண்பர்கள் பலரைப் பாலசந்தர் இழந்தார். 1990 ஆம் ஆண்டு ஹைதராபாத், போபால், பிலாய் நகரங்களில் கச்சேரிக்காகப் பயணித்தார். அதைத் தொடர்ந்து பாரதீய வித்ய பவனிலிருந்து இலண்டன் பயணிக்க இருந்தார். ஏப்ரல் 14 புத்தாண்டு அன்று திரும்பிவிடுவதாகக் கூறிவிட்டு ஏப்ரல் 9 விடியற்காலை ஹைத்ராபாத் சென்றார். பின்பு பிலாய் செல்ல இரயில் ஏறினார். பிலாயில் சித்ரா கலைஞர் பண்டிட் பிமலேந்து முகர்ஜி வீட்டில் தங்கி இருந்தார். ஏப்ரல் 13 மாலையில் இரவு 11 மணிக்குப் பாலசந்தர் குடும்பத்திற்கு (சென்னைக்கு) தொடர்புகொண்டு அவசரமாக மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்வதாகத் தெரியப்படுத்தினர். மாரடைப்புக் காரணமாக மறைந்தார்.

ஏப்ரல் 15, 1990 அகில இந்திய வானொலி நிலையம் அஞ்சலி நிகழ்ச்சியை ஒலிபரப்பியது. வீணையுடன் அடையாளப்படுத்தப்பட்டார். "வீணை பாலசந்தர்" என்று அழைக்கப்பட்டார். தனது கொள்கைகளில் உறுதியாக நின்றார். இதனால் பலரின் எதிர்ப்புகளுக்கு ஆளானார். அப்பாவிற்குத் தப்பாமல் பிறந்த மகன், மனைவி சாந்தா அம்மா, தன் அப்பாவுக்குக் கடிதம் எழுதிய சம்பவம் குறித்து மகன் எழுதிய கவிதையின் தமிழாக்கம் இது.

"அம்மா இன்னமும் புதரிலும் மரத்திலும் துழாவிக் கொண்டிருக்கும் நான் தயங்கிய படியே ஆரம்பித்தேன் ஆனந்த பைரவியை, உங்கள் சங்கீத சம்மேளன ஒலிபரப்பு டேப் என்னிடம் உண்டு. அதைக் கேட்டு மகிழ்ந்தேன். பின்பற்ற முயற்சித்தேன். வசீகரிக்கும் ஸ்டைல் உங்களுடையது. காப்பி அடிக்க கஷ்டமானது. பமுதல் ரீ வரை தந்திகளை இழுக்க முடிந்த போது பரவசமானேன். ப-ரி-க-ரி-ச-வும் பலமுறை முயற்சி செய்தேன். சிறப்பாக வரும்போது இந்தச் சங்கதியால் எனக்குப் பெருமை" (ப.379–80).

பிறவி மேதையாக, யாரிடமும் கல்லாமல் தானே கற்ற ஒருவராக இளமையிலிருந்து உழைத்து உழைத்து வளர்ந்த பாலசந்தர் இந்திய இசை உலகில் ஒரு புனிதமான இடத்தைப் பெற்றவராக விளங்குகிறார். வீணையில் சிறப்பிடத்தைப் பெற்று விளங்குகிறார்.

திருவாரூர் கொண்டி மகளிர்



"தண்ட வாளியைத் தக்கன்றன் வேள்வியைச்
செண்ட தாடிய தேவர கண்டனைக்
கண்டு கண்டிவள் காதலித் தன்பதாய்க்
கொண்டி யாயின வாறென்றன் கோதையே" (5:7:7)

"என்றன் கோதையாகிய இவள் ஒறுப்பிற்குரிய தண்டத்தைக் கையாள்பவனும், தக்கன் செய்த வேள்வியைச் செண்டுஏ ந்தி ஆடுதல் போல் எளிதாக அட்ட தேவர்கள் முதல்வனும் ஆகிய ஆரூர் வீதி விடங்கற் பெருமானைப் பன்முறை கண்டு கண்டு அவனைக் காதலித்து அன்பு வடிவாய் நம் வயப்பட்டுக் கொண்டி ஆயினவாறு என்னே!" என்று செவிலி தன்மகள் வீதி விடங்கர்ப் பெருமானுக்கே பிச்சி ஆயினமையை இப்பாடல் வழி கூறுகிறாள். திருநாவுக்கரசர் பாடிய திருக்குறுந்தொகையில் செவிலிக் கூற்றாக இப்பாடல் அமைந்துள்ளது. அகநெறி தழுவிய பக்திப் பாவாகும். இப்பாடலில் கொண்டி என்ற சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. காதலால் கொள்ளப்பட்டவள் கொண்டி. அவனது உள்ளத்தை இறுகப் பற்றிக் கொண்டவள். முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள். மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள். பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள். பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள். தன்னை மறந்தாள். தன் நாமம் கெட்டாள். தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே" என்றே ஆரூர்ப் பெருமானைக் காதலித்துப் பிச்சியானவள் பற்றித் திருநாவுக்கரசர் பெருமான் திருத்தாண்டகத்தில் குறிப்பிட்டு உள்ளார்.

திரு ஆரூர்:

சோழநாட்டுக் காவிரி தென்கரைத் திருமுறைகளுள் மூன்று திருவாரூர்த் தலங்களாகும். திருவாரூர், திருவாரூர் அறநெறி, திருவாரூர் பரவையுண்மண்டளி. பிறக்க முக்தி அருளும் தலம். பஞ்ச பூதத்தலங்களுள் மண்தலம். எல்லாச் சிவாலயங்களின் சாந்தித்தியம் சாயரட்சை எனப்படும் திருவந்திக் காப்பு நேரத்தில் இத்தலத்தில் தேவேந்திரன் வந்து பூசிப்பதாகக் கருதப்படுகிறது. சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாடி அருளிய தலம். கமலை என்னும் பராசக்தி தவம் செய்யும் தலம். முசுகுந்த சோழனும், மனுநீதிச் சோழனும் ஆட்சி செய்த தலம். சப்த விடங்கர் தலங்களுள் முதன்மைத் தலம். இறைவர் தியாகராஜராக ஆட்சி செய்யும் தலம். அஜபா நடனம் நடந்தருளும் தலம். 364 திருவிளையாடல்களை இறைவன் இயற்றிய தலம். பதினாறு வகையான அங்கப் பொருள்களைக் கொண்டுள்ள தலம்.

தண்டியடிகள், கழற்சிங்கர், செருத்துணையார், விறன் மிண்டர், நமிநந்தியடிகள், சுந்தரர் முதலிய நாயன்மார்களின் திருத்தொண்டுகள் பெற்ற தலம். சுந்தரரின் தாயார் இசைஞானியார் அவதரித்த தலம். திருமூலட்டானம் என்றும், பூங்கோயில் என்றும் அழைக்கப் பெறும் இத்தலம் தில்லைக் கோயிலுக்கும் மூத்த கோயிலாகும்.

'திருவினாள் சேர்வதற்கு முன்னோ பின்னோ
திருவாரூர் கோயிலாகக் கொண்ட நாளே' – அப்பர்

வன்மீகநாதபுரம், தேவாசிரியபுரம், மூலாதாரபுரம், கமலாலாயபுரம், முசுகுந்தபுரம் என்கிற பெயர்கள் இத்தலத்திற்குரியன.

இறைவன் பெயர் :
வன்மீக நாதர், புற்றிடங்க கொண்டார்

இறைவி பெயர் :
கமலாம்பிகை, அல்லியங்கோதை

தலமரம் : பாதிரி

தீர்த்தம் :

கமலாலயம் (64 கட்டளைகளை உடையது. ஐந்து வேலி பரப்பினது)

மூவர் பாடல் பெற்றுள்ளது :

பூங்கோயிலில் 34 பதிங்கள் உள்ளன, ஏனையவையும் சேர்த்துப் பதிகங்கள் 37.

கோயில் ஐந்து வேலி, குளம் ஐந்து வேலி, ஓடை ஐந்து வேலி, மாற்றுறைத்த விநாயகர் குளக்கரையில் உள்ளார்.

நாற்புறமும் கோபுரங்களும், உயர்ந்த மதில்களும் உள்ளன. கிழக்கோபுரம் 118" உயரம் உடையது. மூன்றாம் குலோத்துங்கன் கட்டியது. மேற்குக் கோபுரம் 15 ஆம் நூற்றாண்டில் சிற்றரசன் மகன் நாகராசன் எழுப்பிவித்தது. தெற்குக் கோபுரம் தருமபுர ஆதீன சிதம்பர முனிவர் எழுப்பிவித்தது. வடக்குக் கோபுரம் சேவப்ப நாயக்கர் எழுப்பிவித்தது. 'மறை நான்கும் கோபுரமாய் வான் கிழிக்கும் வாசலிது' என்று தியாகேசர் குறவஞ்சி குறிப்பிடுகிறது. திருக்காவணம் என்னும் தேவாசிரிய மண்டபம் உள்ளது. திருத்தொண்டர் தொகை பாடியருளிய மண்டபம் இது.

வடகிழக்கே கமலாம்பிகை சந்நதி உள்ளது. 64 சக்தி பீடங்களுள் ஒன்றாகும். ஆரூர் அறநெறி தலம் உள்ளது. இது நமிநந்தியடிகள் தண்ணீரால் விளக்கெரித்த தலம். இக்கோயில் திருவிசைப்பா பாடிய கண்டிராதித்த சோழன் மனைவி செம்பியன் மாதேவியரால் கற்றளியாக்கப்பட்டது. பரவை நாச்சியார் மாளிகையின் ஒரு பகுதி மண்ணால் சிறு கோயிலாகக் கட்டப்பட்டுப் பரவையுண்மண்டளி என்று அழைப்படுகிறது. மூன்று தலங்களுக்கும் 37 பதிகங்கள் உள்ளன. வேறு பல பாடல்களும் உள்ளன.

திருவாரூர்த் தேரழகு. 16.6.2016 அன்று திருத் தேரோட்டம் நடைபெற்றது. இங்கு நடைபெறும் திருவாதிரைத் திருவிழா, பங்குனி உத்திரத் திருவிழா சிறப்பானவை. இங்கு இராஜன் கட்டளை, அபிடேகக் கட்டளைகள் உள்ளன. அபிடேகக் கட்டளை திருகயிலாயப் பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீனக் கட்டளையாகும்.

நயினார் அழகள்:

இத்தலத்தில் சங்கீத மும்மூர்த்திகள் பிறந்தனர். பெரிய மேளம் குழுவினராகிய நாகசுர தவில் கலைஞர்கள் பலர் வாழ்ந்துள்ளனர்; வாழ்ந்தும் வருகின்றனர். திருவாரூர் சாமிநாதப்பிள்ளை (1854 - 1925), திருவாரூர் வீதி விடங்கம் பிள்ளை (1873 - 1935) போன்றவர்கள் வாழ்ந்தனர். இவர்களை "நயினார் அடியார்" என்று அழைப்பர். தியாகேசர் திருவிழாவில் முக்கியப் பங்கு ஆற்றுபவர்கள். துறவிகள் போல் வாழ்வர். திருவிழா நடத்தும் பொறுப்புடையவர்கள். முதலாம் இராஜேந்திர சோழன் காலத்தில் (1012 - 1044) இங்கு வாழ்ந்த நயினார் அடியார் ஒருவரின் நாகசுர இசையால் மழையின்றி வாடி தவித்த தலைநகரில் மழை பெய்விக்கப் பெற்றது. இராஜேந்திர சோழன் மகிழ்ந்து அந்நயினார் அடியார்க்கு ஒரு ஜோடி தந்த நாயனமும், கேக்கரை கிராமத்தில் பத்து வேலி நிலமும், ஐந்து ஓடைகளும் அளித்தார். இந்நிலம் "மேளக்காரப்பட்டா" என்று இன்றும் அழைக்கப் பெறுகிறது. நாகசுர தவில் கலைஞர்களுக்கு வீடும் கட்டித் தந்தார். இத்திருவாரூர் நயினார் அடியார் வம்சத்தில் ஏராளமான கலைஞர்கள் காலந்தோறும் தோன்றி சிறப்புச் செய்து வருகின்றனர். சின்னையா பிள்ளை, சோமாஸ்கந்த பிள்ளை, சுவாமிநாத பிள்ளை, கமலநாதம் பிள்ளை, பெரிய கண்ணுபிள்ளை, சின்ன கண்ணுபிள்ளை, தியாகசுந்தரம் பிள்ளை, கார்த்திகேயப்பிள்ளை, திருவாரூர் இராமசாமி பிள்ளை, பாவாடைப்பிள்ளை, பழனிவேல் பிள்ளை, துரைசாமி பிள்ளை, நடேசபிள்ளை, கிருஷ்ணசாமி நாயனக்காரர், சுவாமிநாத நாயனக்காரார், பழனிவேலு பிள்ளை, தட்சிணாமூர்த்தி பிள்ளை, டி.எஸ்.இலட்சப்பா பிள்ளை போன்றார் பலர்.

கொண்டி பரம்பரை:

திருக்கயிலாயத்தில் திருத்தொண்டு செய்து வந்த ஆலால சுந்தரர் மலர் பறித்து வரச் சென்ற பொழுது அநிந்ததை, கமலினி என்ற இரு மங்கையர் மீது மையல் கொண்டார். சிவனது அருளால் மண்ணுலகில் திருநாவலூரில் சடையனார் இசைஞானியார் மகவாகத் தோன்றி, வளர்ந்து புத்தூர் சடங்கவி சிவாச்சாரியார் மகளைத் திருமணம் முடிக்கப் புக்க போது தடுத்தாட் கொள்ளப்பெற்று, பித்த பிறை சூடி எனும் பெரிதாம் திருப்பதிகம் பாடினார். பின்பு தலயாத்திரை மேற்கொண்டார்.

திருவாரூரில் கமலினி பரவையாராக வந்து பிறந்தார். உருத்திர கணிகையர் குலத்தில் பிறந்தார். கோயிலுக்குச் செல்கையில் ஒரு நாள் சுந்தரரைக் கண்டார், சுந்தரரும் இவரைக் கண்டார். மனம் திறந்தனர். இறையருளால் மணம் புரிந்தனர். தொண்டை நாட்டில் திருவொற்றியூரில் ஞாயிறு கிழவர் மகளாகப் பிறந்த சங்கிலியாரையும் இறையருளால் மணம் முடித்தார். ஒற்றியூரை விட்டு அகலேன் என்று கூறினார். சபதத்திற்கு மாறாக நடந்தார். இரு கண் பார்வைகளையும் சுந்தரர் இழந்தார். திருவெண்பாக்கத்தில் ஊன்று கோல் பெற்றார். காஞ்சியில் இடக்கண் பார்வை பெற்றார். திருவாரூர் அடைந்தார். செந்துருத்திப் பண் பதிகம் பாடி வலக்கண் பெற்றார். பரவையார் இல்லத்திற்குச் சுந்தரருக்காக இறைவன் தூது சென்றார்.

இப்பரவையார் வழியில் திருவாரூரில் மாணிக்க நாச்சியார் என்ற ஒருவரும் வந்துதித்தார். துறவி போல் வாழ்ந்தார். இறைவனே மனித உருவில் வந்து மாணிக்கத்தின் நாயகனாக இருந்து மறைந்தார். கணவரைப் பிரிந்த பின்பு தன்னைத் தீக்கிரையாக்கிக் கொண்டார். திருவாரூர் வடக்கு இரத வீதியில் மாணிக்க நாச்சியாரின் நினைவாக எழுப்பப் பெற்ற ஆலயம் ஒன்று உள்ளது. திருவாரூர் தியாகேசரின் பக்கத்தில் கொண்டி அம்பாள் என்ற அம்பாள் திருவுரு உள்ளது.

மாணிக்க நாச்சியார் வம்சா வழியினர் கொண்டி பரம்பரையினர் என்று அழைக்கப் பெறுகின்றனர். இக்குடும்பத்தில் குஞ்சம்மாள் என்று ஒருவர் பிறந்தார். ஒரு சமயம் திருவாரூர் தேர் திருவிழா நடந்த பொழுது தேர் நகராமல் இருந்தது. எவ்வளவு முயற்சித்தும் நகரவில்லை. ஒரு சிறுவன் வடிவில் இறைவன் தோன்றி, "கொண்டி வந்து இழுத்தால், தேர் நகரும்" என்றார். கொண்டி என்பது யார் என்ற ஐயத்தை நீக்க குஞ்சம்மாள் வீட்டைக் காட்டி விட்டு மறைந்தார். மன்னர் குஞ்சம்மாளிடம் சென்று 'நீங்கள் வந்து வடம் பிடித்தல் வேண்டும்' என்றார். குஞ்சம்மாள் ஒரு சில நிபந்தனைகளோடு ஒத்துக் கொண்டார். 'நான் வடம் பிடித்துத் தேர் நகர்ந்ததும் நான் இறந்து விடுவேன் என் உடலை மயிலாடுதுறையில் அடக்கம் செய்ய வேண்டும்' என்றார். மன்னனும் உடன்பட்டார். குஞ்சம்மாள் வடம் பிடித்ததும் தேர் நகர்ந்தது. குஞ்சம்மாள் இறந்தார். மன்னனும் குஞ்சம்மாளின் உடலை மயிலாடுதுறைக்கு எடுத்துச் சென்று அடக்கம் செய்தார். இவ்விடம் இன்று "கொண்டித்தோப்பு" என்று அழைக்கப்

பெறுகிறது. அந்நாள் முதல் திருவாரூர்த் தேர்த் திருநாளன்று வடம் பிடிக்கும் உரிமையும் பரிவட்டம் முதலிய மரியாதைகளும் கொண்டி மரபினர்க்கு அளிக்கப் பெறுகின்றன.

திருவாரூர்க் கொண்டி குடும்பத்தினர் திருவாரூர்க் கோயில் பணி செய்பவர்களாக விளங்கினர். ஆண் பெண் இருபாலரும் சின்ன மேளம் எனப்படும் நாட்டியப்பணி மேற்கொண்டிருந்தனர். இசை, நாட்டியம், மிருதங்கம், புல்லாங்குழல் இசைப்போர், பாடுவோர், தலைக்கோல் ஆசானாகவும் விளங்கினர். சாயரட்சையில் கோயிலுக்குச் சென்று அங்கு நடைபெறும் சோடசோபசாரம் நடைபெறும் பொழுது இறைவன் சந்நதியில் நின்று அந்தந்த வழிபாடுகளை அவிநயத்தின் மூலம் நிகழ்த்துவர்.

திருவாரூர் கமலமுத்தம்மாள் - இராஜலட்சுமி, சின்னக் கமலம், கீரவாணி, கோகிலம், ஞானம், இராஜாயி, ருத்திரபூஷிணி, குட்டியம்மாள் போன்ற நாட்டியக் கலைஞர்கள் இருந்தனர். திருவாரூரில் 48 தேவதாசிக் குடும்பங்கள் இருந்தன. சோழ மன்னர்கள் இவர்களுக்கு 100 ஏக்கர் நிலமானியம் அளித்தனர். திருமதிக்குன்னம் புகைவண்டி நிலையத்தருகில் உள்ள இந்நிலம் "மேளக்காரப்பத்தி" என்று அழைக்கப் பெறுகிறது.

திருவாரூர் ஞானம்:

திருவாரூர் ஞானம் 1857இல் பரிபூர்ணம் அம்மாளின் மகளாகப் பிறந்தார். அய்யாசாமி நட்டுவனாரிடம் ஆடற்கலை பயின்றார். பின்பு பெரியசாமி நட்டுவனாரிடம் பயின்றார். தஞ்சை மகாதேவ நட்டுவனாரிடம் மேல் பயிற்சி பெற்றார். நாட்டிய சாம்ராஜ்யத்தின் பேரரசியாக விளங்கினார். உருத்திரட்ச மாலை அணிந்து கொண்டு நடனமாடுவார். மன்னரால் கனகாபிஷேகம் செய்யப் பெற்றார்.

தேவதாசி திருவாரூர்க் கோயிலில் சின்னமுறை, பெரிய முறை என்ற முறைகளில் வழிபாடு நிகழ்த்துவர். மாலைக் கால பூஜையின் பொழுது கருவறையில் நின்று கொண்டு பதினாறு வகையான வழிபாடுகளை அவிநயமாகச் செய்வர். இதனைச் சின்னமுறை என்றும், கைக்காட்டு முறை என்றும் அழைப்பர். இறுதியாக அலங்கார தீபத்தைத் தேவதாசியே எடுத்து

இறைமுன் சுற்றி வழிபாடு செய்வர். இதுவே பெரிய முறை எனப்படும். தொடர்ந்து குருக்கள் ஐம்முகக் கற்பூரத் தீபங் காட்டுவர். ஐம்பது வயதிற்கு மேற்பட்டவர்கட்கே பெரிய முறை வழங்கப் பெறும். ஞானம் அம்மாளுக்கு அவ்வாய்ப்பு வந்துற்ற பொழுது இலங்கைக்குச் சென்று நடன நிகழ்ச்சி நடத்திவிட்டு வந்தார். கடல் தாண்டிச் சென்றவர்கட்குப் பெரிய முறை செய்வதற்கான தகுதி இல்லை என்று நிர்வாகிகள் தடுத்துவிட்டனர். முதன் முதலாகக் கடல் தாண்டிச் சென்று நாட்டியப்பணி நிகழ்த்தியவராக ஞானம் விளங்குகிறார். பெரிய முறை கிடைக்காத காரணத்தால் நாட்டியம் ஆடுவதனையே நிறுத்திவிட்டார். 22.09.1992 அன்று இறையடி சேர்ந்தார்.

திருவாரூர் இராஜாயி:

திருவாரூர் ஞானத்தின் நாட்டிய வாரிசாக விளங்கியவர் திருவாரூர் இராஜாயி. சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துச்சாமி தீட்சதரின் மாணவியாவார். திருவாரூர் நீலாம்பாளின் பேத்தியாகவும், குட்டியம்மாளின் மகளாகவும் 06.01.1896இல் பிறந்தார். இராஜாயி பிறந்த இருபத்திரண்டாம் நாள் குட்டியம்மாள் இறந்தார். தாய்மாமன் திருவாரூர் கோபால கிருஷ்ண நட்டுவனார் வளர்த்தார். கோபால கிருஷ்ணனிடம் நாட்டியம் பயின்றார். திருவாரூர்த் தியாகேசர் குறவஞ்சியில் பங்கு பெற்றார். மதுரை பாஸ்கர சேதுபதி அவையில் ஆறு வயதில் ஆடினார். காளையார்கோயில் சுப்பையர், சிமிழி சுந்தரம் அய்யர், இராமநாதபுரம் பூச்சி ஸ்ரீநிவாச ஐயங்கார், வீணை தனம்மாளிடம் இசை பயின்றார். பல சமஸ்தானங்களில் இசை நாட்டிய நிகழ்வுகளைத் தந்தார். 27.11.1926 அன்று தனது 29வது வயதில் மறைந்தார்.

கொண்டி குடும்பத்தார்:

இவர்களை அல்லாமல் கொண்டி குடும்பத்தினர் பலர் திருவாரூரில் இறைபணி மேற்கொண்டிருந்தனர். இவர்கள் குடும்பத்தினர் திருவாரூர் தியாகேசர் குறவஞ்சி, பல்லக்கி சேவா நாடகம், சோடசோபசாரம் போன்றவற்றை நிகழ்த்தி வந்தனர். திருவாரூர் கமலாம்பாள் காலம் வரை இந்நிகழ்வுகள் நிகழ்ந்தன.

திருவாரூர்க் கமலம் தியாகராஜன் என்பவரின் மகள். இவரது சகோதரி மீனாட்சி சுந்தரம் (1880 - 1937). திருவாரூர்க்

கமலம் 1883 ஆம் ஆண்டு பிறந்தார். கோபாலகிருஷ்ண நட்டுவனாரிடம் பயின்றார். தியாகேசக் குறவஞ்சி முழுவதையும் ஒருவராகவே நின்று ஆடும் திறம் மிக்கவர். அதிலுள்ள பாடல்கள் அனைத்தும் அவருக்கு மனப்பாடம். 22.11.1937 அன்று மறைந்தார்.

பத்மஸ்ரீ பி.ஆர்.திலகம்:

கமலத்தின் மக்கள் இராசசந்தானம், பர்வதவர்த்தினி இருவராவர். பர்வதவர்த்தினியின் மகள் பத்மஸ்ரீ விருது பெற்ற திருவாரூர் இராமதிலகம் ஆவார். திலகம் 02.12.1926 அன்று பிறந்தார். தாயார் இறந்தவுடன் பாட்டி கமலத்தால் வளர்க்கப் பெற்றார். திருவாரூர் நாகசுர வித்துவான் டி.எஸ்.வைத்திய நாதனிடம் இசையின் ஆரம்பப் பாடங்களைப் பயின்றார். பின்பு ஸ்ரீரங்கம் அய்யங்காரிடம் 11 வருடம் குருகுலவாசத்தில் இசை பயின்றார்.

குத்தாலம் கணேசபிள்ளையிடம் ஏழு ஆண்டுகள் நாட்டியம் பயின்றார். சுமார் பதினாறு ஆண்டுகள் நடனக் கலைஞராக விளங்கினார். 1952இல் நடனம் செய்வதை நிறுத்திவிட்டுப் பாடகியாக மாறினார். கீவளூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இராமதிலகம் என்ற பெயரைப் பி.ஆர்.திலகம் என்று மாற்றினார். திருவையாறு அரசர் கல்லூரியில் பதினைந்து ஆண்டுகள் இசைப் பேராசிரியராகப் பணியாற்றினார். ஓய்விற்குப் பிறகும் திருவாரூர் தியாகேசக் குறவஞ்சி, பல்லக்கி சேவா பிரபந்த நாடகம் பற்றி இசைக் குறிப்புகள் வெளியிட உதவினார். மதுரை சத்குரு சமாஜ இசைக் கல்லூரியின் முதல்வர் பிரேமலதா தியாகேசக் குறவஞ்சியை நூலாக்கி வெளியிட முனைந்த பொழுது அவருக்குத் துணைபுரிந்து வெளியிடத் துணை நின்றார்.

தியாகேசக் குறவஞ்சியின் மரபு வழி வந்த இசை முறையோடு பாடிக்காட்டினார். தஞ்சை சரசுவதி மகால் நூலகம் இந்நூலை வெளியிட்டது. இந்நூலில் 65 பாடல்கள் உள்ளன. 1966 ஆம் ஆண்டு பரத மேதை கமலா அவர்களால் சென்னையில் அரங்கேறியது. மாண்புமிகு முன்னாள் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமை ஏற்றார். 1981 ஆம் ஆண்டு தியாகேசர் குறவஞ்சியைச் சிதம்பரம் நாட்டியாஞ்சலியில் திலகம் நடத்திக் காட்டினார். புதுடில்லி சங்கீத நாடக அகாடமி தலைவர் கபிலாஜி தலைமை தாங்கினார். பெங்களூர்

நாகரத்தினத்தம்மாள் இக்குறவஞ்சியைத் தேவாசிரிய மண்டபத்தில் நிகழ்த்த வந்துற்ற பொழுது குட்டியம்மாள் நீதிமன்றம் வரை சென்று வாதாடி வெற்றி பெற்றார். பின்பு நாகரத்தினத்தம்மாள் திருவாரூர் வந்து நடந்த சம்பவத்திற்கு வருத்தம் தெரிவித்துக் கொண்டார். இவர்களது சொத்தாக இக்குறவஞ்சியையும், பல்லக்கு நாடகத்தையும் கருதினார். 90 வயது வரை வாழ்ந்த திலகம் 03.01.2016 அன்று மறைந்தார். தியாகேசக் குறவஞ்சி, பல்லக்கு நாடகம் காப்பாற்றியதால் கலைமாமணி விருது, சங்கீத நாடக அகாடெமி விருது, பத்மஸ்ரீ விருது, முதுமுனைவர் விருதுகளைப் பெற்றார்.

தியாகேசர் குறவஞ்சி:

குறவஞ்சி நாட்டிய நாடகங்களுள் தியாகேசர் குறவஞ்சியும் ஒன்றாகும். தியாகேசர் உலாவரக் கண்ட தலைவியின் காதல் நோய் நீக்க ஒரு குறத்தி தோன்றி அவள் காதல் கைக்கூடும் என்று குறியுரைத்துப் பரிசில் பெற்றுத் தன் கணவன் சிங்கனுடன் தெய்வத்தை வாழ்த்திப் போகும் நிலையில் இக்குறவஞ்சி அமைந்துள்ளது.

திருவாரூர் தியாகராசரைப் பாட்டுடைத் தலைவராக இந்நூல் கொண்டுள்ளது. தஞ்சை மராட்டிய மன்னர் காலத்தில் (1684 – 1712) இயற்றப்பட்டது. நூல் எழுதிய புலவர் பற்றி அறிய இயலவில்லை. சிலர் முத்துக்கவிராயர் என்பர். மாணிக்க நாச்சியார் மரபில் வந்த கொண்டி மரபினர் பங்குனி மாத பிரம்ம உற்சவ காலத்தில் தேவாசிரிய மண்டபத்தில் இக் குறவஞ்சியைப் பாடி நடித்து வந்தனர்.

இந்நூலின் காப்புச் செய்யுள் விநாயகர் காப்பாகப் பௌளி இராகத்தில் அமைந்துள்ளது. பின்பு தோடயம் இடம்பெற்றுள்ளது. தோடயம் என்பது சிறப்புப் பாயிரமாகும். கடவுள் வாழ்த்தாக அமையும். நாட்டை இராகத்தில் ரூபக தாளத்தில் அமைந்துள்ளது. தியாகேசர் உலா வரக் கண்டு தலைவி காதல் கொள்கிறார். இது பூர்வி கல்யாணி இராகத்தில் ஒரு பல்லவி மூன்று சரணங்களுடன் அமைந்துள்ளது.

இதன்பின் இராஜ மோகினி தோற்றம் இடம் பெறுகிறது. இராஜமோகினி மல்லிகை முல்லை மலர்களைச் சூடி வருகிறாள். தியாகேசர் பவனி வருவதனைக் கண்டு காதல்

கொள்கிறாள். காம வேதனையில் வெண்ணிலா, மன்மதன், தென்றலைப் பழிக்கின்றாள். இவை தரு என்ற இசை வடிவில் அமைந்துள்ளன. தோழியான சகி தோன்றுகிறாள். இவள் பெயர் மோகன ரேகை. இது சகானா இராகத்தில் திரைத்தரு அல்லது பிரவேசிகா தருவாக அமைந்துள்ளது.

இராகம் : சகானா **தாளம் : ஆதி**

பல்லவி

மோகன ரேகை வந்தாள் – முத்து முத்தான
மோகன ரேகை வந்தாள்

அநுபல்லவி

மோகன ரேகை வந்தாள் முல்லை நகர வல்லி போல
நாகரிகந் தென் கமலை நாயகர்த் தியாகேசர் நாட்டில்
(மோகன)

சரணம்

இராஜ மோகினியைத் தேடி இராஜ யோகம் மிகும் தியாக
ராஜர் மருவும் கமலை ராஜ சபை தனை நாடி
(மோகன)

இராஜமோகினி முகவாட்டம் கண்டு சகி காரணம் கேட்க, தன் நிலையைக் கூறுகிறாள். குறத்தியைக் குறி சொல்ல அழைக்கிறார். குறத்தி தோன்றுகிறாள். நீண்ட அகவலில் இது அமைந்துள்ளது. இதில் மனுநீதிச் சோழன் கதை கூறப்படுகிறது. குறத்தி தியாகேசரின் வாசல் வளம் கூறுகிறாள்.

இராகம் கமாசு **தாளம் : ஆதி**

பல்லவி

சிங்காரக் குறவஞ்சி வந்தாள் – ஒய்யாரச்
சிங்காரக் குறவஞ்சி வந்தாள் (சிங்கார)

அநுபல்லவி

சங்கரர் பொங்கராவந் திகழ்கின்ற கங்கணம்
செங்கழுநீர் புனை தியாகேசர் நாட்டிலே (சிங்கார)

மூன்று சரணங்கள் உள்ளன. பின்பு வாசல் வளம் கூறுகிறாள். மலைமகள் வளர்ந்தோங்கும் வாசலிது. சகஜி ராஜன் நாளும் துதிக்கும் வாசலிது. தியாகேசப் பெருமான் உறையும் வாசலிது. நான் மறைகளும் கோபுரமாய் நிற்கும் வாசலிது. ஆறு சாத்திர புராணங்கள் நிறைந்த வாசலிது. மூவர் தமிழ் விளங்கும் வாசலிது. அரம்பையர் ஊர்வசி நடமாடும் வாசலிது. பிறக்க முக்தி அளிக்கும் புனித வாசலிது என்று வாசல் வளம் கூறுகிறாள்.

பின்பு குறத்தி குலப்பெருமை உரைக்கிறாள். மலைவளம் உரைக்கிறாள். குறி சொல்கிறாள். அப்பொழுது பலபலவென பல்லி ஒலிக்கிறது. ஆந்தை இரண்டு பொந்துக்குள் செல்கிறன. பரிசுப் பொருள் பெற்றுக் கொண்டு குறத்தி செல்கிறாள். குறத்தியைத் தேடிக் கொண்டு சிங்கன் வருகிறான். சிங்கியைத் தேடுகிறான். சிங்கியைக் கண்டான். சிங்கி பெற்ற பரிசுகள் அறிந்தான். பிணக்கு நீங்கி குறவன் குறத்தி மகிழ்ந்து, மன்மதனும் இரதியும் போல் வாழ்க என்று வாழ்த்திச் செல்கின்றனர். பின்பு மங்கலம் இடம் பெறுகிறது. இவ்வாறு தியாகேசக் குறவஞ்சி முடிகின்றது.

பல்லக்கி சேவா பிரபந்தம்:


தஞ்சை மராட்டிய மன்னர் சகஜி அவர்களால் (1684 - 1710) இயற்றப்பட்ட பல்லக்கி சேவா பிரபந்தம் வாரந்தோறும் வெள்ளிக் கிழமைகளிலும் மற்றும் சிறப்பு நாட்களிலும் சுமார் 250 ஆண்டுகளாகத் திருவாரூரில் ஆடப் பெற்ற பிரபந்தம் பல்லக்கி சேவா பிரபந்தமாகும். கொண்டி குடும்பத்தினரால் ஆடப் பெற்றதாகும். இதனைப் பல்லக்கி நாடகம் என்று அழைப்பர். வீதிவிடங்கர் தியாகராசர் பெயரில் இயற்றப்பட்டுள்ளது. இறைவனைப் பள்ளி அறைக்குப் பல்லக்கில் சுமந்து செல்லும் நிலையில் இந்நாடகம் அவிநயிக்கப் பெறும். இதற்காகப் பத்து வேலி நிலம் சர்வ மானியமாக அளிக்கப் பெற்றது.

நால்வர் பல்லக்கைச் சுமந்து வருவர். ஒருவர் அவிநயம் பிடித்துக் கொண்டு வருவர். திரும்பிப் பாராமல் தியாராஜரைப் பள்ளியறையில் சேர்ப்பர். இந்த நாடகத்தில் ஜதிகள் இடம் பெறாது. பெண்கள் பல்லக்கு சுமப்பர். சுத்த மத்தளம் மட்டும் வாசிக்கப் பெறும். அச்சு தெலுங்கு என்று சொல்லப் பெறும்

சுத்தமான தெலுங்கில் ஒரு சூர்ணிகையும், 22 தருக்கள் உள்ளன. தரு என்பது கதைப் பாடலாகும். ஒரு சூர்ணிகையும், 8 கந்த பத்யங்களும், 1 ஸீஸ பத்யமும், 2 உத்பலமாலைகளும், 3 சண்ப மாலைகளும், 4 திவிபதைகளும், 2 கீதங்களும், 1 லாலியும், 2 மங்கலங்களும் இடம்பெற்றுள்ளன.

இது ஒரு கேய நாடகமாகும். கோயிலில் பல்லக்கு பிரகாரத்திற்கு வந்தவுடன் நாட்டிய நங்கையர் பக்கத்திற்கு 16 பேராக நின்று கொண்டு பத்யங்களையும், தருக்களையும் பாடியும் அவிநயம் பிடித்தபடி செல்வர்.

இத்தகு பல்லக்கு நாடகம், குறவஞ்சி நாட்டியங்கள் கொண்டி பரம்பரையினால் சிறப்புடன் திருவாரூரில் நடத்தப் பெற்றன. திருவாரூர் கமலத்தம்மாள் காலத்திற்குப்பிறகு நடத்தப் பெறவில்லை. திருவாரூர் பி.ஆர்.திலகம் தம் குடும்ப வழி பெற்ற இவ்விரு அருங்கலைச் செல்வங்களைப் போற்றிப் பாதுகாத்து ஆவணப்படுத்தியுள்ளார். இவ் ஆவணங்கள் இல்லையேல் இவைகளைப் பற்றி அறியும் வாய்ப்பினை இசை உலகம் இழந்திருக்கும். பல்லக்கு நாடகத்தைச் சென்னை தபஸ்யா குழுவில் உள்ளவர்கட்குக் கற்பித்தார். தற்பொழுது குறுவட்டு மூலம் கிடைத்துள்ளது. இதுபோல் தியாகேசக் குறவஞ்சியும் கிடைத்துள்ளது. குறவஞ்சி தமிழிலும் பல்லக்கு நாடகம் தெலுங்கு மொழியிலும் அமைந்துள்ளன.



புதுக்கோட்டை தண்ணுமையாளர்கள்



ஆடல் பாடல் இசையே தமிழே
பண்ணே பாணி தூக்கே முடமே
தேசிகம் என்றிவை ஆசின் உணர்ந்து
கூடை நிலத்தைக் குறைவின்று மிகுத்தாங்கு
வார நிலத்தை வாங்குபு வாங்கி
வாங்கிய வாரத்து யாழும் குழலும்
ஏங்கிய மிடறு இசைவன கேட்பக்
கூருகிர்க் கரணம் குறியறிந்து சேர்த்தி
ஆக்கலும் அடக்கலும் மீத்திறம் படாமைச்
சித்திரக் கரணம் சிதைவின்றி செலுத்தும்
அத்தகு தண்ணுமை அருந்தொழில் முதல்வனும்.

– சிலப்பதிகாரம் (அரங்கேற்று காதை : 45–55 அடிகள்)

கி.பி.இரண்டாம் நூற்றாண்டளவில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையில் மாதவி நடன அரங்கிசைக்குழுவில் இடம்பெற்ற தண்ணுமையோன் அமைதி பற்றி இளங்கோ அடிகள் குறிப்பிட்டுள்ளார். தண்ணுமை இசைப்போரைத் தண்ணுமை அருந்தொழில் முதல்வன் என்று சிறப்பித்துக் குறிப்பிடுகிறார்.

1. தண்ணுமை அருந்தொழில் முதல்வன் ஆடல், பாடல், இசை, தமிழ் ஆகியவற்றைக் குற்றமற உணர்ந்தவன் ஆவான்.
2. பண், பாணி, தூக்கு, முடம், தேசிகம் என்கிற இசை நிலைகளை நன்கு அறிந்தவன் ஆவான்.
3. கூடை நிலத்தைக் குறைவின்றிச் செலுத்துவான். வார நிலத்தை வாங்குபு வாங்குவான்.
4. யாழ், குழல், மிடற்று இசைகளுடன் இயைந்து இசைப்பான்.

5. இசை அரங்கில் குறை நேரின் குறை நிரப்பும் திறன் பெற்றவனாக விளங்குவான்.

6. தன் கைவிரல்களால் சித்திரக் கரணங்களைச் சிதைவின்றிச் செலுத்துவான்.

இப்பண்புகள் கொண்ட தண்ணுமை முதல்வனை இளங்கோ அடிகள் அறிமுகப்படுத்துகிறார். இத்தகு தகுதி கொண்ட தண்ணுமை இசைவாணர் ஐவர் புதுக்கோட்டை பாணி என்ற மரபிற்குரியவர்களாக இசை உலகில் உள்ளனர்.

1. புதுக்கோட்டை மான்பூண்டியா பிள்ளை
   4.12.1859 - 17.1.1922

2. புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி பிள்ளை
   1875 - 1936

3. புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி ஆச்சாரியார்
   1901 - 1956

4. புதுக்கோட்டை சுவாமிநாத பிள்ளை
   1912 - 1969

5. திருச்சி ஆர்.தாயுமானவன்
   6.10.1969 -

இவ் ஐவரும் புதுக்கோட்டை பாணியின் தூண்களாவர். மிருதங்கம் (தண்ணுமை), கஞ்சிரா கருவி இசையை வளர்த்தவர்கள். இவர்களில் ஆர்.தாயுமானவன் எண்.20, பாளையம் கடைத்தெரு, உறையூர், திருச்சியில் வாழ்ந்து வருகிறார். புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி ஆசாரியாரின் மாணவர், மருமகன், தட்சிணாமூர்த்தி பிள்ளை ஜீவ சமாதியில் (புதுக்கோட்டை) கோயில் எழுப்பி ஆண்டுதோறும் குருபூஜை விழாவை நடத்தி வருகிறார். தற்பொழுது 10.6.2016 அன்று குருபூஜை விழா மிகச் சிறப்புடன் நடந்தது. இவரின் கலை உலக வாரிசாக திரு.மூர்த்தி உள்ளார். இவரும் திருச்சி கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரியில் இசைத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவர்கள் அனைவரும் குருகுல மரபைச் சார்ந்த தண்ணுமை அருந்தொழில் முதல்வர்கள் ஆவர்.

தண்ணுமை:

தமிழகத்தில் நிலவிய தோற்கருவிகளுள் தண்ணுமை எனும் இருமுக முழவும் ஒன்றாகும். இது பிறகு மத்தளம் என்று கி.பி.7 ஆம் நூற்றாண்டில் வழங்கப்பட்டது. 'மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத' என்று ஆண்டாள் குறிப்பிடுகிறார். கி.பி.15 ஆம் நூற்றாண்டளவில் மிருதங்கம் என்ற சொல் நிலைபெற்றது. மிருதங்கம் என்ற சொல் வடஇந்திய இசுலாமியர் போற்றிய சொல். வடபுலத்தில் இதன் வழக்கு வீழ்ந்தது. தென்னகத்தில் வேர் ஊன்றி நிற்கின்றது.

கஞ்சிரா:

மிதங்கக் கலை வளர்ச்சியில் ஒருமுக முழவான கஞ்சிரா தோற்றம் பெற்றது. இது 8-9 அங்குல அளவுள்ள மரவளையத்தில் உடும்புத்தோலால் போர்த்தப் பெற்ற இசைக் கருவியாகும். இது சிறு கைப்பறை என்றும், சல்லரி என்றும் அழைக்கப் பெறும். கஞ்சிரா என்ற சொல் உருது மொழியிலிருந்து வந்த சொல்லாகும். தாளக் கருவியைக் கஞ்சக் கருவி என்பர். கஞ்சிரா தாளக் கருவியாகும். வடநாட்டில் கஞ்சரி என்று அழைக்கப்படுகிறது. (மு.அருணாசலம் தமிழிசை இலக்கண வரலாறு, ப.163) இக்கஞ்சிரா கருவியைக் கண்டறிந்து இசை அரங்கில் செவ்வியல் இசைக் கருவியாகப் பயன்படுத்திய தந்தையாக புதுக்கோட்டை மான்பூண்டியா பிள்ளை விளங்குகிறார். புதுக்கோட்டை மரபினர் இக்கருவி இசைப்பதில் வல்லவர்களாக விளங்கி வருகின்றனர்.

புதுக்கோட்டை மான்பூண்டியா பிள்ளை (1862 - 1922):

புதுக்கோட்டை மன்னர் இராமச்சந்திர தொண்டைமான் அரண்மனையில் அய்யாசாமி சேர்வை "லாந்தர் சேவகம்" செய்து வந்தார். இவர் மகன் மான்பூண்டியும் அதே சேவகம் செய்துவந்தார். ஒரு நாள் அரண்மனையில் அரண்மனை இசைவாணர்கள் நன்னுமியானும் சோட்டுமியானும் பாடிக் கொண்டிருந்தனர். டோலக் வாசித்துக் கொண்டு பாடினர். பளிச்சென்று டோலக்கில் முத்தாய்ப்புச் சொல் ஒன்று வைத்தனர். லாந்தர் சேவகம் செய்து வந்த மான்பூண்டி இதனைக் கேட்டுத் தன்னையும் மீறி "ஆஹா" என்றார். எல்லோரும் இவரைப் பார்த்தனர். 'லாந்தர்க்கார வித்துவானைப் பார்த்தீரா' என்று

ஏளனம் செய்தனர். கச்சேரி முடிந்ததும் ஒருவர் உனக்கு நல்ல இரசனை உள்ளது. நீ ஏன் முழுநேர சங்கீத வித்வான் ஆகக்கூடாது என்றார். இந்தச் சிந்தனையுடன் புதுக்கோட்டை மாரியப்ப தவில் காரரிடம் சென்று தவில் கற்றார். தவில் கற்பதற்கு முன்பு "டேப்" அடித்தப் பழக்கமும் இவருக்கு உண்டு. டேப் அடிக்கும் வழக்கத்தின் அடிப்படையில் கச்சேரிக்கு ஏற்ற ஒரு கருவியாக்கும் முயற்சியில் ஈடுபட்டு பலாக்கட்டையில் உடும்புத்தோல் போர்த்திய கஞ்சிராக் கருவியை வடிவமைத்தார். இக்கருவிக்குக் "கஞ்சிரா" என்று பெயர் சூட்டினார்.

கஞ்சிரா ஒற்றைக் கை முழவம். தவில் காரரிடம் கற்ற நடைகளைத் தன் கற்பனைக் கேற்றவாறு இலய நுணுக்கங்களுடன் வாசித்தார். பஜனைக் குழுக்களில் இசைத்தார். தஞ்சாவூர் வந்தார். தஞ்சாவூர் நாராயணசாமி அப்பா ஒப்புதல் பெற்று, தம்புரா சுருதியுடன் கூடிய, நாராயணசாமியப்பா மிருதங்கத்துடன் இயைந்து கஞ்சிராவை இசைத்தார். தனி ஆவர்த்தனமும் வாசித்தார். வாசிப்பில் உதிர்த்த மகுடச் சொற்களால் எல்லோரும் மயங்கினர். நாராயணசாமியப்பா எல்லோர் முன்பும் மான்பூண்டியைப் பாராட்டினர். தஞ்சாவூரில் இவரின் கச்சேரி விஜயம் தொடங்கியது. கும்பகோணம் சிவக்கொழுந்து நாயனக்காரர் மூலம் கும்பகோணத்தில் அரங்கேற்றினார். திருப்பழனப் பஞ்சாபகேச சாஸ்திரிகள் மடத்தில் அரங்கேற்றினார். சென்னையில் திருவையாறு சப்பிரமணிய ஐயர் கச்சேரியில் கஞ்சிரா வாசிக்க ஏற்பாடாகியது. ஐயர் இவரை வம்புக்கு இழுத்தார். தன்னுடன் போட்டிக்கு அழைத்தார். பிள்ளை நீ தோற்றால் இன்றிலிருந்து கஞ்சிரா வாசிப்பதனை முழுகிவிடு என்றார். ஐயர் தான் தோற்றால் என் இடத்தில் உன்னை உட்கார வைத்துவிட்டுத் தான் பாடுவதை விட்டு விடுகிறேன் என்றார்.

ஐயர் முதலில் பல்லவி பாடினார். பல்லவியின் நுட்பங்களுக்கேற்ப பிள்ளை வாசித்தார். மின்னல் வேகச் சொற்கட்டுக்களுடன் பல்லவியைச் சுருதி கச்சிதமாக வாசித்தார். அரங்கம் அதிர்ந்தது. ஐயர் தன் தோல்வியை ஒத்துக்கொண்டார். பிள்ளையைத் தன் இடத்தில் அமர்த்த எழுந்தார். பிள்ளை மறுத்தார். தாங்கள் தொடர்ந்து பாடி இக்கருவி இசைக்குப் பெருமை சேர்க்க வேண்டுமென வேண்டினார்.

மான்பூண்டியா பிள்ளையிடம் கற்றோர் பலர். புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி பிள்ளை, புதுக்கோட்டை இராமையாபிள்ளை, திருச்செந்தூர் இராமையாபிள்ளை, இராமநாதபுரம் சி.எஸ். முருகபூபதியின் தந்தை சித்சபை சேர்வை, தமிழ் நாடகத் தந்தை சங்கரதாசு சுவாமிகள் போன்றோர் பலர். சங்கரதாசு சுவாமிகள் நாடக உலகை வெறுத்து வந்த பொழுது தன் இல்லத்தில் தங்க வைத்து இசைக் கற்பித்துச் சங்கரதாசு சுவாமிகளாக்கித் 'தமிழ் நாடக உலகத் தந்தை'யாக்கினார்.

தனது 62வது வயதில் சன்னியாசம் பெற்றார். "முருகானந்த சுவாமி" என்று அழைக்கப் பெற்றார். தன் இல்லத்தில் வேல் வழிபாடு செய்தார். 17.1.1922 அன்று தனது மாணவர்கள் திருப்புகழ் இசைப்பதைக் கேட்டுக் கொண்டே சமாதியடைந்தார்.

புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி பிள்ளை 1875–1936:

புதுக்கோட்டையில் 48 வருடம் ஹடயோகம் செய்து வந்த யோகானந்த சுவாமியின் இளவல் மளிகை வியாபாரம் செய்து வந்த இராமசாமிக்கும் அமராவதி அம்மையாருக்கும் இரண்டாவது ஆண் குழந்தையாக தட்சிணாமூர்த்தி பிறந்தார். யுவ வருடம் மார்கழி மாதம் 30 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி 10 நிமிடத்தில் மிதுன இலக்கணத்தில் பிறந்தார். அண்ணன் பெயர் உலகநாதன். சோழிய வேளாளர் மரபினர். பிள்ளை பிறந்த சில நாட்களில் அன்னை மறைந்தார்.

யோகானந்த சுவாமி அன்புடன் இவரைப் பராமரித்தார். பிள்ளை விளையாட்டுப் பிள்ளையாகவே விளங்கிற்று. குதிரை வண்டி ஒட்டுவதில் மகிழ்ச்சி கொள்வார். புதுக்கோட்டை மன்னர் பைரவத் தொண்டைமான் பிறப்பதற்கு ஐந்து நிமிடம் முன் பிறந்தவர். படிப்பில் நாட்டமில்லையென்றாலும் அரண்மனையில் நடைபெறும் இசை நிகழ்வுகளைக் கேட்பதில் ஆர்வத்துடன் விளங்கினார். அரண்மனைக் காவலராக இருந்து கொண்டே கச்சேரியும் கேட்டு வந்தார். கதவுகள், பானைகளில் சொற்களை இசைத்துக் கொண்டே இருப்பார்.

நச்சாந்துப்பட்டி ஏகாதசி மடத்தில் ஒருவர் பானையை வைத்துக் கொண்டு தட்டிக் கொண்டிருந்தார். தானும் தன் கேள்வி ஞானத்தின்படி வாசித்துப் பார்த்தார். செட்டியார் வீட்டில்

நடைபெற்ற இராமாயண பட்டாபிஷேக நிகழ்வில் மிக அனுகூலமாக வாசித்து அனைவரையும் பிரமிக்க வைத்தார். பின்பு கடப் பயிற்சியை மேற்கொண்டார். பின்பு புதுக்கோட்டை அரசு ஜோதிடர் சீதாபதியிடம் மிருதங்க ஆரம்பப் பாடங்களைக் கற்றார். இலுப்பூர் மூக்கையா பிள்ளையிடம் மேலும் கற்றார். பின்பு பாலாமணி நாடகக் கம்பெனியின் மிருதங்க இசைவாணராக விளங்கினார். இராமநாதபுரம் தாயுமானவர் மடத்தில் தங்கி வாசித்து வந்தார். இராமநாதபுரம் அரசவையில் அடிக்கடி கடம் வாசித்து வந்தார். இவர் மிருதங்கப் பயிற்சியைச் சிறப்புடன் பெற வேண்டுமென்று மன்னர் விழைந்ததால் தஞ்சை வந்தார். தஞ்சை நாராயண சாமியப்பாவின் மிருதங்கத்தோடு சேர்ந்து இசைத்தார். அன்று முதல் எல்லோரையும் "ஆண்டவரே" என்று எல்லோரையும் அழைக்கும் வழக்கம் கொண்டார்.

ஒருமுறை பழனி கடம் வித்துவான் கிருஷ்ணய்யரோடு நடந்த இசை நிகழ்வில் கடம் போட்டி ஏற்பட்டுக் கிருஷ்ணய்யர் மேதாவிலாசம் கண்டு கடம் வாசிக்க மாட்டேன் என்று சபதம் எடுத்துக் கொண்டார். கடம் வாசிப்பதிலிருந்து மிருதங்கம் வாசிக்கலுற்றார். 40 வயதிலும் மிருதங்கச் சாதகம் செய்தார். கும்பகோணம் பஞ்சாபகேசவ பாகவதர் கச்சேரியில் மிருதங்கம் வாசித்து வந்தார். ஸ்ரீவஸ்ரீ முருகானந்த சுவாமிகளாகிய மான்பூண்டியா பிள்ளையிடம் இலய நுட்பங்களைக் கற்றார். குருவோடு இணைந்து கச்சேரி செய்தார். குரு கஞ்சிரா வாசிக்க இவர் மிருதங்கம் வாசித்தார். கஞ்சிராவில் தாமும் சாதகம் செய்வார். இசை உலகின் இரட்டையர்களாக விளங்கினர். மிருதங்கமும் கஞ்சிராவும் இரட்டைக் கருவிகளாகவே விளங்கின. இராமநாதபுரம் அரசவையில் குருவின் ஆசியுடன் கஞ்சிரா வாசித்தார்.

பாடகருக்கு ஒற்றுமையாய் மிருதங்கம் வாசிப்பதும், இதன் மூலம் பாடகரின் தரத்தை உயர்த்துவது என்ற பணியைச் செய்து வந்தனர். மிருதங்கத்தின் "சுநாதம்" சிறிதும் கெடாமல் வாசிப்பார். முன்னணியில் இருந்த வித்வான்கள் பலர் குழுவில் இசைத்தார். யோகானந்த சுவாமிகள் இவருக்குத் திருமணம் செய்து வைத்தார். மனைவி பெயர் பழனி அம்மாள்.

யோகானந்த சுவாமிகள் ஹடயோகம் செய்த புதுக்கோட்டைக்கு ஒரு மைல் மேல்புறம் உள்ள இடத்தில் ஒரு தண்டபாணி கோயிலும் சுவாமி சமாதியான இடத்தில் ஒரு

கோயிலும் ரூ.50,000/- செலவில் கட்டி குடமுழுக்குச் செய்தார். ஆண்டுதோறும் தண்டபாணி கோயிலில் அபிடேகமும் கருட பூசையும் செய்து வந்தார். மதுரையில் கட்டிக்குளம் சுவாமிகளைச் சந்தித்தார். சுவாமிகள் உபதேசித்தபடி மௌனவிரதம் மேற்கொண்டார். அறுபடை வீடுகளுக்குச் சென்றார். திருப்பரங்குன்றத்தில் ஒரு மண்டலம் தங்கி அபிடேகம், அன்னதானம், இசை நிகழ்ச்சிகளை நடத்தினார். இதுபோல ஏனைய படை வீடுகளிலும் செய்தார்.

மாயாண்டி சுவாமிகளின் தொடர்பால் இல்லறப் பற்றைவிட்டார். திருச்சியில் பாடகச்சேரி சுவாமிகளைச் சந்தித்தார். சென்னையில் கடைசியாகக் கச்சேரி செய்தார். ஒரு சமயம் இராமலிங்க சுவாமிகள், கிரிவலம் வந்த நல்லூர் சுவாமிகளையும் சந்தித்தார். தாது வருடம் வைகாசி மாதம் 13 ஆம் நாள் ஞாபகமிருக்கிறதா? என்றார். வைகாசி மாதம் 13 ஆம் நாள் மாலை 6.30 மணியை எதிர்பார்த்துக் காத்து இருந்தார். 5.30 மணி ஆனதும் குளித்துவிட்டு அனுஷ்டானம் செய்துவிட்டு வந்தார். 6.25 வந்த பொழுது அதிக நேரம் உள்ளதா? என்று கேட்டார். 5 நிமிடங்கள் இருக்கின்றன என்றார்கள். 6.29 வந்ததும் முருகா! முருகா! என்றார். 6.30 மணி அடித்தது. ஜீவனை உடலோடு ஐக்கியம் செய்துக் கொண்டார். அன்று சஷ்டி திதி. பாடகச்சேரி சுவாமிகள் இவரது சமாதி நிகழ்வுகளை நடத்தி வைத்தார். பிள்ளையவர்களின் மனைவியார் இதர காரியங்கள் செய்ய வேண்டும் என்றார். அதற்குச் சுவாமிகள் "அண்ணா அவர்கள் மரணம் ஆகவில்லை. ஜீவனை அடக்கி வைத்திருக்கிறார். உயிர் இன்னும் ஒரு வருடம் இருக்கும். எனவே கிரியைகள் எதுவும் செய்யக் கூடாது. நீங்களும் திருமாங்கல்யத்தைக் கழற்றக் கூடாது" என்றார். அம்மையாரும் திருமாங்கல்யத்தைக் கழற்றாமலேயே 8வது மாதம் இறைவனடி சேர்ந்தார்.

பிள்ளை அவர்கள் நிகழ்த்திய அற்புதங்கள் ஏராளமானவை. ஐயா தண்டபாணி கோயில் கட்ட நிதி திரட்டிய பொழுது தேவக்கோட்டையிலிருந்து காரைக்குடி வரும் வழியில் கள்வர்கள் பிடிக்க, கள்வர் தலைவன் ஐயாவை வணங்கி தனது சொந்தப் பணத்தில் ஆயிரம் ரூபாய் தந்தான்.

பள்ளத்தூர் செட்டியார் மகளின் திருமண விழாவில் சங்கீதம் கற்பித்த ஆசிரியரைக் கொண்டு கச்சேரி எற்பாடு செய்து

தாமே வாசித்து சிறியவர் என்று எண்ணாமல் ஆசிரியரைக் கௌரவப்படுத்தினார்.

இராமநாதபுர தியாகப்பிரும விழா கச்சேரியில் மூன்று நாட்கள் வாசிக்க இருந்த தட்சிணாமூர்த்தி ஆசாரியாரை மூன்றாம் நாள் கச்சேரி வேண்டாம். திருச்சிக்குப் புறப்படச் சொன்னார். விபரம் அறியாத குரு வார்த்தை ஏற்று ஆசாரியார் திருச்சி வர ஆச்சாரியாரின் நான்கு வயது மகன் உடல்நிலை சரியில்லாமல் படும் துயரம் உணர்ந்து குழந்தையை மடியில் கிடத்தியதும் உயிர் நீத்தது. குருவின் ஞான திருஷ்டியை உணர்ந்து ஆச்சாரியார் ஆச்சரியப்பட்டார்.

இவை போல ஏராளமான அற்புத நிகழ்வுகளை நிகழ்த்தினார். மிருதங்கச் சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த இவருக்குப் புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி ஆச்சாரியார் மருமகன் திருச்சி தாயுமானவன் 22.1.1981 சமாதி ஆலயம் கட்டி குடமுழுக்குச் செய்தார். இப்பெருந்தகையாளரின் வாழ்க்கை வரலாற்று நூலை ஜூலை 1989இல் வெளியிட்டுப் பலரும் அறிய வைத்துள்ளார். இவரது சமாதி ஆலயத்தில் ஆண்டுதோறும் குருபூசை விழாவை மிகச் சிறப்புடன் நடத்தி வருகின்றனர்.

புதுக்கோட்டை தட்சிணாமூர்த்திட ஆச்சாரியார் (1901 – 1956):

புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி ஆச்சாரியார் நகை வேலை செய்யும் வையாபுரி ஆச்சாரியார். மங்களத்தம்மாவின் நான்காவது பிள்ளையாக 1901இல் பிறந்தார். அய்யாக்கண்ணு ஆசாரியார், கதிர்வேல், சந்திராச்சாரியார், ஒரு சகோதரி என்பவர்கள் உடன் பிறந்தவர்கள் ஆவர். ஆறு வயதில் தட்சிணாமூர்த்தி பிள்ளையிடம் குருகுலவாசத்தில் மிருதங்கப் பயிற்சியைத் தொடங்கினார். 15 வயது வரை கற்றார். மிருதங்கம், கஞ்சிரா பயிற்சிகளைப் பெற்றார். குருவுடன் இசை நிகழ்ச்சிகளுக்குச் செல்வார். மாலை நேரத்தில் குரு கஞ்சிரா இசைக்க மாணவன் தாளம் போடுவார்.

குருவே சீடனுக்குத் திருவரங்கம் நாச்சியார் அம்மையாரை மணம் முடித்து வைத்தார். புதுக்கோட்டை யிலிருந்து திருச்சிக்கு நிரந்தரமாகக் குடியேற்றினார். ஆச்சாரியார் நாச்சியார் தம்பதியினருக்கு நீலாம்பாள், கனகாம்புஜம், விஜயலட்சுமி என்ற மூன்று பெண் குழந்தைகளும் ஒரு ஆண் குழந்தையும் பிறந்தனர். ஆண் குழந்தை நான்கு வயதில் இறந்துவிட்டது.

ஆலத்தூர் வெங்கடேசு அய்யரின் கச்சேரியில் ஆச்சாரியார் வாசித்து வந்தார். பலரின் இசை நிகழ்வுகளில் குரு கஞ்சிரா இசைக்க மாணவர் மிருதங்கம் இசைத்தார். சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, திருப்பாம்புரம் சுவாமிநாத பிள்ளை, அரியக்குடி இராமானுஜ ஐயங்கார், டைகர் வரதாச்சாரியார், மதுரை மணி ஐயர், மன்னார்குடி கோபால்சாமி பிள்ளை போன்றோரின் நிகழ்வுகளுக்கு ஆச்சாரியார் மிருதங்கம் இசைத்து வந்தார்.

குரு தட்சிணாமூர்த்தி பிள்ளை அவர்களின் ஜீவ சமாதியில் ஆலயம் எழுப்பி வழிபட எண்ணினார். குருநாதர் கோவில் கட்ட குருநாதரின் பிள்ளை சுவாமிநாதனும் ஆச்சாரியாரும் புதுக்கோட்டையில் எம்.கே.தியாகராஜ பாகவதரின் வள்ளித் திருமணம் நாடகம் நடத்திட ஏற்பாடு செய்தார்கள். அன்று புயலும் மழையும் சேர்ந்து அடித்தது. நிகழ்ச்சி நின்றுவிட்டது.

குரு அவர்களின் 60 ஆம் வயது திருமண நாளின் பொழுது சீடர் ஆச்சாரியார் குருவின் அனுமதியோடு பர்மாவில் இருந்தார். சீடர் அனுப்பிய சீர்வரிசையில் உள்ள வேட்டி, துண்டு, புடவையை உடுத்திக் கொண்டு மணவிழாவில் அமர்ந்திருந்தனர்.

சென்னை சேட்டுவிடம் கூறி தனது மாணவனுக்கு ஆறு கஞ்சிரா ஒலிப்பதிவு ஆறு மிருதங்க ஒலிப்பதிவிற்கு ஏற்பாடு செய்து அதன் மூலம் வரும் ரூ.6,000/- தொகை வீடு வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்தார். குரு ஜீவ சமாதியடைந்த நாளன்று அவரைக் காண இயலாமல் பின்பு ஜீவ சமாதியைச் சென்று வழிபட்டார்.

எம்.கே.தியாகராஜ பாகவதரின் வளர்ச்சியில் ஆச்சாரியார் பங்கு கொண்டிருந்தார். ஆண்டுதோறும் திருச்சி எடத்தெருவில் இசை நிகழ்ச்சி நடைபெறும். அதில் ஒருமுறை மதுரை சோமு அவர்களின் இசை நிகழ்ச்சி ஏற்பாடாகி இருந்தது. ஆச்சாரியார் கஞ்சிரா வாசிக்க வேண்டுமென சோமு ஆசைப்பட்டார். உடல் நிலையும் பொருட்படுத்த முடியாமல் மேடைக்குச் சென்றார். வாசிக்க முயடிாமல் பாதியில் வந்துவிட்டார். தனது இறுதி நேரம் நெருங்குவதை உணர்ந்து தனது மருமகன் தாயுமானவரை அழைத்து, தன் குடும்பக் கடமைகளை நிறைவேற்றி விட்டேன். புதுக்கோட்டை ஐயாவின் ஜீவ சமாதியைக் கோயிலாக்க வேண்டும். புதுக்கோட்டை பராம்பரியத்தை வளர்க்க வேண்டும்

என்றார். 1956 ஆம் வருடம் கார்த்திகை மாதம் முதல் பிறைதோஷ நாளில் இறைவனடி சேர்ந்தார். திருச்சி குப்பைத்தொட்டி மாணிக்க சுவாமிகள் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டார்.

புதுக்கோட்டை சுவாமிநாத பிள்ளை (10.01.1912 - 08.02.1969):

புதுக்கோட்டை சின்மியானந்தா மௌன குரு சுவாமிகள் என்ற அழைக்கப்பெற்ற தட்சிணாமூர்த்தி பிள்ளைக்கும் மூத்தமகன் சுவாமிநாதன், இளைய மகள் வேலம்மாள். சுவாமிநாதன் 10.01.1912இல் பிறந்தார். 12வது வயதில் காஞ்சிபுரம் நயினாப்பிள்ளை கச்சேரியில் தட்சிணாமூர்த்தி பிள்ளை மிருதங்கமும், சுவாமிநாதபிள்ளை கஞ்சிராவும் வாசித்தனர். இதுவே சுவாமிநாதபிள்ளையின் முதல் இசை நிகழ்வாகும். இண்டர் மிடியேட் வரை படித்துள்ளார்.

16வது வயதில் ஆலந்தூர் வெங்கடேச ஐயர் இசை நிகழ்வில் வாசித்தார். 20வது வயதில் மதுரை மணி ஐயர் இசை நிகழ்வில் பாலக்காடு மணி ஐயர் மிருதங்கம் சுவாமிநாதன் கஞ்சிரா இசைத்தனர். மூன்று மணி நேரம் தனி ஆவர்த்தனம் இசைக்கப்பட்டது. சென்னை மியூசிக் அகாடமியில் வலங்கைமான் சண்முகசுந்தரம் தவிலிசையோடு இணைந்து சித்தூர் சப்பிரமணிய பிள்ளை நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். தம்புரா வாத்திய சுருதிக்குத் தனி ஆவர்த்தனம் செய்தார். முன்னணி இசைக் கலைஞர் பலர் நிகழ்ச்சிகளில் கஞ்சிரா வாசித்துள்ளார். மதுரை சோமுப்பிள்ளையின் ஏராளமான நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டுள்ளார்.

சுவாமிநாதபிள்ளைக்கு மூன்று மனைவிகள். முதல் மனைவி சாரதாம்பாள் (அத்தை மகள்). இரண்டாவது மனைவி கமலாம்பாள். மூன்றாவது மனைவி அம்சவள்ளி. முதல் மனைவிக்கு ஒரே மகள். பெயர் பாப்பா. இரண்டாவது மனைவிக்கு இரண்டு மகன்கள். ஒரு மகள். மகன்கள் மிருதங்க, கஞ்சிரா வித்வான்களாவர். மூன்றாவது மனைவிக்கு இரண்டு மகன்கள். ஒரு மகள். மூத்தவர் இராமு கஞ்சிரா வித்துவான். இரண்டாம் மகன் யோகானந்தம் கஞ்சிரா வித்துவான்.

தந்தையின் கண்டுபிடிப்பான சட்காலக் கோர்வையை ஐந்து தாளங்களில் இசைத்துப் பிரபலப்படுத்தினார். மாணவர்கள் பலரை உருவாக்கியுள்ளார். 08.02.1969 தை மாதம் சஷ்டி திதியில் உயிர் நீத்தார். தனது தந்தை பிள்ளை அவர்களின் குரு பூசையை

வைகாசி மாதம் சஷ்டி திதி ஆயில்ய நட்சத்திரத்தில் புதுக்கோட்டையில் நடத்தினார். இம்மரபினர் புதுக்கோட்டையில் தொடர்ந்து குருபூசையை நடத்தி வருகின்றனர்.

திருச்சி தாயுமானவன் 6.10.1929:

திருச்சி தாயுமானவர் ஏரண்டபுரி என்ற கொட்டையூரில் 6.10.1929இல் ஆச்சாரியார் குலத்தில் இராசு என்பவரின் மகனாகத் தோன்றினார். இவருடன் பிறந்தவர்கள் மூவர். கோவிந்தராசன், தங்கவேல், பாலசந்தர். தந்தையாரும் உடன் பிறந்தவர்களும் இசைக் கலைஞர்கள். பாட்டுத் துறையில் வல்லவர்கள். கும்பகோணம் மிருதங்க வித்துவான் இராஜப்ப ஐயரிடம் மிருதங்கப் பயிற்சி பெற்றார். புதுக்கோட்டை தட்சிணாமூர்த்தி ஆச்சாரியார் ஒருமுறை கும்பகோணத்திற்கு வந்திருந்தார். குருவான வீட்டில் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த தாயுமானவனைத் திருச்சிக்கு அழைத்துக் கொண்டு வந்து விட்டார். அவர்களிடம் 12 வருடம் குருகுல வாசப் பயிற்சி பெற்றார். குருவோடு இணைந்து இசை நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டார்.

குருவின் மகள் கனகாம்புஜ அம்மையாரை 1952 ஆம் ஆண்டு திருமணம் செய்து கொண்டார். தட்சிணாமூர்த்தி பிள்ளை அவர்களின் பெருமையையும் சிறப்பையும் குருவின் மூலம் அறிந்தார். புதுக்கோட்டைப் பாணி தழைத்தோங்க பாடுபட்டு வருகிறார்.

தட்சிணாமூர்த்தி பிள்ளையின் குருபூசை விழாவில் பெரும் பங்கு கொண்டு வந்தார். திருச்சி பெரிய கம்மாளத்தெருவில் காமாட்சி அம்மன் கோவிலில் குருபூசை நடைபெறும். இசை நிகழ்வுகளை ஏற்பாடு செய்து வந்தார்.

பிள்ளை அவர்களின் சமாதியைக் கோயிலாக்க வேண்டும் என்று ஆச்சாரியார் ஆசைப்பட்டு, முயற்சி செய்து, தோல்வி கண்டமையை உணர்ந்து இதனைத் தான் முடிக்க வேண்டும் என்று ஆசை கொண்டார். குருபூசை நிகழ்வின் பொழுது ஆண்டுதோறும் ரூ.101/- வழங்கி வந்தார். ஒருமுறை இதனை ஆச்சாரியார் வாங்க மறுத்தார். கனகாம்புஜம் அம்மையார் மன்றாடி கேட்டுக் கொண்டும் மறுத்தார். வாங்க மறுப்பதின் காரணத்தை வினவினார். கூறவில்லை. இந்தக்

கோயில் பக்கத்திலேயே நான் தனியே குருபூசை நடத்துவேன் என்று ஆவேசப்பட்டுக் கனகாம்புஜம் அம்மையார் கூறினார். ஆச்சாரியார் ஏற்றுக்கொண்டார். 1956இல் ஆச்சாரியார் காலமானார். 1956 முதல் ஆண்டுதோறும் குருபூஜையைத் தாயுமானவனும் இவரின் மாணவர்களும் நடத்தி வருகின்றனர். இவ்வாண்டில் 10.6.2016 வெள்ளிக்கிழமை அறுபதாம் ஆண்டு குருபூசை இசை விழாவை நடத்தினர்.

தனது மாமாவின் நெடிய ஆசையான புதுக்கோட்டை பால்பண்ணை அருகில் உள்ள குருவின் சமாதியை ஆலயமாக்கும் திருப்பணியில் 1980இல் தொடங்கினார். 21.1.1981இல் ஆலயம் எழுப்பி திருக்குடமுழுக்குச் செய்துள்ளார். மீண்டும் 71வது ஆண்டில் மணி மண்டபம் கட்டி கும்பாபிஷேகம் செய்துள்ளார். தனது மாமனாரின் குருவின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து, பலவித்துவான்களிடம் கடிதம் பெற்று "புதுக்கோட்டை மிருதங்கம், கஞ்சிரா வித்வான் ஸ்ரீமான் தட்சிணாமூர்த்தி பிள்ளை அவர்களின் வாழ்க்கை வரலாற்று" நூலை 1989 வெளியிட்டார். இந்நூலின் இரண்டாம் பதிப்பையும் 2013இல் வெளியிட்டுள்ளார். குருபூஜை விழாவைப் பெரிய இசை விழாவாக நடத்தி வருகிறார். இவ்வாண்டு விழாவிற்கு, கிளாரினெட் எவரெஸ்டு திருமிகு A.K.C.நடராஜன் தலைமை தாங்கினார். இசை இயக்குநர் நெல்லை சுப்பிரமணியன், சென்னை சங்கீத வித்துவான் K.R.சாரநாதன் இவருக்கும் குருப்பிரியாலய வித்யாலயா அறக்கட்டளை சார்பாகப் பொற்கிழியும் வழங்கினர். இந்நிகழ்வில் திருவையாறு தியாகப்பிரும சபையின் செயலாளர் மிருதங்க மேதை ஸ்ரீமுஷ்ணம் இராஜாராம் கலந்து கொண்டு உரை ஆற்றினார். இந்நூலாசிரியருள் ஒருவராகிய சண்முக. செல்வகணபதியும் கலந்து கொண்டு உரையாற்றினார்.

காஞ்சி காமகோடி பீட ஆஸ்தான வித்துவான், ஆச்சாரிய ரத்தினம், கலைமாமணி ஆர்.தாயுமானவரின் மாணவர்கள் உலகெங்கும் சிறப்புடன் உள்ளனர். தாயுமானவரின் 90ஆம் அகவை இரு ஆண்டுகளில் வர உள்ளது. இந்நிகழ்வில் தாயுமானவருக்குக் குருப்பிரியாலய வித்யாலயா சார்பில் கனகாபிடேகம் செய்து கொண்டாட உள்ளனர். இந்நூலாசிரியர் இவரின் வரலாற்றை நூலாக்கித் தர உள்ளனர்.

புதுக்கோட்டை ஸ்ரீலஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை அவர்களால் உருவாக்கப்பட்ட மோரா

மோராவின் அமைப்பு 8 ஆவர்த்தனம்

சதுஸ்ர ஜாதி திருபுடை தாளம்

கிடதகதி தாங்குடு தகதரிகிடதக
தாங்கிடுதகதரிகிடதக தகதரிகிடதக
தீத்தாங் கிடு தகதரிகிடதக
கிடதகதி தாங்கிடு தகதரி கிடதக
தாங்கிடுதகதரிகிடதக தகதரிகிடதக
தளாங்குதிந்த தாம் தத்தளாங்திந்ததாம்

கிடதகதி தாங்குடு தகதரிகிடதக
தாங்கிடுதகதரிகிடதக தகதரிகிடதக
தீத்தாங் திடு தகதரிகிடதக
கிடதகதி தாங்கிடு தகதரி கிடதக
தாங்கிடுதகதரிகிடதக தகதரிகிடதக
தளாங்குதிந்த தாம் தத்தளாங்திந்ததாம்

கிடதகதி தாங்கிடு தகதரி கிடதக
தாங்கிடுதகதரிகிடதக தகதரிகிடதக
தித்தாங் கிடுதகதரிகிடதக
கிடதகதி தாங்கிடுதக தரிகிடதக
தகதரிகிடதக தளாங்குதிந்ததாம்

கிடதகதி தாங்கிடுதகதரிகிடதக
தாங்கிடுதகதரிகிடதக தகதரிகிடதக
தளாங்குதிந்ததொம் கிடதகதி தாங்கிடு
தகதரிகிடதக தாங்கிடுதக தரிகிடதக
தகதரிகிடதக தளாங்குதிந்ததொம்
கிடதகதிதாங்கிடு தகதரிகிடதக
தாங்கிடுதக தரிகிடதக தகதரிகிடதக
தளாங்குதொம் தளாங்குதாம் தாங்கு
தளாங்குதொம் தளாங்குதொம் தாங்கு
தளாங்குதொம் தளாங்குதொம் தொம்

புதுக்கோட்டை ஸ்ரீலஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை அவர்களால் உருவாக்கப்பட்ட கோர்வை

சரஸ்வதி ஜாதி திரிபுடை தாளம்

தத்	தீ	தா	கிடதகதரிகிடதொம்
	தீ	தா	கிடதகதரிகிடதொம்
		தா	கிடதகதரிகிடதொம்
			கிடதகதரிகிடதொம்
			தகதரிகிடதொம்
			தத்தின "ததின"
			தத்தின "ததின"
			தத்தின "ததின"

தா	தீ:	கீ:	ண:	தொம்:		கண்டம்
	தா	தீ:	கீ:	ணா	தொம்:	சவுக்கம்
		ததிகிணதொம் தா				மத்யமம்
		ததிகிணதொம்				துரிதகாலம்

நாட்டியக் கலைக்கொண்டல் குத்தாலம் எஸ்.கணேசன்பிள்ளை (1906 - 1979)



கலைகளில் மிக உயர்ந்ததாகக் கருதப்படுவது பரத நாட்டியக் கலையாகும். இது என்று தோன்றிற்று என்று அறுதியிட்டுச் சொல்ல முடியாத பழமை வாய்ந்தது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் கற்றளிகள் தோன்றிய காலத்திலேயே இறை வழிபாட்டின் முக்கிய அங்கமாக நாட்டியம் இருந்து வந்துள்ளது. அடுத்து அரசவைகளிலும் பின்னர் பொது மேடைகளிலும் பரதக்கலை வழங்கப்பட்டும் வளர்க்கப்பட்டும் வந்துள்ளது. இத்தகு சிறப்புப் பெற்ற ஆடற்கலை நட்டுவ ஆசான்களாலும், கலைஞர்களாலும் வளர்க்கப்பட்டு வருகின்றது. நாட்டிய ஆசான்களில் இசைக் கலைஞராகவும், நாட்டிய வகைகள் பலவற்றைக் கற்பித்தவராகவும், சிறந்த மிருதங்க, கஞ்சிரா, ஆர்மோனியக் கலைஞராகவும் திகழ்ந்தவர் நாட்டியக் கலைக்கொண்டல் குத்தாலம் எஸ்.கணேசன்பிள்ளை ஆவார். இவரின் நாட்டியப் பணி பற்றி காண்போம். இக்குடும்பத்தார் பந்தணைநல்லூரைச் சார்ந்தவர்கள். பின்பு குத்தாலத்திற்குக் குடிபெயர்ந்தனர்.

பந்தணைநல்லூர் பெயர்க்காரணம்:

பந்தணை நல்லூர் தேவாரப்பாடல் பெற்ற தலமாகும். காவிரி வடகரைத் தலமாகும். இறைவன் பெயர் பசுபதீசுவரர், இறைவி பெயர் வேணுபூஜாம்பிகை, கம்பன தோளியம்மை.

தலமரம் சரக்கொன்றை, தீர்த்தம் சூரிய தீர்த்தமாகும். இத்தலம் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற தலமாகும்.

இவ்வூர் பந்தணைநல்லூர் என்று பெயர் வந்ததற்கான காரணம் பின்வருமாறு கூறப்படுகின்றது. உமையம்மை பந்து கொண்டு விளையாட விரும்பினாள். இறைவன் நான்கு வேதங்களைப் பந்தாக்கித் தந்தார். இறைவி இப்பந்தை மிக விருப்பமுடன் விளையாடினாள். இரவு வரும் நேரம் வந்தது. சூரிய தேவன் உமையின் ஆர்வம் கண்டு அத்தமிக்காதிருந்தான். கால நிலை மாறுபட்டது. தேவர்கள் இறைவனிடம் முறையிட்டனர். இறைவன் அவ்விடத்திற்கு வந்தார். அவரையும் கவனியாது உமை விளையாடினார். அஃதறிந்த இறைவன் கோபமுற்று அப்பந்தைத்தன் திருக்காலினால் எற்றிட்டார். பந்தைக் காணாத உமை இறைவனைக் கண்டு வணங்கினார். இறைவன் அம்மையைப் பசுவாகச் சபித்தார். சாபவிமோசனம் வேண்டி கொன்றை உள்ள இத்தலத்தில் தன்னைப் பசு நிலையில் வந்து வழிபடுமாறும் கூறினார். உமை பசுவானாள். அண்ணன் திருமால் ஆயன் ஆனார். பசு காமதேனுவாகிய கண்வர் ஆசிரமத்தில் இருந்தது. புற்று உருவில் இருந்த சிவனுக்குப் பால் சொரிந்து வந்தது. இதனை அறிந்த கண்வர் பசு பால் சொரியும் இடம் வந்தார். பசுவை அடிக்க ஓங்கியபோது புற்றில் இருந்து இறைவன் தோன்றினார். பசுவிற்குப் பதியாக இறைவன் வந்து ஆட்கொண்ட தலம் இதுவாகும். இன்றும் பசுவின் குளம்புச்சுவடு இறைவன் திருவுருவில் காணப்படுகிறது.

பந்தணைநல்லூர் நாட்டியக் கலைஞர்கள்:

முதலாம் இராசராச சோழன் தஞ்சையில் ஆடல் பணிபுரிய அமர்த்திய பெண்களில் பந்தணைநல்லூர் நக்கன் அறிஞ்சியும் ஒருவள் ஆவாள். விஜயராகவ நாயக்க மன்னரின் அரசவைக் கலைஞராகவும், கவிஞராகவும் விளங்கிய பசுபுலேடி ரங்கா ஜம்மா சிறந்த நடனக் கலைஞராக இருந்தார். இவர் இவ்வூரில் திருமால் கோயில் கட்ட வழி கோலினார். மராட்டிய மன்னர்கள் காலத்தில் ஷாஜி அரசவைக் கலைஞராக முத்தையா நட்டுவனார் I விளங்கினார். முத்தையா நட்டுவனார் II *(1822 - 1881)* மகன் சூர்யமூர்த்தியின் மகனாக பந்தணைநல்லூர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பிறந்தார். இவ்வாறு நீண்ட நெடிய நாட்டிய மரபினர் பந்தணைநல்லூரில் இருந்தனர்.

பந்தணைநல்லூர் நட்டுவனார் மரபு:

பரதத்திற்கோர் பந்தணைநல்லூர் என்று போற்றப்படும் பந்தணைநல்லூர் பசுபதி நட்டுவனார் மரபில் தோன்றியவர் குத்தாலம் கணேசன்பிள்ளை ஆவார். பந்தணைநல்லூரில் மூன்று பரத நாட்டிய மரபினர் இருந்தனர்.

1. முத்தையா நட்டுவனார் மரபினர் - இவர்களின் வழியில் வந்தவர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை ஆவார். இசைத் தமிழ் தொகுதி-1இல் இவர் வாழ்வும் பணியும் கூறப் பட்டுள்ளன.

2. சேது நட்டுவனார் மரபினர் - இம்மரபில் வந்தவர் குமாரசுவாமி நட்டுவனார் ஆவார்.

3. பசுபதி நட்டுவனார் மரபினர் - இம்மரபில் தோன்றியவர் குத்தலாம் கணேசன்பிள்ளை ஆவார்.

பசுபதி நட்டுவனாரின் மகன்களாக நடராஜ நட்டுவனார், வைத்தியலிங்க நட்டுவனார், பிடில் சொக்கலிங்கம் பிள்ளை என்பவர்கள் விளங்கினர். இவர்கள் அனைவரும் நட்டுவப் பணியிலும் இசைப் பணியிலும் திகழ்ந்தனர். நடராஜ நட்டுவனாரின் வழிகாட்டுதலின்படி பசுவந்தணை கங்கைமுத்து நட்டுவனாரின் "நடனாதி வாத்திய ரஞ்சனம்" நூல் வெளியிடப் பட்டது.

நடராஜ நட்டுவனார் நாட்டிய நிகழ்ச்சிகளில் பாடும் இசைக் கலைஞராகவும் விளங்கினார். இதனால் இவரைப் பாடுவர் நடராஜன் என்றனர். பந்தணைநல்லூரில் உள்ள பசுபதீசுவரர் கோயிலில் பாடும் சேவகமும் செய்து வந்தார். இதனால் இவர் குடும்பத்திற்குப் பாடுவார் மனையும், பரிவட்டம் கட்டும் கவுரவமும் அளிக்கப்பட்டன. இக்குடும்பத்தில் தோன்றி 7.1.2012 அன்று தனது 96 வயதில் மறைந்த பிடில் வித்வானான எங்களது முன்னோர் பி.எஸ்.வைத்தியலிங்கம் அடிக்கடி தன் குடும்ப மரபினைப் 'பாடுவார் குடும்பம்' என்று குறிப்பிடுவார்.

பந்தணைநல்லூரில் பசுபதி நட்டுவனாரின் இரண்டாவது மகன் வைத்தியலிங்க நட்டுவனார் ஆவார். வைத்தியலிங்க நட்டுவனாரின் மகன் சின்னையா நட்டுவனார் ஆவார் (1889 -

1925). இவர் நட்டுவனராக இருந்ததோடல்லாமல் மிகச்சிறந்த பாடகராகவும், நாடகக் குழுவினரின் வாத்தியாராகவும் விளங்கினார். இவரைப் பாடுவார் சின்னையா என்றும் அழைப்பர். இவர் வாசித்த ஆர்மோனியமும் நாடகப் பொருள்களும் இருந்தன என்று இவரது மகன் பிடில் வித்துவான் வைத்தியலிங்கம் எங்களிடம் கூறியுள்ளார். சின்னையா நட்டுவனார் திருவீழிமிழலை முத்துக்குமாரப் பிள்ளை குடும்பத்தில் தோன்றிய மனோன்மணி என்ற அம்மாளைத் திருமணம் செய்து கொண்டார். இவர் காலத்திலேயே பந்தணைநல்லூரிலிருந்து குத்தாலத்திற்குக் குடும்பம் குடிபெயர்ந்தது. குத்தாலம் மயிலாடுதுறை செல்லும் பேருந்து சாலையில் அருணகிரிநாதர் தெருவில் இவர் வாழ்ந்த வீடு உள்ளது. சின்னையா மனோண்மணி அம்மாளுக்கு மகனாக 15.06.1906இல் கணேசன்பிள்ளை பிறந்தார். கணேசன்பிள்ளைக்குப் பின்பு அழகம்மாள், மற்றொரு பெண் (இளம் வயதிலேயே இறந்து விட்டார்), வைத்தியலிங்கம், நீலாம்பாள் என்கிற உடன்பிறப்புகள் பிறந்தனர்.

வைத்தியலிங்கம் பிள்ளை மயிலாடுதுறை வயலின் மேதை கோவிந்தராசன் என்பவரிடம் வயலின் கற்றார். திருவீழிமிழலை தனம்மாள் இவரது மனைவியாவார். இவர்களுக்கு 4 ஆண் பிள்ளைகள். 3 பெண் பிள்ளைகள் உள்ளர். இவர் தற்போது 7.1.2012 மார்கழி திருவாதிரை நாளன்று மறைந்தார். இவரது மகன் வெங்கடேசன் மிருதங்கக் கலைஞராகவும், பேரன் ஹரிஹரன் வயலின் கலைஞராகவும் உளர். இன்னொரு மகன் மணி என்பவர் மகன் உப்பிலி வயலினும், மகள் மனோண்மணி பரதமும் கற்று வருகின்றனர்.

அழகம்மாள் என்பவர் திருவாளபுத்தூர் தவில் கலைஞர் கோவிந்தராஜனின் மனைவியாவார். இவரது மகன் மிருதங்க ஆசிரியர் இராமமூர்த்தி ஆவார். இராமமூர்த்தியின் மகன்கள் செந்தில், சதீஷ்குமார் என்பவர்கள் சிறந்த மிருதங்கக் கலைஞர்களாக உள்ளனர். இவரது இன்னொரு தங்கை நீலாம்பாள் இந்நூலாசியருள் ஒருவராகிய சண்முக.செல்வ கணபதியின் மாமியாராவார்.

இசைப்பயிற்சி:

குத்தாலம் கணேசன்பிள்ளை இளமையில் நாககரப் பயிற்சிக்குத் திருவிடைக்கழி இராசப்பா பிள்ளையிடம் அனுப்பி

வைக்கப்பட்டார். திருவிடைக்கழி இராசப்பா பிள்ளை சண்முக.செல்வகணபதியின் தந்தையின் அண்ணன் ஆவார். நாகசுரம் கற்றுக் கொள்வதற்கு முன்பே தந்தையார் மூலம் இசைப் பயிற்சிகளைக் கணேசன் பெற்றிருந்தார். நாகசுரம் கற்பதில் விருப்பம் இல்லாமல் குத்தாலம் திரும்பினார்.

பின்பு மாயூரம் குப்புசாமி பிள்ளையிடம் மிருதங்கப் பயிற்சி பெற்றார். குப்புசாமி பிள்ளை குத்தாலத்தில் தங்கி இருந்தமையாலும் இவரது வீட்டிற்கு அடுத்த வீட்டில் மிருதங்க மாமேதை குத்தாலம் சிவவடிவேலுப் பிள்ளை வாழ்ந்தார். இதனால் மிருதங்கம் பயிலும் ஆர்வத்தில் ஈடுபட்டார். நன்கு பயிற்சி பெற்றார். பிற்காலத்தில் இவரது நட்டுவப்பணி திறமான கணக்கு வழக்கோடும், இலயக்கட்டுக் கோப்போடும் விளங்கியமைக்கு இப்பயிற்சிகள் பெரிதும் துணைபுரிந்தன. ஓய்வு நேரங்களில் மிருதங்கப் பயிற்சி மேற்கொள்வதனை வாழ்நாள் வரை இவர் மேற்கொண்டார். இவரும், சிவவடிவேல் பிள்ளையும் பெரும் முயற்சி செய்து இவர்கள் வசித்து வந்த தெருவிற்கு அருணகிரிநாதர் தெரு என்று பெயரிட ஏற்பாடு செய்தனர்.

கணேசனின் குடும்பம் பாடுவார் குடும்பமாகும். தனது தந்தையாரிடம் இசைப் பயிற்சியைப் பெற்றார். இப்பயிற்சியை மேன்மேலும் வளர்த்துக் கொண்டார். தன் இல்லத்துச் சொத்தான ஆர்மேனியப் பெட்டியின் மூலம் தனது இசை வளத்தை மேம்படுத்திக் கொண்டார். பிற்காலத்தில் பலருக்கு இசைப் பயிற்சியும் அளித்தார். சிறந்த திரை இசை அமைப்பாளர் எம்.எஸ்.விசுவநாதனுடன் நெருங்கியத் தொடர்பு கொண்டு பலருக்கு இசைப் பயிற்சியும் அளித்தார். எம்.எஸ்.விசுவநாதன் இல்லத்திற்கே சென்று அவர் தம் மகளுக்கு இசைப் பயிற்சியும், நாட்டியப் பயிற்சியும் அளித்து வந்தார்.

நாட்டியப் பயிற்சி:

இவரது பெரிய தந்தையார் பந்தணைநல்லூர் நடராஜ நட்டுவனார் ஆவார். இவர் "நட்டுவ மும்மூர்த்திகள்" என்று அழைக்கப் பெறுபவர்களுள் ஒருவரான காட்டுமன்னார் கோவில் முத்துக்குமரப் பிள்ளையின் ஆசிரியர் ஆவார். (மற்ற இருவர் பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, வழுவூர் இராமையா பிள்ளை) நடராஜப் பிள்ளையிடம் கணேசன்பிள்ளை நாட்டியப்

பயிற்சியைப் பெற்றார். தனது தந்தை சின்னையா நட்டுவனார் மூலம் மேல் பயிற்சியைப் பெற்றார். இருபதாவது வயதில் நட்டுவனார் ஆனார். சிறப்பான இசைப் பயிற்சி, நுட்பமான இலயப்பயிற்சி, நட்டுமுட்டுக்கு ஏற்ற முட்டுப்பயிற்சி, பின்பு நட்டுவப் பயிற்சியையும் பெற்றார். இத்திறன்களோடு நல்ல இயல் பயிற்சியையும் பெற்றிருந்தார். ஆடலுக்கு ஏற்ற இயல், இசை, நாடகம், ஆடல், இலயக் கட்டுக்கோப்பு, இசை நாட்டிய இலக்கணப் பயிற்சி பெற்றவராக இளமையிலேயே கணேசன் திகழ்ந்தார்.

சென்னை வாழ்வு:

இவரது 20வது வயதில் தந்தையார் இறந்ததால் குடும்பப் பொறுப்பேற்றார். தனது திறமைக்கேற்ற வாழ்க்கையை விரும்பினார். இதற்குக் குத்தாலம் வாழ்வு பெரிதும் துணை புரியாது என்று எண்ணி 11.06.1954 அன்று சென்னைக்குச் சென்றார். மயிலாப்பூரில் தங்கி பலருக்கு இசை, நாட்டியம், மிருதங்கம் பயிற்சிகளையும் அளித்தார். சிறப்பாகக் கஞ்சிராவும் வாசிப்பார். மயிலாப்பூரில் எண்.22, கச்சேரி தெருவில் வாடகை வீட்டில் தங்கி பயிற்சி அளித்தார். நல்ல கம்பீரமான தோற்றம் உடையவர். நெற்றியில் ஒரு ரூபாய் அளவிற்குக் குங்குமப் பொட்டு அணிந்து கொள்வார். அங்கவஸ்திரத்துடன் மணக்கும் வாசனைப் பொருள்களுடன் நடமாடுவார். தாராளமாகச் செலவு செய்வார். திருவீழிமிழலையிலிருந்து செல்வோர்க்குப் புகலிடமாக இவரது இல்லம் திகழ்ந்தது.

இல்லற வாழ்வு:

குத்தாலத்தில் இருக்கும் பொழுது இவருக்குத் திருமணம் நடந்தது. தஞ்சாவூர் நாணயக்கார செட்டித்தெரு பெரிய தம்பிப்பிள்ளை மகள் கௌரி அம்மாளை மணந்தார். இவர்களுக்குக் குழந்தை பேறு வெகு நாட்களாக இல்லை. இதனால் தனது தாய் பிறந்த திருவீழிமிழலையில் கல்யாணசுந்தரம் பிள்ளையின் சகோதரி சேது அம்மாளை மணந்தார். பின்பு மூத்த மனைவி கௌரி அம்மாள் மூலம் ஒரு பெண் மகவை ஈன்றார். மீனா எனப் பெயரிட்டார். மிகவும் செல்லமுடன் வளர்த்தார். தனது குழந்தைக்கும் நாட்டியப் பயிற்சி அளித்தார்.

வைத்தீசுவரன்கோவில் முத்துசாமி நட்டுவனாரின் மூத்த மகன் பாலுவிற்கு 1970இல் திருமணம் செய்து வைத்தார். திருமணம் குத்தாலத்தில் நடந்தது. பாலு தமிழ்நாடு அரசு கலைக் கல்லூரியில் பொருளாதாரத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றினார். இவர்களுக்கு ஒரு மகளும், மகனும் பிறந்தனர். உடல்நிலை சரியில்லாத நிலையில் பாலு இறந்தார். கணேசபிள்ளை வாழ்வில் இது பெரும் அதிர்வை ஏற்படுத்தியது. பின்பு மீனா தமிழ்நாடு அரசு கல்லூரிப் பணியாளராகப் பணி ஏற்று, சிறப்பாகப் பணிபுரிந்து பணி மேம்பாடும் பெற்று ஒய்வு பெற்றுச் சென்னை விருகம்பாக்கத்தில் வசித்து வருகிறார்.

நாட்டியப் பயிற்சி அளிக்கும் முறை:

கணேச நட்டுவனாரிடம் நாட்டியப் பயிற்சி பெறுவது மிகவும் கடினமாகவே இருக்கும். காலத்திற்கேற்றபடி வாழத் தெரியாதவர். நாட்டியப் பயிற்சி சரியில்லை என்றால் எவ்வளவு பெரிய வீட்டுப்பிள்ளையாயினும் தண்டிக்கத் தவறமாட்டார். முறையாகப் பயிற்சி வரும் வரை அடுத்த நிலைக்குச் செல்லமாட்டார். மாணவர்களுக்குத் தனித் தனியாகப் பயிற்சி அளிப்பார். மாணவர் அரைமண்டியில் அமராவிட்டால் விடமாட்டார். அரைமண்டியில் சில நேரங்களில் அரை மணி நேரத்திற்கு மேலாகவும் அமர வைத்துவிடுவார்.

நாட்டியப் பயிற்சிக்கு அங்கசுத்தம் தேவை. இதனை ஆங்கிகம் என்பர். இவை அங்கம், பிரத்யாங்கம், உபாங்கம் என மூவகைப்படும்.

அங்கம் :
தலை, மார்பு, பக்கங்கள், கைகள், இடை, பாதங்கள்.

பிரத்தியாங்கம் :
தோள்கள், மணிக்கட்டு, கரங்கள், கழுத்து, வயிறு, பின்பக்கம், முழந்தாள், முதுகு.

உபாங்கம் : இது இரு வகைப்படும்.

1. முகத்தில் உள்ளவை : கண், இமை, புருவம், விழி, கன்னம், மூக்கு, வாய், உதடு, பற்கள், நாக்கு, முகவாய், இதழ்.
2. ஏனைய உறுப்புகளில் உள்ளவை : குதிகால், பாத விரல்கள், கை விரல்கள்.

இவற்றை முறையாகக் கற்பிப்பார். இவரிடம் நாட்டியம் கற்றவர் பத்மஸ்ரீ பி.ஆர்.திலகம் ஆவார். திலகம் அம்மையார் குருநாதர் கற்றுத்தந்த முறையைப் பலமுறை எங்களிடம் நேரில் கூறியுள்ளார். கற்றுக் கொடுப்பதில் மிகவும் கவனம் செலுத்துவார். இடுப்பு நிமிர்ந்து அரைமண்டி சரியாக வரும்வரை விடமாட்டார். வீட்டில் உள்ள தூணில் என்னை நிற்க வைத்து நாடாவால் கட்டிவிடுவார். கடுமையாகப் பயிற்சி அளிப்பார்.

இவரிடம் நாட்டியம் பயின்றவர் காரைக்கால் திருமதி இந்திரா ராஜன். தனது குருநாதரின் பெரிய உருவத்தை வரைந்து தனது பூஜை அறையில் வைத்து வழிபட்டு வருகிறார். தஞ்சை பெரிய கோயில் கட்டிய ஆயிரமாவது ஆண்டு நினைவைப் போற்றும் ஒரு மாத கால நாட்டிய விழாவில் ஒரு நாள் தஞ்சை திலகர் திடல் நிகழ்வில் நிகழ்ச்சி இந்திரா ராஜன் தந்தார். எங்களைப் பார்த்ததும் எங்க வாத்தியார் வீட்டுக் குடும்பத்தார் வந்துள்ளமை எனக்குப் பெருமையாக உள்ளது. நானடைந்து வரும் இந்தப் பெருமைக்கும் கம்பீரத்திற்கும். என் குருநாதர் கற்றுத்தந்தவைகளே காரணமென ஒலிபெருக்கி வாயிலாக அனைவருக்கும் அறிவித்தார்.

கணேசன்பிள்ளையிடம் நாட்டியம் கற்றவர் இந்நூலாசிரியருள் ஒருவரான கற்பகத்தின் தாய் மாரிக்கண்ணு ஆவார். இவர் கணேசன்பிள்ளையின் சகோதரி நீலாம்பாளின் மகள் ஆவார். தஞ்சாவூர் சாமுகுட்டியாப் பிள்ளையின் மகள். தனது மாமா வீட்டில் தங்கி கல்வியும் நாட்டியப் பயிற்சியும் பெற்றவர். எவ்வளவு உறவுக்காரராக இருந்தாலும் கற்றுக் கொடுக்கும் ஆசிரியராக விளங்கும் பொழுது மிகவும் கண்டிப்புடன் இருந்தமையைப் பலமுறை எங்களிடம் கூறியுள்ளார்.

கச்சேரியின் பொருட்டு ஹைதராபாத் நகருக்கு அடிக்கடி செல்வார். அங்கேயே சில வாரங்கள் தங்கி விடுவார். அப்பொழுது வட இந்திய நடனக் கலைஞரான கிருஷ்ணராவ் என்பவரிடம் கதக் நாட்டிய முறையையும், ஹைதராபாத் நகரில் தங்கி இருந்த பொழுது குச்சுப்புடி, மணிப்புரி, கதக் நடனத்தையும், கேரளா நாட்டிற்குச் செல்லும் பொழுது மோகினி ஆட்ட முறையையும் கற்று, இவைகளைப் பலருக்குக் கற்பித்தும் வந்தார். திரைப்படங்களில் நடன இயக்குநராகவும் பணியாற்றினார். ராணி லலிதாங்கி, தங்கமலை ரகசியம்,

அம்பிகாபதி போன்ற சில திரைப்படங்களில் நடன இயக்குநராகப் பணிபுரிந்தார்.

நாட்டிய நாடக அரங்கேற்றம்:

கணேச நட்டுவனார் நடனம் அமைத்துத் தயாரித்த நாட்டிய நாடகங்கள் உள்ளன. வெள்ளியம்பலக் குறவஞ்சி, நாட்டிய நாடகத்தை நடத்தித் தந்தார். இலக்கணப்புலி பேரை ஜகந்நாத பண்டிதரால் இயற்றப்பட்ட "மல்லாபுரி மன்னர் ஸுரகுரு" என்ற நாடகம் ஆண்டுதோறும் திருக்கழுகுன்றத்தில் நடத்தினார். 1948இல் நின்று போனது. இதனைப் புதுப்பொலிவுடன் கணேசபிள்ளை அவர்கள் 25.12.1969 ஆம் ஆண்டு சென்னை இராஜா அண்ணாமலை மன்ற தமிழிசை மாநாட்டில் மீண்டும் நடத்திக் காட்டினார். இவர் சென்னை தமிழிசை சங்கத்தில் நடைபெறும் பண் ஆய்வுக் கூட்டத்தில் 1958, 1962, 1978 ஆண்டுகளில் பங்கேற்றுத் தன் கருத்துக்களைக் கூறி வந்துள்ளார்.

பெற்ற விருதுகள்:

4.10.1947 அன்று திருவாரூர் கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில் திருவாரூர் மக்கள் சார்பில் மிகச்சிறந்த முதுபெரும் இசைப் பாடலாசிரியர் தி.இலக்குமணப் பிள்ளை கரத்தால் தங்கப் பதக்கமும் நாட்டியக் கலைக் கொண்டல் என்ற பட்டமும் பெற்றார். இன்று வரை இப்பட்டம் இவர் பெயரோடு சேர்த்து அழைக்கப் பெறுகின்றது.

12.3.1948 அன்று மயிலாப்பூர் கபாலீசுவரர் ஆலயத்தில் நடைபெற்ற விழாவில் நாட்டியக் கலாஞான சிகாமணி என்ற விருது வழங்கப் பெற்றது.

8.3.1959 அன்று சென்னை இண்டியன் இன்ஸ்டிடியூட் ஆப் பைன் ஆர்ட்ஸ் நிறுவனத்தின் சார்பில் "பரத கலாநிதி" என்ற விருது வழங்கப் பெற்றது.

18.5.1961இல் குத்தாலம் அருணகிரிநாதர் விழாவில் "நட்டுவப் பேராசான்" என்ற விருது வழங்கப்பட்டது.

இவற்றைத் தவிர நாட்டியச் செல்வம், சித்திரசேனன் என்கிற விருதுகளையும் பெற்றிருந்தார். தமிழக அரசு

கலைமாமணி விருது வழங்க முன்வந்த பொழுது அதை ஏற்க மறுத்துவிட்டார்.

பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை பட்டங்கள், விருதுகள் போன்றவற்றை ஏற்காதது போல், இவரும், அரசின் விருதினை ஏற்கவில்லை. கலை என்பது மக்களுக்குத்தான் விருதுகளுக்கு இல்லை என்று அடிக்கடி கூறுவார்.

நிறுவனம்:

நடனம், இசை கற்பிக்கவும் நடனத்தில் பரத நாட்டியம், கதக், குச்சுப்புடி, மோகினி ஆட்டங்களைக் கற்பிக்கவும், இசையில் கர்நாடக இசை, இந்துஸ்தானி இசை, மிருதங்கம் கற்பிக்கவும் இந்திய கலாச்சாராக் கழகம் (Indian Cultural Academy) என்கிற நிறுவனத்தை நடத்தி வந்தார். மேலும் தனது வீட்டிலேயும் குறிப்பிட்ட ஒரு சிலரது வீடுகளுக்குச் சென்றும் இசை நாட்டியப் பயிற்சி அளித்து வந்தார். இந்தியாவின் பல மாநிலங்களுக்கும் சிங்கப்பூர், மலேசியா, யாழ்ப்பாணம் சென்று நிகழ்ச்சிகளை நடத்தி வந்தார்.

மாணவர்கள்:

குத்தாலம் கணேசம்பிள்ளை மாணவர்கள் பலர் தலைச்சிறந்த நட்டுவனார்களாகவும் இசை வாணர்களாகவும் விளங்கி வருகின்றனர். திருவாளபுத்தூர் முத்துலட்சுமி, பேராசிரியர் க.அன்பழகனின் அக்காள் மகள் இராஜம் பி.இ., பத்மஸ்ரீ விருது பெற்ற திருவாரூர் பி.ஆர்.திலகம், குழலிசை மேதை டி.ஆர்.நவநீதம், நடிகர் கே.சாரங்கபாணியின் மகள் விஜி என்கிற விஜயலட்சுமி, காரைக்கால் சாரதாம்பாள் சகோதரர் மகள் கௌளரி, திருமதி இந்திரா ராஜன், சிங்கப்பூர் பாஸ்கர் சாந்தா, தஞ்சை மாரிக்கண்ணு செல்வகணபதி, திருவீழிமிழலை மஞ்சுளா போன்றோரும், திருச்சி சொக்கலிங்கம் பிள்ளை மகன் இராதாகிருஷ்ணன் மற்றும் சிங்கப்பூர் மாலதி டொமினிக் போன்றோர் உளர்.

வர்ணம்:

குத்தாலம் கணேசன்பிள்ளையின் நாட்டிய பாணி என்பதனைப் பறைசாற்றும் பதவர்ணம் ஒன்று உள்ளது. இது குறுல்த்து ஒரு செய்தியை இந்நூலாசிரியருள் ஒருவராகிய

கற்பகம் தெரிவிக்கிறார். "கற்பகமாகிய நான் 11ஆம் வகுப்புப் படித்துக் கொண்டிருக்கும் பொழுது இளம் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசின் இயலிசை நாடக மன்றத்தின் சார்பில் நடைப்பெற்ற இளம் கலைஞர்களுக்கான போட்டியில் கலந்து கொண்டேன். போட்டியில் தெரி நான்கு இடங்களில் கச்சேரி நடத்திட வாய்ப்பு அளித்தனர். இதற்கான போட்டி நிகழ்வில் நான் கலந்து கொண்டேன். எனது தன் விவரக்குறிப்பில் எனது பாட்டனார் குத்தாலம் எஸ்.கணேசன் பிள்ளை என்று குறிப்பிட்டிருந்தேன். இப்போட்டியின் தேர்வுக்குழுவில் மிகச் சிறந்த நடன ஆசிரியர்களான தனஞ்செயன், இந்திரா ராஜன், சரசா போன்றோர் இருந்தனர். எனது தன் விபரக்குறிப்பைப் பார்த்ததும் நீ எவ்வகையில் கணேசன்பிள்ளையின் பெயர்த்தி என்று வினவினார். எனது உறவு முறையைக் கூறியதோடு என் தாயார் அவரிடம் நேரிடையாகப் பரதம் கற்றவர் என்றேன். உடனே அவர்கள் உன்னிடம் எதிர்பார்ப்பது என்னவாக இருக்குமெனக் கேட்டனர். உடன் நான் 'வட்டமிட்ட பொட்டழகன்' என்கிற இராகமாலிகை பதவர்ணம் என்றேன். எங்கே அதனையே இப்பொழுது நீ ஆடு என்றனர். நானும் ஆடிக் காட்டினேன். என்னைப் பாராட்டியதோடு 'கணேசன்பிள்ளையின் வாரிசு தான்' என்றனர். இதில் தேர்ந்தெடுக்கப் பெற்று சென்னை சங்கீத வித்வத் சபை, தியாகராய நகர் வாணி சபாவில் எனது நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அனைவரும் இவ்வர்ணத்தைக் கண்டு பாராட்டினார்.

'எனது நாட்டிய அரங்கேற்றம் 13.5.1989 அன்று தஞ்சையில் நடைபெற்றது. இசைப் பேரறிஞர்கள் க.பொ.கிட்டப்பாபிள்ளை, திரும்பாம்புரம் சண்முகசுந்தரம், பேராசிரியர் தனபாண்டியன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பொழுது எனது தாத்தாவின் பதவர்ணத்தை நான் ஆட வேண்டும் என்று எனது தந்தையார் விரும்பினார். இதற்காக எனது ஆசான் குரு ஹேரம்பநாதன் திருமதி.கோகிலாம்பாள் பெரும் முயற்சியை எடுத்தனர். இவ்வர்ணத்தைக் குத்தாலம் கணேசபிள்ளையின் துணை நட்டுவனராகவும் பாடகராகவும் விளங்கிய முத்துலட்சுமி அவர்களிடமும், எனது தாயாரிடமும் கற்று அதன் அடிப்படையில் பயிற்சி மேற்கொண்டு அரங்கேற்றத்தின் பொழுது ஆடினேன்.

இப்பதவர்ணம் தோன்றிய நிலை ஒரு சுவையான நிகழ்ச்சியாகும். எனது பாட்டியார் இருவர். ஒருவர் தஞ்சை கௌரி அம்மாள், மற்றொருவர் திருவீழிமிழலை சேது அம்மாள். பரிபாடலில் முருகனின் மனைவியரான வள்ளி தெய்வயானையின் போட்டி போல் இருவரிடையே சண்டை நடந்து கொண்டிருந்தது. அப்பொழுது சிதம்பரம் செல்வரத்தினம் பிள்ளை என் தாத்தாவுடன் உரையாடிக் கொண்டிருந்தார். இந்த சண்டையை மையமிட்டு ஒரு வர்ணத்தை உருவாக்கினார். செல்வரத்தினம் பிள்ளை மஞ்சள் சிகப்பு நிறமுள்ள திருமண பத்திரிக்கையின் பின்புறம் இவ்வர்ணத்தை எழுதினார். இதற்கு இசை நாட்டிய அமைப்பு, ஜதி அமைப்புகளையும், இயலமைப்பையும் கணேசன்பிள்ளை வடிவமைத்து நாட்டியப் பதவர்ணமாக்கி தனது மாணவிகளுக்குக் கற்பித்தார்.

பதவர்ணம்

இராம் : இராகமாலிகை **தாளம் : ஆதி**

பல்லவி

வட்டமிட்ட பொட்டழகன் கட்டழகன் கந்தசாமி
சட்டப்படி என் மணாளன் தான்டி – வாடிபோடி

அநுபல்லவி

தொட்ட நாளன்று என்னை விட்டகலேன் என்று சொல்லி கை
பட்டயம் வரைந்தது என் பெட்டிக்குள்ளே இருக்குது

முக்தாயிசுவர சாகித்தியம்

ஏண்டி அவர் வருவார் வருவார் என்று நீ என்னிடம் சொல்லி
மனம் புண்ணாகும்படி
செய்வதாலே உனக்கு என்ன லாபமோ குறும்புதனமோ
தலுக்கும் குலுக்கும் மினுக்கும் போதும் சேடி
என்னிடம் மோடி செய்யாமல் கோழி கூவும்முன் போய்
அருள்மிகு திருவடிக்கே மலர் கொண்டு அர்ச்சிதிடவே
அழைத்தேன் என்று அவரிடம் சொல்லி

சரணம்

காண கண்கள் தேடுதே காலம் வீணாகுதே

1. நேரம் என்னிடம் சற்று நேரம் பேச நல்ல நேரம்
வளர்ந்தாதிந்த நேரம் வரச் சொல்லடி (காண)


2. மாதெனது மனமா றுதலடையுமா இன்னும் சந்தேகமாகமா
நினைக்கத்தகுமா என்மேல் கோபமா கொள்வதாகுமா
மனமிசைந்த மாமன் மகனை (காண)

3. ஏமாந்தவள் நான் அல்லடி அவர் எங்கே சென்றாலும் போக விடனேடி
பூமான் மகனாய் இருந்தாலும் எனக்கென்னடி போடி இன்று
அழைத்தோடி வாடி என்றன் சேடி

4. மயிலை கற்பகத்தை மணம்முடித்த உயர் கயிலை
கபாலிமகன் கைவரிசை என்னிடம்
காட்டில் மிரட்டி என்னை ஒட்டிட அவங்க
பாட்டியாலும் ஆகாதென்று சொல்லடி
அயிலை கேட்டாள் சொல்லும் அது கண்டகாட்சி
அடுத்தாற்போல் இருக்குது சேவலும் சாட்சி
வஞ்சி எனது கோபம் மிஞ்சிபோகுமேயானால்
அஞ்சுதலை இடம் சொல்லி ஆறுதலை அடைய

இப்பதவர்ணத்தை இயற்றிய ஆசிரியர் யாரென்று புரியாமலேயே சிலர் குற்றலாம் கணேச அய்யர் எழுதியது என்று நூல்களில் எழுதியுள்ளனர். இது எங்கள் குடும்ப நிகழ்ச்சியால் தோன்றிய வர்ணம் என்பதனைப் பலரும் உணர்வர். கணேசன் பிள்ளை அவர்கள் சென்னையில் 6.4.1979 அன்று காலமானார். இவர் மறைந்தாலும் இவர் கற்றுத் தந்த நாட்டியப் பாணி நாட்டிய உலகில் இன்றும் வாழ்ந்து வருகிறது.

குத்தாலம் கணேசம்பிள்ளை மரபினர்



இசைப் பேரறிஞர் வழுவூர் இராமையாபிள்ளை (1910 - 1991)



வழுவூர் அட்ட வீரட்டத்தலங்களுள் ஒன்று. நாட்டிய மரபில் வழுவூர் மரபு மிகுந்த தொன்மை வாய்ந்தது. அட்ட வீரட்டத்தலங்களாக திருவதிகை திருக்கோவிலூர், குறுக்கை, திருக்கடவூர், திருக்கண்டியூர், திருப்பறியலூர், வழுவூர், விற்குடி உள்ளன. இவற்றில் வழுவூர் வீரட்டமும் ஒன்றாகும். இத்தலம் மீது தேவார மூவர் பாடிய பாடல்கள் கிடைக்கவில்லை. எனவே இது தேவார வைப்புத்தலமாகும். திருநாவுக்கரசர் அருளிய அடைவுத் திருத்தாண்டகத்திலும், சேத்திரக் கோவைத் திருத்தாண்டகத்திலும் வழுவூர் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேவிய வீரட்டாணம் வழுவை வீரட்டாணம்
மஞ்சார் பொதியின்மலை தஞ்சை வழுவூர் வீரட்டம்

திருஞானசம்பந்தர் அருளிய திருசேத்திரக் கோவையிலும் வழுவூர் இடம்பெற்றுள்ளது.

இத்தலம் சிவன் யானையை உரித்த நிலையைக் கூறும் தலமாகும். கஜசம்கார மூர்த்தியைச் சிறப்பாகக் கொண்ட தலம். கந்தபுராணத்தில் தட்சகாண்டத்தில் கஜசம்கார வரலாறு கூறப்பட்டுள்ளது.

ஐயன் மிக்கதன் கதிரினைக் குருதிநீர் அறாத
மையல் யானைவன் தோலை மேற்கொண்டனன் மறைத்தான்
செய்ய பானுவின் நடுவுறக் கவர்ந்துமே வியபோல் – கந்தபுராணம்

இதனால் இவ்வூர் "உரித்தான்பேட்டை" எனவும் வழங்கப் பெறுகிறது. சிதம்பர இரகசியம் பிரதிஷ்டைப் போல இங்கும் கஜசம்கார மூர்த்திக்குப் பின்னால் யந்திர பிரதிஷ்டை உள்ளது. யானையின் தலைமேல் கால் ஊன்றி இருக்கும். அதன் தோலைக் கிழித்தும் போர்த்தும் நிலையில் பெரிய திருவுருவத்தோடு கஜசம்காரமூர்த்தி விளங்குகிறார். அருகில் முருகப் பெருமானை இடுப்பில் கொண்டு உமையஞ்ச ஆனையை உரித்தத் திருவுருவத்தில் சிவன் காட்சியளிக்கிறார்.

கஜசம்கார நடனம் நவதாண்டவத்தில் ஊர்த்துவ தாண்டவமாகப் போற்றப்படுகிறது. நடன சபைகளில் ஞான சபையாகக் கருதப்படுகிறது. 48,000 மகரிஷிகள் இத்தலத்தில் தவம் செய்து ஞானோதயம் பெற்றனர். ஊரின் நடுவே கோயில் உள்ளது. இத்தலத்தில் பஞ்சபிரம்ம மகாபுண்ணிய தீர்த்தங்கள் உள்ளன.

வழுவூர் தளிச்சேரி பெண்டுகள்:

தஞ்சாவூர் மாமன்னர் முதலாம் இராசராசன் தஞ்சை பெருவுடையார் ஆலயத்தில் நாட்டியப்பணி செய்ய 400 தளிச்சேரி பெண்டுகளைப் பல்வேறு தலங்களிலிருந்து தருவித்துத் தஞ்சையில் அமர்த்தியமையைப் பெருவுடையார் ஆலயக் கல்வெட்டு மூலம் அறிய முடிகின்றது. இவர்கள் இன்னன்ன ஊர்களிலிருந்து வந்தவர்கள். இன்னின்ன கோயில்களில் ஊழியம் செய்தவர்கள் என்பதனையும் இக்கல்வெட்டு மூலம் அறிய முடிகின்றது. இவர்களில் எண்.165, 166இல் உள்ளவர் வழுவூர் அவனிய மதற்புரத்து நக்கன் துட்டி என்பவரும், படை விடை ஈஸ்வரத்து நக்கன் அரிகுலகேசரி என்பவரும் வழுவூரிலிருந்து தஞ்சைக்குத் தருவிக்கப்பட்டவர்களாக உள்ளனர். மேலும் 167, 168 இரண்டில் 167இல் ஊர்ப் பெயர் சிதைவுற்று உள்ளது. "...ந்தளிப்புகழ்மதி ஈஸ்வரத்து நக்கன் குலமான், இத்தளி நக்கன் கருமாணிக்கம்" இருவரும் வழுவூரைச் சார்ந்தவர்களாகவும் இருந்திட வாய்ப்புள்ளது.

இவ்வழுவூர் பரம்பரையில் உள்ள நட்டுவனார்களின் முன்னோர்கள் சோழர் காலத்தில் நாட்டிய ஆசான்களாக இருந்தனர் என்றும், இராசராச சோழனின் மகள் குந்தவைக்கு நடனம் கற்பித்ததாகவும் வழுவூர் இராமையா பிள்ளையின் மகனான மாணிக்க விநாயகம் எங்களிடம் தெரிவித்தார். இக்கருத்தைத் திரு.பி.எம்.சுந்தரம் அவர்களும் தமது "மரபு வழி

பரதப் பேராசான்கள்" என்ற நூலில் குறிப்பிட்டு இதற்குரிய ஆதாரங்கள் ஏதுமிருப்பதாகத் தெரியவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். இதில் மாணிக்கவிநாயகம் கூறிய கருத்துக்கு வளம் சேர்க்கும் சில விளக்கங்களைக் காண்போம்.

தளிக்சேரிப் பெண்டுகளைப் பற்றிக் கூறும் தஞ்சாவூர் பெருவுடையார் ஆலயக் கல்வெட்டில் எண்.401-406 குறிக்கப்படுபவர்கள் நடனம் கற்றுக் கொடுக்கின்றவர்களாகவும், நடனம் ஆடுபவர்களாகவும் விளங்குகின்றனர். இவர்களில் சிலர் சிறப்புப் பெயர் உடையவர்களாக விளங்குகின்றனர். இதில் இராசராசனின் விருதுப் பெயர்களில் ஒன்றான "மும்முடிச் சோழன்" என்ற பெயர் சிலருக்கு உள்ளது. இதேபோல இராசராசனின் மற்றொரு பெயரான "அருள்மொழி" என்ற பெயருடையாரும் உளர். அருள்மொழி என்பது மருவி அருமொழி என அழைக்கப்பட்டது. இதில் வழுவூருக்கு அருமொழி என்ற பெயரும் உண்டு. இவ்வூர் நட்டுவன் எண்.404இல்,

> "நட்டவம் செய்ய மேற்படி ஒன்றுக்கு அரையர் அபிமான
> தொங்கனான் அருமொழி நிர்த்த பெரையன்"

என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் வழுவூர் சயங்கொண்ட சோழவள நாட்டில் திருவழுந்தூர் நாட்டைச் சேர்ந்த கல்வெட்டுச் சாசனம் 418 of 1912இல் கூறப்படும் இந்நட்டுவனார்களில் ஒருவர் வழுவூரைச் சார்ந்தவராக இருக்க வாய்ப்புள்ளது. பெரிய கோயிலில் வழுவூர் நாட்டியப் பெண்களுடன் இவ்வூரைச் சேர்ந்த நட்டுவனாரும் வந்திருக்கலாம். இவர்கள் மூலம் இராசராச சோழன் மகள் குந்தவை நடனம் கற்றிருக்க வாய்ப்புள்ளது.

நட்டுவனார்கள்:

பரதக்கலையில் "வழுவூர் பாணி" என்ற ஒரு பாணியை அமைத்த பெருமை இவ்வூரில் தோன்றிய நட்டுவனார்களைச் சாரும். பரதக் கலையில் தமக்கென தனி முத்திரை பெற்றதுடன் இந்தியத் திருநாடெங்கும் பரதக் கலையை வளர்த்து இந்தியத் திருநாட்டிற்கு இந்த ஆசிரியர்கள் பெருமை சேர்த்துள்ளனர். நாட்டிய ஆசிரியர்களையும், நாட்டிய மணிகளையும் உருவாக்கிய தோடு நாட்டிய உருப்படிகள் பலவற்றையும் தந்துள்ளனர்.

1. பாடுவார் சாமுப்பிள்ளை - 1844 - 1903
2. வழுவூர் மாணிக்க நட்டுவனார் - 1867 -1949
3. வழுவூர் ராமய்யாப்பிள்ளை - 1910 - 1991
4. வழுவூர் பி.ராமதாஸ் - 1936 - 1996
5. வழுவூர் சாம்ராஜ் - 1938 - 2005
6. வழுவூர் பழனியப்பன் - 1961
7. வழுவூர் ஆறுமுக நட்டுவனார் -
8. வழுவூர் வீரப்ப நட்டுவனார் -

வழுவூர் நாட்டியப் பரம்பரையினர் குறித்து திரு.பி.எம்.சுந்தரம் அவர்கள் தகவலறிந்து தொகுத்துத் தந்துள்ளார். இவர் வழுவூர் என்பதனை வழிவூர் என்கிறார்.

வழுவூர் மரபினர்

வழுவூர் நாகப்பப்பிள்ளை

↓

வீரப்ப நட்டுவனார்
(நாகப்பப்பிள்ளையின் மகள் வழிப் பேரன்)

சாமு நட்டுவனார் | ஆறுமுகம் நட்டுவனார்

அம்மணி என்கிற நாகம்மாள் | கோவிந்தம்மாள் | பாக்கியம்மாள் | மாணிக்கம்

இராமைய்யாபிள்ளை | துரைக்கண்ணு அம்மாள் | இராஜம்மாள்

ஜயலட்சுமி | சாம்ராஜ் | குருமூர்த்தி | மாணிக்க விநாயகம் | பாக்கியம்

பாடுவார் சாமுப்பிள்ளை (1844 – 1903):

நாட்டிய நிகழ்ச்சிகளில் பாடும் திறம் பெற்றமையால் பாடுவார் சாமுப்பிள்ளை என்று அழைக்கப்பட்டார். பாடும் திறம் பெற்ற இவர் பின்பு நட்டுவனராகவும், சப்தங்கள்,

ஞானசபேசனைத் துதிக்கும் பாடல்கள், தில்லானாக்களையும் இயற்றியுள்ளார். மைசூர் மன்னர் சாமராஜ் உடையாரைப் போற்றும் விதமாக இவர் இயற்றிய சுருட்டி இராகத் தில்லானா மிகவும் பிரச்சித்தம் பெற்றது. இவருக்கு நாகம்மாள், கோவிந்தம்மாள், பாக்கியம் அம்மாள் என்ற மூன்று மகள்களும், மாணிக்கம் என்ற மகனும் உண்டு.

சாமுப்பிள்ளையிடம் நாட்டியம் பயின்ற இவரது மகள் நாகம்மாள் திறமை மிக்க நடனக் கலைஞராக விளங்கினார். மேலும் அலமேலு, மதுராந்தகம் ஜகதாம்பாள், ருக்மணி போன்ற நாட்டிய நங்கையர்களும் இவரிடம் நாட்டியம் பயின்றனர். இவரது மகன் மாணிக்கம் பிள்ளை பிற்காலத்தில் மிகச் சிறந்த நட்டுவனராக விளங்கினார்.

மாணிக்க நட்டுவனார் (1867 - 1949):

மாணிக்க நட்டுவனார் சாமு நட்டுவனாரின் ஒரே மகன். தந்தையிடம் பாடல் நட்டுவாங்கப் பயிற்சிகளைப் பெற்றார். இவரின் மனைவி தஞ்சை குப்புசாமி நட்டுவனாரின் மகள் நாகம்மாள். மாணிக்க நட்டுவனார் தஞ்சை குப்புசாமி நட்டுவனாரிடமும் பயிற்சிகளைப் பெற்றார். தந்தையின் மாணவி மதுராந்தகம் ஜகதாம்பாளின் நாட்டிய நிகழ்ச்சிகளுக்கு நட்டுவாங்கம் செய்தார். திரு.பி.எம்.சுந்தரம் இவரைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது மதுராந்தகம் ஜகதாம்பாளின் நாட்டியக்குழுவில் இவர் நட்டுவனாராகவும், இவரின் சிறிய தந்தையின் குமாரர் வழுவூர் சுந்தரம்பிள்ளை பாடுவாராகவும் இவரின் மைத்துனர் தஞ்சை சின்னையா நட்டுவனார் மிருதங்கக் கலைஞராகவும் சுமார் முப்பது ஆண்டுகள் இருந்தனர் என்கிறார். இவர் வழுவூர் இராமையா பிள்ளையின் நட்டுவாங்க வழி காட்டியாக அமைந்தார்.

வழுவூர் இராமைய்யாப்பிள்ளை (1910 - 1991):

சாமு நட்டுவனாரின் மகளான பாக்கியம் அம்மாளின் மகனாக 24.12.1910 அன்று இராமைய்யா பிறந்தார். இவருக்குத் துரைக்கண்ணு அம்மாள் (கதாகாலசேபக் கலைஞர்) இராஜம்மாள் என்ற இரு தமக்கையரும், நடேசபிள்ளை, மணிப்பிள்ளை, இராதா அம்மாள் (நடனக் கலைஞர்) என்ற தம்பி - தங்கையரும் உண்டு.

இவர் திருக்கழுக்குன்றம் துரைசாமி நட்டுவனார், காட்டுமன்னார்கோவில் முத்துக்குமார நட்டுவனார், தாய்மாமன் மாணிக்க நட்டுவனார்களிடம் நட்டுவாங்கப் பயிற்சி பெற்றார்.

நட்டுவனார் பணி:

இவர் மயிலாடுதுறை கூறைநாட்டுப் பகுதியில் ஒரு சிறு பெட்டிக்கடை வைத்திருந்தார். இவருடைய தங்கை இராதா திரைப்படத்தில் நடித்தார். கல்கத்தாவிற்கு இராதா திரைப்படத்தில் நடிக்கச் சென்ற பொழுது இவருக்குத் துணையாக இராமையா சென்றார். அங்கு ஒரு பாடலுக்கு நட்டுவாங்கம் செய்யும் சூழல் ஏற்பட்டபொழுது இராமையா நட்டுவாங்கம் செய்தார். முதல் நட்டுவாங்க நிகழ்வு திரைப்படத்தில் தொடங்கியது. இவரின் நட்டுவாங்கப் பணி மேலும் கலைத்திறன்களோடு இணைந்து திரைப்படங்கள் பலவற்றிற்கு நட்டுவாங்கம் செய்யும் அளவிற்கு உயர்ந்தது.

வழுவூர் பாணி:

வழுவூர் பாணி என்ற நாட்டிய பாணியை இராமையா மிகச் சிறப்புடன் உலகறியச் செய்தார். வழுவூர் பாணிக் குறித்து இவரது மகன் மாணிக்க விநாயகம் கூறும்பொழுது,

1. பழைய மரபுகளை மீறாமல் புதுமைகளைப் புகுத்தும் நிலை.
2. அடவுகளை ஜதீஸ்வரம், வர்ணம், பதம், தில்லானா போன்ற நாட்டிய உருப்படிகளில் அமைத்திடும் பாங்கு.
3. அடவிற்கு முக்கியத்துவம் தரும் அளவிற்கு நாட்டியத்தில் பாவத்திற்கு முக்கியத்துவம் தருவது.
4. ஜதிகளைக் கொணிப்பிக்கும் பொழுது பாவத்தோடு கொணிப்பித்தலும் பாவத்தோடு ஆடலும் (Grace) என்ற நிலையில், "கைவழி நயனம் செல்ல" என்று கம்பர் கூறுவது போல, ஜதிகளை ஆடும் பொழுது பாவத்தைக் காட்டல் இப்பாணியின் தலையாய நிலையாகும்.
5. ஜதிகளைக் கொணிப்பிக்கும் பொழுது குறில், நெடில், வல்லின, மெல்லின ஓசைகளை ஏற்ற இறக்கத்தோடு இராக பாவனையோடு கொணிப்பித்தல்.

6. ஜதிகளைக் கொணிப்பிக்கும் முறையில் உள்ள கம்பீரமும் நளினமும் கேட்போரைப் பிணிக்கும் தகையதாக அமைத்தல்.

7. நாட்டிய நிகழ்ச்சியின் தொடக்கம் முதல் இறுதி வரை காண்போர்க்குத் தொய்வு ஏற்படாத வகையில் சிகரத்தின் உச்சிக்கு அவர்களை மெல்ல மெல்ல அழைத்துச் செல்லும் பாங்கு போன்றவை வழுவூர் பாணியின் சிறப்பம்சமாகும்.

வழுவூர் நடன பாணி தனிரகமானது. இதில் இராமையா பிள்ளையின் கலைத்திறனையும் ஆளுமையையும் நன்கு காணலாம். இப்பாணியில் உள்ள சிறப்பான அம்சங்களில் வளைவுகள், வழுக்குதல்கள், மெதுவான சறுக்கல்கள் கொண்ட அழகிய அசைவுகள் இப்பாணியில் காணலாம். ஒரு நடனக் கலைஞர் அரங்கில் நிற்கும் நிலை அவரின் பொதுவான தோற்றம், ஆடை அணிகலன்கள், அணிந்திருக்கும் மலர்கள் ஆகியவற்றில் ஒன்றைப் பார்த்தவுடனே அக்கலைஞனின் திறனை மதிப்பிடலாம் என்பார். மேலும் பாட்டுக்களைப் பொருத்தமாகத் தெரிவு செய்து ஆடலுக்குப் பயன்படுத்துவது வழுவூர் பாணியின் சிறப்பம்சமாகும். தேவாரம், திருவாசகம், திருவாய் மொழி, திருப்புகழ் பாடல்கள், குறவஞ்சி நாட்டிய நாடகங்கள் ஆகியனவற்றை நிகழ்த்தி உள்ளார். பாரதியார், பாபநாசம் சிவன் போன்றோரின் பாடல்களை அதிகமாக எடுத்துக் கையாண்டுள்ளார். ஆடுமகள் அரங்கம் முழுவதையும் பயன்படுத்தி ஆடும் திறன் வழுவூர் பாணியின் சிறப்பம்சமாகும். அவ்வாறு அரங்கம் முழுவதையும் பயன்படுத்த தனிப் பயிற்சி அளிப்பார். வழுவூர் நடன பாணியில் சறுக்கல்களும், பாய்தல்களும் அரங்கத்தில் மின்னல் கீற்றுகள் போலத் தோற்றமளிக்கும். அவர் பயிற்றுவிக்கும் ஆகாச சாரிகள் பெயருக்கேற்ப ஆகாயத்தில் பறப்பது போன்ற உணர்வைத் தோற்றுவிக்கும். ஆனால் உயரப் பாய்தல் அழகாக இருக்காது என்கிறார். இவரது மகன் சாமராஜின் கருத்துப்படி, "ஆட்டம் அபிநயம் ஆகியவற்றின் துடிப்பான இணைப்பாகவே வழுவூர் பாணி விளங்குகிறது" என்கிறார் (பரதக்கலை, ப.228).

மாணவர்கள்:

இவரின் முதல் மாணவி திருக்கழுக்குன்றம் டி.எம்.பட்டம்மாள், இவர் திருக்கழுக்குன்றம் துரைசாமி

நட்டுவனாரிடம் பயின்ற பின்பு இராமையாவிடம் கற்றார். குமாரி கமலா காட்டுமன்னார்கோவில் முத்துக்குமாரசாமி நட்டுவனாரிடம் பயின்று அரங்கேற்றம் பெற்ற பின்பு இராமையா பிள்ளை மாணவி ஆனார். இவரிடம் முற்றிலும் பயின்று சிறப்புடன் திகழ்ந்தவர்களாக திரைப்பட நடிகை ஹேமமாலினி, வைஜெயந்திமாலா, ஈ.வி.சரோசா, லலிதா, பத்மினி, யாழ்ப்பாணம் திரிபுரசுந்தரி, கல்கியின் மகள் ஆனந்தி, சதாசிவம் மகள் இராதா, கே.வி.ஜெயலட்சுமி, கனகா, சிவந்தி ஆதித்தன் மனைவி மாலதி, சித்ரா விசுவேசுவரன், பத்மா சுப்ரமணியன், இலங்கை ஆனந்தவல்லி, இலங்கை பிரியா நடராசா, இலங்கை கார்த்திகா கணேசன், இலங்கை ஸ்ரீகாந்த் சகோதரிகள், சீனிவாசன் போன்றோர் பலர். ஹேமலதா சர்மா, விஜயராஜன் இவ்விருவரும் காட்டுமன்னார்கோவில் முத்துக்குமார நட்டுவனாரிடம் பயின்று பின்பு இவரின் மாணவியர் ஆனார்கள். செய்யூர் திருவேங்கட நட்டுவனார் மாணவி கோமள வரதன், பி.பி.குசலகுமாரி, பி.ஜோதிலட்சுமி போன்றோரும் பயின்றனர். காளையர்கோவில் செல்லையா நட்டுவனாரிடம் பயின்ற விராலிமலை இரமணிக்குச் செல்லையா நட்டுவனாரின் வேண்டுதலுக்கு ஏற்ப இராமையாபிள்ளை அரங்கேற்றம். செய்தார்.

நட்டுவாங்க பயிற்சி மாணவர்கள்:

இவரிடம் நட்டுவாங்கப் பயிற்சி பெற்று நாட்டிய ஆசிரியர்களாக விளங்குபவர்கள் பலர். திருவாளர்கள் பி.எஸ்.கோபாலகிருஷ்ணன் ஒருவராவார். இவர் கேரளாவைச் சேர்ந்தவர். சென்னையைச் சேர்ந்த கே.ஆர்.இராதா கிருஷ்ணன், சுவாமிமலை இராசரத்தினம், திருமதி கே.ஜே.சரசா, திரு.காமேஸ்வரன், கருப்பு இராமசாமி பிள்ளை, டாக்டர் பத்மா சுப்பிரமணியன், திருமதி சித்ரா விசுவேசுவரன், திருமதி கார்த்திகா கணேசன், திரு.சாம்ராஜ், மயிலாடுதுறை இராமசாமி, நாட்டரசன் கோட்டை எம்.ஏ.கிருஷ்ணன் ஆகியோர் இவரிடம் நட்டுவாங்கம் பயின்றனர். இவர்களில் எம்.கே.காமேஸ்வரன் வைத்தீசுவரன் கோயில் மகாதேவ நட்டுவனாரிடம் மாணவராக இருந்தார்.

விருதுகள்:

இவர் நாட்டிய கலாகேசரி (1948), இசைப் பேரறிஞர் (1961), கலைமாமணி (1963), சங்கீத நாடக அகாடமி விருது

(1966), பத்மஸ்ரீ போன்ற பட்டங்களையும், விருதுகளையும் பெற்றுள்ளார்.

வானொலியில் இராமையாபிள்ளையின் பேச்சு:

வழுவூர் பாணி என்ற நாட்டிய பாணியை இராமையா பிள்ளை மிகச் சிறப்புடன் உலகறியச் செய்தார். நாட்டியத் துறையில் எத்தனை திறமை ஆசிரியருக்கு இருந்தாலும் அதனைத் தன் மாணவர்கள் மூலம் தான் சபையில் தர இயலும். குருவிற்கும் மாணவிக்கும் இடையில் நுட்பமான ஒத்துழைப்புத் தேவை. எத்தனைப் பயிற்சிகள் ஆசிரியர் தந்தாலும் அதனைச் சபையோரிடம் மாணவி மூலமாகத்தான் வெளிக்காட்ட முடியும். இதனால் குரு சிஷ்ய மரபு இன்றும் நாட்டியக் கலையில் அழியாமல் போற்றப்படுகிறது.

அதுபோல வழுவூர் இராமையாபிள்ளை திறன்களை உலகறியச் செய்த மாணவியருள் தலைமகளாகத் திகழ்ந்தவர் பேபி கமலா ஆவார். 1961 -62 வருடவாக்கில் இலங்கை வானொலிப் பேட்டி ஒன்றில் வழுவூரரால் குமாரி கமலாவிற்குப் பெருமையா? குமாரி கமலாவால் வழுவூரருக்குப் பெருமையா என்ற வினாவைக் கேட்ட பொழுது தனது மாணவியின் கலை நுட்பத்தையும் நன்கறிந்து அவரை மேலும் கௌரவப்படுத்த நினைத்த இவர் "ஒரு கமலா இல்லையேல் ஒரு வழுவூரால் இந்த அளவிற்கு உலகப் பிரச்சித்தம் பெற்றிருக்க முடியாது. வழுவூரார் தன் திறமையெல்லாம் கமலாவின் மூலம் தந்துள்ளார்" என்றார். இக்கூற்று இக்கலையின் அமைப்பையும் நுட்பத்தையும் எடுத்துக்காட்டுவதாகும். ஒரு நல்ல மாணவியைத் தேடிக் கொண்டு ஓர் ஆசிரியன் காத்திருப்பான் என்ற கூற்றை இது மெய்ப்பிக்கும்.

மேலும் இலங்கை வானொலி நிலையத்தில் சிம்ம நந்தன நடனத்தை மிகச் சிறப்புடன் செய்து காட்டினார். சிம்ம நந்தன நடனத்தைச் செய்முறையில் காட்டிய நாட்டியத் தலைமகனாக விளங்கினார்.

நாட்டிய ஆசிரியர்களுக்கு விருது:

புதுடில்லி சங்கீத நாடக உறுப்பினராக இருந்த பொழுது 'சங்கீத நாடக அகாடமி விருது நடன மங்கையர்க்கு வழங்கப்படுவது கண்டு பெருமை கொள்கிறேன். இதேபோல்

இம்மாணவர்களை உருவாக்கும் ஆசிரியர்கட்கு வழங்கிட வேண்டும். பசும்பாலைக் குடிக்கும் நாம் அப்பால் தரும் பசுவை மறந்திடலாமா? ரோஜாப் பூக்களைப் போற்றும் நாம் அப்பூக்களை வழங்கும் ரோசா செடியை மறந்திடலாமா? அதுபோல் ஆசிரியர்களைக் கௌரவிக்க வேண்டும் என்றார். சபையினர் இதனை ஏற்று இவ்விருதினை இவருக்கு வழங்கிட முன் வந்தபொழுது முதலில் பந்தணைநல்லூர் மீனாட்சிசுந்தரம் பிள்ளைக்குத்தான் வழங்கிட வேண்டும் என்றார். மீனாட்சி சுந்தரம் பிள்ளைக்கு வழங்கப்பட்ட மறு வருடம் இவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது. இவ்விருது வழங்கும் மரபினைத் தோற்றுவித்த இவரை நாட்டிய உலகம் என்றென்றும் போற்றி வருகிறது.

இதுபோல் விருது பெறவரும் கலைஞர்கட்கு விருதுகளை வழங்குவதோடு மட்டுமல்லாமல் ஒரு சிறப்புத் தொகையும் வழங்கிட வேண்டும் என்று பரிந்துரைத்தார். இதனை ஏற்று இன்றும் விருது பெறுபவர்கட்குச் சிறப்புத் தொகை வழங்கப்பட்டு வருகிறது.

நாட்டியம் பயில இயலாத நிலையில் உள்ள மாணவ மாணவியர்கட்கு உதவித் தொகையை அரசு வழங்கிடும் பொழுது தனக்கு வழங்கப் பெற்ற தொகைகளையும் மாணவர்கட்கு வழங்கினார்.

கௌரவம்:

நாட்டிய ஆசிரியர்கட்கு உரிய கௌரவம் சபையோரிடமும் சமுதாயத்திடமும் விளங்கிட வேண்டும் என்று விரும்பினார். நாகசுரச் சக்கரவர்த்தி டி.என்.இராசரத்தினம் பிள்ளையைப் போல் தன்மானத்துடன் நாட்டிய ஆசிரியர்கள் விளங்கிட வேண்டும் என்றார்.

இவருடைய மாணவிகள் ஆனந்தி (கல்கியின் மகள்), இராதா (சதாசிவத்தின் மகள்) நாட்டிய நிகழ்ச்சிக்கு எம்.எஸ்.சுப்புலட்சுமி பாடல் பாடினார். இவர்களின் நிகழ்ச்சியொன்று 1950இல் சென்னையில் நடத்திட ஏற்பாடு செய்த பொழுது முதலில் நாட்டிய ஆசிரியரின் பெயரைப் போடாமல் அழைப்பிதழில் இசைக் கலைஞர்களின் இறுதியில் இவரது பெயரைப் போட்டமையால் நிகழ்ச்சியை ரத்து செய்தார். நாட்டிய ஆசிரியர்களின் தன்மானத்துக்கு வழி வகுத்தார்.

ஆங்கிலேய அரசு பாரதியின் பாடல்கட்குத் தடை செய்திருந்த பொழுது இப்பாடல்களை நாட்டிய நிகழ்ச்சிகளில் மேடையேற்றினார்.

இவருக்கு "நாட்டியச் சக்கரவர்த்தி" என்ற விருது வழங்கிட கலை உலகம் முனைந்த பொழுது நாட்டியச் சக்கரவர்த்தி என்ற பெயருக்குரியவர் இறைவன் நடராஜமூர்த்தி ஒருவரே. அவரையல்லாமல் வேறு யாருக்கும் இது பொருந்தாது. பின்பு "நாட்டியக் கலா கேசரி" என்ற விருதை இராமையாபிள்ளைக்கு வழங்கினர்.

தோற்றப் பொலிவு:

இராமையாபிள்ளை கம்பீரமான கவர்ச்சிகரமான தோற்றப் பொலிவு உடையவர். நட்டுவாங்கம் செய்வதில் நிகரற்றவர். அவருடைய இசை ஞானமும், கணீர் என்ற குரலும் நடனத்திற்கு மேலும் அழகையும், ஈடுபாட்டினையும் ஏற்படுத்தும் இவற்றால் இவரிடம் மாணவர்கள் பலர் முன்வந்து நடனம் கற்றனர். நடனத்திலே வெளிப்படுத்தக்கூடிய பல வகையான பாவரசங்கள், நளினங்கள் முதலியவற்றை இவரின் மாணவர்களிடம் சிறப்பாகக் காணலாம்.

வகித்த பதவிகள்:

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் தொடக்கத்தில் சங்கீத நாடக சங்கம் என்று அழைக்கப்பட்டது. இதில் பரதக் கலை மறுமலர்ச்சிக்கு வித்திட்ட ஈ.கிருஷ்ண ஐயர் அதன் செயலாளராக விளங்கினார். இராமையாபிள்ளை இதன் உறுப்பினராகவும், பின்னர் தலைவராகவும் விளங்கினார். அப்பொழுது முதுமையடைந்துள்ள வறிய கலைஞர்களுக்கு மாதச் சம்பளம் வழங்க வேண்டும் என்று இம்மன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தார். முதலில் ஐம்பது ரூபாயும் பின்னர் 75 ரூபாயும், 100 ரூபாயும், 150 ரூபாயும் அதிகரித்து வழங்கப்பட்டன. வறிய கலைஞர்களுக்கு ஒரே தொகையாக ஆயிரம் ரூபாய் வழங்க தமிழக முதலமைச்சரிடம் பரிந்துரைத்ததன் அடிப்படையில் ஒரு இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, தகுதியானவர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியினை இவரிடம் வழங்கியது.

இராமையாபிள்ளை மத்திய சங்கீத நாடக அகாடமியிலும் ஓர் உறுப்பினராக விளங்கினார். அந்த

நிறுவனத்தின் கூட்டங்களுக்குத் தில்லிக்குச் சென்ற போது பல மாநிலங்களிலிருந்து வந்த கலைஞர்களைச் சந்தித்தார். அவர்களில் பலர் முதியோராகவும் வறியோராகவும் பரிதாப நிலையில் காணப்பட்டனர். அவர்களின் நலனுக்காக 10,000 ரூபாய் வழங்க தீர்மானத்தை முன்மொழிந்தார். ஆனால் நிதிநிலை போதாமையால் அத்தொகை 5,000 ஆகக் குறைத்து வழங்கப்பட்டது. 1986 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 10,000 ரூபாய் வழங்கப் படலாயிற்று. இவர் பல பல்கலைக் கழகப் பாடத் திட்டக்குழுவில் பணியாற்றினார்.

தொண்டு:

இவர் தமக்காகவோ, தமது நடன நிறுவனத்திற்காகவோ மானியமோ, நன்கொடையோ பெற்றிலர். இவர் மாணவர்களின் நலனில் நன்கு கவனம் செலுத்தினார். வறிய மாணவர்களைத் தமது இல்லத்திலே தங்கச் செய்து அவர்களுக்கு ஆடைகள், உணவு முதலியனவற்றையும் வழங்கி நடனம் கற்பித்து வந்தார். இவ்வாறு கற்ற பலர் இன்று நன்னிலையில் உள்ளனர். பலர் குருவிடம் மிகுந்த விசுவாசத்துடன் இருந்தனர். இவர்களைக் காணும்போது இவர் பெரிதும் மகிழ்ச்சி கொள்வார்.

நடனக் கலையைத் தாம் கற்பித்தமையால் ஏற்பட்டுள்ள நல்ல விளைவுகள் குறித்தும் இராமையா பிள்ளை பெருமையடைந்தார். வெளிநாட்டவர் குறிப்பாக மேனாட்டவர் பரதம் கற்பது குறித்து அவர் மகிழ்ச்சியடைந்தாலும் அவர்கள் நன்கு முயற்சித்துக் கற்றாலும் எந்த அளவிற்கு இந்நடன நுட்பங்களை வெளிக்கொணர்வர் என்ற ஐயம் இவருக்கு இருந்தது. மாணவர்கள் தம் குருவிடமிருந்து நன்கு கற்றவற்றை அப்படியே நல்ல முறையிலே மற்றவர்களுக்குக் கற்பித்தால் இக்கலை அழியாது என்றும் நிலைத்து நிற்கும் என்கிறார். முற்காலத்தில் கலைக்காகவே தம்மை அர்பணித்துள்ள கலைஞர்கள் பலர் உள்ளனர். அவர்களின் சாதனைகளை மாணவர்கட்கு எடுத்துரைப்பார்.

இயற்றிய இசை உருப்படிகள்:

இராமையா பிள்ளை பல இசை உருப்படிகள் பல இயற்றி அவற்றிற்கு நடன அமைப்பும் செய்துள்ளார். இவர் ஜதீஸ்வரம், சப்தம், கீர்த்தனை, ஜாவளி, தில்லானா போன்றவற்றை இயற்றியுள்ளார். மேலும் நடனக் கலையின் சிறப்புக் கோட்பாடு

பற்றி கட்டுரைகளும், நூலும் இயற்றியுள்ளார். பரதக்கலை கேட்பாடு பற்றி "தெய்வீக ஆடற்கலை" என்னும் நூலை 1988 ஆம் ஆண்டு இயற்றியுள்ளார். பரதக்கலை மறுமலர்ச்சிக்குப்பின் இக்கலைக்கு ஏற்பட்டிருந்த மாசுகள் நீங்கப் பெற்றுத் தெய்வீகக் கலையாக மதிக்கப்படலாயிற்று என்கிறார்.

நாட்டியத்தில் புதுமைகள்:

இவர் தஞ்சாவூர், சிதம்பரம் கோயிலிலுள்ள நடனச் சிற்பங்களை ஆராய்ந்து கரணச் சிற்பங்களைச் செவ்வனே கற்று ஏற்கனவே நடனத்தில் இருந்து பிறகு மறைந்த நாட்டியக் கரணங்களை மீண்டும் நாட்டிய நிகழ்ச்சிகளில் இடம்பெறச் செய்தார். இதற்கான தனிப் பயிற்சிகளை மாணவர்களுக்கு அளித்தார். கரணங்களுக்குப் பொருத்தமான பாடல்கள் ஜதிகளை உருவாக்கினார். கரணங்களைவிட அழகான சிலை போன்ற நடன நிலைகளை இவர் நடனத்தில் முதன் முதலாகச் சேர்த்தார்.

அரங்கேற்றிய நாட்டிய நாடகங்கள்:

இவர் குற்றாலக்குறவஞ்சி, கபில நாட்டிய நாடகம், சரபேந்திர பூபாலக் குறவஞ்சி ஆகிய நாட்டிய நாடகங்களை அரங்கேற்றியுள்ளார். இவர் தெலுங்கிலுள்ள சில நாட்டிய உருப்படிகளைத் தமிழாக்கம் செய்துள்ளார். "சாமிக்கி சரியெவ்வரே" என்ற வர்ணத்தையும் "மனவி செய்கோன" என்ற வர்ணத்தையும் "கருணை செய்திடலாமா" என்று தமிழில் அமைத்தார். சஞ்சாரி பாவத்தின் மூலம் இராம நாடகக் கீர்த்தனையை மிகச் சிறப்புடன் அமைத்துத் தந்தார். The Classical Dance in India என்ற நூலில் மோகன் கோரக்கர் என்பவர் வழுவூர் மரபுகளைத் தொகுத்துத் தந்துள்ளார்.

குடும்பம்:

இராமையா பிள்ளையின் மனைவி திருமலைராயன் பட்டினத்தைச் சேர்ந்த ஞானசுந்தரம் அம்மாள் ஆவார். இவர்களுக்கு ஜயலட்சுமி, சாம்ராஜ், குருமூர்த்தி, மாணிக்கவிநாயகம், பாக்கியம் என்ற ஐந்து மக்கள் பிறந்தனர். சாம்ராஜ் ஒரு சிறந்த நாட்டிய ஆசிரியர். மாணிக்கவிநாயகம் சிறந்த பாடகர், சிறந்த இசையமைப்பாளர். சிறந்த நடிகர். இவர் இசையமைத்த பாடல்கள் பல குறுவட்டில் வெளி வந்துள்ளன.

சாம்ராஜ் தன் தந்தையைப் போலவே நாட்டிய உலகில் முடிசூடா மன்னனாகத் திகழ்ந்தார். அவரது மகன் பழனியப்பனும், மகள்களும் இன்றும் சிறந்த நாட்டிய ஆசிரியர்களாகத் திகழ்ந்து வருகின்றனர்.

மறைவு:

வழுவூர் எனும் சிறு கிராமத்தின் பெயரை உலகளவில் தெரியப்படுத்தி, அவ்வூருக்கும் தன் குடும்பத்துக்கும் புகழ் சேர்த்த இராமையா பிள்ளை 2.12.1991 அன்று இறை நிழலில் கலந்தார்.

பல நூற்றாண்டுகளாகப் பரதக் கலையைப் போற்றி வளர்த்து வந்த கலைக் குடும்பத்தைச் சேர்ந்த இவர் சுமார் எண்பது ஆண்டு காலம் (1910 - 1991) வாழ்ந்து இக்கலைக்கு அளப்பரிய அரும்பெரும் பணிகள் செய்து புகழ் பெற்றார். தாமே தலைசிறந்த ஒரு நடனக் கலைஞராக விளங்கியதுடன் மிகச் சிறந்த மாணவ வாரிசுகளை உருவாக்கி, பரதக் கலைக்குப் புதிய பரிணாமங்களை உருவாக்கி, வழக்கற்றுப்போன சில அம்சங்களை மீளச்செய்து, புது மெருகூட்டி நடனத்தில் புதிய ஆக்கங்களைச் செய்துள்ளார். பல உருப்படிகளையும் படைத்துள்ளார். இவர் வழுவூர் நடன பாணியின் சிற்பி ஆவார். இருபதாம் நூற்றாண்டுப் பரதக் கலை வரலாற்றில் இவருக்கு முக்கியமான ஓர் இடம் உண்டு.

இசைப் பேரறிஞர் பாபநாசம் சிவன்
(1890 - 1973)



இசைத் தமிழின் மாண்பினை அறிந்த பழந்தமிழர் இயல், இசை, நாடகம் என்ற மூன்று கூற்றினுள் இசையை நடுவில் வைத்துப் போற்றினர். தொல்காப்பியம் தொடங்கி தற்காலம் வரை இயற்றப்பட்ட இலக்கியங்களில் இசைச் செய்திகள் மிகுதியாக உள்ளன. சங்க காலத்தில் பாணர், பொருநர், பாடினி என வழங்கப்பட்டவர்கள் தற்காலத்தில் இசை அறிஞர்கள், இயலிசைப் புலவர்கள், இசை விற்பன்னர்கள், இசைக் கலைஞர்கள் முதலியோர் பல பெயர்களில் அழைக்கப் படுகின்றனர்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சிகளில் பெரும்பாலும் தெலுங்கு, வடமொழிப் பாடல்களே பாடப் பெற்றன. இனிய இசையில் அமைந்த செந்தமிழ்ப் பாடல்களை மக்கள் விரும்பிக் கேட்பதற்காக இயலிசைப் புலவர்கள் பலர் இனிய தமிழ்ப் பாடல்களைச் சிறந்த இசை மெட்டுடன் படைக்கலாயினர்.

இசைநயம் மிக்க பாடல்களைத் தமிழில் இயற்றி சிறந்த தொண்டாற்றியவர்களில் பாபநாசம் சிவனும் ஒருவராவார். இவர் தனிப் பாடல்களையும், திரைப்பட பாடல்களையும் இயற்றியுள்ளார். இவரின் பாடல்கள் எளிமையாகவும், இனிமையாகவும், எளிய தமிழ் மொழியில் அமைந்திருப்பதால்

மக்கள் அனைவரும் விரும்பிப் பாடும் பாடல்களாக அமைந்துள்ளன.

பிறப்பு:

பாபநாசம் சிவன் கி.பி.1890 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 26 ஆம் நாளில் தஞ்சை மாவட்டம் நன்னிலம் வட்டத்தில் உள்ள போலகம் என்னும் சிறிய கிராமத்தில் இராமாமிர்த அய்யருக்கும், யோகாம்பாளுக்கும் இரண்டாவது மகனாகப் பிறந்தார். பாபநாசம் சிவனின் இயற்பெயர் "இராமையா". இவரது தந்தை மிகுந்த சமயப் பற்றுடையவர். இவரை நாள்தோறும் கோயிலுக்கு அழைத்துச் செல்வார். இறை நாமாவளிகளைக் கூறிக் கொண்டே அழைத்துச் செல்வார். சிவன் பிற்காலத்தில் கீர்த்தனைகள் இயற்ற இவை முன்னோடியாகத் திகழ்ந்தன. சிவனின் ஏழாவது வயதில் தந்தை காலமானார். போலகம் விட்டு நீங்கி தாயாருடனும், மூத்த சகோதரனுடனும் திருவனந்தபுரத்திலுள்ள தாய்மாமன் வீட்டில் அடைக்கல மானார். கேரளாவில் தங்கியிருந்தமையால் மலையாள மொழியை அறியலானார். தனது 7 வயது முதல் 17 வயது வரை திருவனந்தபுரம் மகாராஜா சமஸ்கிருத கலாசாலையில் படித்து "உபாத்யாய" "வையாகரணி" என்ற இரு பட்டங்களையும் பெற்றார்.

இசைக்கல்வி:

திருவனந்தபுரத்தில் வசித்து வந்த சிறந்த சங்கீத வித்வானான சாம்ப பாகவதர், மகாதேவ பாகவதர் ஆகிய இரு சங்கீத வித்வான்களிடம் இசை கற்றார். இவர் சாம்பா பாகவதரிடம் ஏழு வர்ணங்களைக் கற்றார். சிவனுடைய தாயாரும் இசையில் வல்லவராவார். இனிய குரலுடைய இவரின் பாட்டனாரும் சிறந்த இசை வல்லுநர். பாட்டனாரும், தாயாரும் சிறந்த இசைத் தேர்ச்சிப் பெற்றிருந்தமையால், சிவனுக்கு இயற்கையாகவே இசை ஞானம் கைவரப் பெற்றது.

தனது இசை அறிவினைப் பெருக்கிக்கொள்ள பாலக்காடு பரமேஸ்வர பாகவதரிடமும், அவரின் மகன் நூரணி மகாதேவ பாகவதரிடமும் பயின்றார். பின்னர், சில நாட்கள் நேமம் நடேச பாகவதரிடம் மாணவராக இருந்த பல அரிய இசை உருப்படிகளைக் கற்றார். மேலும், கோனேரிராஜபுரம்

வைத்தியநாதரிடம் ஏழு ஆண்டுகள் இசை பயின்று அவரது பாணியைக் கற்றுக்கொண்டார். இசைக் கச்சேரிகள் நிகழ்த்தும் அளவிற்குத் தேர்ச்சிப் பெற்றவராக இருப்பினும், சிவனுக்கு அதில் விருப்பம் அதிகம் ஏற்படவில்லை. இறையுணர்வுப் பாடல்களைப் படைத்து இறைவனுக்கு இசையை அர்ப்பணிக்கவே விரும்பினார்.

திருவனந்தபுரத்தில் அவரது தாயார் காலமான பின்பு, இராமையா பாபநாசம் சென்று தமது தமையனாரான இராஜகோபால அய்யருடன் தங்கி இருந்தார். இராமையா இங்கு அடிக்கடிக் கோயிலுக்குச் சென்று பக்திப் பாடல்கள் பாடுவதிலும், சிவ கதைகள் நிகழ்த்துவதிலும் தனது காலத்தைக் கழித்து வந்தார்.

நீலகண்ட சிவனின் தொடர்பு:

சமயப்பற்றும், தமிழ்ப்பற்றும் நிறைந்த சரமனை நீலகண்ட சிவனுடைய தொடர்பு இவரது வாழ்க்கையில் நல்ல திருப்புமுனை ஏற்படக் காரணமாயிற்று. சிவன் அவருடன் பஜனையில் கலந்து கொண்டு தேவாரம், திருவாசகம், திருப்புகழ், அருட்பா, தாயுமானவர் பாடல்கள் முதலியவற்றைக் கற்றுக் கொண்டார். நீலகண்ட சிவனின் பாடல்களைப் பயிற்சி செய்து, பஜனைகளில் பாடினார். நீலகண்ட சிவனின் பாடல்கள் பிரபலமடைய சிவன் காரணமாயிருந்தார்.

இவர் கோனேரிராஜபுரம் வைத்தியநாதைய்யர், மால்குடி சிதம்பர பாகவதர், ஸி.ஆர்.ஸ்ரீநிவாச அய்யங்கார், செம்மங்குடி நாராயணசாமி அய்யர், மகாராஜபுரம் விஸ்வநாத அய்யர் போன்ற சிறந்த இசையறிஞர்களால் பாராட்டப்பட்டார். சிவனுடைய சங்கீதத்தில் கோனேரிராஜபுரம் வைத்யநாதய்யர் இயல்புகள் இருப்பதாக கோவிந்தசாமிப்பிள்ளை, தட்சிணாமூர்த்திப்பிள்ளை போன்றோர் பாராட்டியுள்ளனர். அதனால் எப்பொழுதும் பஜனை செய்து இறைவனைப் பாடி வழிபடுவதிலேயே முழு நேரமும் செலவிட்டார். இருந்தாலும் மரபுவழி அமைப்பிலான இசைக் கச்சேரிகள், தக்க இசைக் கருவிகளுடன் இசைத்துள்ளார்.

பெயர்க்காரணம்:

இவர் முனிவர் போல் புலித்தோலணிந்து கோவில்களுக்குச் சென்று பக்திப் பாடல்களைப் பாடிக்

கொண்டிருந்த காரணத்தினால் "சிவன்" என அழைக்கப் படலானார். தமது சகோதரருடன் பாபநாசத்தில் தங்கிய பொழுது, கணபதி அக்ரஹாரம் என்ற கிராமத்தைச் சேர்ந்த சாம்பசிவ அய்யர் என்ற இறையன்பர் 'பாபநாசம் சிவன்' என்று இவரைப் பெயரிட்டு அழைத்து எல்லோருக்கும் அறிமுகப் படுத்தி வைத்தார்.

இளமைக்காலம்:

சிவனின் இளமைக்காலம் முழுவதும் துயரத்துடனும், போராட்டங்கள் நிறைந்ததாகவும் இருந்தது. உண்ண உணவின்றி, உறங்க உறைவிடமின்றி துயரமடைந்தார். இவர் இளமைக் காலத்தில் பட்ட துயரங்களை இவரது பாடல்கள் எதிரொலிக்கின்றன. சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்ததால், இறைத் தொண்டிற்குத் தம்மை ஆட்படுத்திக் கொண்டார். தாய் மொழியான தமிழ்மீது கொண்ட பற்றின் காரணமாக, வேதநாயம் பிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதி மற்றும் இராமலிங்க அடிகளாரின் பாடல்களைக் கற்றார். நீலகண்ட சிவனின் வீட்டில் நடைபெற்ற பஜனை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு, அவரின் தமிழ்ப் பாடற் தொகுப்பான "நீலகண்டபோதம்" என்ற நூலிலிருந்து பெரும்பான்மையான பாடல்களைப் பாடினார்.

அரிகதை:

சிவன் பிறவியிலேயே இசையறிவுடனும், இறையுணர்வுடனும் காணப்பட்டார். அதனால், இளமைபருவம் முதலே கோயில்களில் நடக்கும் அரிகதை முதலியவற்றைக் கேட்பதில் மிக ஆர்வம் கொண்டார். பல பெரிய பாகவதர்களின் அரிகதை தொடர்ந்து கேட்டு வந்ததால், பாகவதர்களின் நட்புக் கிடைத்தது. இதனால், இவருக்கும் அரிகதை செய்ய வேண்டும் என்ற எண்ணம் மேலிட்டது. இவர், அரிகதை செய்ய வேண்டியப் பாடல்களைத் தானே எழுதி இசையமைத்தார். இவ்வாறு, சுமார் பத்துச் சரித்திரங்களைக் காலட்சேபமாக நிகழ்த்தியுள்ளார். இவருக்கு அரிகதை செய்ய வேண்டிய பண்புகள் அனைத்தும் நிறைந்திருந்தன. இவரின் அரிகதையைக் கேட்டு, திருவையாறு அண்ணாசாமி பாகவதர், சிதம்பரம் எம்பார் ஸ்ரீரங்காச்சாரியார் போன்ற புகழ்பெற்ற காலட்சேப வல்லுநர்கள் வியந்து பாராட்டியுள்ளனர்.

பஜனைகள்:

சிவனுக்குப் பஜனையில் மிகுந்த ஆர்வம் உண்டு. இவரது பஜனை தொண்டு தனித்தன்மை வாய்ந்தது. எவ்வாறு சிறப்பாகப் பாடல் எழுதினாரோ, அதே அளவு பஜனை நடத்திவதிலும் சிறப்புப் பெற்றிருந்தார். தென்னிந்தியாவில் உள்ள அநேக ஆலயங்களுக்கும் சென்று, அங்குள்ள விழாக்களில் பஜனை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். கும்பகோணத்தில் மாசிமகம் விழா, நாகப்பட்டினத்து ஆடிப்பூர விழா, திருவிடைமருதூர் தைப்பூச விழா, கழுகுமலை பங்குனி உத்திர விழா, திருவையாறு ஏமூர் உலா விழா, போதேந்திராள் ஆராதனை விழா, திருவிசைநல்லூர் ஸ்ரீதரஅய்யாவாள் விழா முதலியவற்றில் ஆண்டுதோறும் சிவனுடைய பஜனை நிகழ்ச்சிகள் இடம்பெறும். 1918 ஆம் ஆண்டு திருவையாற்றில் நடைபெறும் தியாகராஜர் உற்சவம் இவரின் முதல் நிகழ்ச்சியாக அமைந்தது.

1921 முதல் சென்னையில் கபாலீசுவரர் கோயிலில் நடைபெறும் அறுபத்து மூவர் விழா, சிவராத்திரி விழா முதலியவற்றில் பங்கேற்றுப் பஜனை நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். இவரின் பஜனையைக் கேட்க பெரிய இசையறிஞர்களும், ஏராளமான பொதுமக்களும் வருவர். நாகசுரம் சின்ன பக்கிரி, திருப்பழனம் பஞ்சாபகேச பாகவதர், திருவையாறு அண்ணாசாமி பாகவதர் போன்ற இசை வல்லுநர்கள் இவரின் பஜனையைக் கேட்டுப் பாராட்டியுள்ளனர். மேலும், ஏகாதசி, கிருத்திகை போன்ற நாட்களில் சிவன் பஜனை செய்வது வழக்கமாகக் கொண்டிருந்தார்.

இவர் தனது இறுதிக் காலம் வரை மார்கழி மாதம் மயிலாப்பூர் கபாலீசுவரர் கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளில் பஜனை செய்து வந்தார். இவர் பஜனைகளில் மும்மூர்த்திகளின் பாடல்கள், திவ்ய நாம கீர்த்தனைகள், நீலகண்டசிவன், வேதநாயகம் பிள்ளை, கோபாலகிருஷ்ண பாரதியார், இராமலிங்க சுவாமிகள் போன்றோரின் பாடல்களை நாமாவளிகளுக்கு நடுவில் பாடுவார்.

இல்லறம்:

1917 ஆம் ஆண்டு சிவனுக்குப் பழனம் சுப்பிரமணிய ஐயர் முயற்சியால் இலட்சுமி என்பவருடன் திருமணம் நடைபெற்றது.

சிவனுக்கு நீலா ராமமூர்த்தி, ருக்மணி ரமணி ஆகிய இரு மகள்களும், கீர்த்திவாசன் மற்றும் இராமதாசன் ஆகிய இரு மகன்களும் பிறந்தனர். "ராமதாசன்" என்ற தனது மகனின் பெயரையே பாடல்களுக்கு முத்திரையாகப் பயன்படுத்தி உள்ளார். இவருக்கு மணி என்ற ஒரு சீடர் இருந்தார்.

பாடல்கள் இயற்றல்:

இசையைத் தவிர வேறு எதிலும் நாட்டம் இல்லாமல், எந்த நிமிடத்திலும் இவரின் உள்ளம் இசை வாணியை வழிபட்ட வண்ணம் இருந்தது. இவரது அடிமனதில் பாடலை இயற்ற வேண்டும் என்ற எண்ணம் இருந்தது. மேலும், திருவனந்தபுரத்தில் 1902 ஆம் ஆண்டு நீலகண்டசிவன் அவர்களின் இசைக் கச்சேரியில் பக்தர் ஒருவர் பாடிய தமிழ் விருத்தங்களைக் கேட்ட நாள் முதல் சிவனுக்குத் தாமும் தமிழில் பாடல்கள் இயற்ற வேண்டுமென்ற எண்ணம் உண்டாயிற்று. இவர் சங்கீத மும்மூர்த்திகளான தியாகராசர், தீட்சிதர், சியாமா சாஸ்திரி ஆகியோரின் பாடல்களைப் பின்பற்றி பாடல்கள் பல இயற்றியுள்ளார்.

இவர் 1911 ஆம் ஆண்டு முதல் பாடல்களை இயற்றத் தொடங்கினார். இவரின் முதல் பாடல் "உன்னைத் துதிக்க அருள் தா" என்ற குந்தலவராளி இராகப் பாடலாகும். இப்பாடலை, இவர் திருவாரூரில் பங்குனி உத்திர விழாவில் பாடினார். மிகக் குறுகிய காலக் கட்டத்துக்குள்ளே இசைப் புலவரான முத்தையா பாகவதர் இவரின் பல பாடல்களைப் பாடிப் பிரபலப்படுத்தியுள்ளார். மேலும், திருவாரூரைச் சார்ந்த "சிமிழி சுந்தரமைய்யர்" என்ற இசையறிஞர் சிவனுடைய பாடல்களால் கவரப்பட்டு, சிவனுக்குத் "தமிழ்த் தியாகையர்" என்ற பட்டத்தை அளித்துக் கௌரவித்தார்.

சிறப்புத்திறன்:

சிவன் எதையும் எளிதாக எடுத்துக்கொள்ளும் மனோபாவம் உடையவர். இசைப் பயிற்சியோ, தமிழில் புலமையோ பெரிதும் பெற்றிராத சிவன், இராகமும், பாவமும் ஊடுருவிய அற்புதப் பாடல்களை நினைத்த மாத்திரத்தில் இயற்றும் திறன் பெற்றிருந்தார். பாடல்களை இயற்றுவது, பாடல்களுக்கு இசையமைப்பது, மற்றவர் அப்பாடலைல்களைப்

பிரபலப்படுத்துவது போன்று இல்லாமல் இம்மூன்று செயல்களையும் தானே செய்து புகழடைந்தார்.

இயற்றமிழாற்றல்:

சிவன் அவர்களிடம் இயலும் இசையும் இரண்டறக் கலந்திருந்தது. "விவேகபோதினி" என்ற பத்திரிகையில் கட்டுரைகள் எழுதி வந்தார். ஜெயதேவரின் அஷ்டபதியைத் தமிழில் மொழிபெயர்த்து விரிவுரையும் எழுதியுள்ளார். "வடமொழிச்சொற்கடல்" என்ற வடமொழி - தமிழ் அகராதியைத் தொகுத்து வெளியிட்டதன் மூலம் இந்த இரண்டு மொழிகளில் அவருக்கு இருந்த புலமை வெளிப்படுகிறது. எப்பொழுதும் போல் சொற்களை அகர வரிசையில் தொகுக்காமல், புதுமையான முறையில் தொகுத்துள்ளார். வடமொழியை எளிதில் கற்றுக்கொள்ள விரும்புவோருக்கும், பாடலை எழுதுபவருக்கும் பயன்தரும் வகையில் சொற்களை எதுகை மோனை அடிப்படையில் வகுத்துள்ளார்.

நவவித பக்தி:

நவவித பக்தியான சிரவணம், கீர்த்தனம், சிமரணம், பாதசேவனம், அர்ச்சனம், வந்தனம், தாச்யம், சக்யம், ஆத்மநிவேதனம் போன்ற நிலைகளிலிருந்து இறைவன் மீது பாடல்களை இயற்றியுள்ளார். குறிப்பாகத் தமிழ்க் கடவுளாம் முருகக்கடவுள் மீது அறுபது பாடல்களுக்கு மேலாக நவவித பக்திகளில் பாடல்களை இயற்றியுள்ளார்.

பக்தி	பாடல்	இராகம்
சிரவணம்	திருப்பரங்குன்றாவேலா	இந்தோளம்
கீர்த்தனம்	கார்த்திகேயே காங்கேய	தோடி
சிமரணம்	முருகனை பூஜிமனமே	ஜோன்புரி
பாதசேவனம்	பழனியப்பா நின்பாதம்	சிம்மேந்தரமத்திமம்
அர்ச்சனம்	சரவண பவ குகனே	மத்தியமாவதி
வந்தனம்	குமரன் திருவடிகை	யமுனா கல்யாணி
தாச்யம்	உன்பதம் நம்பின	ரீதி கௌளை
சக்யம்	வந்தருள்வாய் முருகா	தேவமனோகரி
ஆத்மநிவேதனம்	உள்ளமிரங்கி வந்து	அம்சத்வனி

கலாசேஷத்ராவில் இசைப்பணி:

சிவன் 1934 ஆம் ஆண்டு முதல் 1939 ஆம் ஆண்டு வரை ஆறு ஆண்டுகள் கலாசேஷத்ரா இசைப் பிரிவின் தலைவராகப் பணியாற்றினார். இங்குப் பணியாற்றிய பொழுது ஆண்டாள், கிருஷ்ணமாரிக் குறவஞ்சி, கண்ணப்பர் குறவஞ்சி முதலிய தமிழ் இசை நாட்டிய நாடகங்களுக்கும், கீதகோவிந்தம், சாகுந்தலம், கூர்மாவதாரம், தசாவதாரம் முதலிய வடமொழி இசை நாட்டிய நாடகங்களுக்கும் இசை அமைத்துள்ளார். இவர் பல அரங்குகளில் ருக்மணி தேவி அருண்டேலின் நாட்டியத்திற்குப் பாடியுள்ளார். இவர் மெய்மறந்து பாடிக் கொண்டேயிருக்க ருக்மணிதேவி அதற்குத் தக்கபடி அவிநயம் செய்வதைப் பலரும் பாராட்டியுள்ளனர்.

நாடகப் பணி:

சிவன் பங்காற்றிய மற்றுமொரு துறை நாடகத்துறை. இவர் தமிழ் இசைப் புலவராகவும் பாடகராகவும் இருந்தமையால் நாடகங்களுக்கு இசை அமைக்கப் பலரும் வேண்டினர். சுமார் 15 நாடகங்களுக்கு இசை அமைத்துள்ளார். இவர் தானே சில கதாபாத்திரங்களை ஏற்று நடித்துள்ளார். அவற்றில் மார்க்கண்டேயனாக அவர் ஏற்று நடித்த பாத்திரம், அவருக்கு மிகவும் பொருத்தமாகவும், அனைவரது பாராட்டையும் பெற்றது.

திரைத்துறை:

கலைத்துறையில் ஒன்றான திரைத்துறையிலும் சிவன் அவர்கள் கால் தடம் பதித்துள்ளார். அநேக மெட்டுகளுக்குப் பாடல் எழுதிக் கொடுத்த சிவன் குபேரகுசேலா, பக்தசேதா, தியாகபூமி போன்ற படங்களில் முக்கிய வேடங்களில் நடித்துள்ளார். குசேலராகவும், சேதாவாகவும், சம்பு சாஸ்திரிகளாகவும் நடித்த இவரைப் பிறவி நடிகர் எனக் கூறினாலும் வியப்பில்லை. இவர் தான் எழுதிய பாடல்களுக்குத் தானே மெட்டமைத்து விடுவார். திரைப்படத்தில் இடையில் ஒலிக்கும் பின்னணி இசை அமைப்பது மட்டும் இசை அமைப்பாளரின் பணியாக இருந்தது.

1933இல் முதன் முதலாக "சீதா கல்யாணம்" என்ற திரைப்படத்திற்குப் பாடல்களை எழுதியுள்ளார். 1933 முதல் 1960

ஆம் ஆண்டுக்குள் 120 படங்களுக்கு 1000க்கும் மேற்பட்ட பாடல்கள் எழுதி, இசையமைத்துள்ளார்.

அக்காலத்தில் சினிமாவுக்குப் பாட்டெழுத இசை அறிவு முழுமுதற் தேவையாயிருந்தது. திரைப்பட பாடல்களுக்கு முதல் தரமான கர்நாடக சங்கீதத்தைப் புகுத்திய முதல் பாடலாசிரியராக இவர் திகழ்ந்தார். இவருடைய சேவையினால் திரைக் கலையின் மதிப்பும் புகழும் உயர்ந்தது மட்டுமன்றி பாமர மக்களிடையே கர்நாடக சங்கீதத்தின் எண்ணத்தையும் தோற்றுவித்தது.

தான் நடித்த படங்களில் குறிப்பாகச் "சீதா கல்யாணம்" என்ற தனது முதல் படத்தில் "தாயே ஏழைப்பால்" என்ற பாடலும், "மாரமணன் உமா ரமணன்" என்ற இந்தோள இராகப் பாடலையும் தமது சீடர் திரு.மணி அவர்களுடன் இணைந்து பின்னணியில் பாடியுள்ளார். அவரது பாடல்களுக்காகவே திரைப்படங்கள் ஓடின.

சிவனின் கர்நாடக சங்கீதப் பாடலில் காணப்படும் இறையுணர்வை இவரின் சினிமாப் பாடலிலும் காணலாம். பாடல்கள் வெறும் பொழுதுபோக்காக அமையாமல், சிறந்த தத்துவக் கருத்தினையும், நீதிக்கருத்தினையும், இறையுணர்வு சார்ந்ததாகவும், வேதாந்த, சித்தாந்த கருத்துக்களும் நிறைந்திருந்தன. புராணப் படங்களிலும், காப்பியப் படங்களிலும் இவரின் பாட்டுக்கு மேன்மையான இடமிருந்தது.

கையாண்ட இராகங்கள்:

இவரின் பாடல்களில் இசைநயம் குறிப்பிடத்தக்கது பைரவி, கமாஸ், முகாரி, கரகரப்பிரியா, இந்தோளம், சுத்ததன்யாசி, அம்சாநந்தி போன்ற இரக்தி இராகங்களையும், காபி, ஜோன்புரி, மாண்டு, பாகேஸ்வரி, சிந்து பைரவி, செஞ்சுருட்டி போன்ற தேசிய இராகங்களிலும், ரதிபதிப்ரியா, விஜயநாகரி, நடனபைரவி போன்ற அபூர்வ இராகங்களிலும் திரைப்படப் பாடல்களை இயற்றியுள்ளார்.

இவரின் இசையில் பாடியவர்கள்:

திரைப்படத்தில் சிவனின் இசையில் எம்.எஸ். சுப்புலட்சுமி, எம்.கே.தியாகராஜ பாகவதர், பி.யூ.சின்னப்பா, டி.ஆர்.மகாலிங்கம், தண்டபாணி தேசிகர், பெரியநாயகி,

வசுந்தரா, எம்.எஸ்.ஜெயலட்சுமி, என்.சி.வசந்தகோகிலம், அசுவத்தாமா ஆகியோர் இவரின் பாடல்களைப் பாடியுள்ளார்.

சிவனுடைய பல திரைப்படப் பாடல்களில் நல்ல சமய உணர்வு, சிறந்த இசை முறை, நல்ல இலக்கிய சுவை மேம்பட்டுள்ளதால், கர்நாடக இசைக் கச்சேரிகளிலும் தக்கதொரு இடத்தைப் பிடித்திருந்தன.

எடுத்துக்காட்டு:

ஆடும் தெய்வம்	–	காம்போதி
இனி ஒரு கணம்	–	ஸ்ரீரஞ்சனி
நீ இரங்காயெனில்	–	அடாணா
ஸ்வாமிக்கு ஸரி எவ்வரே	–	கேதாரகௌளை
பாராமுகம் ஏனையா	–	கரகரப்ரியா

போன்ற திரைப்பாடல்கள் கர்நாடக இசை அரங்குகளின் மூலம் பிரபலமானவை.

மேலும், "சிவகவி" படத்தில் "அப்பா மனம் கனிந்து" (பந்துவராளி) பாடலும், நந்தனார் படத்தில் "ஆனந்த நடமிடும்" (கேதாரகௌளை), "பிறவாவரம்" (லதாங்கி), "காணவேண்டாமா" (ஸ்ரீரஞ்சனி), "பாரதபுண்ய பூமி" (குந்தலவராளி), "இனி ஒரு கனம்" (ஸ்ரீரஞ்சனி), "உனையல்லால் கதி" (கல்யாணி), "கிரிதரகோபால" (மோகனம்) போன்ற திரைப்படப் பாடல்கள் இவருக்குச் சிறந்த புகழைத் தேடித் தந்துள்ளன.

"மன்மத லீலையை வென்றார் உண்டோ" என்ற சாருகேசி இராகப் பாடல் தென்னிந்தியாவில் பட்டி தொட்டியெல்லாம் ஒலித்த சிறந்த பாடலாகும். மேலும், அவரின் பிரபலமான திரைப்படப் பாடல்களில் சில,

1. சற்றே சரிந்த குழலே
2. உன்னைக் கண்டு மயங்காத
3. தியானமே உனது
4. பூமியில் மானிட
5. ராதே உனக்குக் கோபம்
6. ஞானக்கண் ஒன்று
7. கிருஷ்ணா முகுந்தா முராரே
8. சொப்பன வாழ்வில் மகிழ்ந்து
9. கவலையைத் தீர்ப்பது
10. தீன கருணாகரனே நடராஜா

போன்ற பல பாடல்கள் அனைவராலும் விரும்பப் பட்டவையாகும்.

தேசப்பற்று:

இறைப்பணியில் ஈடுபடுவது மட்டுமல்லாமல், தேச விடுதலைக்குத் தொண்டாற்றியுள்ளார். இவர் காங்கிரசில் ஈடுபாடு கொண்டவர். இதனால், காங்கிரஸ் கூட்டங்களில் நாட்டுப்பற்று மிகுந்த பாடல்களைப் புனைந்து மக்களுக்குப் பாடி மகிழ்ச்சியுண்டாக்கினார். மேலும் பாரத நாட்டினைப் பற்றியும், தேசத் தந்தை மகாத்மா காந்தியடிகள் மீதும் பாடல்கள் இயற்றியுள்ளார்.

1. பாரத மாதா	–	நடபைரவி
2. பாரத புண்ய பூமி	–	குந்தலவராளி
3. நம் நாடு சுதந்திரம்	–	சுந்தசாவேரி
4. ஜயபேரிகை	–	காம்போதி
5. காந்தியைப் போலொரு	–	செஞ்சுருட்டி
6. போர்ப்பந்தரென்றும்	–	பலஹம்ஸ
7. கைம்மாறு செய்வதுண்டோ	–	கேதாரகௌளை

தமிழ் மொழிக்கும், தேச விடுதலைக்கும் தொண்டு புரிந்த பாரதியைப் பாராட்டி "பாமாலைக்கிணையுண்டோ" என்ற பாடலையும், தமிழ் மீது கொண்ட பற்றின் காரணமாகத் "தமிழ் மணம் கமழ வேண்டும்" என்ற பாடலையும் இயற்றியுள்ளார்.

ஜாலியன் வாலாபாக் படுகொலை நடந்த தினம் நாடெங்கும் சத்தியாகிரகம் நடைபெற்ற பொழுது "அன்னையின் கால்களில் விலங்குகளோ" என்ற பாடலைப் பாடினார். மேலும், மகாத்மா காந்தியின் மீது கொண்ட பற்றின் காரணமாக, தியாக பூமியில் "சம்பு சாஸ்திரி"களாக வேடந்தாங்கி நடித்தார்.

இயற்கைப் பற்று:

பக்தியிலும், வேதாந்தக் கருத்திலும் ஈடுபாடு கொண்டது போல, கடலையும், காற்றையும், மரத்தையும் இரசித்த இயற்கைக் கவிஞராக இவர் திகழ்ந்தார். இதற்குப் பின்வரும் பாடல்கள் சான்று பகர்கின்றன.

1. "கடலுக்கு உவமை கடலே" என்ற பாடலில் கடலின் ஓங்கார நாதத்தைப் போற்றுகிறார்.
2. "வசந்த ருது மனமோகனமே" என்ற பாடலில் இராக முத்திரையுடன் இயற்கை அழகைப் பாங்குற உரைத்துள்ளார்.

3. "தோகை வண்ண தோகை மின்ன தோகை விரித்தாடும் மயிலே" என்ற பாடலில் மயிலின் அழகினையும், "கீதசந்தம் நாதானந்தம் எழப் பாடும் குயிலே" என்ற பாடலில் குயிலின் அழகையும் கூறுகின்றார்.

இவ்வாறு இயற்கையின் அழகைச் சுவைத்துப் பாடலின் மூலம் வெளிக்காட்டியுள்ளார்.

தமிழ்ப் பாடல்களின் தரத்தை உயர்த்த வேண்டும் என்ற குறிக்கோளைக் கொண்ட சிவன், புகழ்பெற்ற வர்ண மெட்டுக்களில் பாடல்கள் இயற்றியுள்ளார்.

உதாரணமாக,

1. ரகுநாயகா என்ற மெட்டில்
   - கருணை செய்வாய்
2. நின்னுநேரா என்ற மெட்டில்
   - நின்னருள் இயம்ப
3. பரிதானமிச்சிதே என்ற மெட்டில்
   - நிஜமுன்னை நம்பினேன்
4. மனவிலோனிமா என்ற மெட்டில்
   - துணை புரிந்தருள்

இவருடைய பாடலின் நடை இனிமையும், எளிமையும் உடையன. இவருடைய தமிழ்ப் பாடல்களில் வடமொழிச் சொற்கள் பல இடையிடையே இடம்பெற்றுள்ளன. இதற்கு இவர் அருணகிரிநாதர், நீலகண்டசிவன் போன்ற இயலிசைப் புலவர்களைப் பின்பற்றியதே காரணமெனலாம்.

சிவன் இயற்றிய இசை வடிவங்கள்:

தமிழிசை வளர்ச்சியின் மற்றொரு பரிமாணமாக சிவன் தமிழ்ச் செய்யுட்களைக் கருநாடக இசை வடிவில் கச்சேரி உருக்களாக அமைத்துள்ளார். இவர், வர்ணம், கிருதி, கீர்த்தனம், இராகமாலிகை, தில்லானா முதலிய இசை வகைகளில் இயற்றியுள்ளார்.

தமிழில் இவர் சிறந்த புலமைப் பெற்றிருந்ததால், கவிதை அமைப்புக் கொண்ட சிந்து, கண்ணி, விருத்தம் முதலிய இசைப்பா வகைகளிலும் பாடியுள்ளார். இவரின் இராமாயண

நொண்டிச் சிந்தும், வழிநடைச் சிந்தும் சிறந்த இலக்கண முறையுடன் இனிமையுடன் அமைந்துள்ளன. இவர் திருப்புகழ் அமைப்பிலும் சில பாடல்களை இயற்றியுள்ளார். சிவன் இயற்றியுள்ள "காரைக்கால் அம்மையார் சரிதம்" என்ற இசை நாடகத்தில் இடம்பெறும் விருத்தங்கள் சமநிலைச் சிந்து, வியனிலைச் சிந்து, ஆசிரியப்பா போன்ற இயற்பா வடிவினை ஒத்து அமைந்துள்ளன.

இசை அமைப்பும், சிறப்பும்:

சிவனின் பாடல்களில் சிறந்த இசை அமைப்பும், இராகத்தின் தனித்தன்மையும் பளிச்சிடுகின்றன. இவர், எந்த இராகத்தைக் கையாண்டாலும், அந்த இராகத்தின் நுண்மையும், அழகும், சில பாடல்களில் விரிவாகவும், சிலவற்றில் சுருக்கமாகவும் அமைந்து விளங்கும்.

இவர் சுமார் நூறு இராகங்களைக் கையாண்டுள்ளார். மிக அதிகமாகச் சுத்த மத்தியம இராகங்களையே உபயோகப் படுத்தியுள்ளார். இவற்றில். தோடியில் 21 பாடல்களையும், கரகரப்பிரியாவில் 21 பாடல்களையும், கல்யாணியில் 28 பாடல்களையும் இயற்றியுள்ளார். இந்த இராகங்கள் சிவனுக்கு மிகவும் விருப்பமான இராகங்கள் என இவை மூலம் அறிய முடிகிறன. ஒவ்வொரு இராகத்தின் சாயல் அமைப்பும் ஒரே மாதிரியாக இல்லாமல், அவற்றைப் பல்வேறு கோணங்களில் பயன்படுத்தியுள்ளார்.

அரிகாம்போதி, கரகரப்பிரியா இராகங்களில், தியாகராஜர் சிறந்த உருப்படிகளைப் படைத்துள்ளார். இந்த இரு இராகங்களின் அழகிய தன்மையை, தியாகராஜருக்குப் பிறகு பாபநாசம் சிவனே சிறந்த வகையில் பயன்படுத்தியுள்ளார்.

இவர் தோடி, கரகரப்பிரியா, சண்முகப்பிரியா போன்ற இராகங்களைப் புது அழகுடனும், தனித் தன்மையுடனும் தன் பாடல்களில் அமைத்திருப்பது கவனிக்கத்தக்கது.

விருதுகள்:

சிவன் தனது வாழ்நாளில் அடைந்த பாராட்டுகளும், பட்டங்களும் ஏராளமாகும். அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

1. ஸ்ரீ காஞ்சி சங்கராச்சாரியாரிடமிருந்து 1950இல் பெற்ற "சிவ புண்ய காளாமணி" என்ற பட்டம் பெற்றார்.
2. இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொசைட்டியிடமிருந்து 1950லும், 1970லும் "சங்கீத சாகித்ய சிகாமணி" என்னும் விருது பெற்றார்.
3. 1962இல் இவருக்கு ஜனாதிபதி பரிசு வழங்கி கௌரவித்தார்.
4. 1965இல் சென்னை தமிழிசைச் சங்கம் "இசைப் பேரறிஞர்" விருது வழங்கி கௌரவித்தது.
5. 1971இல் சென்னை சங்கீத வித்வத் சபை "சங்கீத கலாநிதி" பட்டம் வழங்கியது.
6. 1972இல் இந்திய அரசின் பத்மபூஷண் விருதும், சங்கீத நாடக அகாடமியின் பரிசும் பெற்றார்.
7. சிவனின் 60 ஆவது பிறந்த நாளில் "சிவ புண்ணிய கான மணி" என்ற பட்டத்தினை காஞ்சி ஆச்சாரியார் வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

பாடலின் சிறப்பு:

சிவனின் பாடல்களில் தியாகராஜரின் பாடல்களின் சாயலை அதிகமாகக் காண முடியும். சங்கதிகள் அதிகமாக இல்லாமல், இராகபாவத்துடன் பாடல்கள் அமைந்துள்ளன. அதிகமான கமகங்களும் சங்கதிகளும் இல்லாமல், எளிமையாக அமைந்திருப்பது இவருடைய இசை அமைப்பின் சிறப்பாகும். மேலும் தனக்குத்தானே உணர்ந்து அனுபவித்து சுவைத்து, இசை உலகிற்குப் பாடல்களை அளித்திருப்பதால், அவற்றின் அமைப்பே சிறப்பானதாகும். இறையுணர்வோடு இயற்றப்பட்ட பாடல்களில், ஒப்பற்ற உணர்வை காண இயலும்.

பாடலின் எண்ணிக்கை:

சிவனின் பாடல்கள் ஒவ்வொன்றிலும் சங்கீத பாவமும், சாகித்ய பாவமும் நன்கு இணைந்து காணப்படுகின்றன. இவர் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட காரணத்தினால், இவரின் பாடல்களில் எளிமையான மற்றும் சுவைமிக்க தமிழ்

மொழியினை அனைவராலும் உணர முடிகிறது. இவர் இயற்றிய 500 கிருதிகளும், 500 திரைப்படப் பாடல்களும் இன்றும் நம்மிடையே உள்ளன. சுமார் 2000 பாடல்களை இயற்றியுள்ளார். அவற்றுள் 50 வடமொழிப் பாடல்களும் அடங்கும். 100க்கும் மேற்பட்ட இராகங்களையும் வெவ்வேறு தாளங்களையும் தமது பாடல்களில் உபயோகப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத் தக்கது.

பாபநாசம் சிவன் இயற்றிய பாடல்களில் நூல்களாக வெளிவந்தவை:

பாபநாசம் சிவன் இயற்றிய பாடல்களின் தொகுப்புகள் "கீர்த்தனை மாலை" என்ற பெயரில் இதுவரை ஆறு பாகங்கள் வெளிவந்திருக்கின்றன. நூறு பாடல்களடங்கிய தொகுப்பு 1934 ஆம் ஆண்டு முதன் முதலாக புத்தகமாக வெளியிடப்பட்டது. 31 ஆண்டுகள் கழித்து மற்றுமொரு நூறு பாடல்களடங்கிய தொகுப்பு 1965 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. மூன்று முதல் ஆறு வரையிலான பாகங்கள் சுரத்தாளக் குறிப்புடன் சிவனின் மகளான திருமதி ருக்மணி ரமணி அவர்களால் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் உதவியுடன் நூற்களாக வெளியிடப்பட்டுள்ளன.

சிவன் இயற்றிய வர்ணங்கள் "வர்ணமாலை" என்ற நூலாகவும், இராமரின் வரலாற்றைக் கூறும் பாடல்களடங்கிய தொகுப்பு "ஸ்ரீராம சரித கீதம்" என்ற நூலாகவும், காரைக்கால் அம்மையார் இசை நாடகம் என்ற நூலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப் பட்டுள்ளன. இம்மூன்றும் ஒலி நாடாக்களாகவும் வெளியாகியுள்ளன.

சிவன் இயற்றிய "வடமொழிச் சொற்கடல் சமஸ்கிருத நூதன அகராதி" தமிழ் மொழியிலும், வட மொழியிலும் நூல் வடிவில் வந்துள்ளன.

சிவனின் வரலாற்றினைக் கூறும் நூலாக "ஸ்ரீ பாபநாசம் சிவன் சரிதம்" என்ற நூல் திருமதி ருக்மணி ரமணி அவர்களால் 1987 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

பாபநாசம் சிவன் தினமணி வாரப் பத்திரிக்கையில் எழுதிய வரலாற்றுத் தொகுப்பு, "எனது நினைவுக்கடல்" என்ற தலைப்பில் திருமதி ருக்மணி ரமணி அவர்கள் நூலாக்கம் செய்துள்ளார்.

மறைவு:

இறை பக்தி மட்டுமல்லாமல் தேசப்பற்று மிக்க சிவன் 20 நூற்றாண்டில் தமிழிசை செழித்து வளரக் காரணமாயிருந்தார். இவர் தமது 83 ஆவது அகவையில் 1.10.1973 ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

இவருடைய பாடல்கள் புகழ் அடைந்திருக்கும் அளவு வேறு எவருடைய பாடல்களும் அவர்கள் வாழ்நாளில் புகழடைந்ததில்லை எனலாம். இத்தகு சிறப்புப் பெற்ற பாபநாசம் சிவன் அவர்கள் கவிவாணராகவும், இசைவாணராகவும், கலை வாணராகவும் தொண்டாற்றிய இவருக்குக் கலையுலகம் என்றென்றும் கடமைப்பட்டிருக்கும் என்பதில் ஐயமில்லை.

இராகம் : நவரச கன்னட **தாளம் : ஆதி**

பல்லவி

நானொரு விளையாட்டு பொம்மையா
ஜகன்னாகியே உமையே உந்தனுக்கு (நானொரு)

அனுபல்லவி

நானிலத்தில் பல பிறவி எடுத்து
திண்டாடினது போதாதா உந்தனுக்கு (நானொரு)

சரணம்

அருளமுதைப் பருக அம்மா அம்மாவென்று
அலறுவதைக் கேட்ப தானந்தமா
ஒருபுகலின்றி உன் திருவடி அடைந்தேனே
திருவுள்ளம் இரங்காதா உந்தனுக்கு (நானொரு)

மகாத்மா ஸ்ரீ நீலகண்ட சிவன்



இறைவழிபாட்டு நெறிகளுள் இசை மூலம் இறைவனை வழிபடும் முறை மிகவும் தொன்மையான நெறியாகும். இதனை மதுரபக்தி என்பர். தமிழிசையால் இறைவனைப் போற்றிப் புகழும் திருநெறியை நாயன்மார்களும், ஆழ்வார்களும் சிறப்புடன் கையாண்டனர். இவர்களைத் தொடர்ந்து திருப்புகழ் தந்த அருணகிரியார், சீர்காழி முத்துத்தாண்டவர், தில்லை விடங்கன் மாரிமுத்தாபிள்ளை, சீர்காழி அருணாசலக் கவிராயர், அருட்பா தந்த வள்ளலார் போன்றோர் தமிழிசையால் இறைவனைப் பாடிப் போற்றினர். பின்பு வந்த தியாகராசர், முத்துசாமி தீட்சிதர், சியாமா சாஸ்திரி போன்றோர்களும் இறை நெறியை நாட இசை வழிபாடு சிறந்தது என்பதனை உணர்த்தினர். இவர்களைத் தொடர்ந்து சென்ற இரு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த இசை மேதைகளுள் ஒருவராக நீலகண்ட சிவன் விளங்குகிறார்.

பிறப்பு:

நீலகண்ட சிவன் நாகர்கோவிலை அடுத்துள்ள வடிவேச்வரம் என்னும் திருத்தலத்தில் சுப்பிரமணிய அய்யருக்கு மகனாக 1893 ஆம் ஆண்டு பிறந்தார். இவருடைய குடும்பமே தெய்வீக மார்க்கத்திலும் இசைக் கலையிலும் சிறந்து விளங்கியது. சிவ நெறியிலும், முருக வழிபாட்டிலும் ஈடுபாடு கொண்டவர்களாக விளங்கினர். இதனால் இவருக்குச் "சுப்பிரமணியன்" என்று பெயர்ச் சூட்டினர். இந்த சுப்பிரமணியனே பிற்காலத்தில் நீலகண்ட சிவன் என்று போற்றப்பட்டார்.

இளமைப்பருவம்:

இளமை முதலே ஆன்மீகத்திலும், திருக் கோயில்களில் நடைபெறும் பஜனையிலும் ஈடுபாடு கொண்டார். இவர் தம் ஐந்தாம் வயதிலிருந்தே பழைய பஜனைப் பாடல்களுக்குப் புதிய மெட்டுக்களை அமைத்துப் பாடி பலரையும் வியக்கச் செய்தார். பத்மநாபபுரம் கோயிலில் உள்ள இறைவன் நீலகண்டேசுவரர் ஆனந்தவல்லி அம்மையாரின் அருளை அடைந்தார். வாகன அறையில் மயங்கிக் கிடந்த தாண்டவனுக்குச் சீர்காழி தோணியப்பர் ஆலய அம்மையார் அருள் புரிந்ததுபோல், சுப்பிரமணியனும் பத்மநாபபுர கோயில் வாகன அறையில் கடுந்தவம் இயற்றி, இறைவனது அருள் பெற்று, பாடும் திறனைப் பெற்றார். அன்று முதல், சுப்பிரமணியன் நீலகண்ட சிவன் ஆனார்.

இவர் செல்வச் சிறப்பு மிக்க தாணு ஐயர் என்பரின் மகளான இலட்சுமியைத்தனது 14 ஆம் வயதில் திருமணம் செய்து கொண்டார். இவருக்குப் பொண்ணு சிவன், தாணு சிவன், நீலகண்டன், சுந்தரம் என்ற நான்கு மகன்களும், பார்வதி அம்மாள் என்ற மகளும் பிறந்தனர். சிவ நெறியில் கொண்ட ஈடுபாட்டில் தம் குழந்தைகளுக்கும் சிவனுடைய பெயரையே சூட்டினார். இளமையில் உள்ளூர் பஞ்சாயத்துத் தலைவராகப் பணியாற்றி அப்பணியில் நிறைவு கொள்ளாமல் பக்தி நெறிக்குச் சென்றார். இவர் இல்ல வாழ்வில் பற்றில்லாமல் இறைவனின் புகழைப் பாடுவதையே தம் வாழ்நாளின் நோக்கமாகக் கொண்டார். பதினைந்து வருடங்கள் சட்டத்துறையில் பணி புரிந்தார். சட்டத்துறையில் பணி புரிந்த காலத்தில், இவரது நேர்மையைச் சோதிக்கும் விதமாக, ஒரு பொய் சாட்சியம் அளிப்பதற்கு இவருக்குப் பெருந்தொகை வழங்கப் படவிருந்தது. அதனை மறுத்ததோடு, தன்னுடைய பணியையும் துறந்து, இறைப்பணியில் தன்னை ஆட்படுத்திக் கொண்டார். இவருடைய இல்லத்திற்குச் சுவாமி விவேகானந்தர் ஒருமுறை வந்து இவருடன் இணைந்து ஒரே மேடையில் உரை நிகழ்த்தினார்.

பெயர்க்காரணம்:

நீலகண்ட சிவன் தனது வாழ்வைத் துறந்து, இறைத் தொண்டிற்குத் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்ட

போது, "நீலகண்ட சிவன்" என்ற சிறப்புப் பெயர் பெற்றார். ஆனால் இவர், தன்னை நீலகண்டதாசன் என்று அழைப்பதனையே விரும்பினார். சிறு வயதிலிருந்தே பஜனைப் பாடல்களைக் கேட்டு, அதில் பொதிந்துள்ள இசையின் நுணுக்கங்களை ஆராய்ந்து, சிறந்த பாடல்களைப் படைத்தார்.

முத்திரைகள்:

நீலகண்ட சிவன் தனது பாடல்களில் "நீலகண்ட" என்ற முத்திரையோடு பாடலை முடித்தாலும், நீலகந்தரன், நீலமணி சுந்தரன், நீலமை மணிகண்டன், நீல மணிசுந்தரன் என்று வேறு பல முத்திரைகளையும் தமது பாடல்களில் பயன் படுத்தியுள்ளார்.

ஆதரவு:

நீலகண்ட சிவனைத் திருவாங்கூர், கொச்சி, இராமநாதபுரம் மற்றும் புதுக்கோட்டையை ஆண்ட மன்னர்கள் தங்கள் அரசவைக்கு வரவழைத்துக் கௌரவப் படுத்தினர். மேலும், குடும்பம் முழுமைக்கும் தினமும் இலவசமாக அரிசி மற்றும் உணவுப் பண்டங்களைப் பெற்றார். இதனால், திருவாங்கூர் மகாராஜா இவருக்கு "அரிசியும் கொப்பும்" என்ற பட்டத்தை வழங்கிக் கௌரவித்தார். மகராஜாக்கள் பலர் இவர்மீது அன்பும், அபிமானமும் கொண்டிருந்தாலும், இவர் இறைவனைத் தவிர வேறு யார் மீதும் பாடவில்லை.

சிறப்புத்தன்மை:

தமிழிசைக்குத் தன் வாழ்நாளை அர்ப்பணித்த நீலகண்ட சிவன் தன்னைத் தேடிவந்த பொன், பொருள்களை அறவே வெறுத்தார். நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களை இயற்றிய இவர் எந்த குருவிடமும் குருகுல வாசம் செய்து இசைப் பயிலவில்லை. எனினும் பஜனை முறையைப் பின்பற்றி பாடல்களை இயற்றிப் புகழ் பெற்றார்.

பாடலின் எண்ணிக்கையும், தெய்வ ஈடுபாடும்:

இவர் தியாகராசரைப் போல எண்ணிலடங்காதப் பாடலை இயற்றியுள்ளார். ஆனால் தற்பொழுது 164 கீர்த்தனங்களே கிடைத்துள்ளன. நீலகண்ட சிவன் இறைவனது பேராற்றலையும் புகழையும் எடுத்துப் பாடியதோடு சிவனின்

திருவருளுக்கு ஆளாக வேண்டி இன்னிசைக் கீர்த்தனை பாமாலைகளைப் பாடினார்.

சிவபெருமானை வாழ்த்திப் பாடல்கள் பல இயற்றி இருந்தாலும், விநாயகர், முருகன், கலைவாணி, அம்பிகை, திருமால் போன்ற பல கடவுளர்கள் மீதும் பாடல்களைப் பாடியுள்ளார். மேலும், தென்னிந்தியாவிலுள்ள பல திருத்தலங்களுக்குச் சென்று அத்தலங்களில் வீற்றிருக்கும் தெய்வங்களின் மீது பாடல்களை இயற்றியுள்ளார். பெரும்பான்மையான பாடல்களைத் தமிழிலும் சிலவற்றைச் சமஸ்கிருத மொழியிலும் இயற்றியுள்ளார்.

விநாயகர் வழிபாடு:

எந்தவொரு செயலும் சிறப்போடு நடந்தேறவும், தடை வராமல் காத்திடவும் விநாயகரை வழிபடும் மரபு உள்ளது. இந்நிலையில் விநாயகர் மீது இவர் பாடிய, 15 கீர்த்தனைகள் கிடைத்துள்ளன.

இசை நிகழ்ச்சியை நாட்டை இராகத்தில் தொடங்குவது என்ற மரபிற்கேற்ப இவரின் விநாயகர் கீர்த்தனை நாட்டை இராகத்தில், சாப்பு தாளத்தில் அமைத்துள்ளார்.

இராகம் : நாட்டை **தாளம் : மிச்ரசாபு**

பல்லவி

சித்தி அருள் சிவசக்தி பாலகனே – சின்மயானந்த
மத்த மத மொழு கத்தி மாமுகனே

அநுபல்லவி

எத்தினமு மொரு சித்தமுடையவர்
பத்தி புரிய நினைத்த வரமருள்

சரணம்

பாசமங்கு சமாதி ஐங்கரனே பயறடைமீ
தாசை கொண்ட ருளும் மகோதரனே தேவர்மூவர்க்கும்
பூசை முந்திய யீசன் மைந்தனே நீ சரண் சரணாசு நன்கவி

புகழவருள் பரன் மகிழவலம்வர
புதியகனி பெற்ற மதி வேணியிலுற்ற

முருக வழிபாடு:

நீலகண்ட சிவனின் குடும்பம் முருக வழிபாட்டில் மிகவும் ஈடுபாடு கொண்ட குடும்பமாகத் திகழ்ந்தது. திருமுருகாற்றுப்படையிலும், அருணகிரிநாதரின் திருப்புகழிலும் பெரிதும் ஈடுபாடு கொண்ட நீலகண்ட சிவன் 14 கீர்த்தனைகளில் முருகனை வழிபடுகிறார்.

வ.எண்.	பாடல்	இராகம்	தாளம்
1.	ஜயகணேசுவரஸோதர	நாட்டை	ஆதி
2.	ஹர ஹர சண்முக	பியாகடை	ஆதி
3.	கருணாகர	மத்தியமாவதி	ஆதி
4.	சரவணபவ	கேதாரம்	ஆதி
5.	கடைக்கண்	தர்பார்	சாபு
6.	சண்முகனே	காபி	ரூபகம்
7.	எனக்குன் திருமண	காம்போதி	ரூபகம்
8.	வேலா சரணம்	பைரவி	சாபு
9.	இந்தத் திருவடிவம்	வசந்தா	பெரிய ஆதி
10.	கண்ணாரக்கண்டேனே	முகாரி	பெரிய ஆதி
11.	சரவணபவ	கமாசு	ஆதி
12.	வேலாயுதனே	காம்போதி	ஆதி
13.	ஓராறுமுகனே	ஆரபி	ஆதி
14.	மங்களம் மால்மருகர்க்கு	மத்தியமாவதி	ஆதி

தோடயம்:

பஜனை சம்பிரதாயப்படி முதலில் தோடயம் இடம் பெறுவது மரபு. இவரின் சுப்பிரமணிய கீர்த்தனையின் தொடக்கம் நாட்டை இராகத்தில் ஜம்பைத் தாளத்தில் அமைந்த தோடயத்தோடு தொடங்குகிறது.

இராகம் : நாட்டை **தாளம் : ஜம்பை**

ஜய கணேசுவர ஸோகர ஜயமகேசுவரகுமார
ஜய பாவன சத்திதர ஜய கருணாகர – ஜயஜய

திருப்புகழ் தாக்கம்:

முருக வழிபாட்டுக் கீர்த்தனைகளில் திருப்புகழின் தாக்கம் காணப்படுகிறது. இதற்கு ஒரு சான்று காண்போம்.

அருணகிரியாரின் திருஆவினன்குடி திருப்புகழ்ப் பாடல்களுள்,

"நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ர சொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமி நமோநம வெகுகோடி"

இதனைப் போலவே பியாகடை இராக கீர்த்தனை ஒன்றில் சண்முகனைப் போற்றிப் பாடுகிறார்.

இராகம் : பியாகு **தாளம் : ஆதி**

ஹரஹர ஷண்முக நமோநமோ ஆனந்து ரூபா நமோ நமோ
சரவண நாயக நமோ நமோ சதுமறைப்பொருளே நமோ நமோ.

நீலகண்ட சிவன் தனது கிருதிகளில் 93 இடங்களில் நீலகண்டதாசன் என்ற முத்திரையைப் பயன்படுத்தியுள்ளார்.

ஆடல்வல்லான்:

ஆனந்த நடமாடி இவ்வுலகத்தை அருள் வெள்ளத்தில் ஆழ்த்திவரும் ஆடல்வல்லான் மீது 9 கீர்த்தனைகளை நீலகண்ட சிவன் இயற்றியுள்ளார். முத்துசாமி தீட்சிதரின் பஞ்சலிங்க தல கிருதிகளைப் போல, தியாகராஜரின் பஞ்சரத்தினக் கீர்த்தனைகளைப் போல, நீலகண்ட சிவன் பஞ்ச நடன கீர்த்தனைகளைப் பாடியுள்ளார்.

இப்பாடலில் தில்லை கனகசபையையும், மதுரை வெள்ளியம்பலத்தையும், திருநெல்வேலி தாம்பிர சபையையும், திருக்குற்றாலச் சித்ரசபையையும், திருவாலாங்காட்டு இரத்தினசபையையும் போற்றிப் பாடுகிறார். ஆடல்வல்லானின்

ஆடலுக்கு ஏற்ற தாள லயம், சொற்கட்டு, சதிக்கோர்வைகளுடன் இக்கீர்த்தனங்க்ள் விளங்குகின்றன. இன்றைய ஆடல் அரங்குகளில் இக்கீர்த்தனைகள் இசைக்கப்பட்டும் ஆடப்பட்டும் வருகின்றன.

"ஆனந்த நடமாடுவார் தில்லை" என்ற கீர்த்தனையை இதற்கு எடுத்துக்காட்டாகக் காணலாம். ஆடலுக்கேற்ற சொற்கட்டும், இலயக்கட்டும் கொண்ட மிகச் சிறப்பான கீர்த்தனையாக இது அமைந்துள்ளது.

இராகம் : பூர்விகல்யாணி **தாளம் : ரூபகம்**

பல்லவி

ஆனந்த நடமாடு வார்தில்லை யம்பலந்தனி
அடி பணி பவர்க்கப ஜபமில்லை

அனுபல்லவி

தானந்த மில்லாத ரூபன் தச்சந்தகசந்தகசனு
தளாங்கு தகத்திங்கிண தோந் தளாங்கு தகததங்கிணதோந்
தாளங்கு தகத்திங்கிண நோந் தகதிமி தகததிங்கண தோமேன்

இந்தக் கீர்த்தனையில் வரைமணி சலசலசலவென, அணிபணி கலகலகலவென, பாதிமதிச்சோதி பளீர் பளீரென என்ற இயைபுத் தொடை மிகச் சிறப்புடன் அமைக்கப் பட்டுள்ளது.

தோத்திரக் கீர்த்தனைகள்:

நீலகண்ட சிவன் சிவனைப் பற்றிப் பாடிய கீர்த்தனைகள் சிவதோத்திர கீர்த்தனைகள் என்று அழைக்கப்படுகின்றன. இந்தக் கீர்த்தனைகளைக் கல்யாணி, காம்போதி, ஆரபி, இந்தோளம், சுருட்டி, பைரவி, தோடி போன்ற தென்னிந்திய இராகங்களிலும், யமுனா கல்யாணி, பெஹாக், இந்துஸ்தானி காபி போன்ற வட இந்திய இராகங்களிலும் இயற்றியுள்ளார்.

சோமசுந்தரக் கடவுளின் மீது இயற்றியது:

மதுரையில் அறுபத்தி நான்கு திருவிளையாடற் களைச் செய்த சோமசுந்தரக் கடவுளைப் போற்றிப் புகழும் நாகநந்தினி இராகக் கீர்த்தனை மிக அற்புதக் கீர்த்தனையாகும்.

இராகம் : நாகநந்தினி **தாளம் : ஆதி**

பல்லவி

ஈசனே நின் பாதஞ்சரண மிருவினை தீர்த்
தருளஞ்சுந்த ரேசனே நின்பாதஞ் சரணம்

சரணம்

சிட்டர் புகழுந்தென் மதுரைச் சிறந்த பொற்றாமரையருகி
லெட்டு நாகந்தாங்கு மான வெழில் பெறுமிந்திர விமான

தீட்சைகளில் நயனதீட்சை, திருவடி தீட்சை, பரிச தீட்சை என்ற பல வகை உண்டு. இவற்றில் திருவடி தீட்சை மிகச் சிறப்பானதொன்றாகும். மதுரையில் உள்ள மீனாட்சியிடம் நயன தீட்சையையும், சோமசுந்தரக் கடவுளிடம் திருவடி தீட்சையையும் நீலகண்ட சிவன் இக்கீர்த்தனையின் மூலம் வேண்டுகிறார். இந்திர விமானமும், பாண்டியனுக்காகக் கால் மாறி ஆடிய வரலாற்றையும், அன்பர்களுக்காக அறுபத்தி நான்கு திருவிளையாடல்கள் செய்த சிறப்பையும் மீன் விழிக் கொண்ட ஞான மாதுவான மீனாட்சியையும் இக்கீர்த்தனையில் பாடுகிறார்.

இக்கீர்த்தனையில் மூன்று சரணங்கள் உள்ளன. இவை இரண்டடிகள் கொண்ட கண்ணிகளாக அமைந்துள்ளன. நீலகண்ட சிவன் ஒரே பாணியில் கீர்த்தனைகளை இயற்றாமல், சரித்திர கீர்த்தனைகளை அஷ்டகம், தசகம், கும்மி, சிந்து, கண்ணிகள், நலுங்கு, ஊஞ்சல், தாலாட்டு போன்ற பலவகையான அமைப்புகளில் பாடல்களைத் தந்துள்ளார்.

பதம்:

ஆடல் இசை உருப்படிகளில் பதம் என்பதும் ஒன்று. நாயகன் நாயகி பாவணையில் பாடும் மரபின் அடிப்படையில் தன்னை நாயகியாக்கிக் கொண்டு, சிவபெருமானை நாயகனாகக் கொண்டு சன்மார்க்க நெறியில் நின்று பல கீர்த்தனைகளைப் பாடியுள்ளார். இவை தத்துவ விளக்கமாகவும், அதே நேரத்தில் வாழ்வியல் நிலையை எடுத்துரைப்பனவாகவும் அவர் கண்டு அனுபவிக்க நினைத்த நாட்டத்தைக் கூறுவனவாகவும் அமைந்துள்ளன. அந்த வகையில் நீலகண்ட சிவனின் புன்னாகவராளி இராகக் கீர்த்தனை அமைந்துள்ளது.

இராகம் : புன்னாகவராளி **தாளம் : சாபு**

பல்லவி

ஏகாந்த நிஷ்டையில் நீயும் நானுங்கூடி
யிரண்டற்றிருப்போம் வாடி

சரணங்கள்

தேசங்களெல்லாம் போய்த் தேடி யலைந்தோமே
தெருவுக்குத் தெருச்சென்று பாடியிரந்தோமே
பாசமறுப்போரைப் பார்த்து நாங் காணோமே
பாழுக்குழைக்கும் வீண் கூத்தாடியானோமே

இறைவனோடு கூடிக் கலந்திருப்போம் வாடி என்று தோழியரை அழைப்பது போல் இவ்வுலகத்தாரை நீலகண்ட சிவன் அழைக்கிறார்.

தேவிக் கீர்த்தனங்கள்:

தேவிக் கீர்த்தனங்கள் என்றப் பொருளில் அம்பிகையைப் போற்றி கீர்த்தனைகள் பலவற்றை நீலகண்ட சிவன் பாடியுள்ளார். இவை கமாசு, கரகரப்பிரியா, சாவேரி, துவிஜாவந்தி, நாட்டக்குறிஞ்சி, சங்கராபரணம் போன்ற இராகங்களில் இடம்பெற்றுள்ளன. இவர் நாயகிக்கு உரிய நாயகி இராகத்தில் "பிழைகளெல்லாம்" என்று தொடங்கும் கீர்த்தனையைப் பாடியுள்ளார். இதில், தான் செய்த பிழைகளைப் பொறுத்து என்னை ஆட்கொள்ள வேண்டும் என்று பாடியுள்ளார்.

இராகம் : நாயகி **தாளம் : ஆதி**

பல்லவி

பிழை களெல்லாம் பொறுத்த டிமையை
ஆண்டருள் பேதையா மென்றிரங்கி

மத்யமகாலம்

நதிக் கிசைந்த மதி அணிந்த தூயா
நம்புவோர்க் கருள் நிறைந்த சகாயா
கதிக்கு விருத்தரென வந்த உபாயா
கைலை நாதா சைலை மாது நேயா

இசை நுட்பமும், கேட்போருக்கு இன்னிசையாகவும், மொழி ஆய்வோருக்கு அழகான சொற்கட்டுகளும், பொருள்நிலை தேடுவோர்க்கு ஆழமான பொருள் விளக்கங்களும், அருள் நிலையை நாடுவோர்க்குச் சிறந்த வழி நூலாகவும், பாடிப் பரவி ஆனந்த மயமாகும் அற்புதக் கீர்த்தனைகளாக இவைகள் அமைந்துள்ளன.

இவர் மகாவிஷ்ணு, மகாலட்சுமி மீதும் கீர்த்தனைகள் பாடியுள்ளார்.

நாட்டுப்புறப் பாடல்:

செவ்வியல் இசையில் மிகச் சிறப்பாகப் பாடலைப் பாடிய நீலகண்ட சிவன் நாட்டுப்புற இசை வழக்காற்றையும் ஆங்காங்கே பாடியுள்ளார். நாட்டுப்புற இசையான சிந்து இசையைப் பல இடங்களில் பயன்படுத்தும் இவர், இசை வழிபாட்டில் நாட்டுப்புற இசையின் முக்கியத்துவத்தைப் பாடலின் மூலம் எடுத்துரைத்துள்ளார். இவற்றிற்கு எடுத்துக்காட்டாகச் சகானா இராகத்தில் அமைந்த ஆனந்த சிந்து பாடல் ஒன்றினைக் காண்போம்.

இராகம் : சகானா **தாளம் : ஆதி**

ஆனந்தசிந்து

தித்தித் தோந்தோந் தித்தித் தோந் தோந்
தித்தித் தோந்தோ மென்று நடமாடினார்
பாடினார் கூடினார் கொண்டடினார்
முத்தித்தேவே முத்தித்தேவே முத்தித்தேவே
யென்று விண்ணோர் வாழ்த்தினார்
போற்றினார் பூவினைத் தூற்றினார்

அற்புத நிகழ்வுகள்:

நீலகண்ட சிவன் தமது வாழ்வில் நடந்த அற்புத நிகழ்வுகளைப் பாடல்கள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

1. இவர் இல்லற வாழ்விலிருந்து, முக்தி நிலை அடைந்த நிகழ்வை, "சிவனை நினை மனமே" என்ற அமீர் கல்யாணி இராகக் கீர்த்தனையில் குறிப்பிட்டுள்ளார்.
2. வடலூர் இராமலிங்க அடிகளார் திருவருட்பா எழுதியபோது, தண்ணீரால் விளக்கு எரியச் செய்தது

போல, இவர், பத்மநாபபுரம் கோயிலில் இறைவனைத் துதித்துத் தண்ணீர் விட்டு விளக்கினை எரியச் செய்தார்.

3. திருநெல்வேலி அருகேயுள்ள குமரக்குளம் என்ற ஊர் மக்கள் வறட்சியில் துன்புற்றனர். அப்பொழுது, அவர் "வளர்த்த தரு உருவகம் மார்த்தாண்டேசுவரனே" என்ற பாடலைப் பாடியவுடன் மழை பெய்து வறட்சி நீங்கியது.

4. சிறுவன் ஒருவன் காய்ச்சலால் அவதியுற்றபோது நீலகண்ட சிவன், அவனுக்கே பஞ்சாட்சர மந்திரத்தைப் பாடி அந்நோயினைக் குணப்படுத்தி உள்ளார்.

5. இவர், தமது வாழ்வின் இறுதிக்குள் 108 திருத் தலங்களுக்குச் சென்று பாடல் புனைந்துள்ளார்.

கையாண்ட இசைப் பாடல் வகைகள்:

நீலகண்ட சிவன், தன்னுடையப் பாடலில் விருத்தம், சிந்து, பதிகம், லாலி, ஊஞ்சல், அஷ்டகம், சாடகம், பஞ்சகம், கண்ணி, மகாத்மியம், கீர்த்தனம், நலுங்கு, கப்பல், கும்மி, தோடயமங்களம், இருச்சொல் ஆகிய இசைப் பாடற் வகைகளைக் கையாண்டுள்ளார்.

இயற்றிய நூல்கள்:

நீலகண்ட சிவன் ஆழ்வார்களின் பாசுரங்களைப் பின்பற்றி சிவபெருமானின் பெருமையை உணர்த்தும் 1500 செய்யுட்களை 150 பதிகங்களாக உருவாக்கியுள்ளார். இவர் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரின் புகழ் பரப்ப "நால்வரின். சரித்திரம்" என்ற நூலினையும், "ருத்ராட்ச மகாத்மியத்தில்" அறுபத்து மூன்று நாயன்மார்களின் சரித்திரங்களையும் அரிகதை வடிவில் விருத்தமாகவும், கீர்த்தனைகளாகவும் இயற்றியுள்ளார். இவர் இயற்றிய இசை உருப்படிகளிலேயே மிகப் பிரபலமான ஒன்று தேவியின் மீது இயற்றிய "லலிதபுராணம்" ஆகும்.

மேலும், தீரநிசாதர் சரித்திரம், சோமவார மகாத்மியம், ஸ்ரீருத்ரமகிமை, சுந்தரர் சரித்திரம், சித்தர் சரித்திரம், கீர்த்தி மாலினி சரித்திரம், கௌரி சரித்திரம் போன்ற இருபத்து ஆறு இசைத் தொகுப்புகளை இயற்றியுள்ளார்.

மறைவு:

நீலகண்ட சிவன் தனது இறுதி நாளை முன்கூட்டியே அறிந்து சொன்னார். தவத்தில் சிறந்த முனிவர்களுக்கு மட்டுமே கிடைக்கக்கூடிய "கபாலமோட்சம்" இவருக்குக் கிட்டியது. தனது மரணத்திற்குப் பின்பு அவரின் தலையின் கபாலத்தில் ஏற்பட்டிருந்த ஒரு காயம் அவருக்குக் கபால மோட்சம் கிட்டியதை உறுதிப்படுத்தியது.

தமது கடைசிக் காலத்தைத் திருவனந்தபுரத்திலுள்ள கரமணை என்ற கிராமத்தில் கழித்த இவர் தன்னுடைய இறப்பின் போது, அவரது இழப்பை எண்ணி யாரும் துயரப்படக் கூடாதென்றும், சிவபெருமானின். திருப்பெயரையே உச்சரிக்க வேண்டுமெனக் கூறியபடி, ஆடி மாதத் திங்களன்று பிற்பகல் 4.30 மணியளவில் இறைவனடிச் சேர்ந்தார்.

சீடர்கள்:

நீலகண்ட சிவனின் சீடருள் முதன்மையானவர் தமிழிசை வளர்த்த பாபநாசம் சிவன் ஆவார். நீலகண்ட சிவனின் பல பாடல்களைப் பஜனை மற்றும் பல்வேறு அரங்குகளில் பாடிப் பிரபலப் படுத்தினார். திருவாங்கூர் சமஸ்தானத்தில் உயரதிகாரியாக இருந்த யாழ்ப்பாணம் பொன்னம்பலப் பிள்ளை மற்றும் விசுவநாத சிவன் ஆகியவர்களும் இவரின் சீடர்கள் ஆவர். இவர்களன்றி இவரின் பஜனைக் குழுவில் மேலும் பல சீடர்கள் இருந்தனர். அவர்களின் பெயரை அறிய முடியவில்லை.

இவருடைய பாடல்களை முசிறி சுப்பிரமணிய அய்யரும், செம்மங்குடி சீனிவாச அய்யரும் பாடி இசைத் தட்டுக்கள் மூலம் வெளியிட்டுள்ளனர். மேலும், கவிகுஞ்சர பாரதி, இவரின் இல்லத்திற்கு வந்து கருத்துச் செறிவுள்ள இவரின் பாடல்களை வியந்து போற்றினார்.

நீலகண்ட சிவனின் குடும்பத்தார் சிறந்த இசைக் கலைஞர்களாகத் திகழ்ந்தனர். இவரின் கொள்ளுப் பேத்தியான திருமதி B.L.சரஸ்வதி ராம் இவரது படைப்புகளை யெல்லாம் திரட்டி நூற்களாகவும், ஒலி நாடாக்கள் வாயிலாகவும் தந்து வருகிறார்.

நீலகண்ட சிவன் இயற்றி நூற்களாக வெளிவந்தவை:

நீலகண்ட சிவன் தென்னிந்திய திருத்தலங்களுக்குச் சென்று இயற்றியப் பாடல்களை 1904 ஆம் ஆண்டு அவரது இளைய மகன் "தாணு சிவன்" அவர்கள் "திருநீலகண்ட போதம்" என்ற நூலில் வெளியிட்டுள்ளார். அத்தொகுப்பில் சிவனின் 2000 பாடல்கள் வெளிவந்துள்ளன. இது இவரின் முதல் பாடத் தொகுப்பு நூலாகும்.

மேலும், 1929 ஆம் ஆண்டு இவரின் பஜனைக் கீர்த்தனைகளும், லலிதா மகாத்மியக் கீர்த்தனைகளையும், "ஞானஸ்கந்தய்யர்" என்பவர் நூற்களாக வெளியிட்டார். அவை தற்பொழுது கிடைக்கவில்லை.

1955 ஆம் ஆண்டு இவரின் கொள்ளுப் பேத்தியான சாரதாம்பாள், சிவனின் 51 பாடல்களை வெளியிட முனைந்தார். ஆனால், சில காரணங்களால் அந்த வேலை தடைப்பட்டது. பிறகு, டி.சீனிவாசன் அவர்கள் "கீர்த்தனை மாலை" என்ற பெயரில் அதனை வெளியிட்டார்.

நீலகண்ட சிவனின் பத்துத் தமிழ்ப் பாடல்களை அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சுரத் தாளக் குறிப்போடு வெளியிட்டது.

பிறகு, சிவன் 164 கீர்த்தனைகளை இவரின் கொள்ளுப் பேத்தி பி.எல்.சரஸ்வதி ராம், "மஹாத்மா ஸ்ரீ நீலகண்ட சிவன் கீர்த்தனைகள்" என்ற பெயரில் நூலாக வெளியிட்டார்.

மேலும் இவர் நீலகண்ட சிவனின் 48 கீர்த்தனைகளை சுரத்தாளக் குறிப்புடன் "மஹாத்மா ஸ்ரீ நீலகண்ட சிவன் அவர்களின் கீர்த்தனைகள் இரண்டாம் பாகம்" என்ற நூலாக 2001 ஆம் ஆண்டு வெளியிட்டார்.

இவ்வாறு நீலகண்ட சிவன் தனது அறுபத்தொரு ஆண்டுக் காலம் வாழ்ந்து இசை உலகிற்கும் குறிப்பாகத் இசைத் தமிழ் உலகிற்கும் தெய்வத் தமிழ்ப் பாடிவரும் தமிழ் உலகிற்கும் இவர் ஆற்றிய சேவையை எண்ணி வியக்க வேண்டியுள்ளது.

இசைப் பேரறிஞர் டி.ஆர்.பாப்பா
(1922 - 2004)



தான் கற்ற இசை ஞானத்தால் செவ்வியல் இசையிலும், மெல்லிசையிலும், திரை இசையிலும், ஆலயங்கள் தோறும் ஒலித்துவரும் தெய்வீகத் தமிழ்ப் பாடல்களின் இசையிலும் தனக்கென ஒரு தனி இடம் பிடித்தவர் டி.ஆர்.பாப்பா என்று போற்றப் பெற்ற இசைவாணர் ஆவார். குருகுல முறையில் இசை பயின்றார். தந்தையார் திருத்துறைப்பூண்டி இராதாகிருஷ்ணன் ஆவார். இசையை வளர்த்த இசை வேளாளர் குடியில் தோன்றியவர். இவர் பிடில் இசைப்பதில் வல்லவர். நமது மரபு வழிபட்ட கருநாடக இசையை மேலை நாட்டுக் கருவியில் வாசித்தவர். இக்கருவியில் கருநாடக இசையை இசைத்து வெற்றி பெற்ற தஞ்சை வடிவேலும், பாலுசாமி தீட்சதர் போல் கருநாடக இசை நுட்பத்தைப் பிடில் கருவியில் இசைத்து வந்தார். கருநாடக இசையில் நுட்ப சுருதிகளையும் நுட்பமான கமகங்களையும் சிறப்புடன் வாசித்து வந்தார். இவருடைய மனைவியின் பெயர் செல்லம்மாள்.

இவர்களின் இல்லற வாழ்வில் ஒரு பெண்ணும் மூன்று ஆண் குழந்தைகளும் பிறந்தனர். மகள் பெயர் மீனாட்சி. மகன்கள் டி.ஆர்.மகாலிங்கம், டி.ஆர்.சோம சுந்தரம், டி.ஆர்.பாப்பா. இவர்களில் டி.ஆர்.சோமசுந்தரம் மிகச் சிறந்த நாகசுர விற்பன்னர். நாகசுவர ஆசிரியர். தஞ்சாவூர் சத்திரம் நிர்வாகத்திற்குட்பட்ட திருவையாறு அரசர் கல்லூரியில் நாகசுவர ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவரின் இளைய சகோதரர் டி.ஆர்.பாப்பா ஆவார். இவர்களது குடும்பம் பிற்காலத்தில்

வலங்கைமான் அருகில் உள்ள ஆலங்குடியில் தங்கிற்று. திரு டி.ஆர்.சோமசுந்தரம் தஞ்சை நாணயக்கார செட்டித்தெருவில் வசித்து வந்தார். இவரின் மனைவி பெயர் தயாளு அம்மாள். இவர்களுக்கு நவநீதம், நடராஜன், கோபால், ஜெயராமன் என்ற பிள்ளைகள் பிறந்தனர். மிகப் பெரிய குடும்பம். கடமையும் நேர்மையும் தவறாத சோமசுந்தரம் பிள்ளையிடம் நாகசுரம் கற்றவர்கள் இன்று மிகச் சிறந்த நாகசுர வித்வான்களாகத் திகழ்கின்றனர். இவரின் மூத்த மகள் நவநீதம் கரந்தை உமாமகேசுவரனார் புலவர் கல்லூரியில் பயின்று அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியர் பயிற்சி பெற்றுக் கீவளூரில் உள்ள பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். பணி ஓய்விற்குப் பின்பு தாங்கள் வளர்ந்த நாணயக்கார செட்டித்தெருவில் வசித்து வருகிறார். நடராஜன் நாகசுரம், பிடிலும் கற்று வாசித்து வருகிறார். கோபால் தஞ்சை கூட்டுறவு வங்கியில் பணியாற்றி ஓய்வு பெற்று, தந்தையார் வாழ்ந்த இல்லத்தைக் கட்டிக் கொண்டு வாழ்ந்து வருகிறார். இளைய மகன் ஜெயராமன் குடந்தை நீதிமன்றத்தில் பணியாற்றி வந்தார். டி.ஆர். பாப்பாவின் குடும்பத்தார் சென்னையில் வசித்து வருகின்றனர்.

டி.ஆர்.பாப்பா:

திருத்துறைப்பூண்டி இராதாகிருஷ்ணன் பாப்பா என்ற பெயரைச் சுருக்கிக் கொண்டு டி.ஆர்.பாப்பா என்று அழைத்துக் கொண்டார். சிலர் தஞ்சாவூர் இராதாகிருஷ்ணன் பாப்பா என்றும் கூறுவர். இவரின் இயற்பெயர் சிவசங்கரன். தந்தையே இவரின் முதல் குருநாதர் ஆவார். இளமையில் தாய் தந்தையர் குடும்ப வழியாகப் பெற்ற இசையைக் கற்றார். சகோதரர்களும் இசையில் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். குடும்பச் சூழல் இவரின் இசைப் பயிற்சிக்குத் துணை நின்றது. இருப்பினும் மேலும் முறையான இசைப் பயிற்சியையும் பெற்றார்.

இசைப் பயிற்சி:

சரளி வரிசைகள், ஜண்டை வரிசைகள், சுரத்தாள வரிசைகள், ஸ்தாயி வரிசைகள், இரவைஜதி வரிசைகள், கீதம், அலங்காரம், வர்ணம் போன்ற அடிப்படையான இசைப் பயிற்சிகளை முறையாகக் கற்றார். இப்பயிற்சிகளே பிற்காலத்தில் மாபெரும் இசைவாணராக இவர் திகழ

துணைபுரிந்தன. இவற்றைக் குரல் பயிற்சிகள் மூலம் முறையாகச் சுருதி, தாள முறையோடு பெறல் வேண்டும். சுர ஞானத்தை வலுப்படுத்திக் கொள்ள கீதப்பயிற்சி, சுரஜதிப் பயிற்சி, ஜதி சுரப் பயிற்சி, வர்ணப் பயிற்சி போன்றவற்றை அளிப்பர். இவற்றின் இராகம் இராகத்தில் அமையும் இசை அலகுகள், இராகத்தின் ஜீவசுரப் பயிற்சி போன்றவற்றைக் கற்பிப்பர். விடியற்காலையில் இவ்வகைப் பயிற்சிகள் அளிக்கப்பெறும். பயிற்சியில் பெறும் அழுத்தமும் அழகும் பிற்கால வளர்ச்சிக்குத் துணை நிற்கும். இவ்வகையில் சிவசங்கரன் தன் தந்தை மூலமும் இசை ஆசிரியர் மூலமும் இப்பயிற்சிகளை முறையாகப் பெற்றார்.

பிடில் பயிற்சி:

குரலிசைப் பயிற்சிக்குப் பின் பிடில் கருவி இசைக்கும் பயிற்சி மேற்கொள்ளும் பொருட்டுக் கும்பகோணத்தில் வாழ்ந்த சிவவடிவேல் என்ற பிடில் வித்துவானிடம் ஏழு ஆண்டு காலம் 1938 வரை குருகுலப் பயிற்சி பெற்றார். குருவின் இல்லத்தில் தங்கி குருவின் மூலமாக இசைப் பயிற்சியும் அரங்கத்தில் இசைக்கும் பயிற்சியும் பெற்றார். குரு கலந்துகொள்ளும் இசை நிகழ்வுகளின் பொழுது குருவிற்குத் தொண்டு புரியும் நிலையில் பணியாளாகச் செல்ல வேண்டும். மேடை அனுபவங்கள் பெற இது ஒன்றே துணை நிற்கும். கச்சேரிகளின் பொழுது இராகம், உருப்படிகளை எவ்வாறு கையாள்கின்றனர், எந்தெந்த நேரத்தில் எவ்வகையில் இலாவகமாகக் கையாள்கின்றனர், நட்டு, மிருதங்கம் போன்ற இசை முழக்கங்களுக்கு இசைவாக எவ்வாறு இசைக்கின்றனர் என்பன போன்ற அனுபவங்கள் இவ்வகையில் தான் கிடைக்கும். மேலும் பலர் முன் தான் கற்ற கல்வியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற அனுபவமும் பெறுவர். இவற்றைச் சிவசங்கரன் கும்பகோணம் சிவவடிவேல் மூலம் பெற்றார்.

ஏழாண்டு குருகுலப் பயிற்சிக்குப் பின்பு சிவசங்கரன் கச்சேரிகளில் வாசிக்கத் தொடங்கினார். பிற்காலத்தில் மிகச் சிறந்த இசை மேதைகளுக்கெல்லாம் வயலின் இசைக்கும் இசைக் கலைஞர் ஆனார். புகழ் பெற்ற டி.ஆர்.பட்டம்மாள், எம்.எல்.வசந்தகுமாரி, திருப்பாம்புரம் வேய்ங்குழல் வித்தகர் சுவாமிநாதன் பிள்ளை, ந.நீலா போன்றவர்களின் இசை நிகழ்ச்சிகளில் பிடில் இசைத்தார்.

இசையமைப்பாளர்:

1938 வரை குருகுலப் பயிற்சியும் பின்பு கச்சேரிகளில் பிடில் வாசித்தும் வந்தார். 1946 முதல் சென்னை வானொலி நிலையத்தில் பிடில் இசைக்கும் கலைஞர் ஆனார். அக்காலக் கட்டத்தில் சென்னை வானொலி நிலையம் மூலம் மிகச் சிறப்பான இசைவாணர்கள் இசை நிகழ்ச்சிகள் தந்து வந்தனர். இவர்களின் இசை நிகழ்ச்சிகளுக்குப் பிடில் வாசித்து வந்தார். மிகவும் சிறப்பாக வாசித்துப் பலரின் பாராட்டுதல்களுக்குக் காரணமானார். படிப்படியாக வளர்ந்து இசைக் கோப்பாளராக உயர்வுப் பெற்றார். 36 ஆண்டு கால பணிக்குப் பின்பு சென்னை வானொலி நிலையத்திலிருந்து பணி ஓய்வு பெற்றார். இக்காலத்தில் பல அரிய இசை நிகழ்ச்சிகளைத் தந்துள்ளார். அருணகிரிநாதர் வாழ்வை மையமிட்ட இசைச் சித்திரம், சீர்காழி மூவர் தமிழிசைப் பாடல்கள், பாரதி, பாரதிதாசன், நாமக்கல் கவிஞர் பாடல்கள், தேசிய விநாயகம் பிள்ளை பாடல்கள், ஆபிரகாம் பண்டிதர் பாடல்கள், தேவாரம், திருவாசகம், திருவாய்மொழி, திருப்புகழ்ப் பாடல்கள் போன்றவைகள் நிறைந்த இசை நிகழ்ச்சிகள் பலவற்றைத் தந்துள்ளார். வாத்திய விருந்து என்ற இசை நிகழ்வையும் தந்துள்ளார்.

சேலம் ஜுபிடர் தியேட்டர்ஸ் ஆட்ஸின் மனோன்மணி என்ற திரைப்படத்தில் வயலின் வாசித்தார். பின்பு தியேட்டரின் இசை அமைப்பாளராகவும் பணி புரிந்தார். அப்பொழுது அறிஞர் அண்ணாவின் கதையில் எம்.ஜி. இராமச்சந்திரன் நடித்த நல்லவன் வாழ்வான் என்ற திரைப்படத்தின் இசை அமைப்பாளராகப் பணிபுரிந்தார். இப்படப் பணியின் பொழுது வாலி என்ற திரைப்பாடல் ஆசிரியரை அறிமுகம் செய்துவித்தார். இவர் எழுதிய

சிரிக்கிறாள் – அவள்
சிரிக்கிறாள்
சிந்திய கண்ணீர் மாறியதாலேயே
சிரிக்கிறாள் – அவள்
சிரிக்கிறாள்

என்ற பாடலின் மூலம் வாலியைத் திரைத்துறையில் அறிமுகம் செய்து வைத்தார். அப்பொழுது ஜுபிடர் தியேட்டரில் பணியாற்றி வந்த எம்.என்.விஸ்வநாதனைத் திரை இசைக்கும் பணியில் அவ்வப்பொழுது ஈடுபடுத்தினார். இவர்

இசையமைக்கும் திறன் கண்டு 'பிற்காலத்தில் மிகப் பெரிய இசை அமைப்பாளர் ஆவாய்! அதற்குரிய தகுதி உன்னிடம் உள்ளது' என்று வாழ்த்தினார். பிற்காலத்தில் எம்.எஸ். விசுவநாதன் மெல்லிசை மன்னர் ஆனார். எம்.எஸ். விசுவநாதனும், கவிஞர் வாலியும் டி.ஆர்.பாப்பா அவர்களிடம் அளவிடற்கரிய மரியாதையும் மதிப்பும் கொண்டிருந்தனர்.

டி.ஆர்.பாப்பாவின் இசை அமைப்பைப் பலரும் அங்கீகரித்தனர். கலைஞர் மு.கருணாநிதி அங்கீகரித்தார். தான் தயாரித்த அம்மையப்பன் என்ற திரைப்படத்தில் "அம்மையப்பா அருள் தருவாய்" என்ற பாடலுக்கு இசையமைத்தார். பிற்காலத்தில் கலைஞரின் திரைப்படங்கள் பலவற்றிற்கு இசையமைப்பாளராகப் பணியாற்றினார். குறவஞ்சி, பூம்புகார், மறக்க முடியுமா, ரங்கோன் ராதா, ராஜா ராணி போன்ற படங்களுக்கு இசையமைத்தார். கலைஞரின் குறளோவியம், சங்கத் தமிழ் நாட்டிய நாடகங்களுக்கும் இசையமைத்துள்ளார். தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளின் கௌரவ இயக்குநராகவும் பணியாற்றினார். கௌரவ இயக்குநராகப் பணியாற்றிய காலத்தில் மாவட்டந்தோறும் இசைப் பள்ளிகள் தோன்றிட பாடுபட்டார். கலைஞர் முதல்வர் பணி துறந்ததும், கௌரவ இயக்குநர் பதவியையும் உடன் துறந்துவிட்டார்.

திரைப்பட இயக்குநர் ஜோசப்தளியத் தயாரித்த பல படங்களின் திரை இசை அமைப்பாளராகப் பணிபுரிந்தார். இவர் தயாரித்த "ஆத்ம சாந்தி" (1952) என்ற மலையாள மொழிப் படத்தின் இசையமைப்பாளராகப் பணியாற்றினார். பின்பு இவரின் மல்லிகா, விஜயபுரி வீரன், விளக்கேற்றுபவர், இரவும் பகலும், காதல் படுத்தும்பாடு என்கிற படங்களுக்கு இசையமைத்தார். ஜோசப்தளியத் இவரைப் பெரிதும் போற்றினார். கௌரவமான ஊதியம் வழங்கினார். தனது படங்களுக்கு ஹீரோ டி.ஆர்.பாப்பா தான் என்று கூறி கௌரவப்படுத்தினார்.

'இரவும் பகலும்' படத்தின் பொழுது எதிர் வீட்டுப் பையன் ஜெயசங்கரைத் திரை உலகிற்கு அறிமுகம் செய்து வைத்தார். நன்றி மறவாத ஜெயசங்கர் டி.ஆர்.பாப்பாவைக் கௌரவப்படுத்தி வந்தார். பிற்காலத்தில் தமிழ்த் திரை உலக ஜேம்ஸ்பாண்ட் என்று போற்றப்பட்டார். தனது 100வது இதயம் பார்க்கிறது என்ற படத்தில் டி.ஆர்.பாப்பாவை இசை அமைப்பாளராக்கினார்.

டி.ஆர்.இராமண்ணாவும் டி.ஆர்.பாப்பாவும் நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்தனர். அருணகிரிநாதர் திரைப்படத்தில் இசை இயக்குநராகப் பணியாற்ற இருந்த ஜி.இராமநாதன் டி.ஆர்.பாப்பாவை இசையமைக்கும்படி கூறினார். இப்படத்தில் வந்துள்ள சண்முகப்பிரியா இராகத்தில் 'முத்தைத்தரு பத்தித்திரு நகை' என்று தொடங்கும் திருப்புகழ் பாடலும் மிகவும் அற்புதமானவை. பிற பாடல்களையும் டி.எம்.சௌந்தராஜன் பாடி பிரபலமாகிவிட்டார்.

'இரவு வரும் பகலும் வரும்', 'அம்மா என்பது தமிழ் வார்த்தை அதுதான் குழந்தையின் முதல் வார்த்தை, 'கத்தியைத் தீட்டாதே உன் புத்தியை தீட்டு', 'குற்றால அருவியிலே குளித்தது போல் இருக்குதா', 'நீ சொல்லாவிடில் யார் சொல்வார் நிலவே' போன்ற பல காலத்தால் அழிக்க முடியாத பல பாடல்களுக்கு இசை அமைத்துள்ளார். எழுபதிற்கும் மேற்பட்ட திரை படங்களுக்கு இசையமைத்துள்ளார்.

சீர்காழி கோவிந்தராஜனிடம் நட்பு:

பக்திப் பாடல்களைத் தனது வெண்கலக் குரலால் பாடிய சீர்காழி கோவிந்தராஜனும் டி.ஆர்.பாப்பாவும் மிக நெருங்கிய நண்பர்களாக வாழ்ந்தனர். சீர்காழி கோவிந்தராஜன் பாடிய பக்திப் பாடல்களுக்கு டி.ஆர்.பாப்பாவே இசையமைப்பாளராக இருந்தார். டி.ஆர்.பாப்பா சீர்காழி யாரோடு ஏற்பட்ட முதல் சந்திப்புக் குறித்துக் கூறியுள்ளார்.

"கலைஞர் கருணாநிதி 1954இல் தயாரித்த அம்மையப்பன் என்ற திரைப்படத்தில் தான் கோவிந்த ராஜனிடம் எனக்கு முதல் தொடர்பு ஏற்பட்டது. அந்தப் படத்திற்கு நான் இசை அமைத்தேன். கலைஞர் எழுதிய 'அம்மையப்பா அருள் தருவாய்' என்ற பக்திப் பாடல் கோவிந்தராஜன் பாடிய போது பக்திப் பாடலுக்குக் கோவிந்தராஜன் தான் என்ற நான் புரிந்து கொண்டேன். அதற்குப்பின் என் இசையமைப்பில் அவர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாடல்கள் பாடி உள்ளார். ஒரு இசை அமைப்பாளரும் ஒரு பாடகரும் சேர்ந்து இவ்வளவு அதிகமான பக்திப் பாடல்களை உருவாக்கியது நாங்களே வேறு எவரும் இல்லை என்ற பெருமையுடன் கூறினார் என்று சீர்காழி கோவிந்தராஜன் பற்றி டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம் எழுதியுள்ள நூலில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் என் தந்தை பாடியுள்ள கந்தர் அலங்காரம், கந்தஷஷ்டி கவசம், அபிராமி அந்தாதி, திருப்புகழ், திருமந்திரம், திவ்யபிரபந்தம், சண்முக கவசம், சிவபுராணம், திருவருட்பா, சகலகலா வல்லிமாலை முதலியவற்றிற்கு பாப்பா இசை அமைத்துள்ளார் என்று குறிப்பிட்டுள்ளார். திருமந்திரப் பாடல்கள் முப்பது பாடல்களுக்கு இசை அமைத்துள்ளார். சீர்காழியார் பாடியுள்ளார்.

அபிராமி அந்தாதி:

திருக்கடையூர் அபிராமி மீது அபிராமப்பட்டர் பாடியுள்ள அபிராமி அந்தாதிக்கு டி.ஆர்.பாப்பா அவர்கள் இசை அமைத்துள்ளார். சீர்காழி கோவிந்தராஜன் பாடியுள்ளார். இப்பாடல்கள் அனைத்தும் (102) டி.ஆர்.பாப்பா இசை அமைத்தவை. மிகப் பெரிய சாதனையாகும். அபிராமி அந்தாதி கட்டளைக் கலித்துறையில் அமைந்துள்ளது. இதற்கு இசையமைப்பது மிகவும் கடினமான செயலாகும். இவை இராகத்திற்கு அவ்வளவு எளிதில் அகப்படா. இப்பாடல்கள் அனைத்தையும் 72 இராகங்களில் பாப்பா இசையமைத்துள்ளார். இசைப் பாடல்கள் நாகசுவர இசை இனிமையோடு தொடங்கும்.

இம்முயற்சி குறித்து டி.ஆர்.பாப்பா கூறும் செய்தியைச் சிவசிதம்பரம் தன் தந்தையார் வரலாறு கூறும் இசைமணி டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். (ப.74)

"முதலில் 25 பாடல்களுக்கு மிகவும் சிரமப்பட்டு இசை இமைத்தேன். அதற்குமேல் என்னால் இயல வில்லை. வேறு ஒருவரை நாடுமாறு நான் கூறியதைக் கோவிந்தராஜன் ஏற்க மறுத்துவிட்டார். இப்போது சென்று மீண்டும் வாருங்கள். நான் காத்திருக்கிறேன் என்றார். கற்பகாம்பள் கோயிலுக்குச் சென்று அம்மனை 108 முறை வலம் வந்தேன். மீண்டும் இசை அமைக்கச் சென்ற போது 21 பாடல்கள் முடிந்தது. என் சிரமத்தைக் கண்ட அவர் என்னை மீண்டும் ஓய்வெடுத்து வருமாறு கூறினார். நான் கற்பகாம்பாள் கோயிலை மறுபடியும் சுற்றினேன். மூன்றாவது தடவையில் 30 பாடல்கள் முடிந்தன. இறுதியாக நான்காவது முறைதான் கற்பகாம்பாள் கருணையுடன் எஞ்சிய எல்லாப் பாடல்களுக்கும் இசை அமைத்தேன். கஷ்டப்பட்டது வீண்

போகவில்லை. இன்று அவர் குரல் உலகெங்கும் ஒலிக்கிறது. இவ்வளவு திருத்தமாகவும் கம்பீரமாகவும் கோவிந்தராஜனால் மட்டுமே பாட முடியும்" என்று கூறியுள்ளார். அபிராமி அந்தாதிப் பாடல்களுக்கு இசை அமைக்கும் பணியில் 1973 நவம்பரில் மேற்கொண்ட முயற்சி 1974 ஏப்ரலில் முடிவுற்றது. இதன் இசைத் தட்டு வெளியீட்டு விழா திருக்கடையூரில் நடந்தது.

கந்தரலங்காரம்:

அருணகிரியார் பாடிய கந்தரலங்காரம் மிக இனிமையான நூல். முருக பக்தியை காட்டவல்லது. திருவாசகம் போல் இனிக்கும் தன்மையுடையது. நூறு பாடல்களைக் கொண்ட நூல். இப்பாடல்களுக்கு டி.ஆர்.பாப்பா இசையமைத்துள்ளார். சீர்காழி கோவிந்தராஜன் பாடியுள்ளார். ஏ.வி.எம். செட்டியார் தமது வழிபாட்டிற்காக இசையமைத்துப் பாடிட கோவிந்தராஜனைக் கேட்டுக்கொண்டார். தம்புரா சுருதியில் மட்டுமே இசைக்க வேண்டுமென செட்டியார் கேட்டுக் கொண்டார். அவ்வகையிலே இசை அமைக்கப்பட்டு இசைத்தட்டு வெளியிடப் பெற்றது. கிருபானந்தவாரியார் சுவாமிகள் கலந்து கொண்டு வாழ்த்தினார்.

செட்டியாரின் துணைவியார் திருமதி இராஜேஸ்வரி அம்மையார் சஷ்டி கவசத்தைப் பாடிக் கேட்டார். டி.ஆர். பாப்பாவின் இசையமைப்பில் சீர்காழியார் பாடிக் கொடுத்தார்.

பட்டி தொட்டி எங்கும் கிராமம் நகரங்களில் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கும் சீர்காழியின் வெண்கலக் குரலில் வெளிப்பட்டு வரும் பக்திப் பாடல்களை இசையமைத்தவராக டி.ஆர்.பாப்பா விளங்குகிறார்.

தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி மற்றும் இசைப் பள்ளிகளின் இயக்குநராகப் பல ஆண்டுகள் பணியாற்றினார். கலைஞர் ஆட்சியில் தொடங்கப்பட்ட 19 இசைப் பள்ளிகளில் பலர் இசை கற்றிட வழி வகுத்துத் தந்துள்ளார்.

சென்னை தமிழிசைச் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற நாற்பத்து ஏழாம் ஆண்டு விழாவில் (1996)இல் தலைமை ஏற்று தலைமை உரை ஆற்றினார். இசைப் பேரறிஞர் விருது பெற்றார். வானொலியில் 44 ஆண்டுகள் இசை அமைப்பாளராகப் பணிபுரிந்தார். கடைசியாகப் பெங்களூர் வானொலி

நிலையத்தில் நடைபெற்ற இசை அமைப்பு நிகழ்ச்சியில் இவர், குன்றக்குடி வைத்திநாதன் மற்றும் டெல்லி வானொலி நிலைய இசை அமைப்பாளர்கள் இணைந்து அளித்த வாத்திய விருந்து நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். பின்பு 13.10.2004 அன்று மறைந்தார். சென்னையில் நடைபெற்ற தந்தை பெரியார் முத்தமிழ் விழாவில் 27.1.2005 அன்று டி.ஆர்.பாப்பாவின் படத்திறப்பு விழா நடைபெற்றது. திராவிட இயக்கப் பாடல்கள் பலவற்றிக்கும் இசை அமைத்துள்ளார்.

தமிழக அரசின் கலைமாமணி விருது, தமிழிசைச் சங்கத்தின் இசைப் பேரறிஞர் விருது (1996), கவிஞர் கண்ணதாசன் விருது போன்ற ஏராளமான விருதுகளைப் பெற்றுள்ளார்.

பக்திப் பாடல்களுக்கும், மெல்லிசைப் பாடல்களுக்கும், கலைஞரின் படைப்புகளான சங்கத் தமிழ், குறளோவியம் போன்றவற்றிக்கும் இசை அமைத்துள்ளார். அவசர கல்யாணம் (1972), எல்லைக்கோடு (1972), சக்கரம் (1968), நிமிர்ந்து நில் (1968), பந்தயம் (1967), காதல் படுத்தும்பாடு (1966), மாப்பிள்ளை (1952), அருணகிரிநாதர், ரம்பையின் காதல் (1956), ராஜா ராணி (1956), அம்மையப்பன் (1954), அருட்பெருஞ்ஜோதி, எதையும் தாங்கும் இதயம், குடும்ப விளக்கு, வைரம், அன்பு, மறக்க முடியுமா, பூம்புகார் போன்ற எழுபதிற்கும் மேற்பட்ட திரைப்படங்களுக்கும் இசையமைத்துள்ளார்.

மறக்க இயலாத இவரின் இசை அமைப்புப் பணியால் தெய்வத் தமிழ் எங்கும் இன்றும் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. சீர்காழி கோவிந்தராஜன் குரலிசையில் ஒலித்துக் கொண்டிருக்கின்றது. இவர் மறைந்தாலும் இப்பாடலிசையால் தமிழர்களின் நெஞ்சில் என்றென்றும் வாழ்ந்து வருகிறார்.

உதிக்கின்ற செங்கதிர் உச்சித் திலகம் உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம் மாதுளம் போது மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி மென்கடிக் குங்கும தோயமென்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்றன் விழுத்துணையே

– அபிராமி அந்தாதி பா.1

இசைப் பேரறிஞர்
டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன்
(1933 -1988)



"நீ அல்லால் தெய்வமில்லை எனது
நெஞ்சே நீ வாழும் எல்லை – முருகா"

என்று தொடங்கும் பாடல் ஒலிக்கும் பொழுதெல்லாம் ஒருவரின் குரல் நமக்கு நினைவிற்கு வரும். அவர் தமிழர் நெஞ்சமெல்லாம் குடிகொண்டிருக்கும் சீர்காழி கோவிந்தராஜன் ஆவார். உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்கதடா கர்ணா, அமுதும் தேனும் எதற்கு, அறுபடை வீடு கொண்ட திருமுருகா, தேவன் கோவில் மணியோசை, மதுரை அரசாளும் மீனாட்சி, கல்லிலே கலைவண்ணம் கண்டான் போன்ற காலத்தால் அழியாத திரையிசைப் பாடல்களைக் கேட்கும் பொழுதெல்லாம் சீர்காழி கோவிந்தராஜன் நினைவுவரும். அபிராமி அந்தாதி, கந்தரலங்காரம், சகலகலா வல்லிமாலை, சண்முக கவசம் போன்ற பக்தி பாமாலைகளைப் பக்திச் சுவை சொட்டச் சொட்டப் பாடிய சீர்காழி கோவிந்தராஜனின் நினைவு நமக்கு வரும்.

வெண்ணீறு அணிந்த அகன்ற நெற்றி, புருவங் களிடையே சிவந்த குங்குமப்பொட்டு, காண் போரைக் கவரும் அன்பு, அருள் சுரக்கும் பார்வை, தேனூரும் பாடல்களை இசைக்கும் வாய், கம்பீரகானம், சிலேடையால் சிரிக்க வைக்கும் பேச்சு, தொட்டதெல்லாம் துளங்கிடும் கைராசி, அமிழ்தினும் இனிய பக்திப் பாடல்களைப் பாடி இரசிகர்களைப் பரவசப்படுத்தி வந்த இசை மணி இசைப்பேரறிஞர், பத்மஸ்ரீ

டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் மிகச்சிறந்த இசைத்தமிழ் வாணராவார்.

திருஞானசம்பந்தரும், முத்துத்தாண்டவரும் அவதரித்த சீர்காழி என்ற தலத்தின் பெயரைத் தன் பெயரோடு இணைத்து வாழ்ந்தவர். 'ஊரைச் சொன்னால் அவர் பெயரைச் சொல்லலாம்' என்ற வாக்கிற்கிணங்க இவரும், இவரது மகனான சீர்காழி சிவசிதம்பரமும் அழைக்கப்படுகின்றனர்.

பிறப்பும் வளர்ப்பும்:

சீர்காழி கோவிந்தராஜனின் தாத்தா குப்புசாமி செட்டியார் ஆவார். இக்குடும்பத்தார் நாகூரில் வாழ்ந்தவர்கள். பின்பு சீர்காழியில் குடியேறினர். சீர்காழியில் தின்பண்டங்கள் விற்கும் மிட்டாய் கடை நடத்தி வந்தனர். குப்புசாமி செட்டியாருக்கு இரு மகன்கள். மூத்தவர் சிவசிதம்பரம், இளையவர் முனுசாமி. சிவசிதம்பரம் செட்டியார் மனைவி அவையாம்மா. இவர்களுக்கு ஐந்து குழந்தைகள். சொக்கலிங்கம், நடராஜன், கோவிந்தராஜன், ஜோதி, கிருஷ்ணமூர்த்தி. இரண்டாம் தாரத்தின் மூலம் சண்முகம், பக்கிரிசாமி, பிரேமா என்ற குழந்தைகள் பிறந்து வளர்ந்தனர்.

கோவிந்தராஜன் 19.1.1933 அன்று சுவாதி நட்சத்திரத்தில் பிறந்தார். சீர்காழியில் உள்ள வாணி விலாஸ் பாடசாலையில் கல்வி பயின்றார். இளமையிலேயே இசை ஆர்வம் உடையவராக விளங்கினார். சீர்காழி சட்டநாத சுவாமி கோயிலில் இசைக்கப்படும் நாகசுர மற்றும் தேவார இசைகளை ஆர்வத்துடன் கேட்டு மகிழ்வார். இவரது தாத்தா முனுசாமி செட்டியாரும் மகிச் சிறந்த இசைவாணர் ஆவார்.

ஆரம்ப கல்வியைக் கோவிந்தராஜன் பயின்ற பொழுது பள்ளியில் நடக்கும் நாடகங்களில் அண்ணன் சொக்கலிங்கமும் இவரும் நடித்தனர். சாரங்கதாரா என்ற நாடகத்தில் சித்ராங்கியாகச் சொக்கலிங்கமும், சித்ராங்கியின் தோழியாகக் கோவிந்தராஜனும் நடித்தனர். அப்பொழுது இந்நாடகத்தில் கோவிந்தராஜன் ஒரு பாட்டுப் பாடினார். கேட்ட அனைவரும் பாராட்டி, மீண்டும் மீண்டும் பாடும்படி கேட்டனர். கோவிந்தராஜனும் பாடினார். அன்று முதல் நாடக ஆர்வலராக மாறினார்.

செம்பொன்னார் கோயிலில் வள்ளித் திருமணம் என்ற நாடகம் நடந்தபோது முருகன் வேடம் அணிந்து "சம்போ மகாதேவா" என்ற பாடலைப் பாடினார். எல்லோரும் கேட்டு மகிழ்ந்தனர். நாடகப் பயிற்சியோடு இ.எஸ்.எல்.சி. தேர்வு எழுதி வெற்றி பெற்றார்.

தேவி நாடக சபாவில் ஓராண்டு காலம் இருந்து பல்வேறு நாடகங்களில் பங்கு கொண்டார். முறையான சங்கீதப் பயிற்சி பெற்றிட ஆர்வம் கொண்டார். சென்னையில் மிகச் சிறப்புடன் செயல்பட்டு வந்த தமிழிசை கல்லூரியில் 1949 ஆம் ஆண்டு சேர்ந்து "இசைமணி" பட்டம் பெற்றார். அப்பொழுது நடந்த கோபாலகிருஷ்ண பாரதியார் பாடல் போட்டியில் முதல் பரிசான கவர்னர் இராஜாஜி தம்புரா பரிசு பெற்றார். சாஸ்திரிய சங்கீதத்திலும் பயிற்சி பெற ஆர்வப்பட்டார். சென்னை மத்திய கர்நாடக இசைக் கல்லூரியில் பயின்று "சங்கீத வித்வான்" பட்டம் பெற்றார்.

முறையான குருகுல பயிற்சியின் மூலம் இசைக் கற்றிட விரும்பி திருப்பாம்புரம் டி.எஸ்.சாமிநாத பிள்ளையிடம் குருகுலவாசத்தில் இசைப் பயிற்சி பெற்றார். இவரது வாழ்க்கையில் வேய்ங்குழல் வேந்தர் சுவாமிநாத பிள்ளையின் பங்களிப்பு மிகவும் அதிகம்.

மரபு வழுவாமல் பாடல், இசை நுட்பத்துடன் இசைத்தல், பொருளுணர்ந்து பாடல், தெளிவான உச்சரிப்புடன் பாடல், இராக நுட்பம், தாள நுட்பம் போன்றவற்றைச் சுவாமிநாத பிள்ளையின் மூலம் பெற்றார்.

1953இல் சென்னை சங்கீத வித்வத் சபையில் நடைபெற்ற 'அபூர்வ கீர்த்தனைகள் பாடல், இராகம், தானம், பல்லவி பாடல், தியாகராஜரின் அபூர்வ கீர்த்தனைகள் ஒன்று பாடல்' என்ற இசைப் போட்டியில், இம்முத்துறையிலும் முதற்பரிசுகளைப் பெற்றார். இப்போட்டியின் நடுவர்களாகச் சித்தூர் சுப்பிரமணியபிள்ளையும், இசைப் பேராசிரியர் சாம்பமூர்த்தியும் இருந்தனர்.

குருக்குல இசைக்கல்வி:

இவர் இசைமணி, சங்கீத வித்வான் ஆகிய பட்டங்களைப் பெற்றபின் குருகுல முறையில் பயிற்சி பெற திருப்பாம்புரம் சுவாமிநாத பிள்ளையை அணுகினார். இவர் மிகச் சிறந்த

புல்லாங்குழல் வித்வான் ஆவார். சுவாமிநாத பிள்ளையிடம் தமிழிசை மட்டுமின்றி சமஸ்கிருதம், தெலுங்கு உள்ளிட்ட பிறமொழிக் கீர்த்தனங்களை மரபு முறை வழுவாமல் பொருளுணர்ந்து உச்சரித்துப் பாடும் பயிற்சியையும், மேள இராகமாலிகை, தாள இராகமாலிகை உள்ளிட்ட இசை நுட்பங்களையும் நன்கு கற்றறிந்தார். எடுப்பான குரலில் சுருதி சுத்தத்துடனும், தெளிவான உச்சரிப்புடனும் தன் சீடன் பாடுவதைக் கேட்ட சுவாமிநாத பிள்ளை, தன்னுடைய கச்சேரிக்கு உடன் அழைத்துச் சென்று உடன் பாடச் செய்தார். ஆசாரமான வீடுகளில் அவர் தங்கும் போது, தன் சீடனைக் குறைத்து மதிப்பிடக் கூடாது என்பதற்காக, அவர்களிடம் தன் மகன் என்றே கூறுவார். ஒருமுறை சிதம்பரம் சொர்ண வெங்கடேச தீட்சிதருடைய வீட்டிற்குச் சீர்காழியை அழைத்துச் சென்றார். அங்குச் சீர்காழியின் திறனை அனைவரும் அறிய வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் தீட்சதரைப் பல்லவி பாடுமாறு கூறினார். அப்பொழுது தீட்சதர் நெருடலாலன ஒரு சமஸ்கிருத பல்லவியைக் கூறினார். உடனே அந்த பல்லவியைப் பிரித்து இராகம், தாளம் அமைத்துப் பாடிக் காண்பித்தார். இந்நிகழ்வு குருநாதருக்கு மிகவும் பெருமையாக இருந்தது. தனது இசை நிகழ்வுகளில் குருநாதர் பற்றிய பாடலை மறவாது பாடுவார்.

"என் குருநாதன் – வேய்ங்குழல் வேந்தன்
இயைறிவூட்டிய ஞான போதன்
அன்னை தந்தை அதன் பிறகவரே
அகண்ட உலகிலே எனக்கு வாழ்வளித்தவரே
(என் குருநாதன்)

நக்கீரரைப் போலே சொற்கூறும் பண்பாளன்
நற்காதலைக் காட்டிலும் கலைவேண்டும் என்பான்
என் கீத ஞானம் அவர் தந்த வாழ்வு
என் உள்ளம் என்றும் அவருக்குத் தாழ்வு
(என் குருநாதன்)

என்று புலவர் கந்தசாமி இயற்றிய குருவணக்கப் பாடலைப் பாடாமல் கச்சேரியை முடிப்பதில்லை. இவ்விதம் குருவின் மேல் பக்தி கொண்டிருந்தார்.

சுவாமிநாத பிள்ளையின் அறுபது வயது நிறைவை மிகச் சிறப்பாக அவரது சீடர் கோவிந்தராஜன் நடத்தி வைத்தார்.

தமிழிசைக்கு முக்கியத்துவம்:

தமிழ்நாட்டில் தமிழர்கள் விரும்பிக் கேட்கக் கூடியவை தமிழ்ப் பாடல்களே. அந்த உணர்ச்சிக்கு மதிப்பளித்து கச்சேரியிலும் பெரும்பாலும் தமிழ்ப் பாடல்களைப் பாடுவதனையே வழக்கமாகக் கொண்டிருந்தார். பாடுகிறவர் களுக்கும் கேட்பவர்களுக்கும் பொருள் விளங்காத பாடல்களைப் பாடுவதைக் காட்டிலும், எல்லோரும் நன்றாகப் பொருள் தெரிந்து கொண்டு நுகரக் கூடிய பாடல்களைப் பாடுவது என்ற எண்ணத்தில் தமிழிசைப் பாடல்களைக் கச்சேரிகளில் பாடினார்.

செவ்விசை அரங்குகளில் அதிக அளவில் தமிழிசைப் பாடல்களைப் பாடி பரப்பிய கலைஞர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலே உள்ளனர். அக்கலைஞர்களில் சீர்காழியைக் குறிப்பாகக் கூறலாம்.

திரைப்படத்துறை:

இசைத் துறையில் முதிர்ச்சிப் பெற்று விளங்கிய சீர்காழியார் திரைப்படத் துறையிலும் மிகச் சிறப்புடன் விளங்கினார். 1953இல் பொன்வயல் என்ற திரைப்படத்தில் "சிரிப்புத்தான் வருகுதையா" என்ற பாடலை முதன் முதலில் பாடினார். திரைப்படத்திற்கு என்று உயர்ந்த ஸ்தாயியில் அற்புதமாகப் பாடும் ஆற்றலால் பட்டினம் தான் போகலாமடி (எங்கள் வீட்டு மகாலட்சுமி), அமுதும் தேனும் எதற்கு (தை பிறந்தால் வழி பிறக்கும்), மாட்டுக்கார வேலா (வண்ணக்கிளி), கொங்கு நாட்டு செங்கரும்பு (கோமதியின் காதல்), ஜக்கம்மா (வீரபாண்டிய கட்டபொம்மன்), உள்ளத்தில் நல்ல உள்ளம் (கர்ணன்), வெற்றி வேண்டுமா (எதிர்நீச்சல்) போன்ற காலத்தால் அழியாத பாடல்களைப் பாடினார்.

இராஜராஜன், சக்கரவர்த்தி திருமகள், நாடோடி மன்னன், தாய் மகளுக்குக் கட்டிய தாலி, சபாஷ் மாப்பிள்ளை, நல்லவன் வாழ்வான் முதலான எம்.ஜி.இராமசந்திரன் நடித்த படங்களிலும், சாரங்கதாரா, வணங்காமுடி, கப்பலோட்டிய தமிழன், மனிதனும் தெய்வம் ஆகலாம் போன்ற சிவாஜிகணேசன் நடித்த படங்களிலும் அவரவர் குரலுக்கு ஏற்றவாறு பாடினார்.

திரைத்துறையில் தானே வேடமேற்றும் பாடியும் நடித்துள்ளார். தசாவதாரத்தில் நாரதராகவும், தெய்வத் திருமணத்தில் அகத்தியராகவும், தாய் மூகாம்பிகையில் பாகவதராகவும், இராஜராஜ சோழன் திரைப்படத்தில் நம்பியாண்டார் நம்பியாகவும், நம்பினார் கெடுவதில்லை படத்தில் கதாகாலட்சேபம் செய்பவராகவும் நடித்துள்ளார்.

இசைத்துறை:

தமிழிசை இயக்கத்தில் பெரும் பங்கு பெற்ற இசைவாணராகக் கோவிந்தராஜன் விளங்கினார். கம்பீரமான குரலும், சுத்தமான சொல் உச்சரிப்பும், உணர்வுபூர்வமாகப் பாடும் திறனால் ஏராளமான இசைக் கச்சேரிகள் தேடி வந்தன. ஆயிரக்கணக்கான இசை கச்சேரிகளில் பங்கு பெற்றார். இசைக் குழுவில் வயலின், மிருதங்கம், கடம், கஞ்சிரா, டோலக், தம்புரா, கொன்னக்கோல் என்ற முக்கிய பக்கவாத்தியங்கள் இடம்பெறும். இசைக் குழுவினரைக் குடும்பம் போல் அரவணைத்தார்.

மதராஸ் ஏ.கண்ணன் முதல் கச்சேரியிலிருந்து அவர் மறையும் வரை மிருதங்கம் வாசித்தார். சிக்கல் பாஸ்கரன், திருப்பாற்கடல் வீரராகவன், குன்றக்குடி வைத்தியநாதன் போன்றோர் வயலின் வாசித்துள்ளனர். கரகரப்பிரியா, கல்யாணி, லதாங்கி, சங்கராபரணம் போன்ற இராகங்களை அதிகமாகக் கையாள்வார். மூன்று மணி நேரம் நடக்கும் கச்சேரியை 3 பகுதியாகப் பிரித்துக் கொள்வார்.

1. ஒரு மணி நேரம் சாஸ்திரிய சங்கிதம் - இதனைச் சாம்பார் சாதம் போன்றது என்பார்.

2. அடுத்த ஒரு மணி நேரம் பக்திப்பாடல் - இதனை ரசம் சாதம் என்பர்.

3. அடுத்த ஒரு மணி நேரம் திரைப்படப் பாடல் - இதனை மோர் சாதம் என்பார். இவ்வாறு தன் கச்சேரியை அமைத்துக் கொள்வார்.

சாஸ்திரிய சங்கீதத்திலும், திரையிசையிலும் புகழ் பெற்ற இவர் வெற்றிகரமாகப் பக்திப் பாடல்களைப் பாடியதனால் தங்க இசைத்தட்டுப் பரிசை 1982இல் பெற்றார்.

பக்திப்பாடல்:

விநாயகர், முருகர், ஐயப்பன், அம்மன் முதலிய தெய்வங்கள் மீது இசையமைப்பாளர் டி.ஆர்.பாப்பா அவர்களின் இசையமைப்பில் ஏராளமான பக்திப் பாடல்களைப் பாடியுள்ளார். ஏசுபிரான் மீதும் பாடியுள்ளார். 1952இல் இவர் பாடிய முதல் இசைத்தட்டு வெளிவந்தது.

கந்தரலங்காரம், கந்தசஷ்டி கவசம், அபிராமி அந்தாதி, திருப்புகழ், திருமந்திரம், திவ்யபிரபந்தம், சண்முக கவசம், சிவபுராணம், திருவருட்பா, சகலகலாவல்லி மாலை போன்ற ஏராளமான பக்தி இலக்கியங்களைப் பாடியுள்ளார். அபிராமி அந்தாதி இசைப் பதிவு திருக்கடையூரில் வெளியிடப் பெற்றது. தருமபுர ஆதீன குரு முதல்வர் இதில் பங்கு கொண்டு தம் ஆதீன ஆஸ்தான இசைப்பாடகராக சீர்காழியாரை அமைத்துக் கொண்டார். இவருக்குப் பின் இவரது மகன் சிவசிதம்பரம் தருமை ஆதீன பாடகராக இருந்து வருகிறார். பாபநாசம் சிவன் பாடிய ஸ்ரீராம சரித கீதத்தை இசை தட்டில் வெளியிட்டுள்ளார்.

பண்டிதர் நேரு, லால்பகதூர் சாஸ்திரி, திருமதி இந்திராகாந்தி, தந்தை பெரியார், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்., டாக்டர் அம்பேத்கர், எம்.கே.தியாகராஜ பாகவதர், என்.எஸ்.கிருஷ்ணன் ஆகியோர் மீது இவர் பாடிய அஞ்சலி பாடல்கள் இசைத் தட்டுகளாகவும், ஒலிப் பேழைகளாகவும் வெளிவந்துள்ளன.

பாடல்களின் தொகுப்பு:

சீர்காழியார் பாடிய பாடல்களின் தொகுப்புகளை "இசை மணியின் பக்திப் பாமாலை" என்னும் தலைப்பில் பாகம் 1, பாகம் 2 ஆகிய பிரிவுகளில் கலைஞர் ஏ.பி.நாகராஜன் அவர்களின் பாராட்டுரை மூலம் கங்கா காவேரி பதிப்பகம் வெளியிட்டுள்ளது. இத்தொகுப்புகளை டாக்டர் சீர்காழி சிவசிதம்பரம் அவர்கள் வெளியிட்டுள்ளார்.

இப்பாடல்கள் தொகுப்பில் விநாயகர், முருகன், சிவன், பெருமாள் போன்ற இறைவர்களைப் பற்றிய பாடல்களும், தேவாரம், திருவருட்பா, திருப்புகழ், கந்தபுராணம் போன்ற பக்தி இலக்கிய பாடல்களும், உலகப் பொதுமறை என்று

போற்றப்படும் திருக்குறள் பாடல்களும், தமிழிசை மூவர் பாடல்களும் இடம் பெற்றுள்ளன.

சீர்காழியின் பாடல்களை இயற்றிய கவிஞர்கள்:

கவிஞர் உளுந்தூர்பேட்டை சு.சண்முகம், கீதப்பிரியம் எம்.பி.சிவம், பல்லடம் மாணிக்கம், திருச்சி பாரதன், ஆலங்குடி சோமு, இளங்கம்பன், பூவை செங்குட்டுவன், கோ.கந்தசாமி, கு.சா.கிருஷ்ணமூர்த்தி, நாஞ்சில் தியாகராஜன், மீ.ப.சோம சுந்தரம், பாரதிதாசன், வாலி, சுத்தானந்த பாரதியார் போன்றோர் படைத்த பாடல்களையும் சீர்காழியார் பாடியுள்ளார்.

வெளிநாட்டுப் பயணம்:

உலகெங்கும் உள்ள இரசிகர்களின் விருப்பத்தை ஏற்று சீர்காழியார் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், மொரீஷியஸ், இலண்டன், பாரிஸ், அமெரிக்கா, கனடா, சுவிட்ஸர்லாந்து, ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய நாடுகளுக்குச் சென்று இசைக் கச்சேரிகள் நிகழ்த்தினார்.

யாழ்ப்பாணத்தில் சுட்டிபுரம் என்னுமிடத்தில் நடந்த கோயில் கும்பாபிஷேக கச்சேரியில் மக்கள் மிளகாய் வயல்களில் இருந்து கேட்டனர். புங்குடுதீவில் 7½ மணி நேரம் கச்சேரி செய்தார். இலங்கை இரசகிர்களிடையே பாடுவதில் அலாதிப்பிரியம் கொண்டிருந்தார். சீர்காழிக்குப் பல பட்டங்கள் விருதுகள் கொடுத்து அழகு பார்த்தவர்கள் இலங்கைத் தமிழர்கள்தான். இலண்டனின் முருகன் கோவில் கட்டுவதற்கு நிதி திரட்ட சீர்காழியை அழைத்துக் கச்சேரி செய்ய ஏற்பாடு செய்தனர். இவர் பாடிய பாடல்கள் அடங்கிய இசைத்தட்டு வெளியிடப்பட்டது. இன்று நமது தமிழ் மொழி மொரீசியஸ் தீவில் சற்றாவது தமிழ் உயிரோடு இருக்கிற தென்றால் அது சீழ்காழி பாடிய முருகன் பாடல்களால் தான். சீர்காழியின் இசையைக் கேட்ட மக்கள் மகுடி முன் கட்டுப்பட்ட நாகம் போல் அமர்ந்து இரசிப்பர்.

மலேசியா, சிங்கப்பூர் நாடுகளில் மூன்று மாதம் சுற்றுப்பயணம் செய்து 56 கச்சேரிகள் செய்தார். இவரை "நடமாடும் இசைப் பல்கலைக்கழகம்" என புகழ்மாலை சூட்டினர். அமெரிக்காவில் டெட்ராய்ட் நகரில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் பாடினார்.

அமெரிக்கா மற்றும் இலண்டன் பல்கலைக் கழகத்தில் கர்நாடக சங்கீதம் மற்றும் தமிழிசைப் பற்றி சீர்காழி ஆற்றிய உரைகள் மிகவும் சிறப்பானவையாக அமைந்தன.

திருமணம்:

சீர்காழி கோவிந்தராஜன் - சுலோசான அம்மையார் திருமணம் 26.8.1956இல் உளுந்தூர்பேட்டையில் சிறப்பாக நடைபெற்றது. இவரது திருமண அழைப்பிதழில் ஆங்கில வருடம் குறிப்பிடப்படவில்லை. இதில் கோவிந்தராஜனுக்கு முன்பு "வானொலி பேசும் படப் பின்னணி புகழ் வித்வான், இசைமணி" போன்ற அடைமொழிகள் கொடுக்கப்பட்டுள்ளன. அன்று மாலை குருநாதர் திருப்பாம்புரம் சுவாமிநாத பிள்ளையின் புல்லாங்குழல் கச்சேரி நடந்தது.

சீர்காழியாருக்கு ஒரு புதல்வனும் ஒரு புதல்வியும் உள். இருவரும் மருத்துவம் படித்தவர், மூத்த மகள் டாக்டர் ஞானவல்லி, தம் கணவர் டாக்டர் பிரதாபனுடன் இன்று அமெரிக்காவில் வாழ்ந்து வருகிறோர். சீர்காழியார் மகன் டாக்டர் சிவசிதம்பரம் இவர் அரசு மருத்துவமனையில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைப்பிரிவில் சிறப்பு மருத்துவராகப் பணியாற்றுகிறார். இவர் இசை, மருத்துவம் ஆகிய இரு துறைகளில் வல்லவராக விளங்கி வருகிறார்.

விருதுகள்:

- *1949* - சென்னைத் தமிழிசைக் கல்லூரி - இசைமணி பட்டம்.
- *1951* - சங்கீத வித்வான் பட்டம்.
- *8.6.1968* - குன்றகுடி அடிகளார் வழங்கிய இசையரசு பட்டம்.
- *7.11.1971* - தமிழக அரசின் சிறந்த பின்னணிப் பாடகர் விருது.
- *11.7.1974* - தருமபுர ஆதீன இசைப்புலவர் பட்டம்.
- *25.1.1975* - தமிழக அரசின் கலைமாமணி விருது.
- *1978* - இன்னிசைத் தென்றல் ஏழிசை வேந்தர் (இலங்கையில்) வழங்கியது.

- 1978 - சென்னைப் பல்கலைக்கழகம் UGC Fellowship.
- 1980 - சங்கீத நாடக அகாடமி விருது.
- 7.10.1981 - தமிழக அரசவைக்கலைஞர்
- 1982 - இசைப் பேரறிஞர் விருது
- 1983 - மத்திய அரசின் பத்மஸ்ரீ விருது
- 20.9.1983 - சென்னைப் பல்கலைக்கழக டாக்டர் பட்டம்.
- 1984 - அண்ணாமலைப் பல்கலைக்கழக நுண்கலைப் பிரிவு முதன்மையர்.
- 1987 - மொரீசியஸின் அருளிசை அறிஞர் பட்டம்.
- 1987 - உலக இசைக்கலைத் தூதுவர் பட்டம்.

போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார்.

மறைவு:

மூச்சுக்கு மூச்சு "முருகா முருகா" என்று கூறும் இந்த முருக பக்தரின் மூச்சு முருகனுக்கு உகந்த சஷ்டி தினத்தன்று அடங்கியது. பங்குனி வளர்பிறை வளர்பிறை சஷ்டியன்று 23.3.1988 நள்ளிரவு கடந்த வேலை மணி 12.50 மணிக்கு மூச்சிறைப்பதானை உணர்ந்தார். பிள்ளைகள் அருகே விரைந்து முதலுதவி கொடுத்தனர். தன் மனைவி மக்களை வாழ்த்திட உதடுகள் அசைந்தன. தெளிவான குரலில் தன் குலதெய்வத்தைக் "காத்தாயி அம்மா" என்று அழைத்தாள். பின்னர் முருகா! உலகம் வாழ்க" என்ற சொற்கள் வெளிப்பட்டன. காலமெல்லாம் வெண்கல நாதம் போல ஒலித்த குரல் இறைவனடியைச் சேர்ந்தது. வாழ்க தமிழ். வளர்க அவரது புகழ்.

ஆத்தாளை எங்கள் ஆபிராம வல்லியை அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம் பூநிறத் தாளைப் புவியடங்கக்
காத்தாளை ஐங்கணை பாசங் குசமும் கரும்புமங்கை
சேர்த்தாளை முக்கண்ணி யைத்தொழு வார்க்கொரு தீங்கில்லையே

– அபிராமி அந்தாதி பா.101

இசைப்பேரறிஞர் தருமபுரம்
ப.சுவாமிநாதன்
1923 - 2009



பண்ணிசையில் பரமனைப் பாடி போற்றிவரும் திருக்கூட்டத்தார் திருக்கோயில்களை மையமிட்ட வாழ்வினர். திருக்கோயில்களைச் சார்ந்த சிவாச்சாரிய பெருமக்களைப் போல, மங்கல இசைக் குழுவினரைப் போல திருமுறைகளை விண்ணப்பிக்கும் திருத்தொண்டு மேற்கொள்பவர்கள் ஆவர். திருக்கோயில் விழா நாட்களில் சுவாமி திருவீதி உலா வரும் பொழுது முதலில் மங்கல இசைக் குழுவினர் செல்ல இறைவன் பின் தேவார கோஷ்டியினர் திருமுறை விண்ணப்பித்துக் கொண்டு வருவர். இம்மரபு இன்றும் சில சிவலாயங்களில் வழக்கத்தில் உள்ளன. திருக்கோயில்களில் நடைபெறும் நாள் வழிபாட்டிலும் சாஸ்திரிகளின் வேத வழிபாடு மங்கல இசைக் குழுவினரின் இசை வழிபாட்டோடு திருமுறை ஓதும் ஓதுவார்களின் திருப்பதிய விண்ணப்ப வழிபாடும் நிகழ்வுறும்.

திருக்கோயில்களிலும், சைவத் திருமடங்களிலும், சைவ நெறி வளர்க்கும் திருக்கூட்டங்களிலும் தவறாது இன்று தேவார இசை ஒலித்துக் கொண்டு இருக்கின்றது. தெருவெங்கும் பண்ணிசை முழக்கம் ஒலி நாடாக்கள் மூலம் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அறிவியல் தொழில் நுட்பம் வளர்ந்துள்ள இக்காலத்தில் கைப்பேசி வாயிலாகவும் திருமுறைப் பதிகங்களைப் பதிவு செய்து கொண்டு கேட்டுக் மகிழ்கின்றனர். இவ்வாறு பலரையும் திருமுறை கேட்கும் ஆர்வலர்களாக

ஆக்கிய திருமுறை இசை வாணர்களுள் இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகர், இசைப் பேரறிஞர் தருமபுரம் ப.சுவாமிநாதன் இருவரும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

இசைப் பேரறிஞர் தருமபுரம் ப.சுவாமிநாதன் ஆயிரம் பிறைக்கு மேல் வாழ்ந்த வாழ்வினர். மூவர் பாடிய தேவாரப் பதிகங்களையும் மணிவாசகரின் திருவாசகம் முழுமையையும், திருவிசைப்பா திருப்பல்லாண்டு பதிகங்கள் முழுமையையும் இன்னும் பிற பைந்தமிழ்ப் பாமலைகளைப் பண்ணிசையோடு ஒலி நாடாக்கள் வாயிலாக உலகறியச் செய்தவர். பல் ஆதீனங்களால் கௌரவிக்கப்பட்டவர். சென்னைத் தமிழிசைச் சங்கத்தினரால் இசைப் பேரறிஞர் விருது அளிக்கப்பெற்ற திருமுறை வாணர். மைய அரசின் சங்கீத நாடக அகாடமி விருது பெற்ற விருதாளர். இசைத் தமிழ்ப் பணியையும், சைவ நன்நெறிப் பணிகளையும், மனித நேயத்தோடு மேற்கொண்டு வந்த பண்பாளர். பழகுதற்கு எளியவர், காலத்தைக் கண்ணாகப் போற்றியவர், என் கடன் பணி செய்து கிடப்பதே என்ற வாழ்வினர். திருமுறை வாழ்வே பெரு வாழ்வு என வாழ்ந்த கொள்கையாளர்.

பிறப்பும் வளர்ப்பும்:

திருவாரூர் மாவட்டம் நன்னிலம் வட்டம் வீரக்கண் என்ற சிற்றூரில் திரு பஞ்சநத முதலியார் - திருமதி பார்வதி அம்மையார் தம்பதிக்கு ஐந்தாவது மகனாக 29.05.1923இல் பிறந்தார். இயற்பெயர் இராஜகோபால். உடன் பிறந்தவர்கள் இரண்டு சகோதரி உள்பட எழுவர். 1. குப்பு அம்மாள், 2. ஜானகி அம்மாள், 3. முத்தையன், 4. நாகரத்தினம், 5. ராஜகோபால், 6. மாணிக்கம், 7. சாமியப்பன். வெண்ணி ஆற்றங்கரையில் உள்ள பூவனூரில் வளர்ந்தார். வீட்டுக்கருகில் தேவாரப் பாடச்சாலை இருந்தது. இப்பாடசலையில் ஆசிரியர் இசையரசு எம்.எம். தண்டபாணி தேசிகரின் தாய் மாமனாவார். பூவனூரில் பெரிய பண்ணை திரு.பி.சுப்பையா முதலியாரின் வீடு இருந்தது. இவ்வீட்டில் கிராமபோனில் பாடல்கள் ஒலிக்கும். பள்ளிக்கூடம் செல்லும் வழியில் இப்பாடல்களைக் கேட்டுக் கொண்டு இராசகோபால் செல்வர். இளமையில் கேட்ட இசை வளம் பிற்காலத்தில் இசை ஆர்வலராக்கியது. இசைப் பேரறிஞர் ஆக்கியது.

இவரது தந்தையார் பூவனூர் பண்ணையில் 12 வயதில் வேலைக்குச் சேர்ந்தார். 70 வயது வரை பணியாற்றினார். இவருடைய 70வது வயதில் மூத்த மகன் முத்தையன் இறந்துவிட வீரக்கண்ணுக்குக் குடிபெயர்ந்தனர்.

இராசகோபாலின் 12வது வயதில் 1935 தருமையாதீன தேவாரப் பாடசாலையில் சேர்ந்தார். அப்பொழுது தருமையாதீன குரு முதல்வராகச் சீர்வளர்சீர் சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இருந்தார். இவர் 24வயது குருமகா சந்நிதானம் ஆவார். 13வது வயதில் சந்நிதானத்தின் அணுக்கத் தொண்டரானார். மாதம் 7.50 ரூபாய் ஊதியம். 4 பவுனில் கழுத்தில் அணிக்கூடிய ஒரு அக்குமணி கவடு போட்டார்கள். தருமபுர மடத்துக் கிராமபோனில் ஒலிபரப்பாகும் டி.எம்.கிருஷ்ணசாமி ஐயர் என்கிற திருப்புகழ் மணி பாடிய திருப்புகழ்ப் பாடல்கள், டி.கே.பட்டம்மாள் பாடல்கள், முசிறி சுப்பிரமணிய ஐயர் பாடல்கள் ஒலிபரப்பாகும். இராசகோபால் இவற்றைத் தவறாது கேட்டு மகிழ்வார்.

சாமிநாதன்:

எம்.கே.தியாகராஜ பாகவதர் நடித்த சிந்தாமணி படத்தைப் பலமுறை பார்த்தார். அப்படத்தில் வந்த ஞானக்கண் என்ற பாடல் கோபாலை மிகவும் கவர்ந்தது. பலமுறை இப்பாடலைப் பாடிப் பாடி மகிழ்வு கொள்வார். அப்பொழுது தருமபுர ஆதீனத் தம்பிரானாக இருந்த அருள்நந்தி தம்பிரான் இப்பாடலைப் பாடச் சொல்லி கேட்டு மகிழ்வார். இவரை ஞானக்கண் கோபால் என்று பலரும் அழைத்தனர். தம்பிரான் கோபாலின் பரமகுரு, ஞானாசிரியராகவும் விளங்கினார். அருள்நந்தித் தம்பிரான் இவ்வினிய குரலில் தேவாரம் பாடிட விரும்பினார். கோபாலும் ஏற்றார். இசைத் தமிழ் உலகம் திருமுறை எங்கும் முழங்கும் என்று மகிழ்வுற்றது.

ஞானக்கண் கோபால் 2.7.1942 மாலை 6 மணிக்கு இவ்வினிய குரலால் தேவாரம் பாடிட முயன்றார். ஆதீன ஓதுவார் திருநாவுக்கரர் தோடுடைய செவியன் என்ற பாடலைக் கற்பித்தார். தேவாரப் பாடசாலையில் ஓராண்டு பயின்று பத்துப் பதிகம் பாடினார். திருப்பனந்தாள் அதிபர் சுவாமிநாதத் தம்பிரான் முன் தேவாரம் பாடினார். ரூபாய் ஐந்து "திருக்கை வழக்கம்" செய்தார்கள். திருமுறை விண்ணப்பிப்பார்க்குத் தரும் சன்மானம்

திருக்கை வழக்கம் எனப்படும். தேவாரம் பாடி முதலில் பரிசு பெற்ற இத்தொகையில் பாதியைக் குருநாதர் ஆர்.வேலாயுத ஓதுவாருக்கு 2½ ரூபாயைக் காணிக்கையாக்கினார். தேவாரம் பாடலுற்றதும் இத்தம்பிரான் சுவாமிகள் இராசகோபாலைச் சாமிநாதன் என்று அழைத்தார்.

அப்பொழுது தருமை ஆதீனக் குருபூஜைக்காக வந்திருந்த எம்.எம்.தண்டபாணி தேசிகரைச் சந்தித்து இசை கற்றுத்தர வேண்டினார். தேசிகரும் உடன்பட்டார். தேசிகரோடு கோபால் சென்னை சென்றார். தேசிகரின் பாடல்களைக் கேட்டு மகிழ்ந்தார். தேசிகரின் குரல் இனிமையும் பாடும் முறையையும் அறிந்தார். ஆனால் தேசிகர், தமக்குப் பல வேலைகள் இருப்பதால் பாடம் சொல்லித்தர இயலவில்லை. தருமபுரம் தேவாரப் பாடசாலையில் சென்று பயிலக் கூறி அனுப்பிவிட்டார். கோபால் தருமபுரம் வந்தார். படிப்பைப் பாதியில் விட்டுச் சென்றதால் தொடர்ந்து தருமபுரத்தில் பயில அனுமதிக்க வில்லை. வீரக்கண் கிராமத்திற்குத் திரும்பினார். தந்தையாரும் இறந்தார். பணியும் இல்லை. உறவினர் சௌரிராஜ முதலியார் மூலம் தருமையில் மீண்டும் பயில வாய்ப்புப் பெற்றார். குருமகா சந்நிதானத்தின் அணுக்கத் தொண்டர் வேலை கிடைக்கவில்லை.

தில்லையில் நடைபெறும் திருவிழாவில் திருமுறைப் பணி செய்யச் சென்றார். 24வது குருமகா சந்நிதானம் இயற்கை எய்தினார். 25வது பட்டத்தில் சிவகுருநாதத் தம்பிரான் என்கிற கயிலை சுப்பிரமணிய தேசிகர் எழுந்தருளினார்கள். கோபாலை இவர் ஆதீனத்து ஓதுவாராக்கினார். ஆறு ஆண்டுகள் தேவாரப் பயிற்சி பெற்று முதல் மாணவராகத் தேவார இசை மணி பட்டம் பெற்றார்.

பின்பு அண்ணாமலைப் பல்கலைக்கழக இசைத் துறையில் கல்வி பயில சேர்ந்தார். சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, குடந்தை ப.சுந்தரேசனார் அங்கு பணியாற்றினர். சிதம்பரம் சி.ப.பழனியப்ப முதலியார் இவருக்கு உணவு அளித்து வந்தார். பயிற்சி முடிந்து சங்கீத பூஷணம் பட்டம் பெற்றார். தருமபுர தேவார பாடசாலை இசை ஆசிரியர் ஆனார். 1968இல் அப்பணியிலிருந்து விலகினார். 1968 வரை சென்னை தியாகராய நகரில் உள்ள தருமை ஆதீனப் பிரச்சார நிலையத்தில் பணியாற்றினார். பலருக்குத் திருமுறை கற்பித்து வந்தார். 1971இல் கயிலைக் குருமணி காசிப்பதியில் பரிபூரணம் அடைந்தார்கள்.

தருமபுரம் சுவாமிநாதன்:

சென்னைச் சமயப் பிரச்சார நிலையத்தில் பணியாற்றி வந்த சோமசுந்தர தம்பிரான் 26வது குருமகா சந்நிதானம் ஆனார். சண்முக தேசிக பரமாச்சாரி சுவாமிகள் என்று திருப்பெயர் பெற்றார்கள். கோபாலுக்கு மகர கண்டிகை, பட்டாடை அளித்தார். எந்த ஓதுவாருக்கும் மகர கண்டிகை அளித்த தில்லை. திருமுறை இசைப்புலவர் என்ற பட்டமும் அளித்தார். தருமையிலிருந்து வெளி வந்ததும் பல தலங்களுக்குச் சென்று பாடி வரலானார். இராசகோபால் தருமபுரம் சுவாமிநாதன் ஆனார். அருள்நந்தி தம்பிரான் சுவாமிகளின் ஆலோசனைப்படி காஞ்சிபுரம் சாரங்கபாணி செட்டியார் பாடுவது போல திருமுறைகளைப் பொருள் உணர்ச்சியோடு பாடும் பயிற்சி பெற்றார். காஞ்சிபுரம் சாரங்கபாணி செட்டியார் சுந்தர ஓதுவாரின் மாணவர். மரபு முறையில் பாடுவதில் வல்லவர். சுருதி சுத்தமாகப் பாடுவார். தாண்டகம், திருக்குறுந்தொகை போன்றவற்றை இனிமையாகப் பாடுவதில் வல்லவர். தம்பிரான் சுவாமிகள் வழிகாட்டுதலால் எதிர்கால வாழ்வின் பொருட்டுச் சிறு பொருளாவது சேமிக்க வேண்டும் என்ற வாழ்வியலைக் கற்றார். நாள்தோறும் திருக்கோயிலுக்குச் சென்று திருமுறை பாடும் வழக்கம் கொண்டார். வாணி ஒலிப்பதிவுக் கம்பெனி திரு விஜயராகவன் மூலம் திருமுறைகளை ஒலிப்பேழை பதிவு செய்தார்.

1951 முதல் அனைத்திந்திய வானொலியில் திருமுறை இசை வாணராகப் பணியாற்றினார். இவர் பாடிய திருமுறை பதிகங்கள் இசைத் தட்டுக்களாகவும், ஒலி நாடாக் களாகவும், ஒலி வட்டுக்களாகவும் வெளிவந்துள்ளன.

58 வயது வரை பிரமச்சாரியம் காத்து வந்த ப.சுவாமிநாதன் 10.07.1981 அன்று தென்னாற்காடு மாவட்டம் மேலிபெட்டகம் பாக்கம் சிவசிதம்பர முதலியார் மகள் 45 வயதான சுலோச்சனா அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். இத்திருமணத்திற்கும் ஓர் அற்புதமான நிகழ்வே காரணமாகும். அம்மையார் அவர்கள் பிறவியிலேயே கேட்கும் திறன் குறைந்தவர்கள். இந்நிலையில் சுவாமிநாதன் அவர்கள் திருமுறை நிகழ்ச்சிகளுக்குச் சென்று வந்தார். திருமுறைகளின் ஒலி அலைகள் செவியில் விழவிழ மெல்ல மெல்ல கேட்கும் திறன் பெற்றார். தமக்கு இவ்வாற்றல் தந்த ஐயாவையே

திருமணம் செய்து, அவர்களுக்குப் பணிவிடை செய்திட உறுதி பூண்டார். அம்மையாரின் தளரா உறுதி கண்டு சுவாமிநாதன் அம்மையாரை மணம். புரிந்தார். மணிவிழா, முத்துவிழாக்களைத் தம்பதி சமேதராகக் கொண்டாடும் வாய்ப்புப் பெற்றார்.

1969 முதல் 1981 வரை சென்னை பூந்தமல்லியை அடுத்துள்ள மலையம்பாக்கம் என்ற கிராமத்தில் இரண்டாவது தமக்கை ஜானகி அம்மாள் இல்லத்தில் வாழ்ந்து வந்தார். சுலோசனா அம்மையாரை மணம் புரிந்த பின்பு சேக்கிழார் அவதாரம் செய்த குன்றத்தூரில் ஒரு வீட்டை வாங்கிக் கொண்டு தங்கினார். குன்றத்தூரில் உள்ள கோயில் சேக்கிழார் சுவாமிகள் கட்டிய கோயிலாகும். திருமதில்கள், பிரகாரம் எல்லாம் பழுதடைந்திருந்தன. சுவாமிநாதன் திருப்பணி செய்து 1989 ஆம் ஆண்டு வைகாசி பூசத்தன்று திருக்குடமுழுக்குச் செய்தார். மாதந்தோறும் வழிபாடு செய்துவந்தார். மேலும் 5.12.2001 அன்று கர்ப்பகிரம், அர்த்த மண்டபம் புதிதாகக் கட்டி குடமுழுக்குச் செய்துள்ளார். குடந்தைக்கு அருகில் உள்ள திருநாகேஸ்வரன் கோயிலைச் சேக்கிழார் கட்டினார். சேக்கிழார் கோயிலைத் தருமபுரத்தார் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்து வழிபாட்டிற்கும் ஏற்பாடுகளைச் செய்தார்.

1959 முதல் 2009 வரை தொடர்ந்து சென்னை தமிழிசைச் சங்கத்தில் திருமுறை இசை பாடி வந்தார். 1999 முதல் மாதந்தோறும் தமிழிசைச் சங்கத்தில் விளக்க உரையுடன் தேவார இசை நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்தி வந்தார். தமிழிசைச் சங்கம் இவருக்கு இசைப் பேரறிஞர் என்ற விருது அளித்துள்ளது.

தனது குருநாதர் வேலாயுத ஓதுவார் அவர்களின் பிறந்த நாளைத் திருமுறை விழாவாகக் கொண்டாடி வந்தார். இவருடைய வாழ்க்கை வரலாற்றைத் தனது முத்து விழா மலரில் திருமுறையின் வித்தான ஆசிரியர் என்ற பெயரில் வெளியிட்டுள்ளார்.

பிற பணிகள்:

1. 1972இல் பூந்தமல்லி வைத்தியர் ஆலயம் திருக் குடமுழுக்குச் செய்து வைத்தார்.

2. திருக்கழுக்குன்றத்தில் ஆனி மாதத்தில் நடைபெற்று வரும் திருமுறை விழாவில் 12 ஆண்டுகள் அன்னம் பாலிப்புச் செய்தார்.
3. 1969இல் திருமுறை வழிபாட்டு அன்பர்கள் திருக்கூட்ட அமைப்பை ஏற்படுத்தி ஆலயங்களில் திருமுறை ஓதல் முறையை ஏற்பாடு செய்தார். 2003 ஜூலை 300வது மாத வழிபாட்டை நிகழ்த்தினார்.
4. சென்னை பூந்தமல்லி மலையம்பாக்கத்தில் 1977 விநாயகர் ஆலயம் கட்டி, குடமுழுக்குச் செய்துவித்தார். நாள்தோறும் வழிபாட்டிற்கு ஏற்பாடு செய்து வைத்தார். வெட்டடி விநாயகர் பெயரில் திருப்பள்ளி பத்துப்பாடி, புத்தக வடிவில் தந்துள்ளார்.
5. திருமயிலைக் காரணீச்சர ஆலயத்தில் இருபது ஆண்டுகள் மகா சிவராத்திரி வழிபாடு செய்துள்ளார்.
6. தருமபுரம் ப.சுவாமிநாதன் அறக்கட்டளை ரூ.2 இலட்சம் பொதுத் தொண்டிற்காகக் குன்றத்தூரில் ஏற்படுத்தப்பட்டு இலவச திருமுறை வகுப்புகள் நான்கு ஆண்டுகள் நடைபெற்றன.
7. இரசா சர் அண்ணாமலைச் செட்டியார் பிறந்த நாள் பரிசாக அளிக்கப் பெற்ற ஒரு இலட்ச ரூபாயைத் தருமபுர ஆதீன தேவாரப் பாடசாலை வளர்ச்சி நிதிக்காக அளித்தார்.

தேவாரப் பதிவுகள்:

1. மூவர் தேவாரம் முழுமையையும், திருவாசகம் முழுமையையும் 206 ஒலி நாடாக்களாகத் தந்துள்ளார்.
2. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு முழுமையும் 8 ஒலி நாடாக்களாகத் தந்துள்ளார்.
3. பதினோராம் திருமுறை முழுமையையும் 11 ஒலி நாடாக்களாகத் தந்துள்ளார்.
4. பெரிய புராணம் முழுமையையும் 8 ஒலி நாடாக்களாகத் தந்துள்ளார்.

இவற்றை வாணி கேசட் திரு விஜயராகவன் வெளியிட்டுள்ளார்.

5. பட்டினத்தார் பாடல், தாயுமானவர் பாடல், திருப்புகழ், அபிராமி அந்தாதி, அருட்பா, கற்பகாம்பிகை தோத்திரம், அம்பிகை தோத்திரப் பாடல்கள் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன.

6. பன்னிரு திருமுறை, தலத்துக்கொரு தேவாரம், பண்ணிற்கு ஒரு பாடல், அகத்தியர் தேவாரத் திரட்டு, பலன் தரும் திப்பதிகங்கள், அற்புதத் திருப்பதிகங்கள், சிதம்பரத் தலப்பாடல்கள் போன்றவை குறுந்தகடுகளாக வெளிவந்துள்ளன.

7. தென்னாப்பிரிக்கா சைவ சபைக்கு நீண்ட நேர இசைத் தட்டு என 800க்கும் மேற்பட்ட ஒலி நாடாக்களைப் பாடி வாங்கியுள்ளார்.

8. இவரின் மணிவிழா, முத்து விழாக்கள் திருக் கூட்டத்தாரால் சிறப்புடன் கொண்டாடப் பெற்றன. திருவரங்கத்தில் 80 ஆண்டு ஆண்டு தொடங்கும் விழா சிவஸ்ரீதரன் அவர்களைக் கொண்ட குழுவினரால் பாவனை விழாவாக 3 நாட்கள் கொண்டாடப் பெற்றன. முத்து விழாவில் கனகாபிடேகம் செய்யப் பெற்றது. இது திருமுறைக்குக் கிடைத்த பெருவாழ்வாகும்.

9. தஞ்சைப் பேராசிரியர் த.கோ.பரமசிவம் அவர்கள் தருமபுரத்தார் இசை நிகழ்வை நால்வர் குருபூசை விழாவில் தவறாமல் நடத்தி வந்தார். தருமபுரத்தார்க்கு ஐம்பொன்சிலை எடுத்து இல்லத்தில் வழிபட்டு வந்தார். இதனைத் தொடர்ந்து மகன் பேராசிரியர் நல்லசிவம் வழிபட்டு வருகிறார்.

தனிப்பாணி:

திருமுறை இசைப்பதில் தருமபுரம் சுவாமிநாதன் பாணி என ஒரு தனி பாணி உள்ளது. ஒலி, சொல், தொடர்களைப் பிழையற உச்சரிப்பார். சொல்லின் பொருள் உணர்ந்து இசைப்பார். சொற்களைக் கொண்டு கூட்டி இசைப்பதில் வல்லவர். கொண்டு கூட்டிப் பாடும் பொழுது பாடல் வளம்

நன்குணரும் வகையில் இசைப்பார். தளராத குரல் வளமும், வளமான இசையறிவும், நுட்பமான இராக அறிவும், தாள அறிவும், எல்லாவற்றிற்கும் மேலாக நல்ல ஈடுபாடும், கேட்பாரைப் பிணிக்கும் ஆற்றலும், காலந்தவறாமல் நிகழ்வுகளைத் தொடங்குவதும் நிறைவு கொள்வதும், தக்க இடத்தில் பொருத்தமான விளக்கம் தரலும் சிறப்பானவைகளாகும்.

ஓதுவார்கட்குத் திருமுறை பாடாந்தரம் மட்டும் போதாது. மிகச் சிறந்த ஆழமான இசைப் பயிற்சி முறையும் தேவை. வேலாயுத ஓதுவாரிடமும் பெற்ற திருமுறை ஆற்றலும் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளையிடம் பயின்ற இசை வளமும் இவரிடம் நிறைந்திருந்தன. தருமபுரத்தில் கற்ற தமிழ் புலமையும் சைவ நெறி ஈடுபாடும் இவர் பாடுகையில் தெளிவாக உணர முடியும். திருமுறைகளைப் பண்முறையில் ஓதி ஓதிப் பெற்ற பழக்கம் ஆழம் உச்சரிப்பில் அழுத்தத்தொடு வெளிப்படும். தேவாரப் பதிகங்களைப் பாடுகையில் திருத்தொண்டர் புராணத் தொடர்பொடு விருத்தமாகப் பாடி பின்பு தேவாரப் பதிகங்களைப் பாடும் பாங்கு இவரின் ஆழ்ந்த புலமைக்குச் சான்றாக அமையும்.

தருமபுரம் சுவாமிநாதன் மீது சிலர் சில குற்றங்களையும் சுமத்துவர். திருமுறைப் பதிகங்களைப் பண்மாற்றிப் பாடுகிறார். ஜனரஞ்சமாகப் பாடுகிறார். சில நிகழ்வுகளில் இவ்வாறு நடப்பதுண்டு. கேட்போரைப் பிணிக்கும் தகையவாய் அமையும். ஆயினும் ஒலிப்பதிவு செய்யும் பொழுது, எதிர்காலச் சந்ததியினருக்குக் கொண்டு செல்லும் பொழுது கவனமாக, மரபு மாறாமல் பாடுவதனைப் பெரும்பாலும் பின்பற்றியுள்ளார்.

தருமபுரத்தார் விருத்தம் பாடும் பொழுது மிக அழகாக இருக்கும். பலமுறை இதனை நாம் அனுபவித்துள்ளோம். பிறருக்காக இவர் திருமுறை பாடினார் என்பதைவிட தனக்காக இவர் பாடினார் என்பது தான் உண்மையாகும். பதிகம் பதிகமாக ஓதுவதும், பதிகம் ஓதும் பொழுது தலம் பற்றிய குறிப்புகளைத் தருவதும் சிறப்பானவைகளாகும். தேவாரம் இசையில் மட்டும் இல்லை தாளத்தில் மட்டும் அமையவில்லை. அதன் சொல்லிலும், சொல்லுணர்த்தும் பொருளிலும், பொருளிடை அமைந்த சுவையிலும் இவையனைத்தும் ஒருங்கிணைந்து செல்லும் பக்தி மார்க்கத்திலும் உள என்பதனை உணர வைத்துள்ளார்.

சைவ அனுட்டானத்தை மதுரை திருஞானசம்பந்தர் மடத்தில் பெற்றார். நாள்தோறும் அனுட்டானம் செய்து 1008 முறை நமச்சிவாய மந்திரம் சொல்வதனையும் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

சென்னையைச் சார்ந்த துரை ஆறுமுகம் என்பார் தருமபுரத்தார் மீது அளவிலா பக்தி கொண்டவர். 1977 முதல் திருமுறை வழிபாட்டில் கலந்து கொள்பவர். 80 கிராம் தங்கத்தில் பொற்றாளம் செய்து 22.5.1977 அன்று சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் மூலம் வழங்கினார். திருவரங்கத்தில் 80 ஆம் அகவை தொடக்க விழா பாவனா அபிடேக விழாவாக நடைபெற்றது. 12.06.2003 அன்று நடைபெற்ற தருமபுரம் ப.சுவாமிநாதன் அவர்களின் எண்பதாம் ஆண்டு நிறைவு நடைபெற்றது. முத்து விழாவின் செயலராகவும் பொற்றாளம் ஆறுமுகம் இருந்து தொண்டு செய்துள்ளார். அற்புதமான முத்து விழா மலர் ஒன்றை வெளியிட்டார். சுவாமிநாதரின் வாழ்வில் திருமுறையின் பெரு வாழ்வு என்ற பெயரில் ஒலி ஒளிப் பதிவு செய்து குறுவட்டாக அளித்துள்ளார். கால வெள்ளத்தால் அழிக்க இயலாத ஆவணங்களாக இவை உள.

தருமபுரத்தாரின் மணி விழா செல்வ நடராச முதலியார் தலைமையில் திருமுறை வழிபாட்டு அன்பர்கள் திருக்கூட்டத்தார் கொண்டாடினர். மூன்று நாள் விழாவாக நடந்தது. 81வது பிறந்த நாளான முத்து விழாவையும் சிறப்பாகச் செய்தனர். விழாவின் தலைவராக நீதியரசர் திரு.பு.மா. கோகுலகிருஷ்ணனும் துணைத் தலைவராக ஔவை நடராசனும் செயலாளராகப் பொற்றாளம் துரை ஆறுமுகம் துணைச் செயலராக ச.சுகா அவர்களும் பொருளாளராகப் ப.மெ. அம்பலவாணரும் இருந்தனர்.

இத்தகு பெருவாழ்வு பெற்ற தருமபுரம் சுவாமிநாதன் தனது 86 ஆம் வயதில் 15.10.2009 அன்று விண்ணுலகில் திருமுறை ஓதிடச் சென்றுவிட்டார். ஐயா மறைந்த ஆறேழு மாதங்களில் சுலோச்சனா அம்மையாரும் மறைந்தார். குழந்தைகள் இல்லை.

தஞ்சையில் வழக்குரைஞர்கள் திருவாளர்கள் டி.என். இராமச்சந்திரன், தெய்வத்திரு அருள் நமச்சிவாயம், வீ.சு.இராமலிங்கம், பேராசிரியர் தெய்வத்திரு த.கோ. பரமசிவம், அம்மன்பேட்டை அன்பர்கள் போன்றோர் இவரது

திருமுறை இசை வயப்பட்டவர்கள் ஆவர். இவர்கள் மூலம் நாங்களும் இவரின் இசைச் சுவைஞர்களில் ஒருவன் ஆனேன். அதிகாலையில் நடை பயிற்சி மேற்கொள்ளும் போது பதிவு செய்யப் பெற்ற திருமுறை இசை வளங்களை அனுபவித்து வருகிறோம். எத்தனையோ பிறவியில் பெற்ற பயனை இவரது குரல் வளத்தால் அனுபவித்து வருகிறோம். எங்கள் குடும்பம் திருமுறைக் குடும்பமாக மாறியதற்கு இவரின் தேவார இசையே காரணமாகும். இந்நூலாசிரியருள் ஒருவர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இசைத்துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் முனைவர் செ.கற்பகம் திருமுறை நாட்டியாஞ்சலி நிகழ்வைப் பலமுறை செய்துள்ளார். எங்கள் வாழ்வைத் திருமுறையோடு இணைத்த மானசிக குருவாகத் தருமபுரம் சுவாமிநாதனை என்றென்றும் வணங்கி வருகிறோம்.

பெற்ற பட்டங்கள்:

தருமபுரத்தார் பெற்ற பட்டங்கள் ஏராளம் ஏராளம். பல நூறு குறுவட்டுகள் மூலம் இணையம் மூலம் இன்றும் பலருக்குத் தேவாரம் கற்பிக்கும் ஆசானாக விளங்கி வருகிறார்.

1. தேவார இசை மணி - தருமபுர ஆதீன தேவார பாடசாலை.
2. சங்கீத பூஷணம் - அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
3. இசைப் பேரறிஞர் - சென்னை தமிழிசைச் சங்கம்.
4. கலைமாமணி - தமிழ்நாடு அரசு.
5. அரசவைக் கலைஞர் - தமிழ்நாடு அரசு.
6. டி.டி.கே. விருது - சங்கீத வித்வத் சபை, சென்னை.
7. இசைக் கலைச் செம்மல் - இராமலிங்கம் பணி மன்றம்.
8. பண்ணிசைத் தமிழ் மாமணி - பொங்கு தமிழ்ப் பண்ணிசை மன்றம்.
9. சாகித்ய அகாடமி விருது - புதுடில்லி.
10. திருமுறை இசைப்புலவர் - தருமபுரம்.

கலைமாமணி, கவிஞர் கு.சா.கிருஷ்ணமூர்த்தி (1914 - 1990)



"கு.சா.கி. என்ற மூன்று எழுத்துக்களால் சிறப்பிக்கப் படும் நம் கவிஞர் முத்தமிழுக்கும் சொந்தக்காரரார். இயற்றமிழ்ப் புலவர், இன்னிசை அறிஞர், நாடக ஆசிரியர். தற்காலத்தில் வாழ்ந்த மூத்த கவிஞர் வரிசையிலுள்ள இவர் கடந்த நாற்பதாண்டுகட்கு மேலாகத் தொடர்ந்து எழுதி வந்தார். எளிய தோற்றமும், குணநலன் களையும் கொண்ட இவரைப் போன்றே இவருடைய கவிதைகளும் எளிய நடையுடனும் ஆனால் ஆழ்ந்த கருத்துப் பொதிந்தனவாயும் அமைந்திருக்கக் காண்கிறோம்".

– சிலம்பொலி செல்லப்பன், பருவமழை நூல் ஆய்வுரை

"எனது பெருமதிப்பிற்குரிய உயர்திரு கு.சா. கிருஷ்ணமூர்த்தி அன்னார் அவர்களை நாற்பது ஆண்டுகளாக நன்கறிவேன். அதுவும் புதுக்கோட்டை மிருதங்க, கஞ்சிரா மகா மேதை தட்சிணாமூர்த்தி ஐயா அவர்களின் இல்லத்தில் முதன்முதலாகச் சந்திக்கும் பாக்கியம் பெற்றேன். அந்தக் காலத்திலிருந்து அவர்கள் கூடவே பாடிக் கொண்டிருப்பேன். அப்போதே அவர்கள் எழுதிய பல பாடல்களை மனனம் செய்து பாடுவேன். குறிப்பாக 1946 ஆம் ஆண்டில் அவர்கள் எழுதி வெளியிட்ட "இசையின்பம்" என்னும் பாடல் தொகுப்பு நூல் ஒன்றைப் பெற்று அதில் உள்ள அநேக பாடல்களை நான் கச்சேரி செய்யத் தொடங்கிய அந்தக் காலத்திலிருந்தே இசை அரங்குகளில் தவறாது பாடுவேன்".

– இசைப்பேரறிஞர் மதுரை எஸ்.சோமசுந்தரம்

"இந்நூலாசிரியரோ (கு.சா.கி.) மூன்றாம் வகுப்பு முற்றுப் பெறுவதற்கு முன்பே தனது ஒன்பதாவது வயதிலேயே பள்ளிப் படிப்பிலிருந்து விடுதலை பெற்று நாடகக்குழு ஒன்றில் நடிகராகச் சேர்ந்துவிட்டார். அந்த நடிகர் உலகத்திலே மனிதனுடைய குணங்கள், அவனுடைய உணர்ச்சிகள், அவனுடைய பாவங்கள் இவற்றையெல்லாம் எப்படிச் சொற்களிலே எடுத்துக் காட்ட முடியும். நாடகப் பாங்கு என்றால் என்ன? உரையாடுவது எப்படி? சுவைபட நடிப்பது எப்படி? இசையினாலும் நடிப்பினாலும் மக்களுக்கு எப்படி எப்படியெல்லாம் களிப்பூட்டலாம். ஒவ்வொரு நடிகனும் தன்னுடைய தனிப்பெருமையை மட்டும் தேடிக் கொள்ளாமல் நடிகர் குழுவோடு கூட்டு முயற்சி செய்து நாடகத்திற்கு எப்படி பெருமையை ஈட்டலாம், ஒருவரோடு ஒருவர் எவ்வாறு இங்கிதமாகப் பழக வேண்டும் என்பதை அந்தத் துடிப்பை நாடகத்தில் வருகின்ற காட்சிகள் மூலமாகவும், செயல் மூலமாகவும், சொற்கள் மூலமாகவும், எப்படிப் பிரதிபலித்துக் காட்டலாம் என்பதையெல்லாம் நேருக்கு நேர் திரு.சங்கரதாஸ் சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார் போன்ற மேதைகளுடைய நாடகக் குழுக்களின் மூலமாகவும் அவர்கள் நடித்த நாடகங்களிலே வேடங்கள் தாங்கி நடித்தும் ஐயந் திரிபுற தெரிந்து கொண்டவர்".

– நீதியரசர் எஸ்.மகாராசன், தமிழ் நாடக வரலாறு, சிறப்புரை

கு.சா.கி.:

இயல், இசை, நாடகம் என்கிற முத்துறை வல்லபம் பெற்ற கு.சா.கிருஷ்ணமூர்த்தி கும்பகோணம் சாமிநாதபிள்ளை – மீனாட்சி அம்மாளின் மகனாக 19.05.1914இல் பிறந்தார். இவரின் குடும்பம் புதுக்கோட்டையைச் சார்ந்தது. பின்பு இவர்களது குடும்பம் கும்பகோணத்தில் தங்கிற்று. கும்பகோணம் சா.கிருஷ்ணமூர்த்தி கு.சா.கி என்று அழைக்கப் பெற்றார். கும்பகோணம் யானையடிப் பள்ளியில் மூன்றாம் வகுப்பு வரை பயின்றார். பின்பு எட்டு வயதில் பாலர் நாடகக் குழுவில் சேர்ந்தார். வேலுநாயக்கர் நாடகக்குழு, ஜெகந்நாதய்யர் நாடகக்குழு, தி.க.சண்முகம் நாடகக் குழுக்களில் நடிகராக, கவிஞராக, வசனகர்த்தாவாகப் படிப்படியாக வளர்ந்தார்.

14 ஆண்டுகள் புதுக்கோட்டையில் தங்கி இருந்தார். நிரந்தர வருவாய்க்காகப் பதிப்பகம் ஒன்றும் படக்கடை ஒன்றும் வைத்திருந்தார். பிறகு சென்னைக்கு வந்தார். இவர் எழுதிய 'அந்தமான் கைதி' என்கிற நாடகம் இவரை வெளி உலகிற்கு மிகச் சிறப்புடன் அறிமுகம் செய்து வைத்தது. பின்பு அந்தமான் கைதி திரைப்படமாகியது. எம்.ஜி.இராமச்சந்திரன் நடித்துள்ளார். கதை, வசனம், பாடல்களைக் கு.சா.கி. அவர்கள் எழுதினார். அந்தமான கைதி நாடகமாக நடத்தப் பெற்ற பொழுது பேரறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன், கல்கி, இராஜாஜி போன்றோர் நேரில் வந்து பார்த்தனர். இவரின் 'என் காணிக்கை' என்கிற நாடகமும் சிறப்புடன் நடந்தது. இந்த நாடகத்திற்காக எழுதப் பெற்ற 'குற்றம் புரிந்தவன் வாழ்க்கையில் நிம்மதி கொள்வதென்பது ஏது' என்கிற பாடல் பின்பு இரத்தக் கண்ணீர் படத்தில் இடம் பெற்றது.

குமாரி என்கிற திரைப்படத்திற்கு எஸ்.எம். சந்தானத்துடன் இணைந்து வசனம் எழுதியுள்ளார். 'ஒன்றே குலம்' என்கிற திரைப்படத்திற்கு எஸ்.பி. சுந்தரம், பி.சீதாராமனுடன் இணைந்து வசனம் எழுதினார். 'தேவ இரகசியம்' என்கிற திரைப்படத்தை மொழிமாற்றம் செய்து வசனம், பாடல்களை எழுதினவர் இத்திரைப்படத்தில் மூன்று பாடல்களைத் தாமே பாடினார். இப்படத்திற்குக் குருவாயூர் பொன்னம்மாள் இசை அமைத்துள்ளார். இத்திரைப்படத்தில் வகிதா ரகுமான் என்கிற நடிகையை அறிமுகம் செய்தார். இவர் பிற்காலத்தில் இந்தித் திரைப்பட உலகில் சிறப்புடன் விளங்கினார். தேவ இரகசியம் (1976) படத்திற்கு வசனம் பாடல்களைப் படைத்துள்ளார்.

கு.சா.கி.யின் படைப்புகள்:

கு.சா.கி. இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலும் படைப்புகளைத் தந்துள்ளார்.

1. அந்தமான் கைதி நாடகம் - 7 பதிப்புகள், 1950இல் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்ற நூல்.
2. கலைவாணன் - நாடகம்.
3. என் காணிக்கை - நாடகம்.
4. பருவமழை - கவிதை நூல் 1983இல் தமிழக அரசின் பரிசு பெற்றுள்ளது.

5. தமிழ்நாடக வரலாறு - சென்னைப் பல்கலைக் கழகச் சொற்பொழிவு நூல் இரண்டாம் பதிப்பு 1989.
6. இசையின்பம் - இசைப்பாடல்கள் தொகுப்பு.
7. அமுதத் தமிழிசை - இசைப் பாடல்கள், இசையமைப்பு, கலைமாமணி குருவாயூர் பொன்னம்மாள்.
8. அருட்பா இசையமுதம் - இசைப்பாடல்கள் தொகுப்பு, இசையமைப்பு, கலைமாமணி குருவாயூர் பொன்னம்மாள்.
9. திரைப்பாடல்கள்.

திரைப்பாடல்கள்:

தஞ்சை இராமையாதாஸ், கு.மா.பால சுப்பிரமணியன், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கவிஞர் மருதகாசி போன்ற திரைப்பாடல் ஆசிரியர்களுள் கு.சா.கி.யும் ஒருவராவார். இவர் 37 திரைப்படங்களில் 130 திரைப்பாடல்களை எழுதி யுள்ளார். அந்தமான் கைதி - 8 பாடல்கள், தக்ஷயக்ஞம் (1962) - 7 பாடல்கள், பதியே தெய்வம் (1957) - 7 பாடல்கள், ராஜநந்தினி (1960) - 10 பாடல்கள் என 37 படங்களுக்குப் பாடல்களைப் படைத்துள்ளார். இப்பாடல்கள் பெரும்பாலும் 1950 - 1960 காலக் கட்டத்தில் வெளிவந்தன.

'எளியோரை தாழ்த்தி வலியோரை வாழ்த்தும்' என்ற பாடல் தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற திரைப் படத்திலும், 'காவல் சிறைதனிலே' என்று தொடங்கும் பாடல் அம்பிகாபதியிலும், 'நிலவோடு வான்முகில் உறவாடுதே' என்ற பாடல் இராஜராஜன் என்கிற திரைப் படத்திலும் இடம் பெற்றுள்ளன.

கலைவாணர் நாடகம்:

கலைவாணர் என்ற நாடகம் புகழேந்திப் புலவர் ஒட்டக்கூத்தர் வாழ்வில் நடந்த சுவையான நிகழ்ச்சியை மையமிட்டு எழுதப் பெற்ற நாடகமாகும். சிறைக் கோட்டத்தைத் தமிழ்ப் புலமை பெருக்கும் கூடமாக்கிய நிலையை இந்நாடகம் உணர்த்துகிறது. ஒட்டக்கூத்தர் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்ற கருவை மையமிட்டு இந்நாடகம்

அமைந்துள்ளது. கலைவாணர் என்.எஸ்.கிருஷ்ணனின் சிறை வாழ்வைக் கற்பனை செய்து எழுதப்பட்டுள்ளது.

இவருடைய நூற்களில் இசையின்பம், அமுதத் தமிழிசை, அருட்பா இசையமுதம் என்கிற நூற்கள் இசை, நாட்டியத் துறைக்கு வளம் சேர்க்கும் நூற்களாகும். இசையமுதம் என்கிற நூலில் உள்ள 100 பாடல்களைப் பெரும் இசை வாணர்களான எம்.என்.தண்டபாணி தேசிகர், மதுரை சோமு, சீர்காழி கோவிந்தராஜன் போன்றோர் பாடியுள்ளனர். இந்நூல் 1946 ஆம் ஆண்டில் வெளியிடப் பெற்றுள்ளது. இசைக் கலைஞர் மதுரை சோமசுந்தரம் தமது இசையரங்குகளில் பாடி வந்துள்ளார்.

அமுதத் தமிழிசை:

அமுதத் தமிழிசை என்கிற நூலில் 100 பாடல்கள் படைக்கப் பெற்றுள்ளன. கலைமாமணி குருவாயூர் பொன்னம்மாள் இசையமைத்துள்ளார். கும்பகோணம் ஏ.ஆர்.கண்ணன் பொன்னம்மாள் பாடிய பாடல்களை இசையலகுடன் எழுதித் தந்துள்ளார். பொதுவாக தேவபாணிப் பாடல்களாக அமைந்துள்ள, விநாயகர், முருகன், சிவன், திருமால், உமையம்மை, இராமகிருஷ்ண பரமஹம்சர், சாரதா தேவியார், பாரதி, இராமலிங்க அடிகள் போன்றோர் மீது பாடியுள்ளார். கண்ணகி மீதும் பாடல் பாடப் பெற்றுள்ளது. இசை அலகுடன் யாவரும் எளிதில் கடைப்பிடிக்கும் நிலையில் உள்ளமையால் நாட்டிய அரங்குகளிலும் இவை இடம்பெற்று வருகின்றன.

இராகம் : மலைய மாருதம் **தாளம் : ரூபகம்**

எடுப்பு

தில்லையிலே நடனமாடினார் எங்கள் தேவாதி தேவன்
திங்களும் மான்மழு கங்கையும் செஞ்சடைத்
திகிரியும் சூலமும் அரவமும் குண்டலமும் உடுக்கையும் ஆடிடத்
(தில்லை)

தொடுப்பு

எல்லையில்லாத இன்பமும் எழிலும் மேவிடவே – எங்கும்
இமயவரும் அரிஅயனும் இருடிகளும் மனம்மகிழ்ந்
தகிட தஜணுத் ததிங்கிணத் தோமெனத் (தில்லை)

முடிப்பு

கல்லும் மனமும் கசிந்துருகக் கருணையின் திருவடிவமாகவே
கால் மாறி மாறி காளியோடு கன மணிச் சபை தனிலே
எல்லா உயிர்க்குலமும் தழைத் தெல்லாம் நலமுறவே
ஏகபோகமாய் நாகரீகமாய் ராகதாள பாவமொடு
தத்தளாங்குத் ததிங்கிணத் தோமெனத் (தில்லை)

கலைமகள் வழிபாடு:

கலைமகளை வழிபடும் நிலையில் கல்யாணவசந்த இராகத்தில் ஆதி தாளத்தில் பாடல் ஒன்று இடம் பெற்றுள்ளது.

எடுப்பு

கலைத் தெய்வமே கடைக் கண்பாரம்மா – உன்
கருணையின்றி உயர்ந்தோர் யாரம்மா – சகல (கலை)

தொடுப்பு

நிலைத்திடும் கலைஞானத் திறமை உண்டாக்கும்
நீடுலகில் அழியாப் பெரும்புகழ் சேர்க்கும் (கலை)

முடிப்பு

எத்தனை கோடி பொருள் இருந்தாலும்
எல்லை யில்லாத இன்ப வாழ்விருந்தாலும்
அத்தனையும் ஒருநாள் கானல் நீராகும்
அன்னையுள் அருட் கலையே நிரந்தரமாகும் (கலை)

தெய்வத்துணையின்றி எதுவும் நடைபெறா என்கிற நம்பிக்கையூட்டும் பாடலாக இது அமைந்துள்ளது.

பதம்:

பதம் என்கிற நிலையில் முருகன் மீது காதல் கொண்ட தன் பெண்ணைப் பார்த்து வேண்டாமடி மகளே உனக்கு வேல்முருகன் மீது காதல் என்கிற நிலையில் ஒரு பதப் பாடல் அமைந்துள்ளது.

இராகம் : ஜோன்புரி **தாளம் : ஆதி (திஸ்ரநடை)**

எடுப்பு

வேண்டாமடி மகளே – உனக்கு
வேல்முருகன் திருமால் மருகன் சம்பந்தம் (வேண்டாமடி)

தொடுப்பு

நீண்ட நாள் நினைந்து உருகுகின்றாயே – அந்த
ஆண்டியினால் நமக்கு ஆவதென்னடி – போடி
(வேண்டாமடி)

முடிப்பு

குலத்தில்தான் அவன் என்ன நம்மிலும் சிறந்தவன்
கொடும்பாம் பணிவோன் நெற்றி நெருப்பிலே பிறந்தான்
வலைச்சி வளர்க்கமலை வனங்களில் திரிந்தான்
வனக்குறத்தி வள்ளியை வஞ்சித்து மணம் புரிந்தான்
(வேண்டாமடி)

இசைக்கலையில் தமிழ்நாடு உயர்ந்து விளங்குவதைப் பாடியுள்ளார்

இராகம் : காம்போதி **தாளம் : ஆதி**

பல்லவி

இசைக்கலை உயர்ந்த தமிழ்நாடு – இதை
இனிமையாய்க் கூறும் இளங்கோ ஏடு

அனுபல்லவி

திசைதிசை எங்கனும் தமிழக மெங்கும்
தனிப்பெருந் புகழினைத் தந்தனம் செந்தமிழ்

சரணம்

பாம்புகள் மகுடியால் படமெடுத் தாடும்
பசுக்களும் குழலினில் பதுமைபோல் பார்க்கும்
வீம்புசெய் யானைகள் வீணையிசையில் தங்கும்
வான்முகம் பாடும் முல்லைகள் மலரும்

தமிழ் நாடக வரலாறு:

கு.சா.கி. எழுதிய 'தமிழ் நாடக வரலாறு' என்கிற நூல் சென்னைப் பல்கலைக் கழகத்தில் பம்மல் சம்பந்த முதலியார் அறக்கட்டளை பொழிவு 1,2,3 செப்டம்பர் 1977இல் நிகழ்த்திய சொற்பொழிவு நூல். வானதி பதிப்பாக 1979இல் வெளி வந்துள்ளது. இரு நூலுக்கு நீதியரசர் எஸ்.மகாராசன் சிறப்புரை நல்கியுள்ளார். நூலின் உள்ளே கிடைத்தற்குரிய படங்கள் உள்ளன. நாடகத் தமிழ்யமைத்த நல்லாசிரியர்கள், நினைவினை விட்டு நீங்காத பழம்பெரும் நடிகர்கள், நடிகைகள், நடனமே நாடகம், மன்னர்கள் வளர்த்த பெருங்கலை, தேசியக்கலை தெய்வீகக் கலையாயினமை, வழிவழி வந்த கலை, நாடக நடனம், கூத்துக்கலையில் மாற்றங்கள், இசை நாடகங்கள் போன்ற செய்திகள் இடம் பெற்றுள்ளன. இவற்றுள் நாட்டியம் பற்றிய கருத்தைக் காண்போம்.

நாடகமும் நாட்டியமும் கூத்தும்:

"நாட்டியத்தை நாடகத்தின் ஒரு கூறாகவே கொள்ளுதல் மரபு. நாடகம் நாட்டியம் ஆகிய இரண்டையும் பொதுவாகக் கூத்து என்று சொல்வது பண்டைய வழக்கம்.

புராணமோ, வரலாறோ, கற்பனையோ எதுவாயினும் களங்கள் சில அமைத்து, ஒவ்வொரு களத்திற்கும் காட்சிகள் பல தொகுத்து, அந்தந்தக் கதைகளுக்கேற்பப் பாத்திரங்களைப் படைத்து, அந்தப் பாத்திரங்களின் உணர்ச்சிபூர்வமான பாடல்கள், நடிப்பு இவற்றின் வாயிலாக விளக்கிக் காட்டும் நீண்ட கதை அம்சம் உள்ளவற்றை நாடகமென்றும்,

ஒன்றிரண்டு குறிப்பிட்ட கருப்பொருள்களை மட்டும் அவயவங்களின் உணர்ச்சிபூர்வமான நடிப்பாற்றலில் விளக்கிக் காட்டும் ஆடற்கலையை நாட்டியமென்றும் கூறுவார்கள்.

இங்ஙனம் கூத்து என்ற பொதுப் பெயர் வழங்கியதற்குக் காரணமாகப் பழங்கால நாடகங்கள் அனைத்தும், உரைநடையில் இல்லாமல், பெரும்பாலான பாடல்கள் விருத்தங்களில் நிறைந்தனவாக இருந்ததால் அதில் வரும் பாத்திரங்கள் அனைவருமே, அந்தப் பாடல்களில் வரும் தாள சந்த வேறுபாடுகளுக்கேற்ப மேடையில் ஆடிக்கொண்டே

நடிப்பதை வழக்கமாகக் கொண்டிருந்ததால் கூத்து என்ற சொல் வழங்கியது போலும்" - ப.68.

நாடகம் என்ற சொல்லை நாடு + அகம் என்று பிரிப்பது போலவே நாட்டியம் என்ற சொல்லை நாடு + இயல் என்று பிரிக்கலாம். நாட்டின் அகத்தை நாடகம் எடுத்துக்காட்டும், நாட்டின் இயலை நாட்டியம் எடுத்துக்காட்டும். இதன் அடிப்படையில் நாட்டிய நாடகம் என்கிற சொல்லும் பிறந்துள்ளது என்கிறார்.

கூத்து என்ற சொல் நாட்டியம் நாடகம் ஆகிய இரு கலைகளுக்குப் பொது. மாதவி "நாடக மேத்தும் நாடகக் கணிகை" என்று கூறப்படுகிறார். திவாகர நிகண்டும் இதனை விளக்குகிறது.

"நடமே நாடகம் கண்ணுள் நட்டம்
படிதம் ஆடல் தாண்டவம் பரதம்
ஆலுதல் துலங்கல் வாணி குரவை
நிலையல் நிருத்தம் கூத்தெனப்படுமே"

என்கிறார். ஒரு சிற்றிலக்கியத்திற்கும் ஒரு பேரிலக்கியத்திற்கும் ஒரு சிறுகதைக்கும் ஒரு பெருங்கதைக்கும் ஒரு சிறு கவிதைக்கும் ஒரு பெருங்காவியத்திற்கும் எத்தனை வேறுபாடுகள் உண்டோ அத்தனை வேறுபாடுகள் நடனக் கலைக்கும் நாடகக் கலைக்கும் உண்டு. ஆயினும் இருகலையுகளையும் ஒன்றாகவே இணைத்துக் கூறுவதற்குக் காரணம், இரு துறையிலும் உள்ள கலைஞர்களுக்கும் பொதுவாகத் தேவைப்படும் சிறப்புத் தகுதிகளே.

ஆடலும் பாடலும் அழகும் என்றுக்
கூறிய மூன்றின் ஒன்று குறைவுபடாமல் இருப்பதுவே.

தமிழ் நாடகக்கலை பற்றிய பல்வேறு அரிய தகவல்கள் கொண்ட நூலாக இந்நூல் திகழ்கிறது. சிறுவர் நாடகக்குழு, குறிப்பாக சி.கண்ணையா கம்பெனி, ஜெகந்நாதய்யர் கம்பெனி, சீனிவாசம் பிள்ளை கம்பெனி பற்றிய செய்திகள், இக்குழுவிலிருந்த மாரியப்பா சுவாமிகள், எம்.ஆர்.இராதா, டி.கே.எஸ். சகோதரர்கள், கே.சாரங்கபாணி போன்றோரைப் பற்றிய தகவல்கள், பெண் வேடம் பூண்ட ஆண் நடிகர்கள், ஆண்

வேடம் தாங்கிய பெண்கள், ஜெகந்நாதய்யரின் நாடகக்குழுவில் இருந்தவர்கள், 1933 தொடங்கப் பெற்ற மதுரை தேவி வினோத சஞ்கீத சபை தொடக்கம் போன்ற பல அரிய தகவல்களைக் கொண்ட நூலாக அமைந்துள்ளது. பாலர் நாடகம் 1910இல் தொடங்கியது. கும்பகோணம் தப்பா வெங்கடாசல பாகவதர் தொடங்கினார். முதல் நாடகம் லலிதாங்கி என்று குறிப்பிட்டுள்ளது. நாடகம் நாட்டியம் கூத்து இவற்றிற்குரிய உறவுகளையும் இருபதாம் நூற்றாண்டில் வளர்ந்த தமிழ் நாடக நிலைகளையும் சிறப்புடன் இந்நூல் தொகுத்துத் தந்துள்ளது. இந்நூலைப் பாடநூலாக்கிட வேண்டும்.

அருட்பா இசையமுதம்:

இராமலிங்க அடிகளார் தந்த அருட்பாக்கள் ஆறு தொகுதிகளாக வெளியிடப் பெற்றன. இசையரங்குகளிலும் நாட்டிய அரங்குகளிலும் அருட்பா பாடல்கள் இடம் பெற்று வருகின்றன. தமிழ்ப் பல்கலைக் கழக இசைத்துறை உதவிப் பேராசிரியர் இந்நூலாசிரியருள் ஒருவர் முனைவர் செ.கற்பகம் திருவருட்பாவை மையமிட்டு நாட்டியாஞ்சலி நிகழ்வை நடத்தியுள்ளார். கு.சா.கி. 101 திருவருட்பா பாடல்களைத் தொகுத்து, கலைமாமணி குருவாயூர் பொன்னம்மாள் இசையமைத்த "அருட்பா இசையமுதம்" என்கிற நூல் வெளிவந்துள்ளது. இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய பொள்ளாச்சி மகாலிங்கம் அவர்கள் பல அரிய தகவல்களைத் தந்துள்ளார். திருவருட்பா கீர்த்தனைப் பகுதி என்னும் தலைப்பில் திரு அ.பாலகிருஷ்ணன் வெளியிட்டுள்ளார். இதில் 90 பாடல்களுக்குக் கோடீஸ்வர ஐயரும் 21 பாடல்களுக்குச் சி.ஆர்.சீனிவாச ஐயங்காரும் இசையமைத்துள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளார். மேலும் "வள்ளல் பெருமான் ஒரு சர்வ கலா வல்லவர். இசைக்கலையில் மிகப் பெரிய மாமேதையாகத் திகழ்ந்தார். அவருடைய சங்கீத ஞானத்தையும், பாடுந் திறத்தையும் கண்டு, அவர் காலத்தில் வாழ்ந்த சங்கீத மகா வித்வான்களெல்லாம், தங்களின் வித்யா கர்வத்தை விட்டு மெய் கிளர்ந்து வியந்து போற்றியிருக்கிறார்கள்" என்று ச.மு.கந்தசாமி பிள்ளை தந்த குறிப்பை மேற்கோளிட்டு வள்ளலாரின் இசை ஞானத்தை உணர்த்தியுள்ளார். கிருபானந்த வாரியார், செம்மங்குடி சீனிவாச ஐயர், டி.கே.பட்டம்மாள் ஆகியோர் உரை வழங்கியுள்ளனர். விருத்தப் பாடல்களையும் பல்லவி,

அனுபல்லவி விளக்கத்துடன் கு.சா.கி. தந்துள்ளார். ம.பொ.சி. அவர்கள் எழுதி வெளியிட்ட வள்ளார் கண்ட ஒருமைப்பாடு நூல் வெளியீட்டு விழாவின் பொழுது ஒருமையுடன் உனது திருமலரடி நினக்கின்ற என்று தொடங்கும் பாடலைக் காப்பி இராகத்தில் கண்டசாப்புத் தாளத்தில் பொன்னம்மாள் பாடினார். இதனைத் தொடர்ந்து அருட்பா பாட ஆரம்பித்து அருட்பா இசையமுது நூலாக வெளிவந்தது.

வருவார் அழைத்து வாடி, திருவிளங்க, தெண்டனிட்டேன், என்ன புண்ணியம், அம்பலத்தே ஆடுகின்ற, பார்த்தாலும், அறியாத பருவத்தே, பெற்ற தாய்தனை, ஆடியபாதம், ஒருமையுடன் நினது திருமலர், குறவர் குடிசை, அம்பலத்தே ஆடுகின்றார் என்று தொடங்கும் பாடல்களும் இவை போன்ற பிற பாடல்களும் இத்தொகுதியில் இராகம் தாளத்தோடு இசையலகுகளுடன் இடம் பெற்றுள்ளன. இசை வடிவப் பாடல்களோடு, விருத்தப்பாக்களையும் இசைப் பாக்களாக்கிப் பாடி வெளியிட்டுள்ளனர்.

இராகம் : இராகமாலிகை **தாளம் : ஆதி**

ஆடிய பாதம் மன்றுள் ஆடிய பாதம்
    ஆடிய பாதம் நின்றாடிய பாதம்
பாடிய வேதங்கள் தேடிய பாதம்
    பத்திசெய் பத்தர்க்குத் தித்திக்கும் பாதம்
நாடிய மாதவர் நேடிய பாதம்
    நாதாந்த நாட்டுக்கு நாயக பாதம்
தீராத வல்வினை தீர்க்கின்ற பாதம்
    தெய்வங்கள் எல்லாம் தெரிசிக்கும் பாதம்
வாரா வரவாகிய வந்தபொற் பாதம்
    வஞ்சக மனத்தில் வசியாத பாதம்

என்று நடராசரின் நடனத் திருவடியை வழிபடும் பாடல் உளது. இதுபோல் உள்ள இப்பாடல்கள் இசைக்கு மட்டுமல்லாது நாட்டியத் தமிழுக்கும் உரிய தேவபாணிப் பாக்களாக அமைந்துள. இசைத் தமிழ் அறிஞர் தொகுதி-1இல் "வள்ளலார் ஓர் இசைத் தமிழ் அறிஞர்" என்று போற்றப்பட்டுள்ளார்.

கு.சா.கி.யின் பாடல்கள் இசைத் தமிழுக்கும் நாட்டியத் தமிழுக்கும் பெருவரவாக அமைந்துள. இவரின் படைப்புகளும்,

தொகுப்புகளும், வெளியீடுகளும் இசைத் தமிழுக்கு வளம் சேர்த்துள.

கவிஞர் கு.சா.கி.க்கு யோகாம்பாள், சகுந்தலா, குருவாயூர் பொன்னம்மாள் என்ற மூவர் மனைவியர்களாக இருந்தனர். முதல் மனைவி யோகம்பாளுக்குத் தமிழரசி, விஜயலட்சுமி என்ற மகள்களும், அம்பிகாபதி மகனும் பிறந்தனர். சகுந்தலா அவர்கட்கு ஆறு பிள்ளைகள் பிறந்தனர். 3 ஆண்கள் 3 பெண்கள். வீரபாண்டி, அசோகன், சம்பத் என்ற மூவர். இம்மூவரும் தற்பொழுது உயிருடன் இல்லை. மகன் அசோகன் இறந்த பொழுது பெரும் துயர் அடைந்தார். வள்ளி, வாசுகி, கலைவாணி என்ற மூன்று மகள்கள் உள்ளனர். குருவாயூர் பொன்னம்மாளுக்குக் குழந்தை இல்லை. இத்தகு மாபெரும் கவிஞர், இசைத் தமிழ்வாணர், திரைத்துறை சாதனையாளர், நாடகத் தமிழாளர் பலருடன் அன்புடனும் பாசமுடனும் பழகும் அன்பினர். இவரைப் பெரிதும் போற்றியவராக திருவையாறு தங்க.கலியமூர்த்தி விளங்குகிறார். கு.சா.கி. தமிழ் உலகிலிருந்து 13.5.1990 அன்று சென்னையில் மறைந்தார். இவர் பிறந்த நூற்றாண்டுவிழா புதுக்கோட்டை நகரில் நடைபெற்றது. தஞ்சை உலகத் திருக்குறள் பேரவையின் சார்பில் 23.11.2014 அன்று பிறந்த நூற்றாண்டுவிழா கொண்டாடப்பட்டது. இந்நூலாசிரியருள் ஒருவராகிய சண்முக.செல்வகணபதி "கு.சா.கி. ஓர் இசைத் தமிழ் அறிஞர்" என்ற தலைப்பில் உரை ஆற்றினார்.

வள்ளிமலை திருப்புகழ் சச்சிதானந்த சுவாமிகள் (1870 -1950)



ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவில்
சாடுந் தனியா னைசகோ தரனே — கந்தரநுபூதி

திருவண்ணாமலை தலத்து உதித்த அருணகிரிநாதர் முருகன் அருளால் திருப்புகழ் என்று இசைப் பாடல்களை அருளினார். இவர் பாடிய பாடல்களுக்குத் திருப்புகழ் என்ற பெயரை வயலூர் பொய்யாக் கணபதியார் வழங்கினார் என்று அருணகிரியார் குறிப்பிடுகிறார். "செய்ப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்பொடு செப்பென எனக் கருள் கை மறவேனே" என்கிறார். அருணகிரியார் பாடிய திருப்புகழ்ப் பாடல்கள் 16,000. கிடைத்துள்ளவை 1325 ஆகும். தணிகைமணி வ.சு.செங்கல்வ ராயன் அவர்கள் உரையுடன் வெளியிட்டுள்ளார். திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் திருப்புகழ் அமிர்தம் என்ற மாத இதழ் மூலம் உரை எழுதி வெளியிட்டுள்ளார். பிற்காலத்தில் இவை நூற்களாக வந்துள்ளன.

திருப்புகழைப் பாடிப் பரப்பியவர்கள் பலர். காஞ்சிபுரம் நயனாபிள்ளை, இசை மன்னர் சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை, வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள், தருமபுரம் சுவாமிநாதன், ஜேசுதாசு, மும்பை சகோதரிகள், பழனி சண்முகசுந்தரம்,

வெங்கடேசன், நாட்டிய ஆசிரியர் குத்தாலம் கணேசன்பிள்ளை, இசை ஆசிரியர் திருப்பாம்புரம் சுவாமிநாதபிள்ளை, முனைவர் அங்கயற்கண்ணி போன்றோர் பலர். அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழிசைப் பாடல்கள் பத்தொன்பதாம் தொகுதி 98 திருப்புகழ்ப் பாடல்களுக்குச் சுரதாளக் குறிப்புடன் வெளியிடப்பட்டுள்ளது. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வாயிலாக திருப்புகழ் ஒளி நெறி மூன்று தொகுதிகள் வி.சி.சசிவல்லி எழுதி வெளியிடப் பெற்றதுள்ளது.

திருப்புகழைப் பாடிப் பரப்பியவர்களுள் முக்கிய மானவராக வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் விளங்குகிறார். இவர் திருப்புகழ் வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் என்று அழைக்கப்படுகிறார். இவர் தொகுத்தளித்த 'திருப்புகழ் பாராயணத் தவநெறி திருமுறை' என்ற நூலை ஸ்ரீவள்ளிமலை சுவாமி சச்சிதானந்த திருப்புகழ்ச் சபை (சென்னை) வெளியிட்டுள்ளது.

வள்ளிமலை என்னும் பெயரியதலம் திருப்புகழ்த் தலமாகும். வேலூர் மாவட்டம் வேலூர் வட்டம் திருவலம் இருப்புப் பாதையிலிருந்து வடக்கில் 13 கி.மீட்டர் தொலைவில் உள்ளது. வேலூரிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. வள்ளியம்மை வாழ்ந்த தலமாகையால் வள்ளிமலை என்று அழைக்கப் பெறுகிறது.

அழகான மலை. காந்தம் போல் நம்மைக் கவர்ந்து இழுக்கும் மலை. மலை அடிவாரத்திலும் மலை மேலும் கோயில்கள் உள்ளன. அடிவாரக் கோயிலில் முருகப் பெருமான் ஆறு திருக்கரங்களுடன் வள்ளி தெய்வயானையுடன் கிழக்கு நோக்கி எழுந்தருளியுள்ளார். கோயில் அருகே சரவணப்பொய்கை என்ற தீர்த்தக் குளம் உள்ளது. மலைக் கோயில் 471 படிகளைக் கொண்டுள்ளது. மலையைக் குடைந்து அமைக்கப் பெற்ற கோயில்.

மலைக் கோயிலில் வள்ளி மணவாளன் ஒரு திருமுகம் இரு திருக்கரங்களுடன் நின்ற கோலத்தில் தேவியர் இருவருடன் தென்திசை நோக்கி எழுந்தருளி உள்ளார். மூன்று உற்சவர்கள் உள். முருகப்பெருமான் சந்நிதிக்கு அருகே சதுர வடிவில் சந்நிதி உள்ளது. இதனைக் குகைவாயில் என்பர். இங்கிருந்து திருத்தணி வரை குகை செல்வதாகவும்,

முருகப்பெருமான் வள்ளியை இவ்வழியே களவு செய்து அழைத்துச் சென்றதாகவும் கூறுவர்.

மணி மண்டபத்தில் இடது கையில் கல்லும் வலக்கையில் கவணும் கொண்டு தினைப்புனம் காக்கும் வேடமங்கையாக வள்ளியம்மை காட்சித் தருகிறார். திருப்புகழ் வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகள் ஆசிரமம் உள்ளது. சுவாமியின் சமாதி உள்ளது. இதன் அருகில் உள்ள குகையில் முருகன் காந்தர்வ மணம் புரிந்ததாகக் கூறுவர். இங்குள்ள பாதச் சுவடுகளை முருகன் வள்ளியின் பாதச் சுவடுகள் என்பர். மலைக் கோயிலும் அடிக்கோயிலிலும் வள்ளி சந்நிதி தனியாக உள்ளது. தமிழ்ப் புத்தாண்டு அன்று திருப்புகழ் படித் திருவிழா நடைபெறும். ஆடி கார்த்திகை விழா சிறப்புடன் நடைபெறும். மாசியில் பிரமோற்சவம் நடைபெறும். வாரியார் சுவாமிகள் திருப்பணி செய்து குடமுழுக்குச் செய்துள்ளார். மலையடிவாரத்தில் வள்ளி தவப்பீடம் உள்ளது.

வள்ளிமலை திருப்புகழ் சச்சிதானந்த சுவாமிகள்:

சுவாமிகள் 1870 ஆம் ஆண்டு கார்த்திகைத் திங்கள் மூல நட்சத்திர நாளன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள பூனாச்சி புதூரில் சிதம்பர ஜோசியாருக்கும் மகாலட்சுமி அம்மை யாருக்கும் மகனாகப் பிறந்தார். இயற்பெயர் அர்த்தநாரி. பள்ளிப் படிப்பில் நாட்டமில்லாமல் இருந்தார். இவரது தாய் மாமன் உதவியால் மடைத்தொழில் கற்றார். தாய்மாமன் மைசூர் சமஸ்தானத்தில் மடைத் தொழிலாளியாக இருந்தார். தாய்மாமனுடன் மைசூழ் சமஸ்தானத்தில் தங்கி வாழ்ந்து வந்தார்.

நாற்பதாவது வயதில் இவருக்குக் குன்ம நோய் ஏற்பட்டது. குன்ம நோயால் அவதியுற்றார். பழனி முருகன் அபிடேகப்பாலுண்டால் தீரும் என்பதனை அறிந்து பழனி சென்று அபிடேகபாலுண்டு நோய் நீங்கப் பெற்றார். பழனியில் தங்கினார். பழனி முருகனுக்கு அபிடேக நீர் கொண்டு வருதல் போன்ற பணிகளைச் செய்து வந்தார்.

பழனியில் நடைபெற்ற உற்சவத்தின் பொழுது ஒரு தேவதாசி சிந்து பைரவி இராகத்தில் 'வங்கார மார்பிலணி' என்று தொடங்கும் பாடலைப் பாடி அவிநயம் புரிந்து கொண்டு

சென்றாள். பாடலின் பிற்பகுதியை நிரவல் செய்து கொண்டு பாடி அவிநயம் செய்தாள்.

வங்கார மார்பில் தாரொடுயர் கோடசைய
கொந்தார மாலைகுழ வாரமொடு தோள்புரள
வண்காதி லோலைகதிர் போலவொளி வீசஇதழ் – மலர்போல

இப்பாடலின் மூன்றாவது அடி

சிங்கார ரூபமயில் வாகனந மோநமென
கந்தாடு மாரசிவ தேசிகந மோநமென
சிந்தூர பார்வதிசு தாகரந மோநமென
சிந்தான சோதிகதிர் வேலவந மோநமென
கங்காரி வேணிகுரு வானவந மோநமென
திண்சூர ராழிமலை தூள்படலை வேலைவிடு – முருகோனே

இப்பகுதியை நிரவல் செய்து பாடியமை வெகுவாக இவரைக் கவர்ந்தது. இப்பாடலின் சந்தமும் இவரை வெகுவாகக் கவர்ந்தது.

தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன
தந்தான தானதன தானதன தானதன – தனதான

இச்சந்தத்தில் சிந்தை தோய்ந்தது. அந்நங்கை பாடிய சந்தம் இசை இனிமை தாள நுட்பங்களைக் கேட்டறிந்தார். இது போன்ற சந்தப்பாக்கள் நிறைந்த திருப்புகழ்ப் பாடலைக் கற்க ஆர்வப்பட்டார். திருப்புகழ்ப் பாடல்கள் கொண்ட நூல் பெற்றார். தக்கவரை நாடிப் பாடும் திறம் அறிந்தார். நாள்தோறும் திருப்புகழ்ப் பாடல்களை மனப்பாடம் செய்தார். அப்பாடல்களின் சந்தமும் பொருளாழம் இசை இனிமையும் தாள நுட்பமும் அறிந்து பாடத் தொடங்கினார். இத்தகு பாடல்களை நாடெங்கும் பரப்பும் நோக்கம் கொண்டார். தலப்பயணம் மேற்கொண்டார். 'திருப்புகழ் அடியார், திருவடிச் சென்னியார்' என்று தம்மை அழைத்துக் கொண்டார்.

திருவண்ணாமலை வந்தடைந்தார். இது அருணகிரியார் அவதரித்தத் தலம். திருப்புகழ்ப் பாடல் தோன்றிய தலம். உண்ணாமுலையார் உறை அண்ணாமலையாரை வணங்கினார். இரமணரைத் தரிசித்தரார். இரமணர் கோவண ஆண்டியாக

தடியுடன் நின்ற கோலம் கண்டார். இவரைப் பழனி ஆண்டவராகவே கண்டார். மெய் சிலிர்த்துப் போனார். அந்த ஆசிரமத்திலேயே சில காலம் தங்கினார்.

ஒரு நாள் மலையிலிருந்து அடிவாரம் நோக்கி வந்தார். வரும்பொழுது சேஷாத்திரி சுவாமிகள் இவரை வழி மறித்தார். "திருப்புகழ் உன் மந்திரம் அல்லவா அர்த்தநாரி" என்று கேட்டு அவரை வியப்பில் ஆழ்த்தினார். மேலும் சங்கரரின் சிவமானஸ பூஜா நான்காவது சுலோகத்தில் உள்ள "ஆத்மாத்வம் கிரிஜா மதி" என்ற தொடரை எடுத்துக் கூறி பொருளையும் எடுத்துக்கூறி அதே பொருள் தரும் பாடல் திருப்புகழில் உள்ளதா? என்று கேட்டார். "அமலவாயு" என்று தொடங்கும் பொதுப் பாடலில் வரும் ஒரு தொடரைக் குறிப்பிட்டார்.

"அமல வாயு வோடாத மேல நாபி மேல்மூல
அமுத பான மேமூல – அனல்முள...
....
"எனதி யானும் வேறாகி எவரும் யாதும் யானாகும்
இதய பாவ னாதீத – மருள்வாயே"

எனது யானும் வேறாகி, எவரும் யாதும் யானாரும் இதயபாவனா தீதம் அருள்வாயே என்று அருணகிரியார் முருகனிடம் வேண்டும் பகுதியைக் கூறினார். சேஷாத்திரி சுவாமிகள் கேட்டு மகிழ்ந்தார். அர்த்தநாரியின் திருப்புகழ் வளத்தை உணர்ந்தார். 'உனது தவத்திற்கு' திருப்புகழே போதுமானது. அதுவே மகா மந்திரம். வள்ளிமலையே உனக்கு உகந்த இடம்' என்று உபதேசித்தார். இவரே இவருக்குத் திருப்புகழ் வள்ளிமலை சச்சிதானந்தம் என்று பெயர் சூட்டிருக்கவும் வாய்ப்புள்ளது. இதனை உறுதி செய்ய வேண்டும். மேலும் சுவாமிகள் காசி சென்ற பொழுது ஒரு பெரியவர் இப்பெயரைச் சூட்டினார் என்றும் கூறுவர்.

வள்ளிமலை மீது அருணகிரிநாதர் பாடிய 11 திருப்புகழ்ப் பாடல்கள் உள. வள்ளி பிறந்து வளர்ந்த மலை. முருகன் கால் தோய தோய நடந்த மலை. வள்ளியின் குடி மரபினர் வாழும் மலை. முனிவர்களும் சித்தர்களும். வாழும் மலை. இம்மலைக்குச் செல்லுமாறு சேஷாத்திரி சுவாமிகள் ஆற்றுப்படுத்தினார்.

1936 ஆம் ஆண்டில் வள்ளி மலை கோயில் குடமுழுக்கு நடைபெற்றது. சச்சிதானந்த சுவாமிகள் வள்ளிமலை வந்தார். இறையருளும் இயற்கை எழிலும் பொங்கித் தவழும் அமைதியான சூழலால் ஈர்க்கப்பட்டார். திருவண்ணாமலையில் வெகு நாட்களுக்கு முன் சேஷாத்திரி சுவாமிகள் கூறிய வாக்கு நினைவிற்கு வந்தது. மலை வலம் வந்தார். மலையடி வாரத்திலும் மலை மீதும் உள்ள முருகனை வழிபட்டார். அருணகிரியார் இம்மலை மீது பாடிய திருப்புகழ்ப் பாடல்களைப் பாடி வழிபட்டார். தமக்கு உகந்த இடம் இதுதான் என்ற முடிவிற்கு வந்தார்.

மலைமீதுள்ள கன்னிக் குன்றுக்கும் பர்வதராஜன் குன்றுக்கும் இடையே சப்பாத்தி, கள்ளி புதர் மண்டிக் கிடந்த இடத்தைச் சீர் செய்தார். ஓர் ஆசிரமம் அமைத்தார். திருப்புகழ் பாராயண முறை செய்தார். தம்புரா போன்று ச.ப.ச. சுரம் பேசும் தந்திகள் கொண்ட கருவி மூலமும் நாதத்தோடு பாடினார். சோளத்தட்டை மூலம் சந்தங்களுக் கேற்ப தட்டிக்கொண்டு நாதமும் இலயமும் கொண்ட திருப்புகழ்ப் பாடல்களைப் பாடி வந்தார். மக்கள் வந்து கூடினார். திருப்புகழ் இசையால் ஈர்க்கப்பட்டனர். இவரைக் குருவாகப் போற்றினர். கஞ்சி கொண்டு வந்து வழங்கினர். அடியார் தரும் பழங்கஞ்சியை அமுதமாகப் பருகினார். பகலில் காடு கழனிகளில் வேலை செய்துவிட்டு மாலை நேரங்களில் சுவாமிகளைக் கண்டு வணங்கி, திருப்புகழ்ப் பாடும் வழக்கத்தை மக்கள் மேற்கொண்டனர். பல்வேறு நுட்பச் சந்தங்களைச் சோளத்தட்டை மூலம் ஜதிகளாக ஒலிக்கச் செய்து பாடிக் காட்டினார். திருப்புகழ் கற்கும் அடியார் குழாம் நாளுக்கு நாள் பெருகிற்று. கற்றவரும் கற்கப் பயப்படும் திருப்புகழ்ப் பாடல்களைச் சந்தமொடு அடியார்கள் பாடினர்.

இராகம் : தர்பாரி கானடா **தாளம் : ஆதி**

தய்யதன தான தய்யதன தான
தய்யதன தான – தனதான
அல்லிவிழி யாலு முல்லைநகை யாலு
மல்லல்பட ஆசைக் – கடலீயும்

அள்ளவினி தாகி நள்ளிரவு போலு
முள்ளவினை யாரத் – தனமாரும்

இல்லுமிளை யோரு மெல்ல அயலாக
வல்லெருமை மாயச் – சமனாரும்

எள்ளியென தாவி கொள்ளைகொளு நாளில்
உய்யவொரு நீபொற் – கழல்தாராய்
தொல்லைமறை தேடி யில்லையெனு நாதர்
சொல்லுமுப தேசக் – குருநாதா

துள்ளிவினை யாடு புள்ளியுழை நாண
வெள்ளிவன மீதுற் – றுறைவோனே
வல்லசுரர் மாள நல்லசுரர் வாழ
வல்லைவடி வேலைத் – தொடுவோனே

வள்ளிபடர் சாரல் வள்ளிமலை மேவு
வள்ளிமண வாளப் – பெருமாளே.

வள்ளிமலையில் சச்சிதானந்த சுவாமிகள் பசு ஒன்று வளர்த்தார். 'சிங்கார ரூபமயில்' என்ற திருப்புகழ்ப் பாடலால் பழனியில் ஈர்க்கப் பெற்ற சுவாமிகள் இப்பசுவிற்குச் சிங்காரி என்று பெயரிட்டு அழைத்தார். இப்பசு இறந்ததும் சமாதியும் வைத்தார். பசுக்கள் பல வளர்த்தார். பசுக்களுக்கு வேதவள்ளி, சுந்தரவள்ளி என்று பெயரிட்டு அழைத்தார் (இப்பெயர்கள் திருமால் மகள்களின் பெயர்கள். இவர்களே முருகனை மணம் கொள்ள தெய்வயானையாகவும் வள்ளியாகவும் வந்து அவதரித்தனர்). நாள்தோறும் காலை 6.30 மணிக்குக் கோபூசை செய்வார். பின்பு திருப்புகழ்ப் பாராயணம் தொடங்குவார். பன்னிரண்டு ஆண்டுகள் இவ்வகையில் வழிபாடு செய்து வந்தார். இவ்வழிபாடு இன்றும் நடைபெற்று வருகிறது.

ஒரு சமயம் சென்னை தம்புசெட்டித் தெருவில் ஒரு சிறுமியைச் சந்தித்தார். சிறுமி நான் ஒரு பாட்டுப் பாடுகிறேன் கேட்கிறாயா? என்றாள். சுவாமிகளும் சரி என்று சொன்னார். ஒரு திருப்புகழ்ப் பாடலைப் பாடினாள். 'விரகறி பொருந' என்று தொடங்கும் பாடலாகும். இப்பாடலை மோகன இராகத்தில் இசைத்துச் சுவாமிகளின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டாள். அவள் சுவாமிகளின் வெற்றிலைப் பெட்டியைக் கேட்டாள். சுவாமிகளும் மறுக்காமல் கொடுத்துவிட்டார். சிறுமி சென்றதும் அவளைப் பற்றிய தகவல் கேட்க மறந்ததை எண்ணி வருந்தினார். சில நாட்களுக்குப் பின்பு வள்ளிமலைக்குச் சுவாமிகள் திரும்பினார். தான் சிறுமியிடம் கொடுத்த

வெற்றிலைப் பெட்டி ஒரு பாறையின் மீது இருக்கக் கண்டு பெரும் வியப்புற்றார். பெட்டியைத் திறந்து பார்த்தார். அதனுள் தான் வைத்திருந்த பொருட்கள் யாவும் இருக்கக்கண்டு இங்கு கொண்டு வைத்தது யார் என்று எண்ணுகையில் 'நான்தான் பொங்கி' எனக் குரல் கேட்டது. பொங்கி அம்மனுக்கு அப்பாறையில் கோயில் கட்டினார். சிறுமி பாடிய ஏழுகரை வளநாட்டுத் திருப்புகழ்ப் பாடலைக் கல்லில் வெட்டினார். இன்றும் பொங்கி அம்மன் அன்பர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றித் தரும் தாயாக விளங்குகிறாள்.

மயிலை தொழிலதிபர் எஸ்.பார்த்தசாரதி (அண்வானந்தா) அவர்கள் கலைப்பொருள்களாக வாங்கி வைத்திருந்த தேவியின் உருவச் சிலைக்குச் சுவாமிகள் வைஷ்ணவி என்று பெயரிட்டு அவரது விட்டுத் தோட்டத்து மகிழ மரத்தடியில் பிரதிஷ்டை செய்தார். 1954 ஆம் ஆண்டு இத்தேவியை இவ்வதிபர் வடதிருமுல்லைவாயிலில் ஆலயம் எழுப்பி பிரதிஷ்டை செய்துள்ளார். இன்று புகழுடன் ஸ்ரீவைஷ்ணவி ஆலயமாக விளங்குகிறது.

அருணகிரியாரின் ஜெயந்தி நாள் கார்த்திகை மூல நட்சத்திரமாகக் கருதி 1923 ஆம் ஆண்டு முதல் அருணகிரியார் ஜெயந்தி விழா நடத்தி வந்தார். இன்றும் சுவாமிகளின் சீடர்கள் மாதந்தோறும் வரும் மூல நாளை வள்ளிமலை சச்சிதானந்த ஆசிரமத்தில் கொண்டாடி வருகின்றனர்.

திருத்தணிகையில் ஆண்டுதோறும் நடைபெற்று வரும் பிர்மோற்சவத்தில் வள்ளித் திருமணத்தின் பொழுது வள்ளியம்மையின் திருமாங்கல்யத்திற்காக ஒரு பொட்டும் இரண்டு குண்டுகளும் செய்து கொடுத்து வந்தார். இன்றும் ஆசிரமத்தின் மூலம் இவை அளிக்கப்பட்டு வருகிறன.

திருப்புகழ்ப் பாடல்களைத் தொகுத்து முறைப்படுத்தி உரையுடன் அச்சிட்டு அளித்த தணிகைமணி டாக்டர் செங்கல்வராயன் அவர்கள் இல்லத்தைத் 'திருப்புகழின் தாய் வீடு' என்று சுவாமிகள் அழைப்பர். அவ்வில்லத்தில் சுவாமிகள் திருப்புகழ்ப் பாராயணம் செய்வார். இதனைக் கேட்க சென்னை, திருவண்ணாமலை போன்ற ஊர்களிலிருந்து பலரும் வருவர்.

மடைத் தொழில் அர்த்தநாரி, பழனியில் ஒரு தேவாதிசியின் திருப்புகழ்க் கேட்டு, திருப்புகழ்ப் பாடல்களைப்

பயின்று, சேஷாத்திரி சுவாமிகளால் வள்ளிமலைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டு வள்ளிமலை சச்சிதானந்த சுவாமி ஆகி, திருப்புகழ்ப் பாடல்களைப் பாமரரும் உணரும் வகையில் வாழ்ந்த திருப்புகழ்ச் சச்சிதானந்த சுவாமிகள் விக்ருதி ஆண்டு 1950இல் கார்த்திகைத் திங்கள் அஸ்வனி நட்சத்திரத்தன்று வள்ளிமலை முருகனோடு ஐக்கியப்பட்டார். வள்ளிமலையில் இவரது சமாதி உள்ளது. அங்கு அருணகிரியார் திருவுருவமும் அமைக்கப்பட்டுள்ளது. நன்னிலம் வட்டம் நாடாகுறிஞ்சி சேஷாத்திரியார் அவர்களின் உபயத்தில் திருப்புகழ்ப் பாடல் கல்வெட்டில் வெட்டப்பட்டுள்ளது. சமாதியில் பிறப்பு 25.11.1870 இறப்பு 22.11.1950 என்றும் "தண்கார் வரை சேர்பவர்யுகம் ஈறிலும் மீறிலர்" என்ற திருப்புகழ்த் தொடர் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருப்புகழ்ப் பாராயணத் தவநெறித் திருமுறை:

சைவத் திருமுறைகள் பன்னிரண்டாக உள்ளமை போல திருப்புகழ்ப் பாடல்களையும் வள்ளிமலை சுவாமிகள் திருமுறையாகத். தொகுத்துள்ளார்கள். நாள் வழிபாட்டிற்கு உகந்த முறையில் தொகுத்து நூலாகத் தரப்பட்டுள்ளன. பக்தி நெறி வளர்ந்திட மன ஒருமைப்பாடு தேவை. மனம் ஒருமைப்பட இசையுடன் கூடிய திருப்புகழ்ப் பாடல்கள் போதும் என்ற நிலையில் வகுத்தளிக்கப்பட்டுள்ளன. இப்பாடல்களுக்குரிய இராக தாள முறைகளைச் சுவாமிகளே சுரங்கள் அமைத்துத் தந்துள்ளார்.

இது மானசீக வழிபாட்டிற்குரிய சங்கல்பம், தீபம், குருதுதி, அடியார் துதி, விநாயகர் துதி இவற்றுடன் முருகனை அழைத்தல், தரிசனம், அபிடேகம், அர்ச்சனை, தூபதீபம், நைவேத்தியம், தீபாராதனை, நமஸ்காரம், அறியாமை கூறி அருள் வேண்டல், மந்திரஜபம், தெய்வயானை வள்ளியம்மை துதிகள், வாழ்த்து, போற்றி போன்றனவும் இவற்றிற்குரிய திருப்புகழ்ப் பாடல்களும் இடம்பெற்றுள்ளன.


திருமுருகாற்றுப்படையின் அமைப்பினையொட்டி அமைக்கப் பெற்றுள்ளது. முருகனை அழைத்தல் என்ற பகுதியில் "மயில்மீது வர வேண்டும்" என்ற சொற்றொடர் உள்ள பாடல்கள் எல்லாம் தொகுத்தளிக்கப்பட்டுள்ளன. வேசியர் பற்றிப் பாடல்கள் நீக்கப்பட்டுள்ளன. மகுடங்கள் என்ற பகுதியில் வேண்டுதல் சொற்றொடர்கள் வெவ்வேறு பாடல்களிலிருந்து எடுத்து வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

இந்நூல் வள்ளிமலையில் ஆசிரமத்தில் கிடைக்கிறது. பெற்றுப் பயன் பெறுக.

வள்ளிமலை சச்சிதானந்த சுவாமிகளின் வரலாற்றைத் தேனூர் வரகவி வே.செ.சொக்கலிங்கனார் சேய்த்தொண்டர் புராணம் என்ற நூலில் 75வது சேய்த்தொண்டராகக் குறிப்பிட்டு, இவர்தம் வரலாற்றை 206 பாடல்களில் குறிப்பிட்டுள்ளார். "தானாய தணிக்குமரன் திருவருள் சார் சச்சிதாநந்த நாயனார் அடியார்க்கு அடியேன்" என்று பாடியுள்ளார்.

கனிவுருவாய் அவதரித்துக் கௌமாரத்
திருப்புகழ்நீள் கடல்சூழ் வைப்பில்
இனிதியங்கு மாறுதிருத் தொண்டாற்றி
வள்ளிமலை இருங்கு கைக்கண்
தனிமுறையில் சமாதிபெறு புகழ்ச்சச்சி
தாநந்தர் சரிதமாம் இப்
புனிதபுரா ணந்தமியேம் புலைகமழும்
ஒருநாவற் புகலற் பாலதோ.

– சேய்த்தொண்டர் புராணம் 3299



பாம்பன் சுவாமிகள்
(1852-1853 - 30.5.1929)



"இகமிறைஞ்சும் குமரகுரு தாசர்க்கும் அடியேன்"

திருமுருக நெறி பரப்பிய அருளார்கள் பலர். அவர்களும் அருணகிரியாரைப் போல சந்தத் தமிழால் முருக வழிபாடு இயற்றியவர் பாம்பன் சுவாமிகள் ஆவர். இரண்டாவது அருணகிரிநாதராகக் கருதப்பட்டவர். கந்தப் பெருமானைச் சிந்தை செய்தவர். கந்தப்பெருமான் அருளால் 6666 பாடல்கள் படைத்துள்ளார். "கங்கையைச் சடையிற் பிரித்து" என்று விசேட மங்கல மொழித் தொடரை இறையருளால் பெற்றார். அன்று முதல் தெய்வ நலம் சான்ற பாக்களைப் பாடியுள்ளார்.

பிறப்பும் வளர்ப்பும்:

புனிதத் தலமான இராமேசுவரத்தை அடுத்துள்ள பாம்பனில் சாத்தப்பிள்ளை - செங்கமலம் அம்மாளின் மூத்த மகனாக அப்பாவு கி.பி.1852 - 1853க்கு உட்பட்ட காலத்தில் அவதரித்தார். பெற்றோர் இட்ட பெயர் அப்பாவு. பிற்காலத்தில் "குமரகுருதாசர்" என்றும் "பாம்பன் சுவாமிகள்" என்றும் அழைக்கப்படுகிறார். தமிழ் வித்துவான் முனியாண்டிப் பிள்ளையிடம் தமிழ் கற்றார். 1866 ஆம் ஆண்டு அவ்வூர் கிருத்தவக் கல்லூரியில் பயின்று தமிழ்த் தேர்வில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். குந்துக்கால் என்ற இடத்தில் விளையாடிக் கொண்டு இருக்கும் பொழுது இவரது கையைப் பார்த்துவிட்டுப் 'பிற்காலத்தில் இவர் சிறந்த வித்துவானாகவும்,

பலிதவாக்குடையவராகவும் விளங்குவாய்' என்று ஒருவர் கூறினார். பெற்றோர்கள் இவ்விபரம் அறிந்து மகிழ்ந்தனர்.

இராமநாதபுரம் ஜமீனைச் சேர்ந்த நாகநாதர் கோயில் வருட விழாக்காண தோணியில் சென்றார். தோணியில் அமர்ந்திருந்த ஒருவர் சிவசிவ என்று ஜபம் செய்து கொண்டிருந்தார். இதனைக் கண்ட அப்பாவு தானும் ஜெபம் செய்ய ஆரம்பித்தார். இதுபோல் கந்தஷஷ்டி கவசத்தின் பெருமையை அறிந்து நூலைப் பெற்றுப் பாராயணம் செய்தார். படிப்பில் நாட்டம் குறைந்தது. கல்லூரிப் படிப்பை நிறுத்தினார். ஒருமுறை தென்னந்தோப்பிற்குச் செல்கையில் கந்தஷஷ்டி கவசம் போல் பாடல் இயற்ற வேண்டுமென்ற முனைப்புடன் 'கங்கையைச் சடையில் பிரித்து' என்று தொடங்கும் பன்னிரு சீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தரும் இயற்றினார். 'தினமும் உணவு உண்ணுவது போல் தினமும் குமரன் மேல் ஒரு பாடல் இயற்றுவேன்' என்று சபதம் எடுத்தார். அன்று முதல் தினம் ஒரு பாடல் இயற்றினார். நூறு நாட்களில் நூறு பாடல்கள் இயற்றினார். இந்நியதி தொடங்கியதும் கந்தஷஷ்டி பாராயணம் நின்றது.

அப்பாவுவின் தந்தையார் முகமதியர் ஒருவரைப். பங்குதாரராகக் கொண்டு நெல் வியாபாரம் செய்தார். அப்பாவுவை நெல் வியாபாரத்தில் ஈடுபடுத்தினார். இராமேசுவரத்தைச் சார்ந்த சேதுமாதவ ஐயர் இவரின் கடைக்கு வந்தார். பணப்பெட்டியின் மீது நூறு பாடல்களைக் கண்டார். பாலகன் மனநிலையை உணர்ந்தார். அப்பாடல்களைப் பதிப்பிக்க சொன்னார். விஜயதசமி நாளன்று தீர்த்தமாடிய பின்பு சுப்பிரமணிய சடாசர மந்திரத்தை அப்பாவுக்கு உபதேசித்தார். அப்பாவு முருகக் கடவுள் மீது சந்தப்பாக்களைப் பாடினார். ஒரு நாள் பெரியவர் ஒருவர் வாழை இலையில் பாலடிசில் இட்டு இவருக்கு ஆசி கூறினார். அன்று முதல் பாடும் சக்தியை மேலும் பெற்றார்.

இல்லறவு வாழ்வு:

அப்பாவுக்கு இருபத்து ஐந்து வயது ஆயிற்று. பெற்றோர் விருப்பப்படி 1878இல் மதுரை சின்னக்கண்ணு பிள்ளையின் மகள் காளிமுத்துவை மணந்தார். மூன்றாண்டுகளில் முருகையா என்ற மகனும் சிவஞானாம்பாள் என்ற மகளும் குமரகுருதாசன் என்ற மகனும் பிறந்தனர்.

மனதில் துறவு எண்ணம் தோன்றிற்று. 1891 ஆம் ஆண்டு ஒரு நாள் தமது நண்பர் அங்கமுத்து பிள்ளையிடம் "நான் நாளை பழனி செல்கிறேன்" என்றார். 'எப்பொழுது திரும்புவாய்' என்று அவர் கேட்டார். 'நிச்சயமில்லை ஐயன் கட்டளை' என்றார். ஒரு கணம் கண்களை மூடினார். அகக் கண்ணில் கோபத்துடன் முருகன் காட்சி அளித்து 'உனக்கு எப்போது நான் கட்டளை இட்டேன். பொய் கூறுகிறாயே? நான் அழைக்கும் வரையில் பழனிக்கு நீ வரக்கூடாது' என்று கட்டளையிட்டார். பாம்பன் சுவாமிகளைப் பழனி முருகன் அழைக்கவும் இல்லை. கடைசி வரை இவர் பழனி செல்லவும் இல்லை.

பின்பு குடும்பப் பொறுப்பேற்றார். தந்தையும் இறந்துவிட்டார். தென்னந்தோப்பைப் பராமரித்து வந்தார். ஒரு நாள் காலில் முள்ளொன்று தைத்தது. அதைப் பிடுங்கினார். முருகா இந்த முள் தைத்ததற்கே இவ்வளவு துயரமாயின் உடலை விட்டு உயிர் பிரியும் பொழுது எத்தனை வருத்தமுறுவேன் என்று பாடினார். முருகன் ஒரு தச்சன் கனவில் தோன்றி 'நம். குழந்தைக்கு நல்ல பாதக்குறடு ஒன்று செய்து கொடு' என்று கட்டளை இட்டார். அந்தத் தச்சன் பாதக்குறடு செய்து கொடுத்தார். இந்நிகழ்வைக் 'கொடிய கோடையில்' என்று தொடங்கும் பாடலில் அப்பாவு பாடியுள்ளார்.

குமரகுருதாசர் ஆதல்:

பாம்பன் தந்தி அலுவலர் சேஷகிரிராயர் ஒருமுறை அப்பாவுவிடம் கண்ணுக்குத் தெரிவதே உண்மை மற்றவை உண்மையல்ல என்று கூறுகின்றனர். இதற்கு உன் பதில் என்ன? என்று கேட்டார். கண்ணுக்குத் தெரியும் இரும்பைக் காந்தம் கவர்கிறது. காந்தத்தின் ஆற்றல் கண்ணுக்குத் தெரிவதில்லை. அதுபோல் இறைவனது ஆற்றலும் கண்ணுக்குத் தெரியாது என்று பதில் கூறினார். இதனைக் கேட்ட ராயர் நூறு ரூபாய் தந்து நூல் அச்சிடும் பணிக்குக் கொடுத்தார். அத்துடன் இவரைக் "குமரகுருதாசன்" என்று அழைத்தார். அன்று முதல் குமரகுருதாசர் என்று மக்கள் இவரை அழைக்கத் தொடங்கினர்.

கி.பி.1891 கார்த்திகை மாதம் எட்டாம் நாள் தமக்குற்ற துன்பத்திலிருந்து நீங்கும் பொருட்டு முப்பது செய்யுட்கள் கொண்ட "சண்முகக் கவசம்" பாடினார். இது மோகன இராகத்தில் அமைந்துள்ளது.

ஆதியாங் கயிலைச் செல்வன் அணிநெற்றி தன்னைக்காக்க
தாதவிழ் கடப்பந்தாரன் தான் நுதலைகாக்க
சோதியாம் தணிகை ஈசன் துரிசிலா விழியைக்காக்க
நாதனாம் கார்த்திகேயன் நாசியை நயந்துகாக்க

என்று சண்முகக் கவசம் தொடர்கிறது.

கி.பி.1891இல் திருவனந்தபுரம் சுப்பிரமணிய பிள்ளை வேண்டிய படி பேரின்பம் அருளும் "பரிபூஜன பஞ்சாமிர்த வண்ணம்" என்ற அருமையான இசைத் தமிழ் சந்தப் பாக்களைப் பாடினார். பால், தயிர், நெய், சருக்கரை, தேன் என்ற பஞ்ச அமிர்தங்களைப் போல் காம்போதி, செஞ்சுருட்டி, செஞ்சுருட்டி, இந்தோளம், சண்முகப்பிரியா என்று முறையே ஐந்து இராகங்களில் ஆதி, ஆதி, ஆதி, திரிபுடை, சாபு தாளங்களில் பாடியுள்ளார். இப்பாக்கள் சிறப்பான சந்த நயம் உடையன.

தனந்த தந்தன தனந்தனா
தனந்த தந்தன தனந்தனா
தந்தத் தந்தன தந்தானா
தந்தத் தந்தன தந்தானா

என்று தொடரும் சந்தத்தில்

இலங்கு நன்கலை விரிஞ்சனோ
டனந்த னுஞ்சத மகன்சதா
வியர்கொ டம்பியர் களும்பொனா
டுறைந்த புங்கவர் களுங்கெடா

என்று பால் பற்றிய பாடல் தொடங்குகிறது. இவை போல் ஏனைய பாடல்களும் சந்தப்பாக்களாக அமைந்துள.

1892 திருத்தொடையல் என்ற பாடலைப் பாடினார். 1892இல் திருவலங்கல் திரட்டின் முதற்காண்டம் பாடினார். 1893இல் திருவனந்தபுரம் சுப்பிரமணிய பிள்ளை இல்லத்தில் தங்கி யாப்பிலக்கணம் பயின்றார். 1893இல் திருவலங்கல் திரட்டு இரண்டாம் காண்டம் பாடினார்.

17.03.1894இல் பிரப்பன்வலசை சுடுகாட்டில் தவம் தொடங்கினார். 35 நாட்கள் தவம் மேற்கொண்டார். 1895 ஆம் ஆண்டில் துறவற நிலையை அடைய எண்ணினார். 1895 சென்னை சென்றார். ஜார்ஜ் டவுன் வைத்தியநாத முதலியார் தெருவில் தவச்சீலர் பெரியம்மாள் வீட்டில் தங்கினார். 1896இல்

"பரிபூரணாந்தபோதம்" நூலையும் "தகராலய இரகசியத்தை"யும் இயற்றினார். 1897இல் "திருப்பா" என்ற நூல் எழுதினார். 1898 "அட்டாட்ட விக்கரகம்" நூல் இயற்றினார்.

1902இல் காசி யாத்திரை சென்றார். காசி நகரில் திருப்பனந்தாள் குமரகுருபரர் திருமடத்தில் தங்கினார். பின்பு சென்னை வந்தார். சிதம்பரம் சென்றார். மாணிக்கவாசகர் ஒரு ஊமைப் பெண்ணைப் பேசச் செய்து அற்புதம் நிகழ்த்திய தலம் பின்னத்தூர் என அறிந்து அங்கேயே சிவ நிட்டை சாதித்திட விரும்பினார். சிலரின் எதிர்ப்பிற்கு ஆளானார். பல்வேறு வழக்குகளையும் எதிர்ப்புகளையும் சந்தித்தார்.

1918இல் திருப்புகழ்ப் பாடல்களை உலகிற்குத் தந்த அருணகிரிநாதர் முக்தி பெற்ற நாள் உத்தாரயணம் கழித்த ஆறாவது பௌர்ணமியே ஆகும் என்று அதுவே அவர் பிறந்த நாள் என்றும் அறிவித்தார்.

"ஆனி மதிமூலம் அருணகிரி நாதர்
வானிலவு தேவர் வலம்செய்ய – மேனிலவு
அத்துவித முத்தி யடைந்தா ர்ஷண்முகன்சீர்
ஒத்துமணம் வைத்தே வந்தில்"

1921இல் திருப்பா என்னும் நூல் 1101 பாடல்களைக் கொண்ட அரிய நூலை வெளியிட்டார். இதில் 43 பாடல்களுக்குத் திட்ப உரையும் ஏனைய பாடல்களுக்குக் குறிப்புரையும் தந்துள்ளார்.

இவ்வாறு சுவாமிகள் எளிமையான வாழ்வு வாழ்ந்து பலப்பல நூற்களைப் படைத்தார். பல நாள் உணவு அருந்தாமல் பட்டினி இருப்பார். திருவல்லிக்கேணி கடற்கரையில் அமர்ந்து மனமடக்கி மவுன நிலையில் இருப்பார். இரவு நேரத்தில் சந்திர ஒளியையும் நீலக் கடலையும் கண்டு மகிழ்வார். தன்னைச் சந்தித்தவர்கட்கு நீதிநெறிகளையும் முருகன் அருளையும் உரைப்பார். ஒரு அன்பர் "இரத்தமே ஆன்மா" என்று கூறி உங்கள் கருத்தென்ன? என்று கேட்டார். உதிரம் ஆன்மா அன்று. உதிரத்தைப் பிராணவாயுவும், பிராண வாயுவை ஆன்மாவும் பற்றி நிற்கின்றன என்று பதில் கூறினார்.

மேலும் "குமார சுவாமியம்" என்னும் காவியத்தை 1921இல் படைத்தார். ஐந்து காண்டங்களை இக்காவியம்

கொண்டுள்ளது. 1923 டிசம்பர் 27 ஆம் நாள் பகல் சென்னை தம்புசெட்டித் தெரு வழியே சுவாமிகள் செல்லும் பொழுது தற்செயலாக ஒரு குதிரை வண்டியின் சக்கரம் சுவாமிகளின் இடக்கால் மீது ஏறியது. கால் முறிந்துவிட்டது. அரசு பெரிய மருத்துவமனையில் சேர்த்தனர். திருவல்லிக்கேணி சோதிடர் சின்னசாமியும் அவர் மனைவி பாப்பாத்தியம்மையாரும் சுவாமிகளைப் பராமரித்தனர். சோதிடர் தமது இல்லத்தில் சுவாமிகள் நலம் பெற வேண்டி தவறாது சுவாமிகள் படைத்த சண்முகக் கவசத்தைப் பாராயணம் செய்து வந்தார்.

அடிகளார் பற்பல ஆண்டுகளாக ஒருவேளை சிறிய அளவில் உணவு உண்டு வந்தார். அதிகம் உப்பு புளி மிளகாய் சர்க்கரை கடுகு இல்லாமல் பாசிப்பருப்புக் கலந்த உணவைச் சிறிதளவு உண்டு வந்தார். இந்நிலையில் முதுமைப் பருவத்திலும் சிறிதளவே ஆகாரம் உண்டு வந்ததால் கால் குணப்படாது என்று மருத்துவர் கூறினர்.

பதினோராம் நாள் இரவு அடிகளார் "முருகா! மூவர் முதல்வா! இதுவும் உன் சோதனையோ? பண்டைய வினையின் வாதனையோ? என்று நினைத்தார். நள்ளிரவில் முருகனின் வாகனமாகிய மயில் வானத்தில் நடனம் புரிவதனைக் கண்டார். மயில் நின்று ஆடி, நடித்தது. இம்மயூரவாகன சேவைக் காட்சியைக் கண்டு அதிசய முற்றார். மறுநாள் இரவு தனது படுக்கை அருகில் குழந்தை படுத்திருக்கக் கண்டார். முருகா! என்றார். குழந்தை மறைந்தது. முருகனின் திருநாமத்தை உச்சரித்தார். கால் முறிவு தீர்ந்து கால் கூடிவிட்டது. இத்தெய்வச் செயலைக் கண்டு அடிகாளாரைப் பலர் வணங்கினர். "பதினைந்து நாட்களின் இரணம் ஆறிவிடும். அதுவரை இம்மருத்துவச் சாலையை விட்டு யாண்டும் போக வேண்டாம்" என்ற ஓர் அசரீரி வாக்குக் கேட்டது.

அதுபோல் கால் குணமானதும் மருத்துவ மனையிலிருந்து புதுப்பாக்கத்தில் புதுக்கப்பட்டிருந்த குழந்தைவேல் முதலியார் வீட்டில் அடிகளார் தங்கி இருந்தார். பின்பு சென்னை நம்புலையர் தெருவில் வாழும் ஜகந்நாத முதலியார் வீட்டின் மேல் மாடியில் தங்கி இருந்தார். சில நாட்களுக்குப்பின் நடந்தார். இதனை அப்பொழுது பாடிக் கொண்டிருந்த குமார காவியம் என்னும் நூலில் அசோக கால வாசம் என்ற பகுதியில் அழகாகக் கூறியுள்ளார்.

ஐந்து காண்டங்கள் கொண்ட 1192 செய்யுட்கள் கொண்ட ஸ்ரீமத் குமாரசுவாமியம் என்னும் நூலைப் பாடி முடித்தார். இந்நூல் முன்னுரையில் "நுவலும் பொருளாலும் நுவன்றோன் பெருமையாலும் இந்நூல் சாலச் சிறப்புடையது. எவ்வாறு எனில்? நூலின் பொருளாவான் குமாரக் கடவுள். நுவன்றோன் அக்குமாரக் கடவுளின் மெய்யடிமைத் திறத்தில் எஞ்ஞான்றும் தலை சிறந்து விளங்கும் ஒரு தவசி" என்று குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு செய்திகள் பல இந்நூலில் உள.

அடிகளார் தமது அன்பர்களிடம் யாரும் தன்னை வணங்க வேண்டாம். இறைவனை வணங்குங்கள் என்ற எப்பொழுதும் கூறுவார். மனிதனுக்குப் பொருட்பற்று, பொன்பற்று, பெண்பற்று, நிலப்பற்று, பதவிப்பற்று முதலியவை நீங்கினாலும் புகழ்ப்பற்று எளிதில் நீங்காது என்பர். புகழுக்கு ஆசைப்படக் கூடாது என்றார்.

வியாசங்கள்:

செய்யுள்கள் படைத்தலைப் போல அடிகளார் உரைநடை எழுதுவதிலும் வல்லவராக விளங்கினார். வேதம் குறித்து 40 வினா விடைகள் கொண்ட வேத வியாசம் என்ற நூலை எழுதியருளியுள்ளார். சுப்பிரமணிய வியாசம் என்ற நூலில் 97 வினா விடைகளைத் தந்துள்ளார். குரு சீடர் சம்பவ வரலாற்று வியாசம் என்ற நூலையும் எழுதியுள்ளார்.

1926 ஆம் வருடம் சூன் மாதம் அடிகளார் சென்னையிலிருந்து கோவை மாநகர் அடைந்தார். தனது உடல் தளர்ச்சியுற்றதை அறிந்தார். சென்னையை அடைந்தார். மஹாதேஜோ மண்டல சபையாருள் 21 பேர்கள் கொண்ட குழு அமைத்து வில் சாசனம் 17.7.1927இல் ஆங்கிலத்தில் எழுதினார். பிறகு அடியார்கள் திருவுளப் பாங்கிற்கேற்ப வில் அனுபந்த சாசனமாக 21.11.1927இல் தமிழில் எழுதிப் பதிவு செய்தார்.

பெங்களூர் சென்று மீண்டும் சென்னை வந்தார். கோதுமைக் கஞ்சி மட்டும் சிறிது அருந்தி வந்தார். விபவ ஆண்டில் வந்த கந்தசஷ்டி விரதத்தையும் மயூரவாகன சேவையையும், சிவராத்திரி வழிப்பாட்டையும் சிறப்பாக நடத்தி வந்தார். சுக்கில ஆண்டு வைகாசித் திங்கள் இரண்டாம் நாளது தமது சீடர் திருவல்லிக்கேணி ஜோதிடர் சின்னசாமி

பிள்ளையிடம் இறைவன் திருவுளக் குறிப்பு ஒருவாராக உள்ளது. திருவான்மியூரில் ஒரு நிலம் பார். அது விரைவில் ஆக வேண்டும் என்று கூறினார்.

வைகாசித் திங்கள் 15 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை திருவான்மியூரில் பேசப்பட்ட நிலத்தின் விலைப் பத்திரத்தை எழுதினார். அன்று இரவு நெடுநேரம் விழித்திருந்த பாம்பன் சுவாமிகள் அருகிலிருந்த இராஜாபாதர் முதலியாரையும் மதுரை முதலியாரையும் பார்த்து "மயூரவாகன சேவை விழாவை விடாது தொடர்ந்து நடத்தி வரும்படியும், தனது திருவுடலைத் திருவான்மியூரில் சேர்த்துவிடும் படியும் கூறினார்.

மறுநாள் புதன் கிழமை வழக்கம் போல நாள் வழிபாட்டை முடித்தார். அடுத்த நாள் வியாழக்கிழமை (20.5.1929) காலை 7.15 மணிக்கு சுவாமிகள் பிராணவாயுவை உள்ளுக்கிழுத்து அது வெளிவராமல் பெருவெளியில் அடங்கிவிட்டது. அன்று சுக்கில ஆண்டு அமரபட்சம் சஷ்டி திதி அவிட்ட நட்சத்திரம் கூடிய நன்னாள். திருவான்மியூரில் வாங்க உறுதி செய்யப்பட்ட இடத்தில் சமாதி நிலையம் கட்ட ஏற்பாடு ஆனது. மறுநாள் 31.5.1929 வெள்ளிக் கிழமை காலை 8.15 மணி அளவில் சமாதி நிலயத்தில் எழுந்தருளப் புரிந்தார்கள்.

"அனையெனஆ றாயிரத்தின் மேலறுநூற்
றபதுபத்தா றருமைப் பாடல்
கனைகடலம் புவிக்கருளிக் கௌமார
நெறிபரப்பிக் கந்த மூர்த்தி
புனை மலர்த்தாள் நீழலுற்ற குமரகுரு
தாசனார் புராணம் ஈதோர்
தினையளவும் புலமையிலாச் சிறுதமியேம்
ஒருநாவாற் றெரித்தற் பாற்றோ"

– சேய்த்தொண்டர் புராணம் பா.2587

பாம்பன் சுவாமிகள் படைப்புகள்:

பாம்பன் சுவாமிகள் தாம் பாடியருளிய நூற்களை ஆறு மண்டலங்களாக வகுத்தருளியுள்ளார்.

1. முதல் மண்டலம் : குமரகுருதாச சுவாமிகள் பாடல்கள் 1268
2. இரண்டாவது மண்டலம் : திருவலங்கல் திரட்டு (இரண்டு காண்டங்கள்) 1135 பாடல்கள்.

3. மூன்றாவது மண்டலம்	:	காசியாத்திரை, பரிபூரணானந்தபோதம், தகராலய ரகசியம்.
4. நான்காவது மண்டலம்	:	சிறு நூல் திரட்டு, திருத்தல தரிசனக் கட்டளைக் கலித்துறைகள், சேந்தன் செந்தமிழ், பத்துப் பிரபந்தம், குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி, குமாரஸ்தவம், செக்கர் வேல் செம்மாப்பு, செக்கர் வேளிறுமாப்பு, சீவயாதனா வியாசம். 1968 பாடல்கள்.
5. ஐந்தாவது மண்டலம்	:	திருப்பா 1101 பாடல்கள்
6. ஆறாவது மண்டலம்	:	ஸ்ரீமத்குமார சுவாமியம் 1192 பாடல்கள்

தாம் பாடிய பாடல் தொகை ஆறு என்ற எண்ணுடையதாக அமைய வேண்டும் என்ற எண்ணினார். பாடிய நூற்களில் உள்ள பாடல் தொகை 6666.

இசைத்தமிழ்ப்பணி:

இரண்டாவது அருணகிரிநாதராகப் போற்றப்படும் பாம்பன் சுவாமிகள் ஒரு தெய்வ வழிபாட்டின் அடிப்படையில் முருகப் பெருமான் மீது 6666 பாடல்களைப் படைத்துள்ளார். தேவாரப் பதிகங்களைப் போல் பண்ணிசைப் பாக்களையும் படைத்துள்ளார். பதினெட்டுப் பண்களில் பாடல்களைப் படைத்துள்ளார். 1.இந்தளம், 2.காந்தார பஞ்சமம், 3.காந்தாரம், 4.கொல்லி, 5.கொல்லிக் கௌவாணம், 6.கௌசிகம், 7.சாதாரி, 8.சீகாமரம், 9.தக்கராகம், 10.தக்கேசி, 11.நட்டராகம், 12.நட்டபாடை, 13.பஞ்சமம், 14.பழம்பஞ்சுரம், 15.பியந்தைக் காந்தாரம், 16.புறநீர்மை, 17.மேகராகக் குறிஞ்சி, 18.வியாழக்குறிஞ்சி. இப்பண்களில் பாடல்களைப் பாடியுள்ளார். மேலும் திருவிராகம், யாழ்மூரி என்ற தேவார யாப்பிலும் பாடியுள்ளார்.

நட்டபாடைப் பண்ணில் முதலில் பாடியவர் காரைக்கால் அம்மையார் ஆவார். சம்பந்தர் பாடிய 22 பதிகங்கள் உள. பாம்பன் சுவாமிகள் 1. திருவருளடிமைப் பிரார்த்தனை, 2. நமன் நமர் நணுகாநெறி, 3. திருப்புலியூர் என்ற மூன்று தலைப்பில் உள்ள பாடல்கள் நட்டபாடைப் பண் பாடல்களாகும்.

இந்தளப் பண்ணில் முதலில் காரைக்காலம்மையாரே பாடியுள்ளார். சம்பந்தரின் இரண்டாம் திருமுறையில் உள்ள பதிகங்கள் சுந்தரர் பாடிய ஏழாம் திருமுறையில் உள்ள பதிகங்கள் இந்தளப் பண் பதிகங்களாகும். பாம்பன் சுவாமிகள் பாடியவற்றுள் ஏழு தலைப்புகள் இந்தளப் பண் பாடல்கள் உள. 1.அடைக்கலம், 2.திருச்சோலைமலை, 3.பூரணம் விழைந்திரங்கல், 4.வழிபாட்டின் மாட்சி, 5.திருகன்னிநாடு, 6.எண்ணலங்காரலகரி, 7.திருவுருப்பை.

இவை போல் இராகத்தில் 8 தலைப்புகளின் கீழ் பாடல்கள் உள, பழம்பஞ்சுரப்பண்ணில் 7 தலைப்புகளின் கீழ் பாடல்கள் உள. கொல்லிக் கௌவாணம், காந்தார பஞ்சமம், பஞ்சமப் பண்களைச் சார்ந்த பாடல்கள் உள. கௌசிகப் பண்ணில் ஐந்தும், பஞ்சமப் பண்ணில் ஏழும், கொல்லியில் மூன்றும், தக்கேசியில் இரண்டும் பாடல்கள் அமைந்துள. இவை போல் ஏனைய பண்களிலும் பாடல்கள் அமைந்துள்ளன. திருவலங்கல் திரட்டு என்ற நூலில் பண்களுக்குரிய பாடல்கள் இடம் பெற்றுள.

திருநேரிசை, திருத்தாண்டகம், திருவிராகம், யாழ்மூரி, ஆனந்தக் களிப்பு, திருப்பல்லாண்டு, திருப்புகழ்க் கீர்த்தனை, கட்டியம், விருத்தப்பாடல், தாழிசைப் பாடல், கண்ணிப் பாடல், சந்தப்பாடல்கள் போன்ற இசைப் பாவகைப் பாடல்களையும் பாடியுள்ளார்.

சந்த அமைப்பில் மூவசைச்சந்தம், நாலசைச்சந்தம், ஐந்தசைச்சந்தம், ஏழசைச்சந்தம், ஒன்பதசைச்சந்தம், கலப்பசைச்சந்தம் என்கிற அமைப்பில் பாடியுள்ளார்.

இருபதாம் நூற்றாண்டிற்கு முன் தோன்றிய இசைத் தமிழ் வளங்களின் தொகுப்பாகப் பாம்பன் சுவாமிகளின் பாடல்கள் அமைந்துள. இவற்றை அடியார்கள் பாடிப்பாடி மகிழ்கின்றனர். பக்தியை மலர வைப்பதில் இவரின் பாடல்களும் துணை நிற்கின்றன.

மேலகரம் கண்டெடுத்த மகா வைத்தியநாத சிவன் (1844 - 1893)



"தானமோடு தவம் ஓங்கும் தமிழ்த் திருவாவடுதுறை"

சிவஞானப் பண்ணையாகவும், சிவஞான பேரரசாகவும், சிவஞானப் பேரரசு அருளாட்சி செய்யும் தலமாகவும் திருவாவடுதுறை விளங்குகிறறது. தேவார மூவர் வழிபட்டுப் பாடியருளிய இத்தலம் திருமூலர் வாழ்ந்த தலமாகும். தவம் செய்த தலமாகும். திருமந்திரம் பாடியருளிய தலமாகும். திருமாளிகைத் தேவர் வாழ்ந்து தவம் செய்து முத்தி பெற்ற தலமாகும். சேந்தனார் திருவிசைப்பா பாடியருளிய தலங்களுள் இதுவும் ஒன்றாகும்.

மேலகரம் சுப்பிரமணிய தேசிகர்:

திருவாவடுதுறை ஆதீன நிறுவனரும், குரு முதல்வரும் ஆகிய நமச்சிவாயமூர்த்தி சுவாமிகளின் சமாதிக் கோயிலும், திருமாளிகைத் தேவரின் சமாதிக் கோயிலும் அடுத்தடுத்து இத்தலத்தில் உள. திருக்கயிலாயப் பரம்பரையில் மெய்கண்ட சந்தான மரபின் 16வது குருமகா சந்நிதானமாகச் சீர்வளர்சீர் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் (1869 - 7.1.1888) அருளாட்சி செய்தார். திருக்குற்றால குறவஞ்சி இயற்றிய திரிகூட இராசப்பக் கவிராயரின் மரபில் வந்தவர். இயற்பெயர் குற்றாலலிங்கம். பின்பு மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் என்றழைக்கப்பட்டார்.

இவரது காலம் தமிழ் இலக்கிய பொற்காலத்தின் பொற்காலம் ஆகும். இவ் ஆதீனத்தின் பெரிய பட்டத்தில் சீர்வளர்சீர் அம்பலவாண தேசிகர் (15வது குரு முதல்வர்) அவர்கள் அருளாட்சி செய்யும் பொழுது இவ் ஆதீனத்தைச் சார்ந்த திருநெல்வேலி மாவட்டம் கல்லிடைக்குறிஞ்சி மடத்தில் சின்னப் பட்டத்தில் மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் அமர்ந்திருந்தார். தமிழ் இலக்கண இலக்கியங்களிலும், சைவ சாத்திர, தோத்திரங்களிலும், வடமொழியிலும், இசைத் துறையிலும் பேராற்றல் பெற்றவராக இவர் விளங்கினார். கல்லிடைக்குறிச்சி மடத்தில் நடக்கும் ஒவ்வொரு சிறப்பு விழாக்களில் புலவர் பெருமக்கள் பங்கேற்று வந்தனர்.

வையைச்சேரி:

தஞ்சைக்கு அருகில் திட்டை என்ற ஊருக்கு வடபால் வையைச்சேரி என்ற கிராமம் உள்ளது. இக்கிராமத்தில் அக்காலத்தில் பஞ்சநத ஐயர் என்ற துரைசாமி ஐயருக்கும் அருந்ததி அம்மையாருக்கும் பிறந்த பிள்ளைகள் நால்வரில் இராமசாமி, வைத்தியநாதன் முறையே இரண்டாவது, மூன்றாவது பிள்ளைகளாகப் பிறந்து வளர்ந்தனர். தந்தை வழியிலும், தாய் வழியிலும் பெற்ற இசைப் பயிற்சியால் பிற்காலத்தில் மிகச் சிறந்த இசை விற்பன்னர்களாக விளங்கினர். "வையைச்சேரி சகோதரர்கள்" என்றழைக்கப்பட்டனர். வைத்தியநாதன் தமது ஏழாவது வயதிலேயே தம் அண்ணனோடு சேர்ந்து இசை வினிகை செய்தார். இவரே பிற்காலத்தில் மேலகரம் சுப்பிரமணிய தேசிகரால் 'மகா வைத்தியநாத சிவன்' என்று அழைக்கப்பட்டார். இவருக்கு மகா என்ற சிறப்பு அடைமொழியை மேலகரம் ஈன்றெடுத்த தேசிகர் மூலம் கல்லிடைக்குறிச்சி திருமடம் தந்தது.

கல்லிடைக்குறிச்சி:

திருவாவடுதுறை ஆதீனத்தை நிறுவிய ஸ்ரீநமச்சிவாய மூர்த்தியின் குருபூஜை தை மாதம் அசுவினி நட்சத்திரத்தில் திருவாவடுதுறையில் மிகச் சிறப்பாக நடைபெறுவது போல கல்லிடைக்குறிச்சி திருமடத்திலும் சிறப்புடன் நடத்தப் பெற்று வந்தது. தென்மொழி, வடமொழிப் புலவர்களும், இசை மேதைகளும் கலந்து கொண்டு சிறப்புச் செய்வர். இவ்விழாவை முன்னிட்டுக் காரைக்குடி பெரிய வைத்தியநாத ஐயர், சின்ன

வைத்தியநாத ஐயர், வீணை சின்னையா பாகவதர், ஸ்ரீவைகுண்டம் சுப்பையர், பிச்சுமணி பாகவதர், வெள்ளங்குழி சாமி பாகவதர் ஆகிய ஆதீன வித்வான்களும் பிறரும் கலந்து கொண்டு சிறப்புச் செய்தனர்.

இவ்விழாவை மிகச் சிறப்புடன் நடத்தி வந்த இந்நாட்களில் குருபூஜை விழாவின் மறுநாள் பெரிய வைத்தியநாத ஐயரும், சின்ன வைத்தியநாத ஐயரும் இசை நிகழ்ச்சி செய்து கொண்டிருந்தனர். இதனைக் கேட்டுக் கொண்டிருந்த சந்நிதானம் அவர்களின் உள் மனதில் ஓர் உயர்வான எண்ணம் உதித்தது. இளம் வயதினராக இருந்த வையைச்சேரி சகோதரர்களின் இசை வளங்களையும், திட்ப நுட்பங்களையும் அறிந்த சந்நிதானம் வையை வைத்தியநாத ஐயரை நோக்கி இவ் இருவரோடு இணைந்து பாடுகிறீர்களா? என்று கேட்டார். வையை வைத்தியநாத ஐயரும் உடன்பட்டார்.

இசை உலகில் புகழ்பெற்ற விளங்கும் இருவருடன் வையை வைத்தியநாதன் இணைந்து பாடும் அற்புத வாய்ப்பைத் தேசிகர் வழங்கினார். மூன்று வைத்தியநாத ஐயர்களும் பாடத் தொடங்கினர். யானை படுத்திருக்க பக்கத்தில் ஓர் ஆட்டுக்குட்டி நிற்பது போல் வையை வைத்தியநாதன் இருந்தார். பெரிய வைத்தியநாத ஐயர் கல்யாணி இராகத்தை ஆலாபனை செய்துவிட்டுச் சியாமா சாஸ்திரி இயற்றிய 'பிராண வராளிச்சி' என்ற கீர்த்தனையைப் பாடி நிறுத்தினார்.

சின்ன வைத்திய நாத ஐயர் காம்போதி இராகத்தை அழகுற இசைத்து அதில் அருணாசலக் கவிராயர் இயற்றிய 'எப்படி மனம் துணிந்ததோ சாமி' என்ற கீர்த்தனையைப் பாடி நிறுத்தினார். வையை வைத்தியநாத ஐயர் சக்கரவாக இராகத்தில் மிகச் சிறப்போடு இசைத்தார். இதுகாறும் கேட்டிராத சுவை அந்த இராகத்தில் மிளிரிற்று. இசைப் புலவர்கள் யாவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துத் திகைத்த வண்ணம் இருந்தனர். அந்த இராகம் அதிகம் பழக்கமில்லாததால் புதுமையாகவும் சுவைமிக்கதாகவும் விளங்கிற்று. தியாகராஜர் பாடிய "சுகுணாமுலே செப்புக் கொண்டி" என்ற கீர்த்தனையைப் பாடி நிறுத்தினார். இக்கீர்த்தனம் தஞ்சை மாவட்டத்தில் சிறிதே புழக்கத்தில் இருந்தது. கீர்த்தனமும் புதிதாக விளங்கிற்று.

பிறகு இராக, தானம் பாட வேண்டும். இதனை மூவரும் பாட வேண்டும். சங்கராபரண இராகத்தை எடுத்து மூவரும்

பாடினர். பின்பு மூவரும் தானம் பாடினர். வையை வைத்தியநாத ஐயர் பாடும் பொழுது பலரும் "ஆகா, பேஸ், பலே பலே" என்று பாராட்டினர். சிம்ம கர்ஜனை போல் பெரிய வைத்தியநாத ஐயர் பாடிய பின், இச்சிறு பிள்ளை எவ்வாறு பாடுவான் என அனைவரும் எதிர்பார்த்தனர். வையை வைத்தியநாதன் பாடிய பொழுது அனைவரும் பாராட்டினர். பெரிய வைத்தியநாத ஐயரின் சாரீர வளம் நாகசுரம் போன்றும் வையை வைத்தியநாதனின் சாரீர வளம் புல்லாங்குழல் போன்றும் இருந்தது. 15 வயது நிரம்பாத இப்பிள்ளையின் இந்த இசை நிகழ்வை மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் அமைத்துத் தந்தார்.

இசை நிகழ்ச்சி முடிந்ததும் மூவரும் சந்நிதானத்தின் அருகில் வந்து அமர்ந்தனர். "இந்த அபாரமான கச்சேரி மிக நேர்த்தியாக இருந்தது. இச்சிறுவராகிய வையை வைத்தியநாதன் உங்களோடு சேர்ந்து பாடும் பாக்கியத்தை இந்நாளில் பெற்றுள்ளார்". அப்பொழுது பெரிய வைத்தியநாத ஐயர் மிகவும் பழக்கத்தில் இல்லாத இராகமும், கீர்த்தனமும் இவர் பாடினார். இன்று சுபதினமாக இருக்கிறது. இசைப் புலவர்கள், வடமொழிப் புலவர்கள், தென்மொழிப் புலவர்கள் கூடி நிரம்பியிருக்கும் இவ் அவையில் இவ்விளைஞனுக்கு ஒரு பட்டம் தரலாம் என்று எண்ணுகிறேன். தங்களுடைய கருத்து என்ன என்று தேசிகர் கேட்டார்.

"சந்நிதானம் எண்ணியது இவ் இளைஞனுக்குப் பெரும் பேறாகும்" என்றார்கள். "பெரிய வைத்தியநாத ஐயர் என்ற பெயர் உங்களுக்கு இருப்பதால் பெரிய என்ற பட்டம் இவருக்குப் பொருந்தாது. தங்கள் தம்பி சிறிய என்ற பட்டத்துடன் இருப்பதால். இதுவும் தக்கதாக இருக்காது. நல்லதொரு பட்டம் கொடுத்தல் வேண்டும்" என்றார். அப்பொழுது பெரிய வைத்தியநாத ஐயர் எங்களுக்குள்ள பட்டப் பெயரைவிட மேலான பட்டப் பெயரான "மகா வைத்தியநாத ஐயர்" என்றழைப்பது சிறப்பாக இருக்குமோ என்ற எண்ணுகிறேன். சந்நிதானத்தின் எண்ணம் எப்படியோ? என்றார்.

மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் அளவில்லா மகிழ்ச்சி அடைந்தார். இவருக்குப் இப்பெரியவர் வாயிலாக இவரின் இசைத் திறமையைப் பாராட்டி "மகா" என்ற பட்டப் பெயர் இடுவதனை உடன்பட்டார். "இம்மஹத் என்ற சப்தம் வேதவாக்கு என்றே கருதுகிறேன். இது கடவுள் சம்மதமே

ஆகும். தங்களுடைய மற்றும் இங்கு குழுமியுள்ள கலைஞர்களுடைய ஆசியாகவும் இதனைக் கருதுகிறேன். இப்பெரியோர்கள் நிறைந்த அவையில் இவ் இசைத் திறனையும், அரிய, பெரிய ஆற்றல்களையும் கருதி மஹத் என்ற சிறப்புப் பட்டத்தை அடிப்படையாக வைத்து மகா வைத்தியநாத ஐயர் என்றழைத்து ஒரு உருத்திராக்கக் கண்டிகையையும், கல்லிழைத்த தோடாக்களையும் அணிவித்துப் பாராட்டினர் (வா.சு.கோமதிசங்கர ஐயர் இசைக்கலை வல்லுநர்கள், பக்.96-109). பிற்காலத்தில் மகா வைத்தியநாத ஐயர் என்று போற்றப்பட்டார்.

மகா வைத்தியநாத ஐயர் பிற்காலத்தில் திருவையாற்றில் தங்கி தேவார, திருவாசகங்களை நாள்தோறும் ஓதி அறம் வளர்த்த நாயகி உடனாகிய ஐயாறப்பரை வழிபட்டார். திருவையாற்றில் நடைபெறும் ஏழூர் விழாவின் போது தேவார திருவாசகங்களைப் பாடிக் கொண்டே உலா வந்தார். 1893 ஆம் ஆண்டு தை மாதம் வெள்ளிக்கிழமை அன்று இவ் உலகைவிட்டு மறைந்தார்.

மேலகரம் சுப்பிரமணிய தேசிகர் திருவாவடுதுறை ஆதீனத்தில் குரு முதல்வராக விளங்கிய பொழுதும் வையைச்சேரி சகோதரர்களையும் அழைத்துப் போற்றினார். ஒருமுறை உ.வே.சாமிநாதையர் திருவாவடுதுறைக்கு எழுந்தருளிய பொழுது மகா வைத்தியநாத ஐயரை அறிமுகஞ் செய்து வைத்தார்.

இவரைப் பார்ப்பதே தனக்கு மிகவும் ஆனந்தம் என்றும், இவர் பாடிக் கேட்க வேண்டும் என ஆசைப்பட்டார். தேசிகரும் இவர்கள் மகா வைத்தியநாத சிவனின் சங்கீதத்தைக் கேட்க வேண்டும் என்றும் விரும்பினார். தமிழ்ச் சூத சங்கிதையில் இருந்து சில செய்யுள்களையும், இராமசாமி சிவன் இயற்றிய பெரியபுராணக் கீர்த்தனையில் இருந்து சில கீர்த்தனைகளையும் பக்கவாத்தியங்கள் எதுவும் இல்லாத நிலையில் பாடினார். அன்று பிற்பகல் சுப்பிரமணிய தேசகரை உ.வே.சா. சந்தித்த பொழுது "காலையில் மகா வைத்தியநாதையர் பாட்டைக் கேட்டீரா?" என்று அவர் கேட்டார். "இந்த மாதிரி சங்கீதத்தை இதுவரை நான் கேட்டதே இல்லை. அவருடைய சாரீரம் எல்லோருக்கும் அமையாது. வெறும் சாதகத்தால் மட்டும் வந்ததன்று அது" என்றேன்.

"சாதகம் மாத்திரம் போதாதென்பது உண்மைதான். அவர் நல்ல சிவபக்தர். சிவகிருபை அவருக்கு நல்ல சாரீரத்தை அளித்திருக்கிறது. அவர் செய்துவரும் அப்படியாசம் அந்தச் சாரீரத்திற்கு வளப்பத்தைத் தருகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக அவரது தூய்மையான ஒழுக்கம் அந்தத் திவ்விய சாரீரத்தின் அழகு கெடாமல் பாதுகாக்கிறது" என்ற சொல்லிவிட்டு "அவர் தமிழறிவும் உமக்குப் புலப் பட்டிருக்குமே" என்றார்.

"ஆம் அவர் பாடல் சொல்லும் போதே பொருள் தெளிவாகிறது என்றேன் என்றார். (உ.வே.சாமிநாதையர், என் சரித்திரம், ப.309).

இத்தகு இசை விற்பன்னரை இனம் கண்டு போற்றிய ஸ்ரீலஸ்ரீ மேலகரம் சப்பிரமணிய தேசிகர் அவர்களை இசை உலகம் வணங்கி மகிழ்கிறது.

பாவலரேறு ச.பாலசுந்தரம்
(1924 -2007)



சோழவள நாட்டில் நெற்களஞ்சியமாகிய தஞ்சையம் பதியின் வடபால் உள்ள கருந்திட்டைக்குடியில் அகமுடையார் குலத்தில் மு.சந்திரசேகரன் பிள்ளை - விஜயாம்பாள் இணையர்க்கு மூன்றாவது மகவாக 18.1.1924இல் தைத் திங்கள் ஐந்தாம் நாள் வெள்ளிக்கிழமையில் பாலசுந்தரம் தோன்றினார். தந்தையார் தஞ்சைக் கீழவாயில் வெள்ளைப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் கருங்கல் பட்டறை நடத்தி வந்தார். தந்தையின் இரண்டாவது மனைவி பம்பப்படையூரைச் சார்ந்தவர். இவரே பாலசுந்தரனாரின் தாயாவார்.

இவரின் தொடக்கக்கல்வி திண்ணைப் பள்ளியில் தொடங்கியது. ஆசிரியர் பெயர் சட்டைநாத வாத்தியார். ஐந்தாம் அகவையில் கரந்தை வாணியத்தெருவில் செயல்பட்டு வந்த நகராட்சி தொடக்கப்பள்ளியில் பயின்றார். ஐந்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றபின் தஞ்சை குதிரை கட்டித் தெருவில் இருந்த தூய பேதுரு உயர்நிலைப்பள்ளியில் ஏழாம் வகுப்பு வரை பயின்றார்.

பின்பு கரந்தைப் புலவர் கல்லூரியில் பயின்றார். வித்துவான் வகுப்பில் முதலாவதாகத் தேர்ச்சி பெற்றார். 1950 ஆம் ஆண்டு முதல் அக்கல்லூரியிலேயே பேராசிரியராகவும் துணை முதல்வராகவும் பணியாற்றினார். 1982இல் பணி ஓய்வு பெற்றார். 1987 - 1991 வரை தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் சங்க இலக்கிய அகராதித் திட்டத்தில் பணியாற்றினார்.

கரந்தைக் கோவை, புலவருள்ளம், புரவலர் உள்ளம், ஆதிமந்தி, மலைத்தேன், யான் கண்ட அண்ணா, கலைஞர் வாழ்க, தொல்காப்பிய ஆராய்ச்சிக் காண்டிகை உரை, எழுத்து, சொல், யாப்பு, அகப்பொருள், புறப்பொருள் இலக்கணக் கலைச் சொற்பொருள் அகராதிகள், சங்க இலக்கியத் தனிச் சொல் தொகுப்பு நிரல் போன்ற 32 நூற்களைத் தந்துள்ளார். தஞ்சை சரசுவதிமகால் நூலகத்திற்காகச் சுவடிகளை ஆராய்ந்து தனிப் பாடல் திரட்டு I, II பாகங்கள், திருப்பெருந்துறைப் புராணம், திருநல்லூர்ப் புராணம், நீதித்திரட்டு, சீர்காழி அருணாசலக் கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனை நூற்களைப் பதிப்பித்துள்ளார்.

பாவலரேறு, கவிஞர் கோ, தொல்காப்பியப் பேரறிஞர், தொல்காப்பியப் பேரொளி, தொல்காப்பியச் சுடர், தொல்காப்பியச் செம்மல் போன்ற விருதுகளைப் பெற்றுள்ளார். இவரது மகன் பா.மதிவாணன் பாரதிதாசன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி வருகிறார். இந்நூலாசிரியருள் ஒருவராகிய செ.கற்பகம் 'தொல்காப்பியம் இளம்பூரணர் பாவலர் பாலசுந்தரம் உரைகள் ஒப்பீடு' என்ற பொருளில் ஆய்வு மேற்கொண்டு மேலும் ஒரு முனைவர் பட்டம் பெற்றுள்ளார். இத்தகு மாபெரும் தமிழ் அறிஞர் பாவலரேறு பாலசுந்தரனார் 01.08.2007 அன்று தஞ்சையில் மறைந்தார்.

தென்னூல்:

பாலசுந்தரனாரின் படைப்புகளுள் தென்னூலும் ஒன்றாகும். தென்னூல் இலக்கியப் படலத்தில் இசைப்பாவியல் பற்றிய நூற்பா எண்.457 முதல் 523 வரை உள்ள 67 நூற்பாக்களில் இசைப்பா இலக்கணம் கூறியுள்ளார். இப்பாவின் பொருளமைதி, பொதுவியல்பு, வகை, இசைத் தமிழ் பாவகைகள், பரிபாடல், வரிப்பாட்டு, பண்ணத்தி, குரவை, அம்மானை, குறத்திப்பாட்டு, ஊசல், பாவை, கோத்தும்பி, உழத்திப்பாட்டுப் பாவகைகளுக் குரிய இலக்கணங்களைக் கூறியுள்ளார்.

மேலும், உந்தி, சாழல், தாழிசை, வண்ணம், தாண்டகம், மங்கலம், ஓடம், தாலாட்டு, ஏசல், ஒப்பாரி, ஏற்றப்பாட்டு, வில்லுப்பாட்டு, கிளிகடி, குயில் பாட்டு, ஆனந்தக்களிப்பு, கண்ணி, சிந்து, தெம்மாங்கு, கும்மி ஆகிய இசைப் பாவகைகளின் இலக்கணங்களையும் கூறியுள்ளார்.

தேவாரப் பாடல்களில் அமைந்துள்ள யாப்பு வகைகளைத் தொகுத்துள்ளார். குறள் வெண்டுறை, குறள் தாழிசை, வஞ்சித்துறை, திருஇருக்குக்குறள், ஏகபாதம், மேல் வைப்பு, திருவிராகம் போன்ற யாப்பு அமைதிகள் பற்றியும் கூறியுள்ளார்.

தமிழிசைப்பாவின் பொதுவியல்பு, சுரநிலை, ஆரோகணம், அவரோகணம், பண்ணியக்கம், இராக வகை, தாள வகை போன்றவற்றிற்கு இலக்கண விளக்கம் தந்துள்ளார்.

இசைப்பா வகைகள் என்ற நிலையில் மெல்லிசை அலங்காரம், கீதம், பிரபந்தம், தாயம், சூளாதி, சுரசதி, ஜதீஸ்வரம், வர்ணம், கீர்த்தனை, இராகமாலிகை, ஜாவளி, பதம், தில்லானா, பஜனை ஆகிய இசைப்பா வகைகளுக்கான இலக்கண நூற்பாக்களைப் படைத்துள்ளார்.

இசைப்பாவின் பொதுவியல்பு:

"பண்ணும் பாணியும் சொல்லொடு மிடைய
எண்ணியதைச் சுவையோ டிசைப்பது பாட்டே" – நூ.எண்.457

இராகமும், தாளமும் பாவோடு இணைவது இசைப்பாட்டு என்று விளக்கம் தருகிறார். இசைத் தமிழ், தமிழிசையென இசைப்பா இரு வகைப்படும் என்றும், இசையை முன்னமைத்துப் பா புனைதல் இசைத் தமிழ் என்றும், செய்யுளை இசைத்தற்கு ஒத்த இசை கூட்டல் தமிழிசை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இசைத் தமிழ் பா இரு வகைப்படும் என்கிறார்.

1. இசைத் துணையாக இயலால் சிறப்பவை.
2. இசையும் இயலும் சமனாகப் பிறப்பவை.

இசைத் துணையாக இயலால் சிறப்பனவற்றிற்கு உதாரணமாகப் பரிபாடல், வரிப்பாட்டு, பண்ணத்தி, குரவை, அம்மானை, குறத்திப்பாட்டு, ஊசல், பாவை, கோத்தும்பி, பூவல்லி, தெள்ளேணம், உந்தி, சாழல் போன்றவற்றை உரைத்து அவற்றின் இலக்கணங்களை உரைத்துள்ளார்.

இயலும் இசையும் சமனாகப் பிறப்பனவற்றிற்குப் பாணியோடு பொருந்தும் பல்வகைக் கண்ணிப்பாடல், சிந்து,

தென்பாங்கு, கும்மி, தேவாரம் போன்றவற்றைக் குறிப்பிடுகிறார்.

ஆனந்தக்களிப்பு:

"ஓரடி ஈரடி பல்லவி யாகத்
தனிச்சொல் லமைந்த கண்ணிக ளானும்
பல்லவி இன்றிக் கண்ணிக ளாயும்
அறுந்திசை யொடுவரும் ஆனந்தக் களிப்பே"

– நூற்பா.489

கண்ணி:

"குறட்டாழிசையான் ஒழுகிசை யாயும்
பாணியொடு பொருந்தியும் விளிக்கப்படும்பெயர்
இடையினும் ஈற்றினும் இயையத் தனித்தும்
இசைப்பாட் டினையினும் வரும் இசைக் கண்ணி"

– நூற்பா.490

தென்பாங்கு:

"நெடிலடி யின்பின் நேரடி இரண்டாய்
தனிச்சொல் பொருந்தி விளிச்சொல் இயையப்
பேச்சு நடைபயின் றியலுந்தென் பாங்கே"

– நூற்பா.493

கும்மி:

"எண்சீர் ஈரடித் தாழிசை போலக்
கண்ணியா யமைந்துகைக் கொட்டுக் கியையப்
பண்ணமைந் திசைப்பது கும்மிப் பாட்டே"

– நூற்பா.493

புதிய இராகங்களும் புதிய இசைப்பாக்களும்:

தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறை முன்னாள் தலைவர் பேரா.து.ஆ.தனபாண்டியன் அவர்கள் புதிய இராகங்கள் என்ற ஒரு நூலைப் படைத்துள்ளார். பழக்கத்தில் உள்ள நூற்றுக் கணக்கான இராகங்களின் அடிப்படையில் 32 புதிய இராகங்களை உருவாக்கியுள்ளார்.

புதிய இராகங்களின் ஜீவசுரம், அதற்கடுத்தப்படியாக அமையும் முக்கிய சுரம், இராகத்தின் இணை, கிளை, நட்புச் சுரங்கள், தவிர்க்கப்பட வேண்டிய சுரங்கள் அடிப்படையில் 32 இராகங்களைப் படைத்துள்ளார். இவ் இராகங்களுக்குரிய இசைப் பாடல்களைப் பாவலரேறு ச.பாலசுந்தரம் படைத்து உள்ளார்.

கீதம், சுரஜதி, வர்ணம், கீர்த்தனை என்ற இசை வகைகளில் புதிய இசைப்பாக்களைப் படைத்துள்ளார்.

கீதம்:

கீதம் என்பது மிகச் சிறிய அளவில் அமைந்த இசைப் பாடலாகும். இராகத்தின் இலக்கணத்தின் போக்கையும் நன்கு விளக்கிக் காட்டும் வகையில் கீதம் அமைந்திருக்கும். சுரப்போக்கு மிக எளிதாக இருக்கும். கீதத்தின் பல்லவி, அனுபல்லவி, சரணம் வரை ஒரே காலத்தில் அமைந்திருக்கும். இராகத்தின் இலக்கணம், இராகத்தில் பிறந்த பெயர்கள் முதலியவையும் சாகித்தியத்தில் இடம் பெற்றிருக்கும். புரந்தரதாசர் மலகரி இராகத்தில் கீதங்கள் இயற்றியுள்ளார். பேரா. தனபாண்டியன் கண்டுபிடித்த சுரமஞ்சரி இராகத்திற்கு ஏற்பப் பாலசுந்தரனார் இசைப் பாடல் படைத்துள்ளார்.

சுரமஞ்சரி இராக இலக்கணம்:

சுரமஞ்சரி இராகம் 50வது தாய் இராகமான இராமநாராயணியில் பிறந்தது. இதில் நிறை கைக்கிளை (அந்தர காந்தாரம்), நிறை உழை (பிரதி மத்யமம்), இளி (பஞ்சமம்), குறைவிளரி (சுத்த தைவதம்), குறைதாரம் (கைசிகி நிஷாதம்) ஆகிய சுரங்கள் வருகின்றன. ஆரோசையில் (ஆரோகணம்), துத்தம் (ரிஷபம்), தாரம் (நிஷாதம்) ஆகிய சுரங்கள் வரா (வர்ஜம்), அமரோசையில் (அவரோகணம்), துத்தம் (ரிஷபம்) வராது.

இது திறம் - பண்ணியல் இராகமாகும்
(ஔடவ ஷாடவ இராகம்).

இந்த இராகத்தின் சீவசுரம்
- குரல் (சா). அமுதவைப்பு - இளி (பா).

பாவலரேறு படைப்பு:

இசையுலாம் எமதிறைவா, ஒரேழ் ஆய சுரம்சேர் அமுதமயமே,
நாதவெளியே, கலா ரூபமதாகி உணர்வினில் தோயும் தேவா,
உளமெலாம் நிறை இறைவா போற்றி.

ஒலியினுருவாய் ஞானஉவரி தோயும், அழியா உவகை தருவாய்
கீத வடிவினாய் முழவு ஒலியே தாளரூபமாய்த் திகழுவாய்
அகமெலாம் நிறை பரமே போற்றி.

சுரஜதி:

இசை கற்போர் கீதம் கற்ற பின்பு சுரஜதி கற்பர். சுரஜதியில் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் உறுப்புகள் இடம்பெறும். சுரஜதி மிகவும் இனிமையும் சிறப்பான அமைப்பும் கொண்டிருக்கும். இறைவணக்கமாகவோ, வீரப் பாடல்களாகவோ அமையும். நாட்டிய அரங்குகளில் இடம்பெறும்.

பேராசிரியர் தனபாண்டியன் பூர்ண சாவேரி என்ற புது இராகம் கண்டுள்ளார்.

ஆ : ச ரி^{4} ம^4 ப த^2 ச்
அ : ச் நி^{4} த^2 ப ம^4 க^6 ரி^{4} ச

பூர்ண சாவேரி இராகம் 62வது மேளமாகிய ரிஷப் பிரியாவில் பிறந்தது. இதில் நிறை துத்தம் (சதுச்ருதி ரிஷபம்), நிறை கைக்கிளை (அந்தர காந்தாரம்), நிறை உழை (பிரதி மத்யமம்), இளி (பஞ்சமம்), குறை விளரி (சுத்த தைவதம்), குறை தாரம் (கைசிகி நிஷாதம்) முதலிய சுரங்கள் வருகின்றன. ஆரோசையில் (ஆரோகணம்), கைக்கிளை (கா) தாரம் (நீ) ஆகிய சுரங்கள் வாரா வர்ஜம் அமரோசையில் (அவரோகணம்) எல்லா சுரங்களும் வருகின்றன (சம்பூர்ணம்).

இது திறம் -	பண் இராகமாகும் (ஔடவ சம்பூர்ண இராகம்)
இதன் சீவ சுரங்கள் -	குரல் (சா) இளி (பா)
அமுதவைப்பு -	துத்தம் (ரீ)

பாவலரேறு சுரஜதி படைப்பு:

இராகம் : பூர்ண சாவேரி **தாளம் : ஆதி**

முதல்நிலை (பல்லவி)

பாத சேவை நீ தாராயே நேசமதாகவே யான்
சார வேணுமே ஞானபோதகா நாளுமே

இடைநிலை (அனுபல்லவி)

சீருலாவு மலரடி யழகே தேவாமுதமெனப் பருகிடவே
சாருமனமார தேனொழுகு பாதம் மேவியாவி ஓவிலாமலராலே

இறுதிநிலை (சரணம்)

1. தாமத மினியேன் சுடரொளியாலே புவி மீதருள் பாவிடும்

2. பாராய் எனதுளமே நீ தாராய் எனில் இனி வாழேன்
பாரிலுனது புகழ்பாடி வழிபடுதல் நாடி உருகுவேன் பரமாஉனது
– பாதசேவை

3. பேசவரு புகழும் நீசமுறு பொருளும் நிதியொடு பதவிகளோ
பெறேனென தாசை யெலாமதுவே யுன்திருவடி மலரிணை விடாத
வரமினி

வர்ணம்:

இசை பயில்வோர் சரளி வரிசைகள், அலங்காரங்கள், கீதங்கள், சுரஜதிகள் கற்ற பின்பு வர்ணங்களைக் கற்பர். இராகங்களின் இன்சுவைப் (ரஞ்சக) பகுதிகளையும் விசேடப் போக்குகளையும் (சஞ்சாரங்கள்) அந்தந்த இராக வர்ணங்களில் காணலாம். வர்ணங்களைக் கற்பதின் மூலம் கிருதிகளையும் கீர்த்தனைகளையும் கமகத்துடனும். அழகுடனும் பாடும் திறம் பெறுவர். வர்ணங்கள் படைத்திட இராக தாள நுட்ப ஞானங்கள் வேண்டும். வர்ணத்தில் சாகித்தியங்கள் குறைவாகவே இருக்கும். பக்தி சிருங்காரச் சுவையுடன் அமைந்திருக்கும்.

வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியில் பல்லவி அனுபல்லவி முத்தாயி சுரங்கள் இடம்பெறும். பிற்பகுதியில் சரணம், சரண சுரங்கள் இடம்பெறும். தானவர்ணம், பதவர்ணம் என இரு வகைகள் உள.

பேராசிரியர் தனபாண்டியான் சுந்தரமனோகரி என்ற புதிய இராகத்தில் தானவர்ணம் அமைத்துள்ளார். பாவலரேறு வர்ணம் படைத்துள்ளார்.

இராகம் : சுந்தரமனோகரி **தாளம் : ஆதி**

ஆ : ச ரி^{4} ம^{2} ப நி^{6} ச்
அ : ச் நி^{6} த^{4} ப ம^{2} க^{4} ரி^{4} ச

முதல்நிலை

பா ரா யோ எனையே
பதமே நினைவாய் தாராயே

இடைநிலை

சா மி ஏகே னே தயவாய்
நீ அருளாய் இனிதே

இறுதி நிலை

நீயே காவாய் தினமே

கீர்த்தனை:

இறைபுகழ் பாடும் இசைப்பாட்டு கீர்த்தனையாகும். இதில் பாடல்கள் முக்கிய இடம்பெறும். பல்லவி, அனுபல்லவி, சரணங்களுடன் அமைந்திருக்கும். சில பல்லவி சரணங்களுடன் அமைந்திருக்கும். பேராசிரியர் தனபாண்டியன் 28 புதிய இராகங்களை அமைத்திட, பாவலர் 28 கீர்த்தனைகளைப் படைத்துள்ளார்.

வசந்தமல்லி என்ற புதிய இராகம் 11வது மேளமாகிய கோகிலாப்பிரியாவில் பிறந்தது.

ஆ : ச க^{4} ம^{2} ப நி^{6} ச்
அ : ச் த^{4} ப ம^{2} க^{4} ச்

பாவலரின் படைப்பு:

முதல்நிலை

கருணாகரா எமையாளவே
தாமதமா நிலமேலே வருக

இடைநிலை

குருவாகவே பூவிமீது மேவி
உருவாகி நீ நிதியாக வருக

இறுதிநிலை

குறை யாவும் நீங்க குணாளனே
வரவேணுமே தாய் பாசமே
தரவேணுமே சராசரமான
உலகேழுமாவாய் உறவாக வருக.

கவிஞராக, இலக்கண ஆசிரியராக, உரையாசிரியராக, நாடக ஆசிரியர்ாக, நுட்பமிகு சிந்தனையாளராக, சொற் பொழிவாளராக, பேராசிரியராக, துணை முதல்வராக விளங்கிய பாவலரேறு பாலசுந்தரனார் சிறந்த இசைத் தமிழ் வாணராகவும் விளங்கியுள்ளார். இசைத் தமிழ் இலக்கணங்களைப் படைத்துள்ளார். இசைத் தமிழ்ப்பாக்களை இயற்றியுள்ளார். இசை ஆய்வுக் கருத்தரங்குகளில் கலந்து கொண்டு மிக நுட்பமாகக் கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார். தமிழ்ப் பல்கலைக்கழக இசையரங்குகளில் இவர் இடம் பெறாத இசைக் கருத்தரங்கு நடைபெற்றதில்லை. பேராசிரியர் தனபாண்டியனின் நட்பு இவரை இயலிசைப் புலவராக்கியது. புதிய இராகப் படைப்புகளுக்குரிய புதிய இசைப் பாடல்கள் கிடைத்துள.

இசைத்துறையில் துரோணரும் ஏகலைவனும்

மகாபாரதக் கதையில் துரோணாச்சாரியாரிடம் வில் வித்தை கற்க ஒரு வேடன் வந்தான். அவன் பெயர் ஏகலவன். துரோணர் பஞ்சபாண்டவர், கௌரவர்கள் நூற்றுவர்க்கும் வில் வித்தைக் கற்றுக் கொடுத்து வந்தார். இவ்வேடன் துரோணரிடம் வந்து தனக்கும் வில் வித்தைக் கற்றுத் தருமாறு வேண்டிட துரோணர் மறுத்தார். பிறகு அவ்வேடன் துரோணரைப் போல உருச் செய்து அவ்வுருவத்தைக் குருவாகக் கொண்டு வில் வித்தை முழுமையையும் கற்றான். கற்றபின் குருதட்சணை கொடுக்க துரோணரிடம் சென்று பணிந்தான். அவன் கற்ற வில் வித்தைப் பலியாதிருக்க வேண்டி அவனது இடது கைப் பெருவிரலைக் குருகாணிக்கையாகக் கேட்டார். ஏகலவன் தனது இடது கைப் பெருவிரலைக் குருகாணிக்கையாகத் தந்தான் என்ற கதையை மகாபாரதத்தில் அறிந்திருக்கிறோம்.

இசைத்துறையில் இது போன்றதொரு ஏகலவன் உள்ர். பால் வடியும் முகம் என்ற நாட்டைக்குறிஞ்சி ஆதி தாள உருப்படியையும், ஆடாது அசங்காது வா என்ற மத்தியமாவதி ஆதி தாள உருப்படியையும், தாயே யசோதா, காயாம்பூ வண்ணனே, அலை பாயுதே கண்ணா, புள்ளாய் பிறவி தர வேண்டும், என்ன புண்ணியம் செய்தேனோ என்று தொடங்கும்அற்புத இசை உருப்படிகளை உலகிற்குத் தந்த ஊத்துக்காடு வெங்கடசுப்பையா என்ற பெரியவர் வாழ்வில் ஓர் இசைத்துறை ஏகலவன் இருந்தார். அவர் பெயர் தந்தை நாகசுரக் கலைஞர் பெரிய ருத்திரபசுபதி பிள்ளையாவார்.

தஞ்சை மாவட்டம் மன்னார்குடியில் இராமச்சந்திர ஐயருக்கும் கமலநயினி அம்மைக்கும் மகனாகச் சுப்பையா பிறந்தார். இராஜமன்னார்குடிக்கும், கும்பகோணத்திற்கும் இடையில் உள்ள ஊத்துக்காடு என்பதே இவர் பிறந்த தலமாகும். கிருஷ்ண பக்தியில் ஈடுபாடு கொண்டு பல அற்புத இசை உருப்படிகளைத் தந்தவராக இவர் விளங்குகிறார்; சங்கீத மும்மூர்த்திகளான தியாகையர், சியாமா சாஸ்திரி, முத்துச்சாமி

தீட்சதருக்கு மூத்தவர். சுமார் 60 ஆண்டு காலம் இம்மணில் இருந்தவர். இவரது காலம் கி.பி.1715 - 1775.

இவரது தமையனார் காட்டுக் கிருஷ்ணய்யர். தஞ்சை மராட்டிய மன்னன் பிரதாபசிம்மனின் அவைப் புலவர். இம்மன்னரின் காலம் கி.பி.1739 - 1763. எனவே இவருடைய காலத்தை ஒட்டி வேங்கடசுப்பையருடைய காலமும் வரையறை செய்யப்பட்டுள்ளது. சுப்பையர் சீகாழி அருணாச்சலகவி, மாரிமுத்தாப்பிள்ளை காலத்தவராகத் திகழ்கிறார்.

கிருஷ்ணகானம் என்ற பொருளில் இவர் பாடிய இசை உருப்படிகள் 289 அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன. இவற்றுள் தமிழ் உருப்படிகள் 180, வடமொழி 106, 3 தில்லானாக்கள். 246 உருப்படிகள் கிருஷ்ணனைப் பாடியவை. இராமன்-5. அனுமன் -1. இராதை-4, குரு-2, சரஸ்வதி-1, விநாயகர்-6, சண்முகர்-7, சிவபெருமான்-5, அம்பா நவாவரண கீர்த்தனைகள் உட்பட-12, இவர் பாடிய அம்பா நவாவரண கீர்த்தனை 11 ஆகும். இவை யாவும் வடமொழியில் உள்ளன.

தல யாத்திரை அடிப்படையில் திருவல்லிக்கேயி பார்த்தசாரதி மீதும் பாடியுள்ளார். இளமையில் இராஜா பாகவதர் (பூரனூர் நடேச பாகவதர்) என்பவரிடம் இசை பயின்றார். பின்னர் கிருஷ்ணயோகி என்பவரிடம் இசை கற்க வந்த பொழுது கற்பிக்க மறுத்துவிட்டார். தனக்கு இசை கற்றுத்தருவார் யாருமில்லையே என்று மிகவும் வருந்தினார். தனது வருத்தத்தைத் தன் தயாரிடம் சொல்லி வருந்தினார். தாயாரின் அறிவுரையின் படி கண்ணன் சந்நிதியில் நின்று கண்ணனையேக் குருவாகக் கொண்டு பாடி வந்தார். ஒரு நாள் இப்படி பாடிக் கொண்டிருக்கையில் புழுதியுடன் கூடிய உடம்புடன் ஒரு குழந்தை இவர் மடியில் வந்து உட்கார்ந்தான். இவர் பிடித்துத் தள்ளவும், மறுமுறையும் வந்து உட்கார்ந்தான். அப்பொழுது அருமையான குழலோசை இவர் காதில் ஒலித்தது. குழந்தை மறைந்துவிட்டது. வந்தவன் கண்ணன் என்று உணர்ந்தார். இக்கண்ணனையே குருவாகக் கொண்டு இசை உருப்படிகளைப் பாடி வந்தார்.

இவர் பாடிய கீர்த்தனங்கள் வெளியே தெரியாமலேயே இருந்தன. இவர் காலத்திலும், இவரை அடுத்து வந்த தியாகையர் காலத்திலும் இசைவாணர்கள் தெலுங்கு

பாடல்களையே பாடி வந்தனர். இவரோ தமிழிலும், சமஸ்கிருதத்திலும் பாடி வந்தார். தெலுங்கில் பாடாமையே இவருக்குக் குறைவாகப் போய்விட்டது. இவருக்குச் சீடர்கள் இல்லை. குடும்பம் இல்லை. இவருடைய தமையனார் காட்டுக் கிருஷ்ணய்யர் இவரது பாடல்களை எழுதி வைத்தார். இவர் பாடிய பாடல்களை இசை நிகழ்வுகளில் இவருக்குத் தெரியாமலேயே தஞ்சை நாகசுர வித்வான் ருத்ரபசுபதி என்பவர் கற்று வாசித்து வந்தார். வேங்கடசுப்பையர் கிருஷ்ண கானங்களைப் பாடி வழிபடும் பொழுது நொச்சிக்காட்டில் மறைந்திருந்து கேட்டு ஒன்றுவிடாமல் பயிற்சி செய்து வந்தார். இவற்றைத் தமது நாகசுர இசை நிகழ்வுகளில் வாசித்து வந்தார்.

ஒருமுறை வேங்கடசுப்பையர் நீலகண்ட சிவாச்சாரியார் வீட்டுத் திருமண நிகழ்வில் பாட நேர்ந்தது. அப்பொழுது இவர் பலரும் அறிந்த வித்வானாகப் புகழ் பெறவில்லை. அத்திருமணத்தில் பெரிய ருத்ரபசுபதி பிள்ளை என்கிற நாகசுர வித்வான் வாசித்தார். வேங்கடசுப்பையர் கேட்டார். இவ்விசை உருப்படிகளை நீ யாரிடம் கற்றாய் என்று பிள்ளையைக் கேட்டார். எல்லாம் சுவாமிகளுடைய அருள் என்று பிள்ளை கூறினார். ஐயருக்கோ விளங்கவில்லை. கிருஷ்ண விக்கிரகத்தின் முன் நீங்கள் பாடிக் கொண்டிருந்ததை நொச்சிக்காட்டில் மறைந்திருந்துக் கேட்டுப் பாராயணம் செய்தேன் என்றார்.

கிருஷ்ண உபாசகராகிய சுப்பையருக்கு ருத்ர உபாசகராகிய இராஜா பாகவதர் கற்பிக்க மறுக்க கண்ணனையே குருவாகக் கொண்டு சுப்பையர் கற்றார். சுப்பையர் பாடிய கிருஷ்ண கானங்களைப் பெரிய ருத்ரபசுபதி பிள்ளை எகலவனாக இருந்து கற்றார். துரோணர் அந்த ஏகலவனிடம் இடது கை கட்டை விரல் கேட்டார். வேங்கடசுப்பையர் பெரிய ருத்ரபசுபதி பிள்ளையிடம் குருகாணிக்கையாக எதுவும் கேட்கவில்லை. ஆனால் பிறகு பிறர் கேட்காதபடி பாடி வந்தார்.

இராம் : தோடி **தாளம் :**

தாயே யசோதா – உன்றன்
பாலன் கோபால கிருஷ்ணன் செய்யும்
ஜாலத்தைக் கேளடி (தாயே)

பாலனென்று தாவி அணைத்தேன்
அணைத்த என்னை
மாலையிட்டவன் போல்
வாயில் முத்தமிட்டான்டி (தாயே)

இவ் உருப்படியை அவிநயப் பேரரசி தஞ்சை பால சரசுவதி அவர்கள் அவிநயம் செய்த நிகழ்வை முன் தலைமுறையினர் நன்கு அறிவர்.


சுப்பையர் பாடல்களை இவருடைய உறவினர் நீடாமங்கலம் கிருஷ்ணமூர்த்தி பாகவதர் கதா காலேட்சபங்களில் பிரபலபடுத்தி வந்தார். வேங்கடசுப்பையர் ஜெயந்திவிழா 29.10.1959 அன்று சிறப்பாக நடைபெற்றது. மு.அருணாசலம் குறிப்பிடுவது போல "வேங்கடசுப்பையர் செய்த ஒரே பாவம் அவர் தமிழிலே பாடியது. தெலுங்கில் பாடாததுதான்" (தமிழிசை இலக்கிய வரலாறு, ப.323).

இவரின் நாட்டைக் குறிஞ்சியில் அமைந்த பால் வடியும் என்ற உருப்படியின் சரணத்தை இசைத்தமிழ் வளத்திற்கு எடுத்துக்காட்டாக இங்கு காண்போம்.

கறுத்த குழலொடு நிறத்த மயிலிற
கிறக்கி அமைத்த திறத்திலே
கானம யிலாடும் மோன குயில்பாடும்
நீலநதி யோடும் வனத்திலே
குரல்முதல் எழில்இசைய குழையவரும் இசையில்
குழலொடு மிளிர் இளம் சுரத்திலே
கதிரும் மதியும்எனநயன விழிகள் இரு
நளினமான சலனத்திலே
காளிங்கன் ல்சரத்திலே கதித்த பதத்திலே
என் மனத்தை இருத்திக்
கனவு நனவினொடு
பிறவிபிறவி தோறும் கனிந்துருக
வரந்தருக பரங்கருணை (பால்வடியும்)

துரோணராக வேங்கடசுப்பையரும் ஏகலவனாக ருத்ரபசுபதி பிள்ளையும் விளங்கியுள்ளனர்.

வைத்தீஸ்வரன் கோவில் சுப்பராமய்யர்



கருநாடக இசையில் எண்ணற்ற இசை உருப்படிகள் தோன்றின. அவற்றில் சிருங்கார சுவைத் தழுவிய உருப்படிகளாகப் பதவர்ணம், பதம், ஜாவளி மூன்றும் திகழ்கின்றன. இவை, காதற் சுவையைத் தழுவி இயற்றப்பட்ட உருப்படிகளாகும். இவற்றில் பதமும் ஒன்றாகும். அழகிய தமிழ்ப் பதங்களை இயற்றியவர்களில் சுப்பராமய்யரும் ஒருவராவார். இவர்வேறு எந்தவிதமான இசை வகைகளையும் இயற்றாமல் பதங்களை மட்டுமே இயற்றிப் புகழடைந்தார். நாட்டியப் பதத்தின் தந்தையாகச் சீர்காழி முத்துத்தாண்டவர் விளங்குகிறார். இவரின் வாழ்வும் இசைப் பணியும் பற்றி இசைத் தமிழ் அறிஞர்கள் தொகுதி-1இல் வெளியிட்டுள்ளோம். சுப்பராமய்யர் வாழ்வும் இசைப் பணியும் பற்றி காண்போம்.

பிறப்பு:

வைத்தீசுவரன் கோயில் சப்பராமய்யர் திருச்சிராப் பள்ளியை அடுத்துள்ள பிட்சாண்டார் கோவிலில் 1829 ஆம் ஆண்டில், பொன்னையா என்றழைக்கப்பட்ட பொன்னுசாமி அய்யரின் குமாரராகப் பிறந்தார். ஆபிரகாம் பண்டிதர், தனது கருணாமிருதசாகரத்தில், இவர் 103 ஆண்டுகள் வாழ்ந்தாரென்று குறிப்பிட்டுள்ளார். இராமநாதபுரம் மன்னர், இரண்டாவது முத்துராமலிங்க சேதுபதியின் அவைக்குச் சுப்பராமய்யர் விஜயம் செய்துள்ளதாகவும் அறிய முடிகிறது. இம்மன்னரின் ஆட்சிக் காலம் 1868 முதல் 1873 வரையாகும். அதனால், இவர் 19 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என்று கருத இடமுளது.

சுப்பராமய்யர், தமிழ், வடமொழி ஆகிய இரு மொழிகளில் தேர்ச்சிப் பெற்றவரும், மைசூர் அரசவைப் புலவராக விளங்கிய பிட்சாண்டார் கோயில் சுப்பராயர் என்ற இயலிசைக் கலைஞரிடம் இசைப் பயிற்சி பெற்றார்.

சுப்பராமய்யரின் பெற்றோர் இவருக்குத் திருச்சியைச் சேர்ந்த ஒரு மங்கையைத் திருமணம் செய்ய ஏற்பாடு செய்திருந்தனர். ,ஆனால், இளம் வயது முதலே, இவருக்கு முருகப்பெருமான் மீது அளவுக்கடந்த பக்தியுண்டு. அதனால், அவரது மனம் இல்லற வாழ்வை ஏற்கவில்லை. இவர், வீட்டைவிட்டு வெளியேறிப் பற்பல ஊர்களில் தங்கி இறுதியில் மயிலாடுதுறைக்கு அருகிலுள்ள வைத்தீசுவரன்கோயில் என்ற ஊரில் வந்து வசித்து வந்தார்.

புள்ளிருக்குவேளூர் என்ற தேவாரத் தலம் தற்காலத்தில் வைத்தீசுவரன்கோயில் என்று அழைக்கப்படுகிறது. திருஞான சம்பந்தர், திருநாவுக்கரசர் பாடல் பெற்ற தலம். இறைவன் பெயர் வைத்தியநாதர். இறைவி பெயர் தையல்நாயகி. தல மரம் வேம்பு. புள் (சடாயு) இருக்கு (வேதம்) வேள் (முருகன்) ஊர் (சூரியன்) நால்வரும் வழிபட்ட தலம். இங்குள்ள செல்வ முத்துக்குமார சுவாமி சந்நிதி மிகச் சிறப்பு வாய்ந்தது. குமர குருபரர் முத்துக்குமார சுவாமி பிள்ளைத் தமிழ் பாடியுள்ளார்.

பதம் பாடிய சூழல்:

வைத்தீசுவரன்கோயிலில் இசையிலும் ஆடலிலும் தேர்ச்சி பெற்ற பல தேவதாசிகள் ஆலயத் தொண்டு செய்து வந்தனர். இசைக்கலையில் தேர்ச்சி பெற்ற சுப்பராமய்யர், ஆலயத்தில் நாள்தோறும் தேவதாசிகள் சிருங்கார சுவைத் ததும்பிய பதங்களை ஆடுவதைக் கண்ணுற்றார். இப்பாடல்களின் பொருளும் இசையும் இவரை மிகவும் கவர்ந்தன. இவற்றைப் பலமுறை கேட்டு வந்தார். தாமும் இவை போன்ற பதங்களை இயற்ற வேண்டும் என்ற எண்ணம் கொண்டார். முருகனை நாயகனாகக் கொண்ட பதங்களை அதிகம் இயற்றினார்.

இசை ஞானம் பெற்ற அவரின் கற்பனை உள்ளத்தில் இருந்து பதங்கள் பல உருவாயின. பற்றற்ற வாழ்க்கையை மேற்கொண்ட இவர் அகச்சுவைத் ததும்பும் பதங்களை இயற்றினார்.

பதம் என்ற சொல் பொருள் விளக்கம்:

கீதம், சுரஜதி, ஜதீசுரம், வர்ணம், கீர்த்தனம், பதம், ஜாவளி, தில்லானா ஆகிய இசை வடிவங்கள் உள்ளன. இவற்றில் பதம், ஜாவளி, தில்லானா போன்றன இசை நிகழ்ச்சியிலும், நாட்டிய நிகழ்ச்சியிலும் கையாளப்படுகின்றன. அடியார்கள் தம்மை நாயகியாகவும், இறைவனை நாயகனாகவும் எண்ணி காதற்சுவை (சிருங்கார ரசம்) ததும்ப பாடிய இசை வடிவமே பதம் ஆகும். கீர்த்தனையைப் போல பதத்திலும் பல்லவி, அனுபல்லவி, சரணம் என்ற அமைப்புகள் உள. கீர்த்தனைகள் இறைவனை முன்னிலைப்படுத்தி, அவனது புகழைப் பாடும் பாடல்களாக விளங்குகின்றன. பதம் இறைவன் மீது கொண்ட தெய்வீகக் காதலை வெளிப்படுத்தும் அகப்பாடல்களாக அமைந்துள்ளன.

பதங்களில் அமையும் இராகத்தின் வடிவம், இனிமையான குழைவுகளுடன் அழகாக அமைந்திருக்கும். நாட்டிய அரங்குகளில் பதங்கள் பாடப்படும் பொழுது இசையும் பொருளும் சிறப்பாக விளங்கும் வகையில் பதமாகவும், பக்குவமாகவும் பாடப்படுகின்றன. அவிநயத்திற்கு ஏற்ற பாடல்களாக அமைவதால் பதம் என்ற பெயர் பெற்றது. இவை மதுரபக்திப் பாடல்களாக அமைந்துள்ளன.

பதம் பாடப்படும் முறை:

பதத்தில், நாட்டியம் ஆடும் பெண் ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பல்வேறு அவிநய முத்திரைகளுடன் ஆடுவார். ஆனால் பாடுபவர் பல்லவியையோ அல்லது மற்ற ஒரு அடியையோ திரும்பத் திரும்பப் பாடுவார். அப்பொழுது பொருளுக்கு முக்கியத்துவம் தரப்பட்டு, பாடலின் அடி திரும்பத் திரும்பப் பாடப்படும். இது, இசை நிகழ்ச்சியில் நிரவல் செய்வதை ஒத்ததாகும். பதத்தில் முதலில் பல்லவி பாடி, பிறகு அனுபல்லவி பாடி மீண்டும் பல்லவி பாடி, பிறகு சரணம் பாடி பல்லவியுடன் முடிவு பெறும்.

பதங்கள் இயற்றியவர்கள்:

முத்துத்தாண்டவர், மாரிமுத்தாப்பிள்ளை, கனம் கிருஷ்ணய்யர், சுப்பராமய்யர், கவிகுஞ்சர பாரதி, ஊத்துக்காடு வேங்கடசுப்பையர், இராமலிங்க சுவாமிகள், சேத்ரக்ஞர்

போன்றவர்கள் பதங்கள் இயற்றிய இயலிசைப் புலவர்களாவர். திருஞானசம்பந்தர் பாடிய 'சிறையாடும் மடக்கிளியே', திருநாவுக்கரசரின் 'முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்', மணிவாசகரின் மதுரபக்திப் பாடல்கள், ஆழ்வார் பாடல்களின் தொடர்ச்சியாக இப்பதப் பாடல்கள் அமைந்துள.

சுப்பராமய்யர் பதங்கள்:

சுப்பராமய்யர் இயற்றிய பதங்களின் எண்ணிக்கை நம்மால் சரியாக அறிய முடியவில்லை. ஆயினும், சுமார் நூறு பதங்கள் தொகுக்கப் பெற்று பு.எ.பார்த்தசாரதிப்பிள்ளை என்பவரால் பரிசோதிக்கப்பட்டுச் சிதம்பரம் புத்தகக் கடை வே.சுந்தரம்பிள்ளை என்பவரின் விருப்பத்தின் பேரில், சரஸ்வதி விலாச அச்சு யந்திரச்சாலையில், எ.முருகப்பச் செட்டியாரால் பதிப்பிக்கப்பட்டு 1906 ஆம் ஆண்டில் "முத்துக்குமாரசாமி பேரில் பதம்" என்ற தலைப்பில் வெளியாயின.

இந்நூலில் கொடுக்கப்பட்டுள்ள இராகங்களில் பல இன்று வழக்கில் மாறியுள்ளன. "எங்கேயிருந்தாலும்" எனும் பதம் சாவேரியில் இந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தற்காலத்தில் காம்போதி இராகத்தில் பாடப்படுகிறது.

திருவையாறு அரசர் கல்லூரியில் இசைத்துறைத் தலைவராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற பத்மஶ்ரீ பி.ஆர்.திலகம் அம்மையார் சுப்பராமையரின் 23 பதங்களுக்குச் சுரதாளம் அமைத்து, "வைத்தீஸ்வரன்கோயில் ஶ்ரீ சுப்பராமய்யர் தமிழ்ப் பதங்கள்" என்ற பெயரில் 2003 ஆம் ஆண்டு வெளியிட்டுள்ளார், இவர் இதற்கு முன் பதிப்பில் வெளிவராத இருபத்து மூன்று பதங்களைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்குச் சுர தாளக் குறிப்புகள் எழுதியுள்ளார். இப்பணிக்கென அவர் 1984-85 ஆம் ஆண்டு மத்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் நல்கைப் பெற்றுள்ளார்.

பதத்தின் நாயகன்:

சுப்பராமய்யர் இயற்றியுள்ள பதங்கள் பெரும்பாலும், வைத்தீசுவரன் கோயிலில் எழுந்தருளியுள்ள முத்துக்குமார சுவாமியைத் தலைவனாகக் கொண்டு பாடப் பெற்றவையாகும். மேலும், திருத்தணி, பழனி, திருச்செந்தூர், திருப்போரூர், குன்றக்குடி ஆகிய தலங்களில் எழுந்தருளியிருக்கும் முருகன் மீதும் பதங்களைப் பாடியுள்ளார்.

அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணியில் எழுந்தருளியுள்ள முருகன்மீது பாடிய நான்கு பதங்கள் கிடைக்கப் பெற்றுள.

1. அதற்குள் ஏனிந்த பதட்டம் – பந்துவராளி – ஆதி
2. இந்த மட்டுக்கும் – பேகடா – ஆதி
3. வருவாரென்றெண்ணி – கியால் – ஆதி
4. மானே எந்தன் மீதில் – அடாணா – ஆதி

குன்றக்குடியில் எழுந்தருளியுள்ள முருகன்மீது பாடிய இரண்டு பதங்கள் கிடைக்கப் பெற்றுள.

1. இனிவேலவர் என்ன தந்தாலும் – சாவேரி – ஆதி
2. வருவதனால் அவரை – கல்யாணி – ஆதி

மேலும், திருக்கழுக்குன்றத்தில் எழுந்தருளியுள்ள சிவன் மீதும், முருகன் மீதும் பதங்கள் இயற்றியுள்ளார்.

1. எனக்காகிலும் அவள் (முருகன்மீது படைப்பட்டுள்ளது) – கேடா – ரூபகம்

2. இந்த கிழவனுக்கு – சிவன் மீது பாடப்பட்டுள்ளது.
3. நேத்து ராத்திரி போன பெண் வீடு – சிவன்மீது பாடப்பட்டுள்ளது.

சமயப்பொறையுடைய சுப்பராமையர் காஞ்சி வரதராசப் பெருமானின் மீதும், மன்னார்குடி இராஜகோபாலர் மீதும் பாடல்கள் இயற்றியுள்ளார்.

1. அஞ்சுகமே என்னாசை – சௌராஷ்டிரம் – காஞ்சி வரதராசப்பெருமான்
2. வேசையொருவர்மீதில் – சங்கராபரணம் – மன்னை இராஜகோபால்சாமி

இவரின் பெரும்பான்மையான பதங்கள் முருகன் மீது அமைந்திருப்பதாகும். பிற தெய்வங்களின் மீதும் பதங்களை இயற்றியுள்ளார்.

1. "எத்தைக் கண்டு இச்சைக்கொண்டாய்"
   எனத் தொடங்கும் பதம் சிவபெருமானை நாயகனாகப் பாவித்துப் படைக்கப்பட்டுள்ளது.

2. திருமயிலையில் எழுந்தருளியிருக்கும் கைலாசநாதர் மீதும் இவர் இரு பதங்கள் இயற்றியுள்ளார்.

இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க சேதுபதியைத் தலைவனாக்கி "மானே உன் மீதில்" என்ற தோடி இராகப் பதத்தை இயற்றியுள்ளார். மேலும், இராமலிங்க சேதுபதி மீது, "யாருக்காகிலும் பயமா" என்னும் பதத்தை இயற்றியுள்ளார். இதில், இவரைப் "போருக்கு விஜயன்" என்று குறிப்பிடுகிறார். விஜயகோபாலனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு 'வந்த காரியமேதய்யா' என்ற புன்னகவாராளி பதத்தை இயற்றியுள்ளார்.

சுப்பராமய்யர் கையாண்ட இராகங்கள்:

சுப்பராமய்யர் அதிகமாக வழக்கிலுள்ள இராகங்களையே பயன்படுத்தியுள்ளார். இவற்றில் தோடி, கல்யாணி, பந்துவராளி, சங்கராபரணம், ஆகிரி, உசேனி, காம்போதி, கேதார கௌளை, பைரவி, சுருட்டி, பிலகரி, தன்யாசி, நாட்டைக்குறிஞ்சி போன்ற இராகங்களில் பதங்களைப் பாடியுள்ளார்.

இவர் பதங்களில் கண்டா, கௌளிபந்து போன்ற அபூர்வ இராகங்களையும் சிறந்த முறையில் பயன்படுத்தியுள்ளார். இதனால், இவர் அபூர்வ இராகங்களைக் கையாளுவதில் வல்லவர் என்று உணர முடிகிறது.

சுப்பராமய்யரின் சில பதங்களில் கியால் இராகம் குறிப்பிடப்பட்டுள்ளது. "கியால்" என்பது இந்துஸ்தானி இசை முறையில் ஒரு பாடல் வகையாகும். ஆனால் இவரின் பதிப்பில் இராகத்தின் பெயராகக் குறிப்பிடப்பட்டிருப்பது மேலும் ஆராயத்தக்கது.

இவரது பாடல்களில் பயன்படுத்தப் பெற்றுள்ள இராகங்கள் சிறப்பான வடிவங்களில் இருப்பதால், நம் உள்ளத்தை ஈர்க்கும் தன்மை பெற்று விளங்குகின்றன. இவரின் பதங்களில் தாளச் சொற்கட்டுகள் இடம் பெறவில்லை.

இராக தாளங்களைக் கையாளும் முறை:

இவர் ஒரு இராகத்தைப் பலவிதங்களில் பயன் படுத்தினாலும் ஒவ்வொன்றும் வேறுபட்டத் தன்மை கொண்டனவாக அமைந்துள்ளன.

உதாரணமாக, "எத்தைக்கண்டு இச்சைக்கொண்டாய்" எனத் தொடங்கும் பதமும், "சகலமும் தெரிந்த" எனத் தொடங்கும் பதமும் கல்யாணி இராகத்தில் அமைந்துள்ளன. இதேபோல், "பதறி வருகுதே" என்று தொடங்கும் பதமும், "இந்தக் கிழவனுக்கு" என்று தொடங்கும் பதமும் காம்போதி இராகத்தில் இயற்றப்பட்டுள்ளன.

சுப்பராமய்யர் அதிகமாக ஆதி தாளம், ரூபக தாளங்களைக் கையாண்டுள்ளார். ஒரு சில பதங்களில் மிச்ரசாபு தாளத்தினையும் அடதாளத்தினையும் பயன்படுத்தியுள்ளார்.

பாடல்	இராகம்	தாளம்
1. சகலமும் தெரிந்த	நாட்டைக்குறிஞ்சி	ஆதி
2. அன்பில்லாதவன்	சங்கராபரணம்	ரூபகம்
3. இதற்கோ நான்	சுருட்டி	மிச்ரசாபு

மேலும் இவரது பதங்களில் தாளங்கள் அதீத எடுப்பிலும், அனாகத எடுப்பிலும், சம எடுப்பிலும் அமைந்துள்ளன.

முத்திரை:

முத்திரை என்ற சொல் இசையிலும் நாட்டியத்திலும் இடம்பெறுகிறது.

முத்திரைகள் இயலிசைப் புலவர்களை இனம் காட்டுவதற்கும் மற்றும் பல தகவல்களை நமக்குத் தெரிவிக்கவும் உதவுகின்றன. இந்த வகையில் சுப்பராமய்யரின் பதங்களின் பெயர் முத்திரை, தல முத்திரைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. பெயர் முத்திரைகளாக சுப்பராமா, முத்துக்குமாரா என்பன இடம்பெற்றுள்ளன. மேலும் சில பதங்களில் இராக முத்திரை, நாயக முத்திரை, பிரபந்த முத்திரைகளையும் கையாண்டுள்ளார்.

வேளூர் முத்துக்குமார சுவாமியைத் தலைவனாகக் கொண்டு பல பதங்களை இயற்றியுள்ளார். "தானே வருகிறாரோ" என்ற கல்யாணி இராக பதத்தில் தல முத்திரையும், "நாயக முத்திரையும்" இடம்பெறுகின்றன.

தேனார் மலர்ச் சோலை சூடி – வேளூர் முத்துக்குமாரா
திரு மயின் மேற்பவனி வரு – மயிலேந்தும் வீரா

இப்பாடலின் அனுபல்லவியில் வேளூர் என்ற தல முத்திரை இடம்பெறுகிறது. இதன் சரணத்தில்,

களி கொள் சுப்பராமன் கவிக்கேயுருகுதடி
கண்கள் சொருகியொரு விதமாய் வருகுதடி

இதில் சுப்பராமன் என்ற நாயக முத்திரை இடம்பெறுகிறது.

இவரின் "பதறி வருகுதே" என்ற காம்போதி இராகப் பாடலின் சரணத்தில் இராக முத்திரை இடம்பெறுகிறது.

நாட்டிய அரங்குகளில் சுப்பராமய்யர் பதங்கள் பயன் படுத்தப்பட்டு வந்துள. இவை அதிகச் சிருங்காரத்துடன் விளங்கும். இவற்றைத் தவிர்ப்போரும் உளர்.

சுப்பராமய்யரின் பதங்கள் உலகம் முழுவதிலும், இசை நாட்டிய அரங்குகளில் தனக்கென ஒரு தக்கதொரு இடம் வகிக்கின்றன. இவரின் பதங்கள் இன்றைய ஆடலரங்குகளை அலங்கரிக்கின்றன. கேட்போர் மனதைப் பிணிக்கின்றன. பாடல்களில் அமைந்துள்ள பொருள் நிலைகளும், அகப்பொருள் நிலைக்கேற்ற இராக தாள அமைப்புகளும், இசை மெட்டமைப்பும், பாடலின் சுவையோடு பாவும், நூலும் போல பிணைந்து நிற்கின்றன. நல்ல தமிழ் நடையில் பக்தியுடன் கூடிய நாட்டியப் பதங்களாக விளங்குகின்றன.



முனைவர் சண்முக.செல்வகணபதி

திருவீழிமிழலையில் பிறந்து அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்று திருவையாறு அரசர் கல்லூரியில் முதல்வராகப் பணியாற்றி பணி நிறைவு பெற்றவர். பல்கலைக் கழக நிதி நல்கைக் குழுவின் சிறப்பு நிலைப் பேராசிரியராகத் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றியுள்ளார். சென்னை செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மூலம் சிலம்பு - அரங்கேற்று காதை பற்றி ஆய்வு செய்துள்ளார். 40 நூற்களை எழுதியுள்ளார். 34 விருதுகளைப் பெற்றுள்ளார். தொடர்ந்து 400க்கும் மேற்பட்ட திருப்புகழ்த் தொடர்ப் பொழிவுகளைத் தந்துள்ளார். இசைத்தமிழ், நாட்டியத் தமிழ் பற்றித் தொடர்ந்து ஆய்வுகள் நிகழ்த்தி வருகிறார்.



முனைவர் சே.கற்பகம்

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக இசைத்துறையில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். முறையாக நாட்டியம் பயின்று பல்வேறு அரங்குகளில் நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்தியுள்ளார். நாட்டிய நாடகங்களில் ஆடலும் பாடலும் என்ற தலைப்பில் இசைத்துறையில் முனைவர் பட்டம் பெற்றுள்ளார். தமிழ்த்துறையிலும் பிலிட்., எம்.ஏ., பி.எச்.டி., பட்டங்களையும் பெற்றுள்ளார். தொல்காப்பியம் இளம்பூரணம் பாவலர் பாலசுந்தரம் உரைகளை ஒப்பீடு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார். சிலப்பதிகாரம், திருமுறை, திவ்வியபிரபந்தம், திருப்புகழ், திருவருட்பா, மேளங்களின் சங்கமம் போன்ற நாட்டிய நிகழ்ச்சிகளைத் தந்துள்ளார். 10க்கும் மேற்பட்ட நூற்களையும் 50க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளையும் தந்துள்ளார். பல்வேறு விருதுகளைப் பெற்ற இவர் ஆய்வரங்குகளில் தொடர்ந்து உரையாற்றி வருகிறார்.

978-81-928616-7-8